உ

சருவம் விஷ்ணுமயம்.

# பகவற்கீதை

## மூலமும்-உரையும்.

திண்டிக்கல்

## முத்துவீரப்பிள்ளை

மதுரை

## முத்துக்கிருஷ்ணபிள்ளை

இவ்விருவர், உத்தரவின்படி

மதுரை, புதுவை, சென்னை.

இச்சங்கங்களில்

தமிழ்த்தலைமைப்புலமைநடாத்திய

களத்தூர்

## வேதகிரிமுதலியாரால்

ஒருவாறு பரிசோதித்துத்

தமது

இலக்கணக்களஞ்சியஅச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டன.

பரீதாவி- ௵ - ஆடி௴.

145/13

1852

சருவம் விஷ்ணுமயம்.

# ஸ்ரீபகவற்கீதா மகுத்துவம்.

இவ்வுலகின் கண் சிறந்த மந்திரிகளுக்குள் முழுமந்திரி - சுமந்
திரன் -முக்கால்மந்திரி - சத்தியகீர்த்தி- அரைமந்திரி - பட்டி- கால்ம
ந்திரி-அப்பாஜி -இந்நான்கு தரத்தாரில் - கலியுகத்தில்மிகுந்தமதியூ
கியாகவும், ராஜதந்திரியாகவும், சர்வவிஷயானுபவ கைவல்லிய
ராகவும், ஞானசூரியராகவு மிருந்த அப்பாஜி என்பவரை ஒப்பற்ற
முக்கியமொன்று கருதி அக்காலத்தில் அரசுசெலுத்தி வந்த ஒருபா
க்ஷாவானவர் சர்வசமயாங்கீகாரமாகவும்,கியானபராளின் ஆக்ஷேப
ரகிதமாகவும்சுத்தாத்விதசுயம்பிரகாசசதார்த்தஆத்மஞான மோக்ஷ
கைவல்லிய திவ்வியக்கிரந்த மெதுவென்று விசாரணைசெய்துதமக்கு
அனுப்பும் பொருட்டுத் தமதுநகரத்திருந்து முஹர் செய்தகடித
ம் ஒன்றை அனுப்ப அதைக்கண்டு அப்பாஜியானவர் இவ்வுலகத்தின்
வேதாகமபுராணகாவியா லங்காரஸ்மிருதிகளினும் விசேஷமுள்ள
தென்றும்சமயகோடிகளினுடையதர்க்கநிவாரணசாக்ஷிபூதமென்று
ம்இருவினையகற்றி சீவாத்மா-பரமாத்மாவிற் சைதன்னியப் படும்
கதியென்றும் ஷேபாக்ஷாவானவர் எழுதியகடித லக்ஷணத்திற்குக்கு
றைவில்லாததென்றும்,அதற்குமேலொரு நூலுமின்றி ஒப்பற்றவே
தபரம ரகசியமென்றும் விளங்காநின்ற - ஸ்ரீமத் பகவற் கீதையை
அரபிபாஷையில் மொழிபெயர்த்துப் பாக்ஷா அவர்களுக்கு அனு
ப்பினார். அதுகண்டு மேற்சொன்னபாக்ஷாவானவர் இந்த அத்வித
கிரந்தத்தைத்தம்முடைய சமுகத்தின் நாற்றிசைமந்திரிகளுக்குங்கா

ட்ட அவை முகநிசைமந்திரிகளும் திவ்வியமென்றங்கீகரிக்கமற்றே
ர்நிசைமந்திரி மாத்திரம் சம்மதத்தைச் சாராமலிருக்கின்ற தென்
று அரசனுக்கறிவிக்க அரசன்சீர்தூக்காமல் அப்பாசிக்குப் பதிலு
த்தரமெழுத ஆலசியப்பட்டதால் மதியூகியாகிய அப்பாஜீ நுட்ப
த்தைதக்கிரகித்து மறுபடி ஒருகடிதத்தில்இந்தப்பகவத்கீதையையல
க்ஷியஞ்செய்தவன் நீசபீஜமாக இருக்க வேண்டும் அவனுடையது
ராக்ஷபத்தினால் தமது அங்கீகாரகடிதம் வருதற்கு ஆலசியமாயி
ற்றென்றுணர்ந்தேன் ஆதலால் அந்தச் சந்தேகத்தை நிவர்த்திசெய்
துகொள்ள வேண்டுமென்று எழுதினார் அதைக் கண்ட மாத்திரத்தி
ல்பாக்ஷாவானவர் அம்மந்திரியின் தாயின் வாய்மொழியால் அவன்
நீசபீசமென்று உண்மைதெரிந்து கொண்டு அவனைக் கண்டித்து
ப்போட்டு இந்த ஸ்ரீமத் பகவற்கீதையைப் பிரதிகாலம் பாராயணஞ்
செய்து ஜீவன் முக்தரானார்.

முற்றிற்று.

இஃது

புரைசை.

# தெய்வசிகாமணி

முதலியாரால்

அச்சடிக்கிநிறைவேற்றப்பட்டது.

உ

கடவுள் துணை.

# பகவத்கிதை

## மூலமும், உரையும்.

### பாயிரம்.

[அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.]

ஐவகைப்பொருளுநான்குகரணமுங்குணங்கண்மூன்றுஞ் ...
செய்வினையிரண்டுமொன்றியாவருந்திகைப்பநின்ற ... ......
பொய்யிருளகலஞானப்பொருட்கதிர்விரித்தபுதமேதன் . .....
கைவளராழிச்செங்கட்கண்ணனைக்கண்ணுள்வைப்பாம் .... ..

(இதன்பொருள்)

அண்டசம்-சுவேதசம் - சராயுசம்-உற்பீசம்- மந்திரசம்-என்கின்ற ஐந்துவிதசனனசீவன்களும் - மனம்-புத்தி-சித்தம்- அகங்காரம்-ஆகியநான்குகரணங்களும் - சாத்துவிகம்-இராசதம்-தாமதம் ஆகியமூன்றுகுணங்களும் - செய்கின்றகாரியமானபுண்ணியபாவமாகியகன்மமிரண்டும் பொருந்தி யெல்லாருந்தன்னையறியாதபடி மயங்கிமெய்போல நின்றபொய்யான அஞ்ஞானம்போகத்தன்னு சுபாவசோதியான ஞானப்பொருளைவிரித்தருளிச்செய்த தெய்வம் திருக்கையிலேவளரப்பட்ட சக்கரத்தையுஞ் சிவந்தகண்களையுமுடையஸ்ரீகிருஷ்ண சுவாமியைக் கண்ணுக்குள்ளே வைப்பாம் என்றவாறு.

[கண்ணுக்குள்ளேவைப்பாமென்பவே - எல்லாமவனாகக் காண்போமென்பதுகருத்து-இதுவணக்கம் - அருச்சுனனுக்கு ஞானப்பொருளையென்றெழுதாததேதுக்கெனில் உத்தமனுக்கும்- பின்னுஞ்சிலருக்குமுபதேசித்ததினாலே, அருச்சுனனுக்கென்றெழுதாமற் பொதுவாகவெழுதினது இதில்வினையுவமமும், பயனுவமமும், கண்டுகொள்க. ஐவகைப்பொருளென்றது பிருதிவி-அப்பு - தேயு-வாயு-ஆகாயம் என்கின்ற பஞ்சபூதங்களும் பொருந்தும்.] (க)

மன்னருள்விசயன்கேட்பவாளமர்தனமேலிட்டு ............ *
மின்னவிர்படைக்கைமாயனுரைத்தமெய்ப்பொருளையெல்லா
ம், பன்னருமறைகள்கோத்தபழமுனிபணித்தவண்ண .... ... *
மென்னறிவளவினாலேதமிழினாலியம்பலுற்றேன் .... .... .... *

(இ-ள்.) எல்லாரையுங்கொல்லலாகாதென்று அவர்கள் மேல் கிருபைவைத்து அருச்சுனன்கேட்க அவர்களையெல்லாரையுங் கொல்லத்தக்க கீர்த்திபிரகாசிக்கிற சண்டையின்மேலிட்டு ஒளி பிரகாசிக்கிற பஞ்சாயுதந்தரித்த திருக்கைகளையுடைய ஸ்ரீகிருஷ்ண சுவாமி யுபதேசித்தவுண்மைப் பொருளையெல்லாம் ஓதவரிய பழைய வேதங்களை நாலாகக்கோத்த வியாசமகா முனிகிரந்தமாக வருவிச் செய்தபடிக்கு அடியேனுடைய அறிவெவ்வளவோ அவ்வளவினாலேதமிழாற் சொல்லத்தொடங்கினேனென்றவாறு. ☼ அறிவள வென்றதனால் வேதத்தை கோவைபிட்டவருடைய அறிவினாலேசெய்ததை அடியேனறிவளவினாலே சொல்லுகிறது மகா அற்பமாகையால் அவர் சொன்னதுபோலிருக்காமற் பெரியோர்களால் இகழப்படுவதாயினும் அடியேன் ஆசையினாற்சொன்னதினாலே பெரியவர்களும் இவனறிவுக்கு எட்டினதென்று கொள்ளுவார்களென்பதுகருத்து.(௨)

[கலிநிலைத்துறை.]

விண்ணியன்மொழியினால்வியாசன்கூறிய ........ ... .... *
புண்ணியகதையையான்புகல்வதென்னெனி ........ ..... *
லெண்ணியவகைபிறிதில்லையாயினுமிந் .................... *
நுண்ணியபொருளினுநுழையவேண்டியே ... ..... ..... *

(இ-ள்.) தெய்வசுபாவவசனமான கிரந்தத்தினாலே வியாசமாமுனி சொன்ன புண்ணியகதையான இந்தக்கீதையை அடியேன்தமிழினாலே சொல்லுவதென்னவெனில் மோட்சத்துக்கு எண்ணமிட்ட சாத்திரவிதங்கள் வேறேயில்லையானதாலும் இந்தக்கீதையால்மோட்சமுள்ளதினாலும், இந்தக்கீதையிலுள்ள சூட்சுமப் பொருளிலேபுகுதவேண்டிச்சொன்னதென்றவாறு. ☼ இதனால் வருங்காரணங் கூறியது.] (௩)

உன்னுநான்மறைமால்வனாயச்சிமேன் .................... *
மன்னுமேகமுழங்கியவாக்கினைப் ........ ... ............... *
பன்னுசீர்பரமார்த்ததரிசன ... ........ .... .................... *
மென்னுநாமத்தினையியம்புவாம் ........................... *

(இ-ள்.) பெரியமலையினுச்சியின்மேலேயிருக்கிற மேகங் குமிறிட்டொழிந்த வெள்ளத்திரளுமேலுலகத்தைஇரக்ஷிப்பதுபோல எல்லாரும் நினைக்கப்பட்டநாலுவேதங்களுடைய சிரசின்மேலேயிருக்கிற ஸ்ரீகிருஷ்ணசுவாமி கெம்பீரமாக உபதேசித்த திருவார்த்தையை எல்லாருமோதப்பட்ட சிறப்புடைய பரமார்த்ததரிசனமென்றுசொல்லப்பட்ட திருநாமமுடைய இந்தக்கீதையைத் தமிழினாலே சொல்லுவாமென்றவாறு. ❀ இதனாலிந்நூற்பெயரும்பயனுங்கூறியது. இதனுள் வண்ணவுவமமும, விளையினுவமமும், பயனுவமமுங்கண்டுகொள்க. இவ்வநாள தம்பிரான் இந்தநூலுக்குப்பரமார்த்த தரிசனமென்று கிரந்தப்பெயர் தமிழிற்பரமபொருட் காட்சியென்று மொழிமாறுபெயர்வழங்குகிறது. (௪)

பாயிரம் - முற்றிற்றுமுற்றும்.

முதலாவது

# சோக-அத்தியாயம்.

[வாக்கியார்த்தம்.]

கௌரவர்களும், பாண்டவர்களும், குருக்ஷேத்திரபூமியிலேசண்டைக்குப்போன அன்றுதிருதராட்டிரன் சஞ்சயனுடனே விசாரப்பட்டுக்கொண்டிருக்கையில், வியாசமகாமுனிவந்து விசாரந்தீரச்சொன்னார் கேட்ட திருதராட்டிரன் சண்டையைப்பார்க்கமாட்டேன் கேட்கவேண்டுமென்ன அதற்கு நல்லதென்று சஞ்சயனுக்குத் தூரப்பார்வையுந், தூரக்கேள்வியுமுண்டாகவும், ஆயுதம்படாமலும், முன்பின்வாராமலும், திரிகாலஞானமிருக்கத்தக்கதாகவரங்கொடுத்தேன் இவனாலே எல்லாங்கேட்டறியென்று சொல்லிப் போனார் அவர்போனபின் சஞ்சயன் சண்டைசமாசாரஞ் சொல்லிக்கொண்டுவந்த பத்தாநாள் இராத்திரிசொல்லுகிறதில் பீஷ்மருக்குச் சேனைபதிபட்டங்கட்டிமுதல்நாள்சண்டைக்கு எதிர்த்துப் போர்க்களத்தில் நின்றபோது, நடந்தசெய்திசொல்லுகிறது.

[அறுசீர்க்கழிநெடிலடிஆசிரியவிருத்தம்.]

புண்ணியபூமியென்னும்புகழ்குருபூமிதன்னி. .... .....✻
ணண்ணியபின்னர்நமதவர்களுநமருமாக்குக் ......✻

கண்ணியசென்னையென்றுகண்ணிலாவரசன்கேட்பத் *
தண்ணியவினியசொல்லாற்சஞ்சயனுரைக்கலுற்றான் *

(இ-ள்.) உலகத்திற்புண்ணியபூமியென்று சொல்லப்பட்ட கீர்த்தி பெற்ற குருக்ஷேத்திரத்தில் சண்டைபண்ண வேண்டிக்கூடின பின்பு பகைஞராகிய பாண்டவர்களும் நம்முடையவர்களும் அங்கே நினைத்த தென்னவென்று கண்ணில்லா திருதராட்டிரன்கேட்க அதற்குக்குளிர்ந்த இனியசொல்லினாலே சஞ்சயன் சொல்லத் தொடங்கினனென்றவாறு. (௧)

போர்முகமாகிநின்றபுல்லலார்படையைப்பார்த்துக் *
கார்முகவுழவனாயகலையுறைபவனைநோக்கி ... ........... *
வார்முரசதிருந்தானைவாளரவுயர்த்ததோன்ற ... ..... ... *
கார்முகின்முழக்கமென்னவின்னனவியம்பலுற்றான் - *

(இ-ள்.) தோலாற்கட்டினபேரிகை முழக்கப்பட்ட சேனைகளுடனே பிரகாசமுடைய பாம்பைக்கொடியாக வுயரப்பண்ணின துரியோதனன் சண்டைமுகமாகிநின்ற சத்துருக்களான பாண்டவர்களுடைய சேனையைப்பார்த்து வில்லாகிய கலப்பையாலே பகைஞராகிய நிலத்தையுழுகிறவனாகிய சாஸ்திரவேத வல்லவரான துரோணரைப்பார்த்து நீண்ட அழகியமேகமுழக்கம் போல இவ்வண்ணமாகச் சொல்லத்தொடங்கினனென்றவாறு. (௨)

[கொச்சகக்கலிப்பா.]

வீமனையும்விசயனையுநிகர்தருபோர்வில்லாள ....... .... *
போர்மருவுசிலையபிமனுள்ளிட்டோரெனப்பலருந் .... .... *
தார்மருவுதலைவர்களாய்த்தலைப்பெய்ததானையினை .... *
மாமருவுபெருந்தேராய்பாரொன்றுமறித்துரைப்பான் -

(இ-ள்.) வீமனையும்-அருச்சுனனையும் - ஒப்பாகத் தரப்பட்ட சண்டைக்கு உபகாரமான ஆயுதங்களையுடையவர்கள் அங்குத்தங்கினவில்லையுடைய அபிமன்னன் முதலான உள்ளிட்டோரென்ற அநேகருந்தும் பைமாலைதரித்துச் சண்டைக்கு ஆயுதமான நாயகர்களாகப்பின்னிட்டு முன்னிட்டசேனையைக் குதிரைகள்கட்டின பெரியதேரையுடைய ஆசாரியரோபாருமென்று திரும்பவுஞ்சொல்லுவானென்றவாறு. (௩)

[கலிவிருத்தம்.]

கங்கையாள்பெறுகாதலனும்புக ............................ *
பூங்கர்ணோனெனதாருயிர்த்தோழனு ........................ *

தங்கள்வாழ்துணைநம்பியுநீயுமிங் ... *
குங்களாருயிரொன்பொருட்டொக்குநீர் ... *

(இ-ள்.) கங்காநதியானவள் பெற்றகுமாரனாகிய பீஷ்மரும், கீர்த்திபெற்ற அங்கதேசத்தாருக்கு அரசனான வென்னுடைய அரிய உயிர்த்தோழனாகிய கன்னனும், நம்முடைய செல்வத் துணையான அசுவத்தாமாவும், நீருமற்றவிடங்களிலேயேற்றக்குறைச்சலாயிருப்பினும் அன்பினாலே இங்கே யென்னிமித்தமாக வுங்களுடைய அரிய சீவன்களெல்லாம் ஒத்திருக்குந்தன்மை (எ-று.) (௪)

அன்றியேயுமரசரனேகரால் ... *
வென்றியேதரவல்லரும்வேண்டலா ... *
ரொன்றியேதமெனக்குறுமேலுயிர் ... *
பொன்றியேயதுபோக்குதன்மேற்கொண்டார் ... *

(இ-ள்.) அல்லாமலும் என்மேலன்பினாலே வுங்களையொப்பாக, இசையப்பட்ட அரசர் அனேகம்பேர் அவர்கள் எனக்குவெற்றியேதர வேண்டுவர் வெற்றியல்லாததோல்வியை வேண்டார் எனக்கு அவசியமான குற்றம்வந்து கலந்து வருமாகிற் றங்களுடைய சீவனை விட்டேயந்தக்குற்றத்தைப் போக்கிச்செய்ததை வருவிக்கிற உத்தியோகத்தை மேற்கொண்டார்களென்றவாறு.] (௫)

எய்தவெங்கள்பிதாமகனேவலாற் ... *
கைகொள்கின்றகடற்படைகண்ணுறில் ... *
வெய்யவீமன்வியப்பொடுகாத்திடு ... *
மைவர்தம்படைக்காற்றவற்றாகுமோ ... *

(இ-ள்.) சேனாபதியாகிவந்த எங்கள்பாட்டனான பீஷ்மருடைய ஏவலினாலே கைகலந்துகொள்ளுகிற கடலையொப்பான சேனையைப் பார்த்தாற் கொடுமையான வீமன் அதிசயத்துடனே காக்கப்பட்ட பஞ்சவர்களுடைய சேனைக்கு ஆற்றத்தக்கதாகுமோ (எ-று.) ※ இதனுள் வீமன் மேற்றனக்கிருக்கிற பயத்தைச் சேனைமேல்வைத்துச் சேனை நடுங்குமென்றும் பாட்டன்கிழவனென்றும் சேனையைச் சேனாபதிகாப்பார் நமக்கென்னவென்றுபாராமுகமாயிராமலுந் தெரிவிப்பதுகுறிப்பு. (௬)

மேல்வகுத்ததுகாமின்விரைந்தெனு ... *
மேல்வயிற்றிறல்யாதவர்தம்மொடுங் ... *

காலவளைத்தசிலைக்கர்கைபாண்மகன் .... .... ..... .... *
வாலவளைத்திரடலனையுய்வாய்வையா..... ..... ....... *

(இ,ள்.) இனிமேல்யூகாசாரமாக வகுத்த விடத்தில் எவரெவரை யெவ்வெவ்விடங்களிலேயெங்கள்பாட்டனார் வைக்கிறாரோ அவ்வவ்வி டங்களிலே அவரவரிருந்து அதைச்சிக்கப்பட்டுக்காத்துக்கொள்ளு ங்களென்கிறபோது திறமையுடைய யாதவர்களுடனே நின்று நாணையேற்றிக் காலவளைத்து வில்லைத்தரித்த கங்காபுத்திரனாகிய பீஷ்மர் வெள்ளைநிறமான சங்குக்கூட்டங்களைவாயில்வைத்து (எ-று.) (எ)

வஞ்சர்செய்தவினைமறலிக்குண .... ... ..... ... *
வெஞ்சமர்விளைந்ததன்னவும்வேந்தர்கோ ......... ... *
னெஞ்சமுண்மகிழ்வெய்தவுநேரலா..... ..... ........ *
ரஞ்சவுங்கனைன்றார்த்தனர்சங்கமே .... ..... .... .... *

(இ,ள்.) வஞ்சகர்செய்தகாரியம் யமனுக்குப்பொசிக்கக் கொடுமையான சண்டைவிளைந்ததென்னவும் இராஜாதிராஜனான துரியோதனனுடைய மனமானது உள்ளேசந்தோஷமடையவும்பகைஞரான பாண்டவர்கள்பயப்படவுங்கோபித்துச் சங்குகளை முழக்கினார்களென்றவாறு. ※ மேலென்றபாட்டும் வஞ்சகமென்றபாட்டும் ஒருதொடர். (அ)

[கலிநிலைத்துறை.]

ஆர்த்தனவளைகளெங்குமதிர்ந்தனபல்லியங்கள் .... .... *
போர்ச்சதிடப்படைநின்றிப்பாற்புவனமீரேழும்பூத்த *
தீர்த்தனுந்தனதுசங்கைச்செங்கையால்வாங்கிக்கொண்டு
கார்த்திரண்முழக்கமென்னக்கடல்கிளர்ந்தார்த்ததென்ன

(இ,ள்.) சங்கங்கள்முழங்கின பலவாத்தியங்களும் எங்கு மதிர்ந்தன சேனைகள்நின்று இந்தப்பூமியைப்போர்த்துக்கொண்டதுபோல நிறைய அப்போது பதினாலுலகத்தையும் பெற்ற ஸ்ரீகிருஷ்ண சுவாமியுந்தம்முடைய பாஞ்சசன்னியமென்கின்ற சங்கைச்சிவந்ததிருக்கையாலே வாங்கிக்கொண்டு மேகக் கூட்டங்களின் முழக்கமென்றுசிலர்சொல்ல எழுகடலுமொன்றாகக் கூடிப்பொங்கியெழுந்துமுழங்கினவென்று சிலர்சொல்ல(எ,று.) (௯)

[கலிவிருத்தம்.]

வையமனைத்தையும்வாரிமுன்வைக்குஞ் .... ..... .... *
செய்யதிருப்பவளத்திடைவைத்தா..... ..... .......... *

னாகவெமக்குயிராதலினாலே ... ... ... ... ... ... ..*
யுய்வதுமக்கிலையென்பதையொத்தே ............ ......... *

(இ,ள்) முற்காலத்திலேபூமியெல்லாவற்றையும் வாரியுள்ளவை க்கப்பட்ட சிவந்தபவளத்தையொப்பான திரு வதரத்தில் வைத்து முழக்கினார். அதெப்படியிருந்ததென்றால், பஞ்சவர்களெமக்குச்சீ வனாகையாலே, தப்பிப்பிழைப்பது உமக்கில்லையென்று அண்டகடா கமறியச்சொன்னதை யொத்ததென்றவாறு. ☼ ஆர்த்தனவென்ற கவியும், வையமனைத்தையுமென்றகவியு, மொருதொடர் சகலசீவன் களும், உயிராயிருக்கிற நமக்குப் பாண்டவர்களுயிரென்பது கிரு பை உமக்கரிதென்று பாடமாயில், உங்களுக்கரிது பஞ்சவருக்கெ ளிதெனவாரும் இல்லை என்பது நிக்சயம் அரிதென்பது சந்தேகம் ஆகையாலே, சந்தேகமாகத் தெய்வஞ்சொல்லாததினாலே, அரிதெ ன்று பாடம் ஓதக்கூடாது.] (௰)

[அறுசீரடி ஆசிரியவிருத்தம்.]

தருமன்பலவீமனருச்சுனனகுலன்சாதேவன் ............ *
திருமருவுவிசயம்பவுண்டரந்தேவதத்தமெழில் ....... *
மருவுசுகோடகமணிபுட்பகக்கொடுமெனவிவற்றி ...... *
னுருமனையகுரலெதிர்த்தோர்செவிபோய்ப்பவூதினார்-*

(இ,ள்) இப்படிச்சுவாமியானவர் பாஞ்சசன்னியமென்கிற சங் கையூதினவுடனே தருமராசாசிறப்புப்பொருந்திய விசயமென்கிற சங்கம்பலமுள்ள வீமன்பவுண்டரமென்கிற சங்கம் அருச்சுனன்தே வதத்தமென்கிற சங்கம் நகுலன் அழகுபொருந்திய சுகோடகமெ ன்கிற சங்கம் சகாதேவன் மணிபுட்பகமென்கிற சங்கம் இப்படியெ ன்று பெயருடைய இந்த அஞ்சுசங்கினும் இடியையொப்பான குர லானதுபகைஞர்களுடைய காதுகள்செவிடுபடவூதினார்கள் (எ,று) (௰௧)

[சந்தவிருத்தம்.]

ஒன்றலாதுபலவூதினார்கள்பலருந்தம்வால்வளையினோசைபோய் ..*
நின்றகௌரவர்கணெஞ்சையூடுருவிவிஞ்சுவானினுநிரம்பமேல் *
வென்றிசேரமர் தொடங்குமெல்லையினில் வெள்ளமாகடவுதேரினை
மே,னின்றபோர்விசயனொன்றுமாயனெதிர்நில்லலாமையொடுசொ
ல்லுவான் ......... ..... ..... ..... ..... ..... .... ..... ... .. *

(இ,ள்.) மற்றுமுள்ளராஜாக்களொன்றல்லாதஅனேகஞ்சங்கையூ தினார்கள். இப்படி அனேகரும் ஊதின வெள்ளைச்சங்குகளினுடை

யசத்தமானது போலெதிராகநின்ற கௌரவர்களுடைய நெஞ்சுக்குள்ளே பகுந்து பிறகேபுறப்பட்டுவளர்ந்து யாதாலுநிரம்பாத ஆகாயத்திலும் நிறைய அதற்குமேலிரண்டுசேனையும், வெற்றி சேரப்பட்ட சண்டைதொடங்குகறபொழுது வெள்ளைக்குதிரைகளாலேநடத்தப்பட்ட, தேரின்மேல் நின்று சண்டைசெய்ய யத்தனப்பட்ட அருச்சுனன் அந்தத்தேரின் மேலே நிற்கமாட்டாத சோகத்துடனே சுவாமிக்கு எதிரே வொருவசனஞ்சொல்லுவானென்றவாறு. ஜீவானிலுமென்ற உம்மைச்சிறப்பும்மை நிற்கமாட்டாமையா லதுத்ள்ளாடல்.] (௨௨)

யாவர்போர்க்கு நீதியெய்தினார்களிதிரெய்திநின்றவிவாதங்களில்
யாவரோடேபர்தொடங்கலா மெனவறிந்துகொள்ளு மளவியா
லையநீ, காவல்புணியவை சுந்துபின்னவை கரந்துகொண்டரு
ள்செய்க்கண்ணனே, மேவநீகடவு மாகொடேரிலை நிறுத்துவா
னவிளம்புறான் .... ..... ..... ..... ...... ..... ..... ...*

(இ,ள்.) எல்லாவற்றையுங் காவலாகவாதரித்து அவைகளையுண்டாக்கிப் பின்பு அவற்றையொளித்துக்கொண்டருளப்பட்ட சுவாமியெதிராகவந்து, நின்றவிவர்களில யார் சண்டையெதிலேத்துவந்தார்கள் யாரோடே சண்டைதொடங்கலாமென்று அறிந்து கொள்ளுகிறமட்டுமனம் பொருந்த நடத்தப்பட்ட குதிரை பூண்டிருக்குந் தேரை நீ நிறுத்துவாயென்றுசொன்னானென்றவாறு. (௨௩)

விளம்புமவ்வளவின் மேகவண்ணனுமவ்வெள்ளைமாகடவு தேரினைச், களங்கொளும் பரிசுநின்ற சேனைநடுவே கடாவியிதுகாணென , வளங்கொள்கங்கைமகனுநியாசமுடிமன்னரியாவரையமுன்னுறத் , தளங்குகின்றமுடிபோடு நெஞ்சினனுநி வல்ல வாறுசிலசொல்லினான் ..... ..... ..... ..... ... ... .. *

(இ,ள். சொல்லப்பட்ட அவ்வளவில் மேகநிறமான சுவாமியும், அந்தவெள்ளைக்குதிரைகளாலே நடத்தப்பட்ட தேரைப் போர்க்களத்திலெவ்வெவ்விடங்களிலு நிறையக் கொள்ளும்படி நின்றசேனைக்குநடுவே நடத்திநிறுத்தி நீசொன்னதுடா னென்று சொல்ல வளமைகொண்ட. கங்காபுத்திரனுகிய, பீஷ்மர்முதலாக கிரீடந் தரித்த ராஜாக்களெல்லாரையும், கண்முன்னுகக்கண்டு அசைப்பப்பட்டகிரீடத்துடனே சொல்லவல்லவழியாகத் தன்மனதுடனே சில வசனஞ்சொன்னுனென்றவாறு.] (௨௪)

[கொச்சகக்கலிப்பா.]

தாவிலருந்தந்தையருந்தந்தையர்தந்தையரு…… *
மேவியுடன்பிறந்தாருமெய்ஞ்ஞானமளித்தாரு…… *
மாவியெனநட்டாருமான்றோருமமர்க்களத்தே…… *
மேவியவெம்பொருட்டாகவுயிர்விடவென்றுடங்கினார் *

(இ-ள்.) வருத்தமில்லாத அருமையான தகப்பன்மாருந், தகப்பன்மாருடைய தகப்பன்மாரும், இவர்களுடனே கூடப்பிறந்தவர்களும், மெய்யான ஞானோபதேசப்பண்ணினபேருஞ், சீவனைப்போலச் சிநேகமானவர்களும் அமைந்தடங்கின பெரியோரும் போர்க்களத்திலே வந்து, எங்களுடைய நிமித்தமாகத் தங்களுடைய சீவனைவிட்டுவேண்டிச் சண்டைக்குத் தொடங்கினார்களென்றவாறு. (௰௫)

[கலிவிருத்தம்.]

தீதறுகுரவர்மற்றவர்கள்சேய்களு…… *
மாதுலர்சிலர்களோமாய்கின்றாரெனக்…… *
காதல்செய்திடரினாற்கலக்கமுற்றவன்…… *
மாதவனெதிர்சிலமாற்றங்கூறுவான்…… *

(இ-ள்.) குற்றமற்றகுருக்களும், பின்னும் அவர்கள் பிள்ளைகளும், அம்மான்மார்களும், இவர்கள் முதலானவர்களோ சாகிறார்களென்று, அவர்கண்மேலாசை வைத்து அந்தத் துக்கத்தினாலே, கலக்கமடைந்த அருச்சுனன் சுவாமிமுன்னே சிலவார்த்தை சொல்லுவானென்றவாறு. ❁ குருக்கள்மாராவது கிருபர், துரோணர். (௰௬)

[அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.]

வாயேயன்றிமுகம்புலருமனமொன்றுணரமாட்டாது…… *
தீயேயன்றியுடல்வெதும்புஞ்செவ்வேநிற்கமாட்டுகிலேன்…… *
மேயதிருத்திண்காண்டீபவில்லுநழுவிவிழாநின்ற…… *
தாயேயனையாய்போர்நின்றதமராக்காணுந்தோறுமன்னே *

(இ-ள்.) வாயுலர்ந்தது அதுவுமல்லாமல் முகம்வாடுகிறது மனது மொன்றை யறியமாட்டாது நெருப்பையல்லாமற் சரீரம் வெதும்புகின்றது செவ்வையாக நிற்கமாட்டேன் மூங்கிலாலேயுண்டான திண்மையான காண்டீபமென்கிற வில்லும் நழுவிவிழுகிறது தாயையொப்பான சுவாமி சண்டைபண்ணநின்ற உறவினவரைக்காணும்போதெல்லாமென்றவாறு. ❁ வாயுலர்ந்துமுகம்வாடிமனதுமயங்கிச்சரீரம் வெம்பித்தள்ளாடிவில்லுநழுவிவிழுகிறதென்று சொன்னது குறிப்பு.

ஓதலாகாநிமித்தங்களொன்றேயல்லபலவுளவாங்..... .... *
காதலரைக்கொன்றுபெறும்பயனேதொன்றுங்காணே
ன், ஆதலாலிவ்வெற்றியுடனரசினுரிமையானதனை ... *
ஏதலாவதென்கின்றதியாதின்பொருட்டோவியம்பாயால்

(இ-ள்.) சொல்லலாகாத நிமித்தங்களொன்று தானே அல்ல அனேகமுண்டாகிறது என்மேலே அன்புடையவர்களைக் கொன்று பெறப்பட்டபிரயோசனமோ நான் ஒன்றுங் காணேன் ஆதலால், வெற்றியுடனே அரசுரிமையான அதனைவிசாரிக்கிலெனக்குநல்லநாசமென்னேறே சுகிற எச்சாகிறது இப்போது இந்தச்சண்டையென்ன நிமித்தமோ சொல்லுவாயென்றவாறு. (௰அ)

[அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.]

அரசவ்வரசால்வரும்போகமதனாலின்பமெய்துமென, உரை
செய்பொருள்களியாவர்சிலர்பொருட்டாலுலகைப்புரந்தவடைவர்
வரைகொள்புயனேமற்றவர்தம்பொருளுந்தங்கள்வாழ்நாளும்
நிரைசெய்தொருவரொருவரின்முன்னீக்கவந்துநின்றரால் *

(இ-ள். மலையைக்குடையாகக்கொண்ட புயத்தையுடைய சுவாமி அரசு அந்த அரசாலவருகிறபோகம்போகத்திலேவருகிறசுகமென்று சொல்லப்பட்ட மூன்றுபொருள்களையும், சிலபேர்நிமித்தமாக வருத்தியார் பூமியை யடைவார்களோ அவர்கள் தங்களுடைய அரசுபோகஞ்சுகமென்ற மூன்றுபொருள்களையும், தங்களுடைய ஆயுசுகளையும், விட்டுவந்து வரிசைவரிசையாக ஒருவர் முன்னே ஒருவர் நின்றார்களென்றவாறு. ஃ அரசுபோகஞ்சுகமென்றமூன்றுபொருளு மூன்றுபேறு அவைதகப்பன் தாய் குருசிநேகர் உறவினர்-பெரியவர்கள் - நலசவர்கள் இவர்கள் முதலானபேர்களநுபவிக்கவேண்டிப்பெறுகையால், இப்போது இந்தச்சண்டையில் இவர்களைக்கொன்று பெறுவதாக வந்திருக்கிறது அதெதென்னில் இவர்களே யெனக்குமுன்னே யெனக்குமுன்னேயென்று அவசரப்பட்டு ஒருவர்முன் ஒருவர்வந்து நிற்கையால், இவர்களைக்கொன்றுவரும்பிரயோசனம் ஆகாதென்பது குறிப்பு.] (௰௯)

ஆனபொருளிதாதலிலவரைக்கொன்றலருள்சேரா- *
தீனமல்லாலெங்களுக்கோரின்பமெங்குமில்லையால்..... *
கூனவரிவிற்கொண்டேனைக்கொலினுமவரையான்கோ

றல், வானம்பெறினுமினிவேண்டேன்மண்ணின்பொரு
ட்டால்வல்லேனோ ........ ........ ........ ........ *

(இ-ள்.) இந்தச்சண்டையினாலானபொருளிது ஆதலாலவனைத்தை யையில்லாமற் கொன்றாற்குற்றமேயல்லாமல் எங்களுக்கு ஒருசுகமாகிலும் எய்துமில்லை ஆகையால் வளைந்து வரிந்த வில்லைக் கொண்டு அவர்கள் என்னைக்கொன்றாலும், அவர்களை நான்கொல்லுகிறது பெருந்தேவலோகத்தைப்பெற்றாலும், இனி ஆசைப்படேன் இப்படித் தேவலோகத்தை வேண்டிக்கொல்லாத நான் மண்ணுலகை நிமித்தத்தாலே கொல்லமாட்டுவனோ மாட்டேனென்றவாறு. (உ0)

கொற்றவர்தங்குலங்கெடுத்தால்வருகின்றகுற்றமுமெய்-
யுற்றவர்தத்திறம்பிழைத்தாலுறுகின்றவுயர்பழியும்.... .. *
மற்றவர்களறியாருமறந்திடுகமறந்தாலுங் ..... .... .... *
குற்றமெனவறிந்தவியானகுறிக்கொள்ளாதொழிவேனோ.

(இ-ள்.) இராஜாக்கள் தங்கள்குலத்தைக்கெடுத்தால், வருகிறகுற்றமுஞ் சத்தியம் சமசமானவர்கள் தங்களுடைய ஒழுக்கத்தை விட்டால், அடையப்பட்டபெரியபழியும் அவர்களறியாததற்குமுன்னே மறக்கவேண்டும் அப்படிமறந்தாலும் ஆகாதென்கைதாற் குற்றமென்றறிந்தயான் இனியெப்போதும் நினைவாயிருக்கிற படிக்குத் திடமாய்க்கொள்ளாமல் மறந்துவிடுவேனோ விடேனென்றவாறு. இதில்நினையாமல் மறந்து ஆபத்தமனேன் இனி அறிந்தபின்பு அதை பொறுப்புக்கொள்ளேனென்பது குறிப்பு. (உக)

குலங்கெடவேவருகின்றகுலதருமங்கெடுதரும் ........ *
நலங்கெடவேகுலப்பாவநண்ணுமதுநண்ணவே. .... *
இலங்கிழைபார்நெறிதிரிவரிவர்களைறிந்திரியவே ...... *
தலங்குலவுமுறைமையெலாந்தலைதடுமாறுமால் ... .. *

(இ-ள்.) குலநாசமாகவே அநாதியாகத்தொடர்ந்து வருகிற குலதருமம்நாசமடையும், குலநலமானதருமமழியவேகுலத்தைப்பாவமூடிக்கொள்ளும் அந்தப்பாவங்கள்கூடினமாத்திரத்திலே பிரகாசிக்கிற பொன்னாலும், மணியாலும், செய்த ஆபரணம்பூண்டபெண்கள்தங்கள்மார்க்கத்தைத் தப்புவார்கள் இந்தப்பெண்கள் பதிவிரதாமார்க்கத்தைத்தப்பி விபசரியம்பண்ணவே பூமியிலே வழங்கினவரிசையான முறைமையெல்லாந்தலைதடுமாற்றமாகும்(எ-று.) (உஉ)

தடுமாற்றமக்குலத்தைச்சார்ந்தார்க்குஞ்சாராதே...... *

கெடுமாற்றநினைத்தவர்க்குங்கெடா நிரயங்கிடைப்பிக்கும்
படுமாற்றமென்னுரைக்கேன்பண்டிறந்தார்களுந்தடக்
கோன் , இடுமாற்றலவர்கள்பெறு திருனரகத்திழிவர்க
ளால் .... ..... ..... ..... ..... .... .. ..... ... *

(இ-ள்.) முறைகெட்டதடுமாற்றம்சங்கரமான அந்தக்குலத்தையடைந்தவர்களுக்கும் அந்தக்குலத்தைத்தான்சாராமல் அழியும்படி நினைத்தவர்களுக்கும், எந்தக்காலமும் அழியாதநரகத்தை யனுபவிக்கப்பண்ணும் ஆகையால், உண்டானவசனத்தை யென்ன சொல்லுவேன் முன்மரணமான பிதுர்தேவர்களுக்குந் தங்களுக்கிடுவமெதான்றான பிண்டவுதகக்கிரியைகளை இடுவாரில்லாததினாலே பெருமையிருண்டநரகத்திற் பிதுர்களிறங்குவர்களென்றவாறு. ❀ இது அகோரகதியான நரகமேலதலைகீழாகவிழுவது. (௨௫)

வாராநின்றதலமடங்கப்பண்ணினோர்க்குமற்றவரைச் … ❀
சாராநின்றகுலத்துக்குந்தருமந்தளர்ந்துசாயமாற் .. *
சாரநின்றகுலந்தருமமிரண்டுந்தளர்ந்துசாயவே … [ல்
போரநிரயமெய்துமெனப்பெரியோர்யாரும்பேசுவரா

(இ-ள்.) பூமியுள்ளநாள்முதலாக வரப்பட்டகுலத்தை மயங்கப்பண்ணிச் சங்கரமாக்கினவர்களுக்கும், அந்தக்குலத்தைக்கெடுத்தவர்களைச் சார்ந்து நின்றகுலத்தாருக்குந், தருமங்கெட்டுவிழுந்துபோம் இந்தவுலகத்தைச்சார்ந்துநின்ற குலமென்றுந், தருமமென்றுஞ் சொல்லப்பட்ட இரண்டுநிலைகெட்டுவிழவே அந்த மனிதர்களுக்கு நீங்காத நரகங்கிடைக்கு மென்று பெரியோரெல்லாருஞ் சொல்லுவார்களென்றவாறு. ❀ குலத்தாருங்குலத்தைக்கெடுத்தாரும் நரகத்திலெக்காலமு மிருக்கவேண்டு மென் பதனாலே பேரா நிரயமென்றார்.] (௨௬)

பின்னேயனையசெல்வத்தைவேண்டித்தங்கள்மெய்யுயிரைக் *
கொன்னேகழிக்கநின்றவரைக் கொல்லத்துணிந்த கொடுவினை
யே , யென்னேகொடியபெரும்பாவமெய்த நினைந்தேனிடா
ஞமிவர் , முன்னேபடைவிட்டமர்துறந்துநின்றேயிவர்கணமு
னிவாரோ ........................ ......... ................ ... *

(இ-ள்.) பின்னையொப்பான செல்வத்தைவேண்டித் தங்களுடையசரீரத்துயிரை வீணிலேபோக்க நின்றவர்களைக் கொல்லத்துணிந்த கொடும்பாவியான நானென்னவோ கொடுமையான பெரியபாவ

த்தையடைய நினைத்தேன்நானும் இவர்கள் முன்னே ஆயுதத்தைவி ட்டுச்சண்டையைவெறுத்து நின்றாலிவர்கள் கோபிப்பாரோகோபி யாரென்றவாறு. ※ மின்காட்டின அந்தக்ஷணமே மறை கையாற் செல்வம் நிலையாதென்பது கருத்து. (௨௫)

[கலிவிருத்தம்.]

கொல்லினுமெனக்கதுபொறுக்கைகுணமென்றே ※
கல்லினுயர்தோள்விடலைகண்ணனெதிர்கூறி ※
வில்லினுடனேபகழிசோரவிழிசோரச் ※
சில்லிமணியாழிபொருதேர்மிசையிருந்தான் ※

(இ-ள்.) நிராயுதமன்றுபாராமலென்னைக்கொன்றாலும், அது போகிறது எனக்கு மிகுதியும், நல்லது என்றுமலையை யொப்பாக வுயர்ந்ததோள்களையுடைய காளையாகிய அருச்சுனன் ஸ்ரீகிருஷ்ண சுவாமி முன்னே சொல்லிவில்லுடனே அம்புநழுவக்கண்கள் நீர்து ளிக்க அழகியவண்டிலானது இடியைப்போலப் பூமியைப்பிளக்கப் பட்டதேர்மேலிருந்தானென்றவாறு.] (௨௬)

சோக-அத்தியாயமுற்றிற்றுமுற்றும்-பாயிரமுட்பட
ஆக - திருவிருத்தம் - (௬௰.)

இரண்டாவது

# சாங்கியயோக - அத்தியாயம்.

[கொச்சகக்கலிப்பா.]

இவ்வண்ணமறிவொதுங்கிவெருட்டின்றவிரதத்தாற் ※
செய்வண்ணமறியாதிகைத்திருந்ததேர்விசையன் ※
உய்வண்ணமருநாடியொருவண்ணமுலகோதுங் ※
கைவண்ணமலருடையகார்வண்ணன்கட்டுரைப்பான் ※

(இ-ள்.) இந்தப்படிக்கு அறிவுவிலக வெரும்புகிற தயையினாலே செய்யத்தக்கதை யறியாமற்றிகைத்துத் தேரிலிருந்த அருச்சுனன் மயக்கந்தீர்ந்து பிழைக்கத்தக்கதென்னவென்று ஆலோசனை பண் ணி, உலகத்தார்தோத்திரம்பண்ணக் கொடுத்தருளுகின்ற செந்தா மரைப்பூவையொப்பான திருக்கையையுடைய மேகநிறமான ஸ்ரீகி

ருஷ்ண சுவாமி உபதேசமார்க்கங்கள் அனேகத்தில் ஒருவிதத்தைச் சொல்லுகிறானென்றவாறு. ※ இரக்கமாவது பகைஞரை நம்முடையவர்களென்று அபிமானத்தாலெழும்புகிற இரக்கம். (௧)

ஆயாதவர்க்கு அலிகட்குமடுப்பதழிபாப்பழியினது ....... ... *
தேயாவறிவைத்தேய்ப்பதறச்சிறுமைகளிளுஞ்சிறுமைபது-*
சாயாநரகத்திடைசாய்ப்பதுன்போல்பவர்க்குத்தகாததுவந் *
தேயாநிலைத்தையுனையெவ்வாறடைந்ததெனவறியேன் *

(இ-ள்.) ஐயாவேதசாஸ்திரங்களை விசாரியாதவர்களுக்கும்ஆணும்பெண்ணுமல்லாத அலிகளுக்கும், அடுப்பது- தீராதபழியையுடையது-கெடாவறிவைக்கெடுப்பது - மெத்தவும் அற்பமானவைகளிலும், அற்பமானது-ஒழியாதநரகத்திடைத்திலே விழப்பண்ணுவது - உன்னையொப்பானவர்களுக்குத் தகாதது இப்படிக்கொத்த அஞ்ஞானம்வந்து இந்தப்போர்க்களத்திலேயுனையெப்படியடைந்ததென்றறியேனென்றவாறு. (௨)

ஒவ்வாதீதொழிந்சமர்மேலொருப்படுகென்றுருக்கரிய ........ *
செவ்வாயின்றிருமொழியத்தேர்விசயன்செப்புவான் ... .... *
மெய்வாயினெடுமனத்தால் மிகப்போற்றற்குரியாரை...... .. *
எவ்வாறுகொலைபுரிவேனென்றிவ்வாறியம்பினான் ......... .... *

(இ-ள்.) இந்தஅக்கிபானம் பெரியோர்களுக்குஒவ்வாதுஇதைவிட்டு உயித்திபத்தின்மேலே வொருமைப்படுமென்று கரியதிருமேனியுஞ் சிவந்தவாயுமுடைய சுவாமி திருவாக்கருளிச்செய்ய விசாரிக்கிற அருச்சுனன் சொல்லுவான் மனோவாக்குக்காயமென்கிற மூன்றுகரணத்தாலும்மிகவும் பூசிக்கிறதற்குரியவரான பீஷ்மர், துரோணர், முதலானவர்களை யெப்படிக்கொலைசெய்வே னென்றிந்தப்படிசொன்னானென்றவாறு. ※ தேர்விசயனை இரதமேறுகிறவனென்றுரைபண்ணில், எல்லாரும் ரதமேறுகிறவர்கள் ஆகையாலேகூடாது தேர்தல் விசாரித்தல் ஆகையாலே விசாரிக்கிற அருச்சுனனுக்குபதேசிக்கிறதினாலே, உவாயில்விசாரித்தென் றெழுதினது ஒடுவென்றது திரிகரணத்தொடாயிற்று. (௩)

மாற்றவர்களெனவிவரைக்கொன்றுபெறும்பெருவாழ்வில் .... *
மேனற்றமுனைத்தியான்பிறர்பாலிரந்துண்கையினிதன்றோ ..... *
கூற்றமவருயிருண்டாலவர்குருதியாற்குழைத்த .... ..... .... *
சோற்றையினிதாகவன்றோயான்பின்னைத்துய்ப்பதெல்லாம். *

(இ,ள்.) பாட்டன், குரு, இவர்கள் முதலான பெரியோர்களைப் பகைகளென்றுகொன்று மேற்பட்ட பெரியவாழ்விலும் அவர்களுடைய பழிமைகளைச்சொல்லி அன்னியரிடத்தில் நான்பிச்சையெடுத்துண்பது இனியதல்லவோ அவர்களுயிரையென்னாலே யமனுண்டால், அவர்களுடைய இரத்தத்தினாலே குழைத்த சோற்றை இனியதாகவல்லவோ நான் அவர்களைக்கொன்றபின்பு போசிப்பதெல்லாமென்றவாறு.] (௪)

தவர்கொல்படைவிடுகையோதவிர்கையோதருவதுமற *
றவர்களைவெல்வமோயான்வெல்வமோவறிகிலே .... *
னவர்கள்சிலரிறந்தக்காலதனாலென்னுருயிர்போ ....... *
மவர்களமர்தொடங்குகவென்றடல்குறித்துநின்றனரால்.

(இ,ள்.) வில்லிலே தொடுத்துக்கொல்லப்பட்ட அம்புவிடுவதோ தவிர்வதோ, இந்த விரண்டிலே தருமான தெதுவோ அல்லாமல் அவர்கள் என்னைச்செயிப்பரோ நான் அவர்களைச்செயிப்பேனோ அவர்களில் சிலரிறந்தால், அதினாலே என்னுடைய அரியசீவன்போம் அவர்கள் சண்டை தொடங்கிகொன்று பலத்தைக் குறித்து நின்றார்களென்றவாறு.] (௫)

ஆதலாலறிவாயவிழியினைமற்றுங்கவர்பாற் .... .... ..... *
காதலாலிருண்மறைப்பநெறியெங்குங்காணேனோ ..... *
ஆதலாலெனக்குறுவதறிகிலேனுரைத்தருள்வாய்ச் ... *
சாதலானதும்பிறப்புமில்லாததனிமுதலே ..... ..... .... *

(இ,ள்.) ஆகையாலறிவாகிய ஞானக்கண்ணை அவர்களிடத்தில் வைத்த ஆசையினாலே அஞ்ஞானமாகியவிருள்மறைக்க நானெங்கும் வழிகாணேன் ஆதலால், உறுதியானதையறிவில்லாத எனக்குறுதியைச்சொல்லி யருளவேண்டும் சாகின்றதானமரணமும், பிறப்புமில்லாத ஒப்பற்ற முதன்மையான சுவாமி யென்றவாறு. (௬)

உஞ்சேபோகுநெறிவாளாவுரைப்பனோவென்றுளங்கருதிர் *
றஞ்சேயென்றன்சரண்புகுந்தேன்தண்டிற்புரிந்தேன்றுமனா
க்கண், மருசேயன்றன்மாணுக்கனுமுன்பாதமலர்புனைந்தே .... *
னஞ்சேலென்றிங்கடியேன்செய்வினைகளேவியாள்வாயே .... *

(இ,ள்-) செந்தாமரைப் பூவை யொப்பான திருக்கண்களையுடைய மேகமேதப்பிப் பிழைத்துப் போகப்பட்ட வழியைக்கேளாமற் சொல்லுவேனோவென்று திருவுளத்தில் நினைத்தருளவேண்டா

ம் அடைக்கலம்புகுது மிடமென்றும்முடைய மறைவு புகுந்தேன் இடைவிடாதபத்நம்செய்தேன் உம்முடையசீஷனாக உம்முடைய திருவடித்தாமரைகளை அடியேனுடையசிரசிலே தரித்தேன் பயப்படாதேயென்று இங்கே அடியேன் செய்யவேண்டிய காரியங்களையேவல்செய்தருளியாளுவாயென்றவாறு. (௭)

[ கலிவிருத்தம். ]

மன்னாரும்பெருஞ்செல்வமன்றியேமாயாத ..... .... *
விண்ணாடும்பற்றிடினுமென்னுடையமெய்யுணர்வு ... *
நண்ணாமலடுதுயரநலியாமற்காப்பதனைக்..... ... [ன்
கண்ணாலிங்கெவ்விடத்துங்காண்கிலேனெனக்கழுந்தா

(இ-ள்.) அழியப்பட்ட பூமியையாளுகிற பெரிய செல்வமு மல்லாமல், அழியாததேவலோகத்தைப்பெற்றாலும், என்னுடையமெய்யானவறிவு சேராமற்கெடுக்கப்பட்டதுக்கமானது என்னை வருத்தாமற் காக்கப் பட்டதை இங்கே எந்த விடத்திலே யுங் கண்ணாலேகாணேனென்று அழுதானென்றவாறு. (௮)

நெய்ம்மார்பிற்சொரிவதெனநெடுங்கண்கணீர்சோர.. *
விம்மாநின்றவன்காதல்வெந்தீயால்வேவாமே ... . . *
கைம்மாறொன்றின்றியுயிர்காக்கவேகடன்பூண்ட ... *
வம்மாயன்றிருவாய்மைப்பருண்மாரியாலவிப்பான் ..... *

(இ-ள்.) மார்பிலே நெய்சொரிவதுபோல நீண்டகண்களில் நீர்சிந்த விம்மிவிம்மிநின்ற அருச்சுனன் உறவின்மேல் வைத்த ஆசையான உஷ்ணமுள்ள நெருப்பாலே வேவாமல் முன்னேதானே பிரதியுபகாரமில்லாமற் பஞ்சவர்களுடைய சீவனைக் காக்கிறதே கடனாகப்பூண்ட அந்தக்கிருஷ்ண சுவாமி திருவாக்கினாலே பொழியப்பட்டவருளையுடைய மழையால், அவிக்கவேண்டியென்றவாறு. (௯)

[அறுசீரடியாசிரியவிருத்தம்.]

மின்னையனையதிருநகைகொண்டருளிவிளைத்தாமரைநாளும் ..... *
பொன்னையணியுந்திருமார்பன்போகாத்துயர்போம்படிசெண்ணி- *
முன்னைமறைகளெடுத்துரைத்த முடியாப்பொருளை முதற் பொரு
ளாய், தன்னையுள்ளபரிசவர்க்குந்தானேசாற்றத்தொடங்கினான் ... *

(இ-ள்) பரிமளித்தபொற்றாமரைப் பூவினிற்றோன்றிய மகாலட்சுமியைத்தரித்த திருமார்பையுடைய ஸ்ரீகிருஷ்ண சுவாமி மின்னையொப்பான திருநகைகொண்டருளி யெப்போதும் போகாததுக்க

ம்போம் படிக்கு நினைத்தும் பழைய வேதங்களெடுத் தெடுத்துச் சொல்லியு முடியாதபொருளை முதலானபொருளினாலே தன்னையுள்ளபடி அந்த அருச்சுனனுக்குத் தாமே சொல்லத் தொடங்கினரென்றவாறு. ❁ எடுத்துச் சொல்லலாவது - மேலான பொருள்களாலே தூக்கிச்சொல்லியு மடங்காதபொருள்தானே யென்றதுதன்னைக்குருமுகமாக அறியாமற்றானே அறிவித்தாரென்றதுஇதனாலேகுருவே தெய்வமென்று குறிப்பு. (௰)

(கலிவிருத்தம்.)

சாவதில்லையாவர்களுநிற்கவதுதானே ............ *
மெய்யென நீகருதுமாரதர்களெல்லாந் ............ *
தேவரியதிவினைசெய்யாதமையினாலே ............ *
வீவதன்முன் வானுலகமேவுவர்கண்மேன்மேல்... .... *

(இ-ள்) எல்லாருஞ்சாகிறதில்லை அதுநிற்கசாவார்களென்று நீ நினைக்கப்பட்ட பெரியதேர்க்காரரெல்லாம் ஒன்றுங்குறைய அரிதானபாவங்களைச் செய்யாமையினாலே, சாகிறதற்கு முன்னே தேவலோகத்தை மேன்மேலுஞ் சேருவார்களென்றவாறு. ❁ தேவரிய திவினையாவது யாகங்கள், மகாதானங்கள், முதலானவையால, தீராதபாவங்கள் செய்யாதினாலே தேவலோகத்தைச்சேருவார்களென்றதுகருத்து பாவிகள் நரகில் விழுவாரென்றதருத்தாபத்தி. (௰௧)

அன்னவர்கள்சோகிதரெனவுமுதலானும் ............ ...*
பன்னவரியோர்கண்மொழிபேசுதலானும் ......... ...*
மன்னுமடலேற்றியுண்மயங்கினைசொல்வாயா......... *
இன்னதொழிலானவைமறந்திடுவையுங்கேள் .... ... .... *

(இ-ள்.) அப்படிப்புண்ணியவான்களாய்த் தேவலோகத்தைச்சேருகிறவர்களாயிருக்கிற அந்தச்சோகிக்கத் தகாதவர்களைச் சோகிதமென்று நீ அழுகிறதினாலும்பேசவரியரானவரென்று அறிந்தும் அறியாதவர்கள்போல நீ பேசுகிற வசனத்தையே சொல்லுகிறதினாலும் நிலைமையானமயக்கமேற்கொண்டுபுத்திமயங்கினையோ இந்தத்துக்கத்தொழிலானது உனக்குத் தகாது இதை மறந்துவிடு இன்னஞ் சொல்லுகிறதையுங், கேளென்றவாறு. ❁ அற்பசுகத்தையு, மகாதுக்கத்தையுமுடையபூமியைவிட்டு மகாசுகத்தையுடைய தேவலோகத்

தைப்பெறுகிற சந்தோஷமுடையவர்களைத் துக்கமுடையவர்களென்று துக்கிக்கிறதினாலும், அறிந்து மறியாதவர்களான வாதிகளைப் போலே பேசுகிறதினாலும், புத்திமயங்கினையென்றது பன்னவரியோர்- பெரியோர் மன்னவரியோர் பாவிகள்வாதிகளென்று சொல்லுறு வாதிகளையறிந்தும் அறியாதவரான பிரஞ்ஞா வாதிகளென்று சொல்வதென்னையென்றால், தற்சபுத்திகளை நன்றாக அறிந்துவாதிக்கிறதினாலே சொன்னது இவனுடனே பேசுகிறதே அரிதென்றுபயப்படவாதிக்கிறதினாலே, வாதியைப்பன்னவரியோனென்றுபாடினார்.

மாயுமவராலுமுயிர்வாழுமவராலு...... *
மாயுமறிஞோர்களழியாமையறியாயோ...... *
நீயுமிலதாமுநிகழ்நாளுநெறிதேரி...... *
லேயும்வகையாலுலகிலென்றுமுளமேகாண்...... *

(இ-ள்.) சாகிறவர்களாலுஞ், சீவன் வாழ்கிறவர்களாலுஞ், சகலகலையும், ஆராயப்பட்ட அறிவுடையவர்கள் பணத்திடமழிந்து துக்கப்படாததை நீயறியாயோ இவர்களையெப்படிக்கொல்லுவனென்றழுகிற நீயும் உன்னுடைய இரக்கத்துக் குரியவரான விவர்களும் எல்லாவற்றையும் நடத்துகிற நானுஞ் சாகிறவர்களோ இருக்கிறவர்களோவென்றித்த மார்க்கத்தை விசாரிக்கிற கருமத்துக்கேடாகவிசையப்பட்ட வெண்பத்துநாலுலக்ஷம் அச்சுப்பேதவகையாலேயுலகத்திலேயென்றுமிருக்கிற நாமேயல்லாம லில்லாத நாமல்லகண்டாயென்றவாறு. (௰௩)

பொன்றுவதுடம்பதனுணின்றபொருளென்று..... *
சென்றுபோரியற்கையினினிற்குமியல்பைக்கேண்..... *
முன்றுடர்மகப்பருவம்விட்டிளமைமூப்போ...... *
டொன்றுமுடலாயினுமுயிர்க்கியல்பதன்றால்...... *

(இ-ள்.) அழிவதாகிற தேகம் அந்தத்தேகத்துக்குள்ளே நின்றவுயிர் அழியாது அந்தவுயிர் என்றும் ஒருசுபாவத்திலே நிற்கும் அந்தச்சுபாவத்தைக்கேள் அருச்சுனா முன்னே தொடர்ந்துவரப்பட்ட குழந்தைப்பருவத்தைவிட்டு இளமையோடு மூப்போடுந் தேககூடமானாலும் அதுவுடலுக்குச் சுபாவமேயல்லாமலுயிருக்குச் சுபாவமல்லவென்றவாறு. ✲ விட்டென்று சொன்னதினாலே, என்றுங் குழந்தைபருவமாகவேயிராமல் விட்டு இளமையான யவ்வனப் பருவத்தைக்கூடியப்படியேயானாலுமிராமல் அதையும் விட்டுக் கௌமார

கப்பருவத்தை யடைந்து அப்படியுமிராமல் அதையும்விட்டு மரணதிசையை யடைந்து அப்படியுமிராமல் அதையும்விட்டு உற்பத்தியைக்கூடி அப்படியுமிராமல் அதையும்விட்டுக் குழந்தைப்பருவத்தைக்கூடி இப்படிக் கொள்ளிவட்டம்போலச், சுழலுகையால் உடலுக்குப் பருவஞ் சுபாவம்போல மரணமுஞ்சுபாவமேயாகையால் உயிருக்கு ஒருகாலமும் நாசமில்லையென்பதுகருத்து. (௰௪)

அன்னவகையாலுருவழிந்துவருமங்கே... ....... .......... ... *
என்னதுருவாமறிவிறந்துபிறவாதார் .................. ... ....... *
பின்னதறிவானுடலழிந்துயிர்போதந் ............ ............. *
தன்னதெனவேதுமோர்சலிப்பதிலானால் .... ....... ........ *

(இ-ள்.) அந்தந்தவகையினாலே அந்தந்தவிடத்திலே தேகமழிந்து வரும் என்னுடைய சொரூபமான ஆன்மாவழிந்து பிறவாது ஆதலாற்பின்பு அதையறிந்தவன் உடம்பு அழிந்து ஆன்மா வுடம்பைப்பிரிகிறபோதுங் கூடுகிறபோதும் எவ்வளவுந் தனதென்று சலியானென்றவாறு. ❀ தானென் ஆன்மாவுக்கு ஒன்றுமில்லை உடம்பிற்கே மரணமும் பிறப்புமாகையால், அது வந்தபோது நம்முடையதல்லவென்றிருப்பான் நம்முடையதென்று சலியானென்பது கருத்து.*

இவ்வகையதாகிலழல்சீதமிடரின்பந் .. ..................... *
செய்வகையிலாதறிவுசேருவதெனென்னின்... ....... *
மெய்வகையினாலிவைவிளைந்ததுதாமேய........... ...*
வைவகையினாயபுலனும்பொறியுமையா ... ....,...... *

(இ-ள்.) இப்படிச்சொன்னதைக் கேட்ட அருச்சுனன் சொல்லுவது இந்தப்படி சனனமரணம் ஆன்மாவுக்கு இல்லாவிட்டால், உஷ்ணம், சீதளம், துக்கம், சுகம் இவைகளைத் தன்னுடையதல்லவென்று செய்யும்படியில்லாமல் ஆன்மாவிலேசேர்ந்து சுட்டதென்றுங் குளிர்ந்ததென்றுங் கிலேசித்துஞ் சந்தோஷித்துஞ் செய்வதென்னவென்று கேட்டதற்கு ஸ்ரீகிருஷ்ணசுவாமிவாக்கியம் அச்சுட்டேதத்தேக விதங்களினாலிவைகளுண்டாகிவரவற்றது துக்க சுகத்தைப்பஞ்சீகரணபேதத்தினாலுண்டாகியபஞ்சதன்மாத்திரைகளாகிய சத்த; பரிச, ரூப, ரச, கந்தமென்கின்ற ஐந்து ஞானேந்திரியமாகியமெய் வாய்கண்மூக்குச்செவி யென்கின்ற ஐந்துமுருவாய் அடைந்து அனுபவிப்பதல்லாமல் ஆன்மா அனுபவிப்பதல்லவை (௰௫)

(கொச்சகக்கலிப்பா)

சீதமழன்முதலவற்றின்செயல்கேட்கிலநித்தியமாய்ப். *
போதலொடுவருவனவாயிருக்குமவைபொறுநிப.... *
மாதலிலென்பயனென்னிலவைபொறுத்தபெரியோனை.
ஏதமவைநிலைகலக்காதவன்வீடேயெய்துவனால்... .... *

(இ-ள்.) சீதள உஷ்ண முதலானவைகளின்செயலைக்கேட்கில்அநித்தியமாய்ப் போகிறதும், வருகிறதுமாயிருக்கும் அவற்றைப் பெரியோர்கள் பொறுப்பார்கள் நீயும்பொறுத்தால்ஆகிறபிரயோசனமென்னவென்றால், அவைகளை சமமாகப் பொறுத்தபெரியோனைக் குற்றமான அர்த்தச்சீதளவுஷ்ண முதலானவை நிலைமைக் கலக்கவொட்டாது அவர்மோக்ஷத்தையே அடைவார்நரகமடையாரென்றவாறு.

மண்ணினுயவிகாரமும்மண்ணேயந்தமண்ணொழிந்து..
பண்ணினுருமற்றிலைப்பண்ணப்பட்டபலபொருள்க. *
ளெண்ணவருங்காலமுமற்றிறந்தவிடத்துநிகழ்விடத்
துங், கண்ணிநாடின மண்ணொழியக்கண்டாருளரோகட்
டுரையாய்.......... ... ......... ........ ... ........ .... ........ *

(இ-ள்.) மண்ணினுண்டாகிய விகாரங்களான கடமுதலானவெல்லாம் அந்த மண்ணேயல்லாமல் வேறல்ல அந்தமண்ணைவிட்டு மற்று, அப்பு, தேயு, வாயு, ஆகாசங்களாலே கடமுதலானவைகளைப் பண்ணின்பேருமில்லை அப்படிப்பண்ணப்பட்ட பலபொருள்கள் நினைப்பாலுண்டாகிய வருகாலத்திலும்போன காலத்திலும்இப்போது நடக்கிறகாலத்திலும், நினைத்துவிசாரிக்கில் மண்ணைத்தவிர வேறுபூதங்களாகக் கண்டபேருண்டோ சொல்வாயென்றவாறு. ※ கண்ணினாடினென்றுபாடமாயிற் கண்ணினாலே பார்க்கிலென்றுமாகொள்ளும் அப்படி புனாசெய்தால், கண்டதுமெய் காணாதுபொய் யென்ற சாருவாகனமதமாம் அதுகூடாது. (௰அ)

(கலிவிருத்தம்.)

வையாரயிலுழவாவதின்வகையேயதன்வகைகேண்.... *
மெய்யானதுநசியாததனுடன்வேறெனவிரவும் ... ...*
பொய்யானதுநிசமாகிலை புலனாகியபொருளே ..... *
ஐயாவெனையறிவாரிவையறிவார்பிறரறியார்....... *

(இ-ள்) கூர்மைபொருந்திய ஆயுதத்தினாலே பகையரசராணபூமியையுழுது பிளக்கப்பட்ட அருச்சுனா! அந்தந்தப் பூதங்களாலாகிற இதங்கள் அதனதனாலே யாகிறதல்லாமல் ஒரு பூதத்தின் தொ

ழிலவேறொருபூதஞ்செய்யமாட்டாது அதன் தன் விதத்தைக்கேள் சத்தியமான ஆன்மாவானது அழியாது இந்த ஆன்மாவி னுடனே வேறான அநான்மாவென்று கலக்கப்பட்டபொய்யானதேகமானது நித்தியமாகாது இந்த அருத்தம் அறிவாலுண்டாகிய பொருளேயல்லாமல்வேறல்லஐயா இந்த அர்த்தத்தையென்னையறிந்தபேரறி வார்கள். அறியாதவர்களிதையறியமாட்டார்களென்றவாறு. ❋ தெய்வத்தை கர்த்தாவென்றும், ஆன்மாவைய கர்த்தா வென்றும், உடலையநான்மா வென்றும், வழங்கப்படுகையால் வேறென விரவு மென்றுப்பாடினார். பொய்யையதேகமென்றும், மெய்யை ஆன்மா வென்றும், சொன்னதேதென்னில் இவ்விடத்திற்சொன்னதெல்லாம் உடலுயிரண்டின்செய்தியாகையாலும் உடலமாயா சம்பந்தமா யழிகை யாலும், உயிர்நித்தியஞான சம்பந்தமாயிருக்கையாலும், சொன்னது. (௰௯)

யானும்வகையதுகேளெழுமொலியேமுதலியாவும்... *
வானுதியில்வருபூதமும்வருநால்வருமிடர ... .........*
யானுமெழுமறியானையுமறிகாரணமதுவாய்......... .....*
போனுளொடுவருநாள்வழிபுணராததோர்பொருளே *

(இ-ள்.) நானுகிற விதத்தைக்கேள் அருச்சுனா ? எழும்புகிற சத்தமுதலான அஞ்சும் ஆகாசாதிபூதங்களில் வரப்பட்ட மகாபூதங்களும் உண்டாகிறகாலம் வருமிடமாய் நீங்காமலெழும்பப்பட்டஅறியானையும் அறியப்பட்டகாரணமாய்ப் போகிறகாலத்துடனே வருகிற காலத்தின்வழியைப் பொருந்தாத பொருளேநா னென்றவாறு. ❋ மகாபூதமாவது பஞ்சிகரணத்தில் ஒன்றோடொன்று கலக்காமல் நின்றமுதற்பாகபூதம் இந்தமகாபூதங்களுண்டாகிற காலம் பிறக்கிறவிடமாய் அறியானையும் அறிவானையும், அறியப்பட்ட காரணமாய்த்திரிகாலத்தைச்சேராத பொருளேநானென்றது. (உ௰)

அழியாதமெய்யஃதியாதெனிலவிகாரதனையுருவா....*
யொழியாநிறைவொடுதீடியவெனதியானெனவுணரா...*
வழியாமதியியல்பாலிதுசிலமாறுகொள்குவதாய்..... *
மொழிவார்செயன்முடியாமையின்முயலார்கெடவயலார்.

(இ-ள்.) அழியாதசத்திய மெதுவென்றுகேட்கில் விகாரமில்லாத அஃதுவிகாரத்தையுருவமாய் அணுவளவிடமாகிலும் விட்டொழியாமல்நிறைந்தபரிபூரணத்துடனே வளர்ந்தது எனதென்கிற சுத்த

மும், நானென்கிறஆங்காரமும் அறியாதவழியானது அது சுபாவத்தினலே இது சிலயைறுபாயிகொள்ளுகிறதாய்ச்சொல்லுவாருடைய சொல்லுந்தொழில்முடிய திருலே முயற்சியண்ணராகிய நிலைக்குப்படாததாய்ச் சேடத்துக்கு அன்னியாயிருப்பது ஆன்மாவென்றவாறு. ❀ சிலயாறுகொள்ளுவதாவது மாயையுடனே கூடியபோது தேகியாய்ச் சுதந்தரியாய் ஆங்காரியாய் நிற்பதுகருத்து. (உக)

இல்லாமையினியல்கேளெழுகழுகாழியினிடையே.... ❀
யல்லதெழு புனல்போலழி வுறவேயழி குதலா...... ❀
லெல்லாவகையினுமாயதிவ்வுருவேயழிவதுதான்..... ❀
கொல்லாதழிகொலையானது குறுகாதத னெறிகேள்... ❀

(இ-ள்.) இனியெப்போதுமில்லாதது இருந்தும்உள்ளது போலக்காணுகிறதேகத்தினுடைய சுபாவத்தைக்கேள்! அருச்சுனு! கோடையிலெழும்புகிற பேய்த்தேராகிய கானலினிடத்திலே நிச்சயமானசலமல்லாமற் பொய்யாகவெழும்பப்பட்ட சலத்தைப்போல அழிவுண்டாகஅழிகிறதினலே பொருந்தாத விதத்தினுலும் பொருந்தும் விதத்தினுலும், உண்டாகிய இந்தத்தேகமேயழிவது ஆன்மா அழிவதில்லை அது அவிகாரியானதினலே தான் கொல்லாது தான் எல்லாவற்றிற்கு மன்னியமாகையாலே அதைக் கொலையானது சேராது அந்தஆன்மாவினுடைய சுபாவத்தைக் கேளென்றவாறு. ❀ கொலைசேராதென்பது அதையாராலும் கொல்லப்படாதென்பது ஒல்லாவகையினுமென்ற உம்மைஎதிரதுதழுவியஉம்மையாகையால்ஒல்லும்வகையினுமென்றெதிர்தழுவியது. (உஉ)

[கொச்சகக்கலிப்பா.]

ஊறுபடவொன்றிலேபிறத்தல்பிறந்துளதாதல் ... ..... ❀
வேறுபடவளர்தல்வளர்ந்தயலொன்றாய்விளைந்தமைதன்
மாறுபடத்தேய்தலறமாய்தலெனவருகின்ற . ......... .. ❀
வாறியல்புருடம்பன்றியறிவடையாதாதலினல். ...... ❀

(இ-ள்.) தூலசரீரமுண்டாக ஒன்றோடொன்று பரிசப்பட ஒன்றிலேபிறக்கிறதுபிறந்திருக்கிறது அந்தப்பருவம் வேறுபட வளருகிறதுவளர்ந்து அன்னியமானதொன்றாக விளைந்து அமருகிறது இவையெல்லாவற்றுக்கு மாறுபடக்கிழத்தனமாய்க்குறைகிறதுஇந்தவைத்

துந்திரச்சாகிறது என்றுவரப்பட்ட ஆறுசுபாவமும் உடம்பையல்லாமல் ஆன்மாவையடையாவாம் எ-று. ஃ அறிவையான்மாவென்றது அசேதனமானதேகத்தைநடத்துகையால். (உரு)

[கலிவிருத்தம்.]

நில்லாவுடற்கே நின்றேயுநித்தமாகியதுநாச..... ..... ................ .....*
மில்லாததுபோய்ப்பிறப்பிறப்பொன்றறியாததுமற்றதுவறிந்தோர்
கொல்லார்கொலையேவலுஞ்செய்யார்கொலையேவிட்டிக்குலமறைக
ளெல்லாம்விதித்ததொழிலினையேயியம்பிற்றென்றேயிதுதெளிநீ-.

(இ-ள்.) நிலைமையாய்நில்லாமல் அழிகிறவுடலுக்கே ஆதாரமாகநின்றும் அந்தவுடலைப்போல அநித்தியமாகாமல் நித்தியமாகிய துஅழிவில்லாதது பொய்யானபிறப்பிறப்பென்ற இரண்டிலொன்றுமறியாதது ஆன்மா அதைஅறிந்தவர்கள் சொல்லார் கொல்லுவிக்கிறதுஞ்செய்யார் நாலென்றுருசாதியான வேதங்களெல்லாம் கொலையைமேவிட்டுக் குலாசார தன்மத்தைச் சொல்லிற்றென்று இதைநீதெளிவா யென்றவாறு. ஃ ஆன்மாவைநித்தியமாய் நாசமில்லாததாய்ச் செனனமரணமில்லாததாய் அறிந்தவர்கள் கொலை செய்தாலும், செய்வித்தாலும் செய்ததுஞ் செய்வித்ததுந் தமக்கல்ல தேகத்துக்கென்று சாட்சியாய்ப்பார்ப்பார்களென்பதுகருத்து.

(இதுவுங்கலிவிருத்தம்.)

கீறியபோர்வையைப்பெயர்த்தும்பின்னரோர் ....... ....*
வேறியபோர்வையைவிரும்புவாரென ........ .........*
ஊறியவுடம்பினிலுதித்தவுண்மைதான் ... ................*
மாறியோருடம்பினைமருவுமன்னனே .... . . . . . .........*

(இ-ள்.) கிழிந்தபோர்வையை விட்டுப் பின்பொருவேறான போர்வையை ஆசைப்பட்டுப் போர்த்துக்கொள்ளுவானைப்போலச் சீரணமுடைய தூலமானவுடம்பிலே பிரவேசித்த ஆன்மா அந்தச்சீரணதூலதேகத்தைவிட்டுவிலகி வேறொருதூலதேகத்தைக்கூடும்இராசாவேயென்றவாறு. ஃ இசனுள்தேகியான ஆன்மாசீரணதேகத்தைவிட்டு நூதனதேகத்தைதரிப்பதல்லாமல் அத்தேகத்தைப்போலத்தேகிநாசப்படானென்பது கருத்து. ஃ பெயர்த்துமென்றதுகிழிந்தபோர்வையை வெறுத்துவிட்டுப்பின்பு வேறொரு போர்வையை விரும்பும்போது முந்தினபோர்வையைப்போலச் சிலநாளிலேகிழியு மென்

றறிந்தும் இனிமேல் கிழிகிறபோர்வையை இப்போது புதிதாகெட்டியாயிருக்குமென்று போர்த்துக்கொள்வதுபோல அழிந்ததேகத்தை விட்டும் இனியொன்றையெடுத்தாலும் அழிவதுதானேயென்றுசும்மாயிராமல் வேறொருதேகத்தைக்கூடுமென்றஉவமை. (உ௫)

(இருவிருத்தம்.)

உருப்பான்மைமற்றவனுக்கொருநாளுமின்மையாற்.... *
செருப்பாலவெம்படைக்கலங்கள்சேதிக்கமாட்டாவா-- *
நெருப்பால்வெந்தழியாதுநீரால்னைக்கொழுகாது... *
மருத்தாலுஞ்சலியாது மற்றதன்றனியல்கேளாய் .......*

(இ-ள்.) தேகசுபாவம் அந்தத்தேகிக்கு ஒருநாளுமில்லையாகையால் அந்தத் தேகியைச் சண்டை யிடத்துக்கு உபகரணமான கொடுமையுள்ள ஆயுதங்கள் பிளக்கமாட்டாவாம் நெருப்பால்வெந்து அழியாதுதண்ணீராலிளகி யோடாது காற்றினாலுமசையாது இதுதவிர இன்னம் அதினுடையசுபாவத்தைக் கேளென்றவாறு. * தேகத்துக்குச்சகலவருத்தமு முண்டென்பது கருத்து. சுகதுக்கஞ் சுபாவமானது தேகந்தேகசுபாவமானது தேகியாகையாற் செனனமரண துக்கந்தேகத்துக்குச் சுபாவமாகையால் அதற்குத்துக்கப்படத்தேவையில்லையென்றது. ஆயுதமாவது பிருதிவினுடைய காரியமாகையால், காரியத்தையுடைய காரணமானமண் ஆகப்பிருதிவிமுதல் நாலுபூதத்தாலும் அழியாதென்ற இவ்விடம் ஆன்மசொரூபம். (உ௬)

(அறுசீரடியாசிரியவிருத்தம்.)

எல்லாப்பொருட்கும் பழையதனை யெங்குந்தானாயிருப்பதனை
நில்லாத்தன்மையில்லதனை நிகரியத்துவத்தை நிலைப்பெறறை.
யல்லாப்புலன்களபதினாலு மறியாவறிவையறியாதே ............ *
இல்லாப்பொருள்போலழியுமெனவிரங்குகின்றதென்கண்டோ:

(இ-ள்.) எல்லாப்பொருளுக்கும் பழையபொருளானதைஎங்குந்தானாயிருக்கின்றதை நிலையாய் நில்லாமல் அழிகிற சுபாவமில்லாததை இன்றுபோலென்று மிருக்கின்றதைப்பெயர்ந்து போகாமல்நிலைமையால்நின்ற பேறுடையதை- இந்தக்குணங்களை யல்லாதபதினாலுகரணங்களுமறியாத அறிவான சைதன்னியத்தை இப்படிக்கொத்த ஆன்மாவை யறியாமல் இல்லாதபொருளைப் போல அழியு

மென்றிரங்குகிறது என்னகண்டோவென்றவாறு. ❋ பழையதென்பது-அநாதி- எங்குந்தானுயென்பது - பூரணமான தன்மை - இல்லாதென்பது-அழியாதது - பதினாலுகரணமாவதுஇந்திரியம் பத்துகரணம்நாலு-ஆகபதினாலும் இல்லாப்பொருளென்பது மாயாசம்பந்தமான் தேகாதிபிரபஞ்சத்தை. (உஎ)

(கலிவிருத்தம்.)

இவ்வொனக்கொடுமெய்தளர்வாயேல்......... .........❋
யாவர்பிறப்பவர்யாவர்கமௌனுஞ் ......... ......... .... ❋
சாவர்பெயரத்துமிவ்வாறுசனிப்பர் ......... ...... ...❋
காவலிதற்குள் தோகட்டனைகாண் ..... .... ... ......❋

(இ-ள்.) இவர்கள்சாவர்களென் றெண்ணிக்கொண்டு நீ சரீரந்தளர்ந்து வாழ்வாயாகில் ஆர்பிறப்பார்களோ அவர்களானாலுஞ்சாவார்கள். திரும்பவும்ப்படியே பிறப்பார்கள் இதைவராமல் காக்கத்தக்ககாவலுண்டோ இல்லை இதுவிதியேயல்லாமல் வேறில்லை கண்டாய் என்றவாறு. (உஅ)

செறிந்ததெவ்வாறிவ ரொன்றதுதேராய்.......... .......❋
பிறிந்திவர்போமிட மும்பெரிதோரா .............. ...❋
யறிந்தது நீ நடு வேசிலநாளே ... ......,............❋
எறிந்திடுவேவலிவர் பாலிடரென்னெ ............ ...❋

(இ-ள்.) இவர்கள் சிருஷ்டிகாலத்துக்கு முன்னே யெப்படியிருந்தார்களென்றதையறியாய், இவர்களிந்தத் தேகத்தைப் பிறிந்துபோகிறவிடமும் வெகுவாய்விசாரித்தாலும் அறியாய் இவர்களை நீயறிந்தது நடுவேசிலநாளே யல்லாமல் அனேகநாளில்லை யெறியப்பட்ட வாயுதத்தையுடைய அருச்சுனா இவர்களிடத்திலே யுனக்குத்துக்கமென்னவோ சொல்லாயென்றவாறு. ❋ வேலையருச்சுனாவென்ற தாருபெயர். (உகூ)

(கொச்சகக்கலிப்பா.)

ஓருவனென் றுங்கண்டறியாததைக்கண்டாற்போலுணர்ந்திருக்கும் ❋
ஒருவனென் றுங்கேட்டறியாததனைக்கேட்டான்போலுவக்கும் .... ❋
ஒருவனென் றுமுரைத்தறியாததனையுரைத்தான்போலுரைக்கும்.... ❋
ஒருவனென் றுங்கேட்டாலு மறியானிந்தவுண்மையினை ........... .... ❋

(௩)

(இ-ள்-) இந்த ஆன்மாவை ஒருவனென்றுங் கண்டறியா ததைக்கண்டாற்போலப் பார்த்திருப்பான். ஒருவனென்றுங் கேட்டறியாததைக் கேட்டவனைப்போலச் சந்தோஷிப்பிவான். ஒருவனென்றுஞ்சொல்லி யறியாததைச் சொன்னவனைப்போலச் சொல்லுவான். ஒருவனென்றுங் கேட்டாலுங் கண்டாலுஞ் சொன்னாலு மறியானென்றவாறு. ✲ கேட்டாலுமென்ற உம்மையாற் கண்டாலுஞ் சொன்னாலும், அறியானென் றெதிரது தழுவியது.　(ஙல)

திதனாலெவரு மறியாத பொருளைத் தெரிந்து கொண்டு ... ✲
இதனாலவனையான் கொன்றேனென்பதொழிவாயினைங் கேண்
மதனாலாயமறைமொழியு மன்னர் தருமம்வாளமமொன்......✲
பதனாலமரோ துடங்கிதனை யறனன்றேநீயையுறேல். . ..... .... ✲

(இ-ள்.) சகலதேகங்களிலு மிருக்கிறவனாய் - எவர்களு மறியாத ஆன்மாவை நீ தெரிந்துகொண்டு இதனாலே யிவர்களை நான்கொன்றேனென்று அகம் வகிக்கிறதை விடுவாய். அருச்சுனா இன்னமுங் கேள் சாதிநாலாகச்சொன்ன வேதவாக்கியமும் அரசர் தருமங்கீர்த்திபிரகாசமுள்ள சண்டையென்று சொல்லுகிறதினாலே சண்டையையே தொடங்கு இந்தச்சண்டையைத் தருமமல்லவென்று நீ சந்தேகப்படாதேயென்றவாறு.　(ஙக)

( கலிவிருத்தம். )

செய்தியின்றியத் தேவர்கள்வாழுல ......................... ✲
செய்தறின்றறிதுபெறுவார்கள்கேள் ........................ ✲
வைதிகத்தருமாதவமேற்கொடு .. .................................. ✲
மெய்திருந்தியவேந்தர்களல்லமோ.............................✲

(இ-ள்.) தவந்தானமுதலான வருத்தஞ்செயலில்லாமல் அந்தத்தேவர்களுடையதேவலோகத்துக்குட்போகாநின்றது இப்படிக்கொத்த சண்டையைப் பெறுவார்களைக்கேள் வேதவாக்கியஞ் சொல்லப்பட்டபெரியதவத்தை மேலாகக்கொண்ட திருத்தமானதேகங்களையுடைய அரசர்களல்லவோ வென்றவாறு.　(ஙஉ)

இன்றிவ்வாளமர் தன்னிலெதிர்த்துநீ ..............✲
பொன்றில்வானவர் போற்றவிண்காக்குவை... ✲
வென்றிசேரிலிவ் வேந்தரொலாந்தொழ ........ .. ✲
நின்றுஞாலமளிக்குவை நீயமோ ..........................✲

(இ-ள்.) இப்போது இந்தக்கீர்த்திப் பிரகாசமுள்ள சண்டையிலெதிர்த்து நீ செத்தால் தேவர்கள்தோத்திரம்பண்ணத்தேவலோகத்தையாளுவாய்- சாகாமற் செயமடைந்தால் இந்திராஜாக்களெல்லாம் வணங்கநின்று பூமியையாளுவாய் நீ யென்றவாறு. (௩௩)

ஆவதானவமர்தொடங்காயெனிற் ............ *
போவதானபுகழுந்தருமமும் ............ *
யாவுமாம்பழி யாயிப்பழியினிற் ............ *
சாவதானது வேதலையல்லவோ ............ *

(இ-ள்.) இராஜதருமமான சண்டையைத் தொடங்காயென்னில்தருமமுங்கீர்த்தியும்போய்ப்பாவமும்பழியுமாகும் அந்தப்பழியிலும்சாவேதலைமை யல்லவோவென்றவாறு. ※ சாவுசிரேஷ்டமாகிப்பழி நாணங்கெடுக்கிறதாம் ஆகையால் சாவிலுங்கெட்டது அபகீர்த்தியென்பது கருத்து. (௩௪)

அன்றியுமுனையஞ்சினனென்பரா ............ *
னின்றியங்குநிலத்துமுன்னீசெய்த ............ *
வென்றியும்பழியாய்நிற்குமேலவ ............ *
ரொன்றியம்பினுனக்கதன்மேலுண்டோ ............ *

(இ-ள்.) அல்லாமலும் உன்னைப்பயந்தானென்றுங் கொஞ்சமாகப்பேசுவார்கள் முன்னேபூமியிலே நீ செய்தநிலைமையாக நின்றுவிளங்கப்பட்ட வெற்றியும்பழியாக எக்காலமும்நிற்கும்-மகாரதக்காரருன்னையொன்றுசொன்னால் இதற்குமேலான பொல்லாங்கு வேறேயுண்டோவென்றவாறு. ※ மேலவரைப்பெரியோரென்றுசொன்னால்ஏற்றக்குறைச்ச லில்லாதவர்களைப் பெரியோரென் றுலகஞ்சொல்லுகையாலும் இந்தக்கவியிலே பயப்படப் பண்ணுகிறவனைப்பயந்தவனென்றுஞ் சண்டைபண்ணிச் செயித்தவெற்றியை வஞ்சனைபண்ணிசெயித்தபழியென்றுஞ் சொன்னதினாலு மிப்படிச் சொல்லுகிறவர்களைப் பெரியோர்களென்று சொல்லக்கூடாததினாலும் அதிரதர் சமரதர்-அர்த்தரதரென சொல்லக்கூடாததினாலும், மகாரதரென்று சொல்லப்பட்டது. (௩௫)

தற்றவின்பமுந்துன்பமுந்தோல்வியும் ............ *
வெற்றியும்மிழிவுமிகுபேறுமென் ............ *
றுற்றவின்னவாமொருதமனத்தருய் ............ *
கொற்றவெஞ்சமஞ்செய்குற்றமில்லையால் ............ *

(இ-ள்.) நெருங்கின சுகதுக்கமும் அவசெயமும், நஷ்டமும் மிகுந்தலாபமுமென்றுவந்த இவைகளுக்குச் சமமான மனதுடைய் வனுப்வெற்றியும்உக்கிரமுமுடையசண்டையைச்செய்யஇப்படியானு க்குற்றமில்லை —எ-று. ❈ குற்றமாவதுபாவம். (௩௭)

(கலிவிருத்தம்.)

கதுவியபொருளின்ஞானங் கறையறு முறையாலே.... ❈
பொதுவறுவகைநீயும் புலனறிவகையானு ...... ❈
யெதுவொருவினையாலே யிருவினைகளும்வீடு ...... ❈
மதுதனையறிவார்விட்ணைபவமதுகேளாய்...... ❈

(இ-ள்.) இப்படி யுறுதியாகபிடிக்கப்பட்ட பொருளானதுஞான ம் இந்த ஞானத்தைக் கறையற்ற வசனத்தினுலே யெல்லாருக்கும் பொதுவென்பதில்லாமல் அறும்படிக்கு நீயும் ஐம்புலன்களாலும், அறியும்படியானுய் எந்தக்கர்ம்மமானது ஒரு கர்ம்மத்தினுலே நல் வினை தீவினையான இரண்டும் அழியுமோ அந்தக்கர்ம்மத்தைஅறிகி றவர்களே மோக்ஷத்தையடைவார்கள். அந்தக் கர்ம்மத்தை யினிச் சொல்லுகிறேம் கேட்பாயாக வென்றவாறு. ❈ ஒரு கர்ம்மத்தினு லென்றதாவது அநேககர்ம்மமென்று பயப்படாமல் ஒரு கர்ம்மத்தி னுலேயிரண்டுகர்ம்மங்களும் கெடச்சொல்லுகிறேம் கேளென்றது.

அரிதினேரடியேனுஞ் செயினுமதழிவாசா...... ❈
திரிதரவிடையூறும் வகைகளுமிடைகூடா ...... ❈
தெரிபொருள் சிறிதேனும் பெறுமயறெறுமானு...... ❈
லுரியதிவ் வுலகோர் பாலிதுவலதுளதோதான்...... ❈

(இ-ள்.) அந்தகர்ம்மத்தை நாலுபாதமாகப் பிரித்து அதிலஇல்அ ரிதாகஒருபாதம் செய்தாலும் அதுநாசமாகாது இதைவிட் டோட த்தக்க இடையூறுனவிதங்களும் நடுவேவந்துகூடாது இப்படிப்ப லனைபிச்சியாத கர்ம்மமென்று தெரியப்பட்டபொருள் கொஞ்சமா னுலும்பெரிய மயக்கத்தைக்கெடுக்குமானுல் அதுவேயுரியது இந்த வுலகத்தாரிடத்திலே இது அல்லாமல் வேறுண்டோ வில்லை —எ-று. ❈ காமியகருமங்கள் அனேகப தகமுமறுப்பது பலனிச்சியாத கரு மமொருபாதம் அதிலொருபாதமானுலும் அந்தப் பாதத்தையே செய்யென்பது கருத்து. (௩அ)

தெளியவருணர்வொன்றே தெளிவிலருணர்வோதிற்...*
றளிர்திகர்பலவாகுந் தருபயனதும்மேவு ...... ... .. ..... *
மொளிமறைநெறிபேலாயுணர்பொருளெனவோது.. *
மளியவர்தெளியாதா நவையல தறியாரால்... .. ... .... *

(இ-ள்.) பலனை ஆசைப்படாமல்மோக்ஷத்தில் இச்சையுண்டாய்க் கருமஞ்செய்யத் தெளிவுடையவர்களுக்கு அறிவு ஒன்றேயல்லாமல் அனேகமாயிராது காமியகருமங்களையே செய்கிற தெளிவில்லாதவர்களுடைய அறிவைச்சொல்லில் நிச்சயமில்லாத தளிரைப்போலஅனேகமாகுங்கருமத்தினாலே வரப்பட்ட பிரயோசனத்தைச்சொல்லியிருக்கப்பட்ட பிர்காசமுள்ள வேதமார்க்கத்தையே மேலாயறியப்பட்டபொருளென்று வாதுபேசப்பட்ட அளியவர்களேமயக்கந்தெளியாதவர்கள் அந்த அளியவர்கள் அந்தக்காமிய கருமத்தையல்லாமல் மோக்ஷத்தையறியார்களென்றவாறு. ✲ அளியவர்களாவதுபிறரால்அளிக்கத்தக்கார் தனக்கென வோருறுதியறிவில்லாதாரென்பது அதாவது கருமமேயல்லாமல்வேறில்லையென்றுதிடமாகப்பேசுதல்.

புண்ணியவுலகத்தைப் பொருண்முடிவின்வைப்பார் .. *
கண்ணியபிறவிக் கே கருவழிநெறிநிற்பார் ............ *
பண்ணியவினைகட்கே பயனினையவர்கட்பா...........*
நுண்ணியபொருள்செப்பார்நுணிகியவறிவுற்றோர்... *

(இ-ள்.) பலனையிச்சித்து யாகாதிகருமங்களைப் பண்ணினவர்கள் புண்ணியலோகமான சொர்க்கத்திலே பிரயோசனமுடிவை வைத்துப்போகங்களை அனுபவிப்பார் அறிவுடையவர்கள் பொல்லாதென்று நினைத்துப் பிறவியிலே கெர்பவழியிலேபிறந்து அந்தக்காமிய கருமங்களையேசெய்து சொர்க்கபூமியிரண்டுக்கும் போக்குவரத்தாய்ஆத்மஞானங்கேட்டு நிற்பார் பண்ணப்பட்டகருமங்களுக்குள்ள பலனை நினைக்கிறவர்களிடத்திலே நுண்மையான பொருளைச்சொல்லார்கள்-நுண்மையான அறிவுபெற்ற பெரியோர்களென்றவாறு. ✲ நுண்மையாவது சூட்சுமம். (சய)

நவைதருகுணமுப்பா னனுகியபலனுய்த்தார் .. ........ *
சுவைதெரிகுண்வைப்பார்தொழின்மறைநெறியுற்றே *
கவைதருகுணமுற்றோர்கருமமதிடனுற்றார் ... ...... ... .... *
அவைகெடவருமெய்ப்பாலறிவினையெண்திற்பாய்.... *

(இ-ள்.) ஆனாற்காமியகருமங்களை வேதத்திலே சொல்லுகிறதே யென்றால் கேள் குற்றத்தைக்கொடுக்கப்பட்டகுணங்கள் மூன்றினிடத்திலேபலனைவைத்து நிறைந்தபலவிஷயத்தைச்சுவையைத்தெரியப்பட்டமூன்றுகுணங்களிலே வைப்பாகவிருந்த கருமங்களை வேதத்திலேசொன்ன மார்க்கத்துடனேசேர்ந்து மூன்றுகூப்பாகத் தாப்பட்டமூன்றுகுணத்தையு மடைந்தவர்களே பலனையிச்சித்த கருமத்தினிடத்திலே கூடினவர்கள் அந்தமூன்றுகுணங்களுங்கெட விட்டுக் குணாதீதனாகிய அரிய ஆத்மாவினிடத்தில் ஞானியென்று திடமாக நிற்பாயென்றவாறு. (௪௧)

குளமுதலியவற்றே குளிர்முதலிய துய்ப்பா …… …..*
னளவறுபுனல் பெற்றாலவைகொள லருமைத்தோ… *
வளமுறுகருமத்தால் வருசிறுசுவையற்று … … …. *
ளுளமகிழ்பிரமத்தேயுட்கொளலுரிமைத்தால்…… …*

(இ-ள்.) ஆனால்வேதஞ்சொன்ன கருமங்களைவிடலாமோவென்றால்குளிர்ச்சிமுதலாகியன வேண்டியதாகமானவன் குளமுதலான வற்றிலே அளவற்ற தண்ணீரைப்பெற்றால் அவற்றில்தனக்குவேண்டிய தண்ணீர் எடுத்துக்கொள்ளுகிறது அருமையோ அல்லவே அதுபோலவளமையான கருமத்தினாலே வருகிற அற்பவிஷயத்தால் இச்சியாவிட்டால் இருதயமகிழப்பட்ட பிரமத்திலேயுள்ளதைக் கொள்ளுகிறதுரித்தாமென்றவாறு. ※ வேதங்களிற் சொன்ன அனேகத்தால் அறிவுள்ளவன் மோக்ஷத்துக்கு அதிகாரியென்பது கருத்து. (௪௨)

அறிவினையறிகிற்பாயவிலமு மடைகுற்றே………. …. *
பிறிபொழுதினினொத்தேபெருவினைதனினிற்பாய்… *
நெறிகருமமிவெட்டா வகைவினைதனினிற்பார் …. - …*
சிறியவரெனமிகவோர் தெளிபவர் செயலைக்கேள்…. *

(இ-ள்.) விவேகியான நீ அறியத்தக்க கருமத்தையறிவாய் கருமத்தினால்வருகிறபலன்சகலமுங்கிடைத்தபோதும்பிரிந்தபோதுஞ்சமனாகியபெருமையுள்ள கருமங்களில் நிற்பாய் மோக்ஷத்தைத் தருகிற அறிவுக்கெட்டாத காமியகருமத்தில் நிற்கிறவர்கள் கொஞ்சமானவர்கள் இவர்களால் என்னையறியக்கூடாது என்னைப்பெரியோர்கள் தெளிந்தறிவார்கள் அவர்கள்செய்கிற கருமத்தைக்கேளென்றவாறு. ※ பெருவினையாவது பலனையிச்சியாத கருமம். (௪௩)

தருபயனதுவிட்டே தகுவினைசெயலுற்றா............*
லருமயலது மற்றாலறிவுறு மறிவுற்றா ..........*
லிருவினைவிடும்விட்டாலிழிவொடுபெறு மற்பா ..........*
லொருமனம் வருமத்தா லெனையுணருள ரிற்பார்......*

(இ-ள்.) கொடுக்கப்பட்ட பிரயோசனத்தை நிச்சயமாகவிட்டுஅ
வரவருக்குத் தக்க காரியத்தைச்செய்தால் வேறொன்றாலுமறாகமய
க்கமறும் மயக்கமற்றால் அறிவுண்டாம் அறி வுண்டாகில் நல்வினை
தீவினையான இரண்டுகருமமும் விடும் இந்த இரண்டும்விட்டால்இ
ழக்கிறதுடனே பெறுகிறது மான்நஷ்டம் வந்தவிடத்திலும் ஆதா
யம்வந்தவிடத்திலும், ஒருமனதாகவரும் அந்தமனதினாலே என்னை
யறிவார்கள் அறிவுடையவர்க ளென்றவாறு. ❊ பலனையிச்சித்தா
ல்மயக்கம் விடாது விடாவிட்டால்ஞானம்பிறவாது பிறவா விட்டா
ற்புண்ணியபாவம்விடாது விடாவிட்டால் இலாபநஷ்டத்திலேம
னதுஒருமைப்படாது படாவிட்டால் என்னையறியமாட்டா னென்ப
து. அருத்தாபத்தி யொருமனமாவது இலாபம் வந்தபோது சந்
தோஷமில்லாமலும் நஷ்டம்வந்தபோது துக்கமில்லாமலும் இந்
தஇரண்டும் பிராரத்துவமென்றிருத்தல் தகுவினையாவது குலத்தரு
மம்-தகாவினையாவது பரகருமம்-தருபயனதுவிட்டே தகுவினைசெ
யலுற்றாலென்றது பிரயோசனத்தையிச்சியாதவன் தகா வினையுஞ்
செய்யலாமென்றெண்ணாமல் தகுவினையே செய்யவேண்டுமென்ப
து கருத்து.　　(௪௪)

பேதைமைபடைகுற்றே பிறிதுறுமன்மற்றே..........*
பேதமிறெளிவுற்றாணிபாதொரு பொழுதப்போ..... .*
தோதலோடுலகத்தே யுரைகளினுளவிட்டா.... ......*
ஞாதவிலெனைமெய்ப்பாடடைதருநெறியைக்கேள்......*

(இ-ள்.) அறியாமையையடைந்து மோட்சத்துக்குவேறானசொ
ர்க்காதிபதங்களை இச்சித்திருக்கப்பட்ட மனதானது அந்த அறியா
மையைநீக்கிச் சொர்க்காதிபதங்கள் அநித்தியமுந் துக்கமுமென்று
குற்றமில்லாத தெளிவையடைந்தான். அதுஎப்பொழுதோ அப்பொ
ழுதே உலகத்திலேசொல்லுடனே உரைகளிலே மனத்தை யிருத்தா
மல்விட்டான் ஆகையாலே யென்னைமெய்யாக அடைகிற மார்க்கத்
தைச்சொல்லக்கேளென்றவாறு. ❊ அறியாமையாவது மயக்கம்ம
னத்தில் தெளிவாவது சொர்க்காதிபதங்களை நித்தியமென்றுஞ் சுக

மென்றுந்தடுமாறி மயங்காமல் அறிந்திடமென்றுந் துக்கமென்று
ம்நிச்சயம் பிறந்ததுக்கு மெய்ஞ்ஞானமென்றுந் திடஞானமென்
றும் தெளிவென்றும் பேராகையாற் குற்றமில்லாத தெளிவென்றார்.
இந்தத்தெளிவுபிறந்தபோதே நூல்களிலும் அறிஞர்களிலும் மன
ம்போகாமல் விட்டானென்பது கருத்து.— (௪௫)

விடலருமவகையிதால் வினைபயனைவிட்டே ....*
கடவியவினைமுட்டா வகைசெய்துகழிவுற்றோ *
ருடலொடிவ்வுலகத்தே யுளனெனநிகழ்பெற்றே*
இடர்களையறவிட்டா ரெனையறிவகைபெற்றார் *

(இ-ள்.) விடுதற்கரிதான இந்தவகையினாலே வினையப்பட்டபிர
யோசனத்தைவிட்டே நடக்கப்பட்ட காரியத்தைத் தடைபடாதப
டிசெய்து கழித்தபேர்கள் இந்த வுலகத்திலே இப்போதிருக்கிறாற்
போலெப்போதுந் தேகத்துடனே யிருக்கிறானென்னப் பட்டபேறு
பெற்றே துன்பங்களையறுத்ததாக விட்டபேர்என்னையறியப்பட்ட
வகையைப் பெற்றாரென்றவாறு. கடவிய வினையாவது தெய்வச்
செயலாலே நடத்தப்பட்டகாரியம் வினைபயனாவது உண்டாகிறபிர
யோசனம்-விடலரும்வகையாவது அனுமானத்தைநம்பிப்பிரத்திய
க்ஷத்தைவிட அரிதாகையால் விடலரிதென்றது. (௪௬)

[கொச்சகக்கலிப்பா.]

தலைநின்றபொருளையுமின்றியேசலியாதே..... ......... *
நிலைநின்றதியாதொருபோதப்போதுநெறிநின்றாய் ..*
கலைநின்றமெய்ஞ்ஞானயோகங்கண்டாறுமென்னச் ...*
சிலைநின்றதோள்விசையனிவ்வண்ணஞ்செப்பினான் ... *

(இ-ள்.) எல்லாவற்றிற்குந் தலைமையாக நின்றபொருளிலேசந்தே
கமில்லாமற்சலியாமல் நிலையாகநின்றதெப்போதோ அப்போதுமோ
ட்சமார்க்கத்திலேநின்றாய் அதினாலே சாத்திரங்களிலே அஞ்சாம
ல்நின்றமெய்ஞ்ஞானயோகம் காணப்படுமென்று கிருஷ்ணசுவாமி
சொல்ல-வில்லுநிற்கப்பட்ட கையையுடைய அருச்சுனன் இந்தப்ப
டிச்சொன்னானென்னறவாறு. கலைநின்றஞானமாவது-வாசகஞா
னத்தைநம்பாமல் மயங்கையிலந்தமயக்கந்தீரவும் நம்பவுந்திடம்
பிறக்கவும் வேதமுதலானவைகளிலே சொல்லாநின்ற ஞானத்தைக்
காட்டுகையாம். (௪௭)

(அறுசீரடியாசிரியவிருத்தம்.)

இவ்வகையவனை நின்றே ரெவ்வகைபுரைப்பர நீதச்..........*
செவ்வகையிலாதோன்செய்யும் செயல்களென்செப்புமாறேன்...*
மெய்வகையருளுகென்ன விண்ணேயேமுதலாக்கொண்ட..........*
வைவகைப்பொருளுமீன்ற வவனதையருளிச்செய்தான்..........*

(இ-ள்.) இந்தப்படி பிரமமே நித்தியமென்று சலியாமல்நின்று ஆந்தகாரியததைச்செய்து ஆடிக்காத காரியத்துக்கு முயற்சியல்லாமலிருக்கிற சமாதியறிவுடையவன் அவனை தவிர நின்றபேர்கள் எப்படிச்சொல்லுவார்கள் அந்தச் செய்யும் வகையென்று மில்லாதவன் செய்யப்பட்ட செயல்களென்ன பேசுகிறவழியென்ன இவைகளை மெய்யானவகையாக அருளிச்செய்யுமென்ன ஆகாயத்தையேமுதலாக்கெண்ணவைத்துக்கொண்ட அஞ்சுவகைபூதங்களையும் உண்டாக்கின அந்தச்சுவாமி இதையருளிச் செய்வானென்றவாறு. ※ பிருதிவிமுதலாக வழங்கினாலும்; சோத்திராதி- சத்தாதி- வக்காதி-வசனாதி-முதலான தத்துவ உற்பத்தியுஞ் செயலும், ஒழுக்கமும் சொல்லும் மாறு,ஆகாயமுதலாய் வைத்துக்கொண்டதாலே-மேதற்றேகாரம் வருவித்தார். (௪௮)

அறிவினையழகிதாக வறிந்தெலர் வரவுநீக்கி..........*
வெறிதருவெருளிகாம மயக்கதீத் தினபதுன்பம்..........*
வறிதெழுபொழுதில்வாடி மகிழ்ச்சியென்றிவையுமாய்த்துப்.*
பொதிதருபுகழுந்திங்கும் போற்றல்போற்றமைபோக்கி *

(இ-ள்.) ஆத்மஞானத்தை நன்றாகவறிந்து அந்தமனதுக்கும், புத்தி யிந்திரியங்களாலும் வருகிறவெல்லா ஆசைகளையும், போக்கி போதப்பட்ட-கோபம்- ஆசை- மயக்கம்- இந்தமூன்றையும்விட்டு, விருதாவாக சுகதுக்கங்களெழும்பகிறபோது சந்தோஷிமுங்கிலேசமுமென்ற இந்தவிரண்டையும்கெடுத்து, உலகத்திலெழுதிநிறுத்தி கீர்த்தியைப் பரிபாவித்தலும், அடகீர்த்தியைப் பரிபாலியாததும், போக்கியென்றவாறு. (௪௯)

ஆமைதன்னுறுப்போனாந்துந் தன்னுளேயடக்குமாபோற்......*
றிமைசெய்புலன்களைந்துந் தன்னுளேசெறியச்சேர்த்தி..........*

வாய்மையினிகழுமன்னே யொழுத்தவும்படுகின்றாற்... ........*
றாயமைசெய்தவையைத்தானேய்ச் சொல்லுவதவன்றன்சொல்லே.*

(இ-ள்.) ஆமையானது தன்னுடைய வுறுப்பான நாலு காலுமொருதலையும் ஆகிய அஞ்சையுந் தன்னுக்குள்ளே யடக்குகிறவழியைப் போலப் பொல்லாங்கு செய்யப்பட்ட அஞ்சுபுலன்களையுந்தன்னுள்ளேயடங்கச்சேர்த்து வாக்கினாலே நிந்திக்கிறதும் வாழ்த்துகிறதுஞ் செய்கிறவர்களாலே இரண்டையுஞ் சமனாக்கியப்போந்த மனதைச் சுத்தஞ்செய்து அந்தமனதே தானேய்ச்சொல்லுகிறது அவனுடைய சொல்லென்றவாறு. (௫௰)

குறையுமாற்பணியற்றாலுங் கொண்டவிப்புலன்களெண்ணி, ......*
லறைகடலனையநெஞ்சத் தவாவறுவறிவினில்லா ........ .... ........*
மறைமொழிடலவுமோதி யடக்குவான் மனத்தைவாங்கிப் ........*
பொறைகெடப்புலன்களைந்தும் பொறியிலேபோக்குங்கண்டாய் *

(இ-ள்.)இப்படி யடக்கிக்கொண்ட இந்த ஐந்துபுலன்கள் செயலற்றாலும் ஆத்மஞானங்குறையுமாகில் அளவில்லாத அலைகளாலேசத்தமுள்ள கடலைப்போன்ற மனதிலே ஆசையறாது ஆத்மஞானத்தினிலில்லாமல் வேதவாக்கியங்களை அனேகமும் ஓதியடக்குகிறவனுடைய மனதை அஞ்சு புலன்களும் வாங்கிப் பொறுமைகெடத்தக்கதாக அஞ்சுபொறிகளிலும் போகவிட்டுக்கெடுக்குங் கண்டாய் அருச்சுனனேயென்றவாறு.❀ ஆத்மஞானம் வருகுமாகில் ஆசைவிடுமென்றும், ஆத்மஞானத்தில் நின்றவனுடைய மனதைவிடயங்களாகிய புலன்கள்கெடாதென்றும், அப்போது இந்திரியங்கள் செயலற்றுச் செடமாமென்றும், அருத்தாயத்தியிந்திரியங்களுடைய செயலாவதுவிஷயங்கள் அதையறிதலாவது - அனுபவியாதுவிடுதல் ஆகையால் ஆத்மஞான மில்லாமல் இந்திரியங்களை அடக்கி விஷயங்களையனுபவியாமல் விட்டாலும், ஆசைவிடாதென்பதும், ஆத்மஞானத்தில் நில்லாமல்-வேதவாக்கியங்களினு லடக்குகிறவனுடைய மனதை விஷயங்களிந்திரியங்களிலே போகிக்கெடுக்குமெனவேமோக்ஷத்திலேசெலுத்தாதென்பதுங் குறிப்பு. (௫௧)

ஆதலாற்புலன்களைந்து மடக்கரிதடங்காவாகிற் ... . ... .*
றீதலாக்கருத்துந்தீதா லவற்றிலேசெல்லுஞ்சென்றாற்..*
காதலாற்புகைந்துவெய்ய காமமாக்கொளுமக்காம. . *
மேதிலாக்காமத்திய வெகுளியாயெரியுமன்றே.... ....*

(இ-ள்) ஆத்மஞான மில்லாதவனுடைய மனதைவிஷயங்க ளிந்திரியங்களிலே செலுத்தும், ஆகையாலே ஐம்புலன்களையும் அடக்குவது அரிது அது அடங்காதாகிற் பொல்லாதல்லாத நல்லமனதும்பொல்லாதாய் அந்தப்பொல்லாங்கிலேபோம்- போகூல்விஷயவிச்சையினாலே அந்தமனது புகைந்து விருப்பத்தையுடைய காமமாகக்கொள்ளும் அந்தக்காமம் மனதிற்கு அன்னியமாகாமலொன்றாகியபொல்லாத கோபமாகியெரியுமென்றவாறு. இ விடயங்களடங்காவிடில் மனதுபுகைந்து சொலுந்தியெரியுமெனபது மனதுளசனுடனேகூடிற்றே அதுபோலே நடக்கையாலும் ஞானத்தைக்கூடி மோக்ஷத்தைப்பெறச் செய்வதுமாகையால் நல்லமனதெனறார் (௫௨)

எரிநிகர்வெகுளிபொங்க மயக்கம்வந்தெய்துமெய்தத் .... ...*
தெரியவைவகைதயுமுள்ளந் தெரிந்தவைகிதைந்தபோதே....*
யுரியடெப்புணர்வு மாயு முணர்வுமாய்ந்தொழிந்தவாறே... *
யரியவென்றறிஞர்பேசு மனைத்துமாய்ந்தொழியுமன்றே ....*

(இ-ள்,) இப்படிநெருப்பை யொப்பானகோபம் கொதித்தெழும்ப அப்போது அஞ்ஞானமுண்டாம்- அஞ்ஞான முண்டாகவே அப்போதே ஆத்மஞானத்தைத் தெரிகிறபுத்தியழியும் மனதுதெரிந்தபுத்தி யழிந்தபோதே யுரித்தானசத்திய ஞானம்நாசமாம் தெளிந்தஞானம் நாசமாய்ப் போனவுடனே பெரியவர்கள் அரிதென்று சொல்லப்பட்ட சகலமும் நாசமாய்ப்போமென்றவாறு. (௫௩)

வேண்டல்வேண்டாமையின்றி யிகைசெலாப்புலன்களாலே ..... • *
மாண்டபோகங்கடுய்ப்பான் மனங்கலக்குறான்மற்றத்தா .... ........ *
லீண்டியதெளிவுண்டாமாற் றெளியவேவல்லையின்றிப் ..........;*
பூண்டநோய்நீங்குநீங்கிற் புலனலாப்பொருளுந்தோன்றும்.......*

(இ-ள்) தன்தன் வழியேபோகாம லடங்கின விஷயங்களாலேமகிமையுள்ள போகங்களை -விருப்பு வெறுப்பு இல்லாமல் அனுபவிக்கிறவன் மனசுகலக்கமடையான் அந்தக்கலங்காத மனதினாலேநெருங்கிய தெளிவுண்டாம் தெளியவே பிரமாண மில்லாமற் பூண்டபிறவிமுதலான வியாதிநீங்கும், நீங்கினால் விடயங்களை யெல்லாமென்றிருந்ததினாலே அந்த விடயங்களல்லாத பரமாத்மாவும் பிரசன்னமாமென்றவாறு. இ நெருங்கியபொருளு மென்றது தோன்றும் பொருளுந்தோன்று மென்றசிறப்பும்மை. (௫௪)

அடுத்தநற்றொழில்செய்யாதார்க் கறிவில்லையறிவின்றாக ……*
விடுத்தமெய்ப்புணர்வின்றாமால் மெய்ப்புணர்வில்லையாகத் ……*
தொடுத்தபின்சித்தசாந்தி தோன்றிடாததுதோன்றாதே ……*
லெடுத்தநல்லின்பமென்று மில்லையேயிசைக்கவேண்டாம் ……*

(இ-ள்) பிரசன்னமாக அடுத்த பரமாத்மாவினுடைய தொழிலாண ஞானயோகத்தைச் செய்யாதவர்களுக்கு ஞானமில்லை ஞானமில்லையாகவே சகலமுமித்தையென்று பெரியோர்கள் கைவிட்டமெய்ஞ்ஞானமில்லையாம் மெய்ஞ்ஞானமில்லையாகவே மோக்ஷமேயதுவாகத் தொடுத்த இனிதானசித்த சாந்திதோன்றாது அது தோன்றாதாகில் மேலாகவெடுத்த மோக்ஷசுகமென்றைக்குமில்லை உண்டென்றுசொல்லவேண்டாவென்றவாறு. ※ மித்தையாவதுபொய். (௬௬)

ஆறுசெல்பொருள்கடிக்கு மைம்புலன்களுக்குப்பின்னே …… *
காறொடர்நெஞ்சையந்தப்புலன்களேகலக்குமாகே …… *
ஞாறுசெய்கடலுளோடங் கலத்தினையுடன்செல்காற்றே …… *
வேறுசெய்தறைந்துமாய்த்து வீழ்த்துமாய்போலவேயாம் …… *

(இ-ள்.) வழியாகப்போகப்பட்ட போகங்களை யனுபவிக்கப்பட்டவிடயங்களுஞ்சுக்கும் பிறகேகாலந்தொடரப்பட்டமனதை அறிந்த துன்பத்தைச்செய்யப்பட்ட விடயங்கள்தானே கலக்குகிற வழியைக்கேள் அருச்சுனா கடலினிடத்தோடுகின்ற மரக்கலத்தை அந்தமரக்கலத்துடனேகூடப்போகின்ற காற்றுத்தானே மோதி வேறுபடுத்தி அழித்துவிழப்பண்ணுகிறாற்போலவே யாகுமென்றவாறு. ※ இதனால்விஷயங்களின் பிறகேதொடருகிற மனதை அந்தவிடயங்களே தெளிவைக்கலக்கி ஆத்மஞானமில்லாமல் மயங்கப்பண்ணுகிறது எப்படிப்போலவென்னில் கடலிலோடுகிற மரக்கலத்தைக் கூடப்போகிறகாற்றே கெடுத்ததுபோலவாமென்பது ஆத்மஞானத்துக்கு உவமைகடல் அதிலேநடக்கிறமனதுக் குவமை மரக்கலம் அதைக்கெடுக்கிறவிடயங்களுக்கு உவமைகாற்று ஆகையால் விடயங்களின்பிறகேதொடராமல் ஆத்மஞானத்தைத் தொடர வேண்டுமென்பது குறிப்பு. (௬௭)

யாதொருபொருளையெல்லா வுயிர்களு மிருள்போற்காணு ……*
மோவாதருஞானிடத்தை யுளங்கையிற் கனிபோற்காணும் ……*

யாதொருபொருளையெல்லா வுயிர்களுமெங்குங்காணுங்.......... *
காதலில்யோகியத்தைக் கண்ணிறுற் தெரியக்காணும் ........ ........ .. *

(இ-ள்.) எல்லாச்சீவன்களும் யாதொரு பொருளை யிருள் போல எங்குங் காணாவோ அந்தப்பொருளைச் சொல்ல அரிதானஞானிகளுள் ளங்கையிலிருக்கிற நெல்லிப்பழத்தைப்போலக் காண்பன். எல்லாச் சீவன்களும் யாதொருபொருளை எங்குங் காண்பனவோ அந்தப் பொருளை ஆசையில்லாதயோகி - கண்ணிலே தெரியக்காணு மென் றவாறு. ※ தேகிகாணும்பொருள் ஆத்மா தேகிகாணும் பொருள் விஷயங்கள் ஆகையால் ஆத்மாவை ஞானிகாண்பான் விஷயத்தை யோகிகாணுனென்பது குறிப்பு. (௫௭)

நீரினுனிறைந்துநின்ற கடலிலே நெறிமேற்கொண்டு..... .... *
நீரினுனிறைந்தவாறு விழுமது நெறியுறுது ..... .......... . .. .... *
தேரினுலதுபோலாசை செறிந்தவர்திறமேநோக்கிச்.......... *
சாருமாலாகிலத்தை யவர்களுஞ்சலித்தல்செய்யார்.... .. .... *

(இ-ள்.) சலத்தினுலேநிறைந்து நின்ற சமுத்திரத்திலே சலத் தினுலேநிறைந்த ஆறானது ஓடுகிறவழியைமேற்கொண்டுவிழுமாகுந் தஆற்றுச் சலத்தினுடைய வழியை அந்தக்கடல்சேராதுஎப்போது முள்ளபடியேயிருக்கும் அதுபோல நாம்விசாரிக்கில் ஆசை யான துசித்தசாந்தியான கமமுடையவர்களிடத்தைக் குறித்துச் சேருமா கில் அந்த ஆசையையவர்களுஞ் சலித்தல் செய்யார்களென்றவாறு ※ இதனால் கடலிலேத்தனையாற்றுச் சலங்கூடினாலும் கடலானது அ திகங்குறைச்சலும் ஆற்றுச்சலத்தினுடைய குணமில்லாமல் தம்சுப பாவப்படியே யிருக்கிறது போலச் சகல ஆசைகளும் வந்தாலும் அதிலேபற்றில்லாதவர்கள் சலனப்படார்கள் என்பது கருத்து. இச் சையுள்ளவனுக்குச் சாந்தமில்லையென்ற தருத்தாபத்தி. (௫௮)

யானெனதென்புநின்றி யெவ்வகைப் பொருளுமிட்டான் .... *
றனெனச்சரிக்கின்றான்யா ரவனேயேயடையுஞ்சாந்தி ..... .. *
ஈனமதடையாதித்தை யடைந்தவரிறக்கும்பே தின்,.........*
ஞானமேயடைவானொன்னே நண்ணுவார் பிறவிநன்றார்...... *

(இ-ள்.) நானென்கிற அகங்காரமும் என்னுடைய தென்கிறசுத ந்திரமுமில்லாமல் எந்தவிதப்பொருள்களையும்விட்டவன் சகலமோ

ருள்களுந்தானேயென்று சஞ்சரிக்கிறவனெவனே அவனையே சாந்தியடையும் அஞ்ஞானமடையாது இந்தச்சாந்தியையடைந்தவர்கள்மரணமாகிறபோது ஞானத்தைச்சேர்ந்து பிரஹ்மத்தைச் சேருவார்கள். பிறவியடையார்களென்றவாறு. ஃ ஞானமேமெய்யென்ற தேற்றகாரத்திருமேலே சாந்தியான பிரமத்தினுடைய பத்தியை நிசமான அத்பியாசம் பண்ணினவன் ஞானத்தைப்பெற்று மோக்ஷத்தையடைவானென்பது கருத்து. (௫௯)

[கலிவிருத்தம்.]

பின்னையோயிவ் வுலகமெலாம்பெற்ற …………… ……. *
வன்னையோதிரு மார்பத்தணைத்தவன் ……… ……… …*
முன்னையோர்புகழ் வேதமுடிவையோ …. ……………… *
தன்னையோவுள்ள வாறெலாஞ்சாற்றினர் ……… ……*

(இ-ள்.) மகாலட்சுமியோ ? உலகமெல்லாம் பெற்றதாயோ ? அவளைத்திருமார்பிலேயணைத்தகிருஷ்ணசுவாமியோ பெரியோர்கள் புகழப்பட்டவேதாந்தத்தையோ? தன்னையோ! அந்தப்பிரமத்தை யுள்ளபடியெல்லாஞ் சொன்னாரென்றவாறு, (௬௰)

இரண்டாவது சாங்கியயோகவத்தியாயம்முற்றும்.

ஆக அத்தியாயம் இரண்டுக்குக் கூடியசெய்யுள் (௯௰.)

மூன்றாவது.

# தேவபூசா

## அத்தியாயம்.

(கொச்சகக்கலிப்பா.)

அலையிலேகடற்கிடந்தவரு மறைகளானவற்றின் …… *
தலையிலேயிருக்குமவன் றேரிலேநின்றருளிக்… ……*
சலையிலேபொருள்விரித்துக் காட்டவும்மெய்காணவே*
சிலையிலேயுயர்விசைய னிவ்வுண்ணஞ்செப்பினன ,, .. *

(இ-ள்.) திருப்பாற்கடலில் அலையிலேபள்ளிகொண்டவர் ஒளரி
யவேதங்களின் சிரசிலேயிருக்கிறவர். இப்படிக்கொத்த கிருஷ்ணசு
வாமி தேரிலே நின்றருளிச் சாத்திரத்திலே சொன்னபொருளை விரி
த்துக்காட்டவும் உண்மையாகக்காணாமல் வில்லிலே அதிகமென்று
பெயர்பெற்ற அருச்சுனன் இந்தப்படிச்சொன்னானென்றவாறு. ஸ்ரீ
கிடந்ததையுமிருந்ததையுங் கண்ணாலே கண்டறிவிலை தேரின்
மேலேகொணின்றருளி வேதாந்தப்பொருளை விரித்துக் காட்டவுங்
காணாத அருச்சுனன் கிடந்தபோது மிருந்தபோதுஞ்சொல்லுவது
ஒருசொல் வேதாந்தப்பொருள் மகாசூட்சுமம் அப்படிக் கிடந்த
போது மிருந்தபோதுங்காணாமற் கேட்கப்படுகிற ஒரு சொல்லாலே
மகாசூட்சுமத்தைக் காணமாட்டுவாமோமாட்டாமென்பது கருத்து.

(அறுசீரடியாசிரியவிருத்தம்.)

நன்றெனவினையின்ஞானமென வுரைத்தாய்மீளவினைநல்ல...... .....*
வென்றேயுரையா நின்றனையா லிவற்றிலெதுநன்றென வுணரக்... *
குன்றேபனையாயுனையடைந்தேன் குற்றத்துயர நீக்குவதா ......*
மொன்றேயாகவுரைத்தருள வேண்டுமென்ன வவனுரைப்பான்...*

(இ-ள்.) கருமத்திலுஞ்ஞானமே நல்லதென்று சொன்னீர் திரும்
பஞானத்திலுங் கருமமே நல்லதென்று சொல்லாநின்றீர் இந்தக்கரு
மம் ஞானம் இரண்டில் எது நல்லதென்று நான் அறியவேண்டும் நீல
மலையையொப்பான திருமேனியையுடையவரே உம்மைச்சரணமா
கவடைந்தேன் என்குற்றமான துக்கத்தைத் தீர்க்கிறது கருமஞான
மிரண்டில் ஒன்றேநிச்சயமாக உபதேசித்தருளவேண்டுமென்று
கேட்கக் கிருஷ்ணசுவாமி சொல்லுவா ரென்றவாறு. (௨)

(கலிவிருத்தம்.)

ஆதியி லுலகினை யாக்கி யன்று நா... ........... ........... *
னோதியபொருளிவை யிரண்டு முண்மையே........ ..... *
தீதயலவாவருன் செயலை மாற்றுவான் ........ .........*
மீதிபல்வினையுறுன் விடு மேவிடான் ........... ... ... *

(இ-ள்.) ஆதிகாலத்திலே யுலகத்தையுண்டாக்கியபோது நான்சொ
ன்னபொருளான இந்தக்கருமஞானமென்ற விரண்டும் நிச்சயமே
இவற்றில் ஞானிகளுக்கு ஞானமுங் கருமிகளுக்குக் கருமமுமென்
று நீகேட்டிருந்தும் மறந்தாய்பொல்லாங்கேசுபாவமான ஆசையை

யறுதலன் கருமத்தை விடுவான். ஆசையை விட்டவன் கருமத்தை விடான் மேலான பயனும் கருமத்தை யடையாதவன் மோக்ஷத்தை யடையான் கருமத்தை யடைந்தவன் மோட்சத்தை யடைவா னென்றவாறு. ஸ்ரீ நிஷ்காமியாய் பலனை விரும்பாத கருமத்தைச் செய்யுமவன் கருமத்தை விடுவது ஆசையறுவதுண்டு அந்த வேண்டிய ஆசையாகிய ஆசையாற் கருமத்தை விட்டாலும் விட்டவனல்ல விதிகளுந் தொழிலுங் கருமமாகையால் விட்டவனல்ல கருமத்தை யடையாதவன் மோட்சமடையா னென்பதே யன்றியில் ஞேய தேசமும் அனுசந்தானமுங் கருமமாகையால் மோட்சம் வேண்டுங் கருமத்தை விடுவதுமன்றி ஞேய தேசமும் அனுசந்தானமுங் கூடவிட்டு நினைத்தவிடமே மோட்சமடையான். (௫)

ஒருவரு மொரு பொழுதினு மொருகாலு ........ ※
மிருமை கருவினை செய்யாதவர்க ளில்லை........ ※
ஒருமையினை வருவினையிட்டிருவான் ....... ※
பருவமாம் போலவிட்டானமோ ....... ※

(இ-ள்.) ஒருவரும் அனேகரும் ஒருநாளிலும் அனேகநாளிலும் ஒருகாலமும் அனேககாலமும் நல்வினை தீவினை யென்கிற இரண்டுவகையான கருமத்தைச் செய்கிறார்களே யல்லாமல் செய்யாதவர்க ளில்லையாகையால் அருச்சுனனே ஆசையறுதலன் கருமத்தை யடக்கினவனென்கிற சாதத்தினால் பொய்யே பாவிக்கிறவ னென்றவாறு. இது ஒருத்தனாகிலுங் கருமஞ் செய்யாதவனில்லை கருமஞ் செய்யாத நாளுங் காலமுமில்லை ஆசையறாமல் கருமத்தை யடக்குகிறவனை பொய்யே பாவிக்கிறவனென்றது கருமத்தை யடக்கி ஞானியாகில் பலனையிச்சியாத கருமாநுஷ்டானத்தினாலே ஞானப்பாசத்தை சாதிக்க வேண்டியே இந்திரியங்களை நீண்டித்துக்கொண்டிருக்கிறவனை வைதிக்கிய சாரமென்று சொல்லப்பட்ட விசாரமாகவு கருமத்தை யடக்கினு வியென்று பேசிக்கொண்டோமே விஷயத்திலே பிரவேசத்தால் உலகம் நிந்திக்குமே யென்கிற விசாரம் ஆகையால் இந்திரியங்களை யடக்கிய சாரம் விட்டதினாலே கருமஞ் செய்யாம லிருக்கிறதில்லை யென்பது குறிப்பு. (சஉ

பலனை வெறுத் தொழில் போக மாற்றியே ..... ※
பலனறவினைகளைப் பொருட்டுப் பண்ணுவாய் .... ※

நலனுறுமவ்வினை நரகமன்றியே ........................................ *
சலமுறுபிறவியுந் தவிர்க்குந்தன்மைகேள் ...................*

(இ-ள்.) விஷயங்களை ஐம்பொறியான விந்திரியங்களிலேசெல் லுகிறதைவிலக்கி மெய்யானபலனை யபேக்ஷிக்காமல் கருமத்தைஎன்னு டைய நியமித்தியமாகப்பண்ணு நன்மையுடைய அந்தக் கருமமா னது நரகமல்லாமல் வைரமடைந்த பிறவியையுந்தவிர்க்கும்அந்தச் சீபாவத்தைக்கேளென்றவாறு. ※ என்பொருட்டெனவே யுன்பொ ருட்டாக இச்சித்துச்செய்யாதேயென்றது- நரகமன்றி யென்றது நரகைவிலக்கும் அநுமாத்திரமோபிறவியையுந் தவிர்க்குமென்றது இப்படிப்பலனையிச்சியாமல் கருமானுஷ்டானம்பண்ணுகிறவனை சாந்தஞானநிஷ்டனிலும் அதிகமென்றுசொல்லப்படும்தேகமெ டுத்தவனுக்கெல்லாங்கருமம் பண்ணுகிறது நியமம் ஆகையால் நீயு ம்நிசமான கருமத்தைப்பண்ணு கருமத்தைவிட்டஞானத்திலுங்கரு மத்துடனே கூடினஞானம் நல்லது கருமம்பண்ணமாட்டேனென் றால் சரீரத்துக்கு நடக்கவேண்டியகருமத்தைவிடவேண்டும் இவை யெல்லாம் அருத்தாபத்தி தன்மைகேளென்றதாவது இந்தக்கருமம் பண்ணினதற்பந்தமென்றால் இந்தகருமமே பந்தமல்லாமல் தே வதாபூசையான என்னாராதனமானதருமபந்தமல்ல அதெப்படியெ ன்றால் அதினுடைய சுபாவத்தைக் கேளென்ற தருத்தாபத்தி தேவ தாபூசையென்றும், எக்கியார்த்தமென்றும், பாட்டிருக்கிறதோவெ ன்றால் பின்வரும் பாட்டுக்களாலும், இந்தப்பாட்டில் என்பொருட் டென்று இருக்கிறதினாலும், சொன்னது. (௩)

தேவர்களைமகிழ்விக்குஞ் செயலோடேதெரிந்த.... *
மூவகையவுலகினைய முன்படைத்தமுதன்மொழிவான்,
மேவரியசுரர்பூசை யிதுநீங்கள்வேண்டினால் .............. *
யாவையுந்தருமின்ன மிதுகேட்மினெனவிசைப்பான் *

(இ-ள்.) தேவர்களைச் சந்தோஷிப்படுத்துகிற கருமத் தோடேகூ டவிந்தமூன்றுவிதமான உலகங்களையும், ஆதிகாலத்திலேவிசாரித்து ண்டாக்கின பிரமதேவர்-அந்தச்சனங்களுக்குச் சொல்லுவார்-இது அடைய அரியதேவர்பூசையிந்தத் தேவர்பூசை நீங்கள்வேண்டினஇ ஷ்டார்த்த விதமெல்லாங்கொடுக்கும், இதையின்னமுங்கேட்பீர்க

ளென்று சொல்லுவாரென்றவாறு. ❁ செயலோடே யென்றதுமகி ழ்வியாதசெயலோடு என்றதுபாராமல் மகிழ்விக்குஞ் செயலோடே யென்றது நிச்சயஞ்சொன்னது, தெரிந்தென்றது சிருஷ்டிக்கு முன்னே பிரமதேவர் ஆலோசனை பண்ணினது இந்தச் சிருஷ்டி யைச்சதகருமத்துடனே உண்டாக்கவேண்டும்-அதற்குச்சதகரும மே தேவர்களை மகிழ்விக்குஞ்செயல்- ஆகையால்- அதுவுடனேசிரு ஷ்டிக்கவேண்டும் அதல்லாததுற்கருமத்துடனேசிருஷ்டிக்கலா காதென்று, ஆலோசனையில் விசாரித்துத் தெரிந்தபின்பு இந்த மூவு லகமும் படைத்தானென்றது-இதுவென்றது சொல்லும்பொருளைக் காட்டல். (௲)

செயல்வகையா நீங்களவர் திறம்போற்றுமாங்கவரும் ...... ❁
புயல்வகையா லுங்களையே புறம்போற்றிப்புரந்தருள்வா. ... ❁
ரியல்வகையானதுபிழைபி ரணிவிரண்டுதிறத்திரு ............ ❁
முயல்வகையாலென்னையடைவீ ரொந்நிலத்தோர்க்குரைத்தனனால்.

(இ ள்.) நீங்கள்செய்யும் விதங்களினாலே அந்தத்தேவர்களின் விதங்களைப்பூசைசெய்யுங்கள், அப்போது அந்தத்தேவர்களும்,மே கமென்கிறவிதத்தினாலே வுங்களையே புறம்பேகாத்துத் தயைசெய் வார்கள் உங்களாலியன்றவிதமானது தப்பாமற்செய்வீராகில்இரண் டுவிதமான தேவர்மனிதரானநீங்களுந் தப்பிப்பிழைக்கிறவிதத்தினா லேயென்னைச்சேருவீரென்று மனிதருக்குச் சொன்னாரென்றவாறு. ❁ இதனால் எக்கியம்பண்ணித்தேவர்களைச் சந்தோஷிம்பண்ணுங்க ள் அவர்கள்மேகங்களாலே மழையைப்பெய்வித்துப் புறம்பேகாத் துரட்சிப்பார்கள் இப்படியிருவகையாருந் தப்பாமல் நடந்தீர்களா னாலென்னைச் சேருவீர்களென்று, மனிதரைப்பார்த்து இருவகையா ருக்குஞ்சொன்னார். ஒருவனைப்பார்த் திருவருக்குஞ்சொன்னதேதெ ன்னில்- ஒருவன்முன்னேசெய்தால் மற்றொருவன்பின்னேசெய்யவே ண்டியவிதியாகையால் முன்னே செய்யவேண்டிய மனிதரைப்பார்த் துத்தேவர் நடக்கையுங்கூடச்சொன்னது. தப்பிப்பிழைக்கிறவிதமா வது-நான் எனதென்கிற ஆங்காரசுதந்தரமிரண்டினாலுங் கெடாம லிருத்தல்-இப்படி யொருவருக்கொருவர் அன்னியோன்னியமாகவி ருந்தால்- மேன்மையை யடைவார்களென்பது குறிப்பு. (எ)

மற்றவர்தந்ததுகொண்டு மறித்தவரைப்பேணுதான் ........................ ❁

கற்றவர்முன்பழித்துரைத்த சள்வரினுங்கடைப்பட்டான் ......... *
பெற்றவைகொண்டவர்ப்பேணிப் பிழைத்ததுகொண்டின்னதே.*
யுற்றதுதன்பொருட்டாக வுண்பவன்றீதுண்கின்றான் ..... ....... . .... *

(இ-ள்.) எக்கியத்தினாலே பூசைபண்ணின தன்க்கு அந்தத்தேவர் கள்வேண்டியனகொடுப்பார்கள் அவர்கள் கொடுத்தவை கொண்டுதி ரும்ப அந்தத்தேவர் களைப் பூசியாதவன்பெரியோர்கள்முன்னேப ழித்துச்சொன்ன திருடரிலுங்கடையா னன் அவன் அந்தத்தேவர்க ளாலே கொடுக்கப்பெற்றவைகொண்டு அந்தத்தேவர்களைப்பூசித்து அவைகளிலே மீந்ததைக்கொண்டு பொசியாமற் கிடைத்ததைத்த ன்னுடைய நிமித்தமாகப் பொசித்தவன்பாபத்தினாலே விழுங்கப்ப ட்டவனென்றவாறு. ❋ எக்கியத்திலே மிஞ்சினதைப் பொசித்தவ ன்பாபத்தில் விடுபட்டவனென்ற கருத்தாபத்தி. (அ)

(கலிவிருத்தம்.)

உளவாமுயிருணவாலுணவுயர்மாரியினுளவாம் ..... ..... *
வளவான்மழைபுயர்வானவர் மகிழ்வால்வருமதுதா... *
னிளவாளரியணையாயிசைதொழிலால்வருமிசையி... ... *
னுள்வாமறைதருநான்மறையறிவாலறிவுறுமால்.......*

(இ-ள்.) இப்படிக்கொத்த பொசிப்பாலே ஆத்மாவுண்டாம்இந்த ப்பொசிப்புஉயர்ந்தமழையாலுண்டாம்- இந்தவளமையுள்ளமேகம் பொழியுமழை கீர்த்தியுடைய தேவர்களின்- சந்தோஷித்தால்வரும் இளமையும்பிரகாசமுமுள்ளசிங்கத்தை யொப்பான் அருச்சுன அந் தமழைதான்சொல்லப்பட்டஎக்கியமானகருமத்தினால் வரும்இந்தக் கருமத்தைச்சொல்லுகிற வேதஞ்சொல்லினுண்டாம் இந்தச்சொல் லாலுண்டான நாலுவேதத்தினுடைய அறிவினாலே அறிவுண்டாமெ ன்றவாறு. (௯)

இதனால்வினைகளிலேவிளைவனயாவையுமிங்கு ..... ..... *
னெதினால்வருவினையாழியினெறிசேரலர்திரிவார் ..... ... *
மதனாரியபுலனேமகிழ் விடமாகவுமுடையா ........ *
ரதனாலவரவமேகழிபவராமெனவறிநீ ........... ..... *

(இ-ள்.) இப்படி யொன்றொன்றுண்டான இதனாலே கருமங் களிலேசகலமும் விளையப்பட்டன இவ்விடத்திலே எக்கியத்திலேயுள்

ரையிருக்கிற பரமபுருஷனாலே வருகிறகருமசக்கிரத்தினுடையமார்க்கத்தைச்சேர வில்லாதவராய்த் திரிவார்களேமதமுண்டாகியவிஷயங்களிலே சந்தோஷிப்படுமிடமாகவும், விஷயங்களை சந்தோஷமாகவுமுடையவர்கள் அதனாலே அவர்கள் விருதாவிலே நாசமாகிறவர்களாமென்று நீயறிவாயென்றவாறு. ✲ நிதனவது உள்ளானவன் அதீதனுவதுகடந்தவன். (௰)

(ஏழுசீரடியாசிரியவிருத்தம்.)

கண்ணிற் கருதரு மறிவைக்கருதிய வறிவேமிகவருகளி
கூர்வோ, னெண்ணிற் றெழிறரு பயனுற்றிடும்வகை யிசையானதலின் வினையாவும், பண்ணிப் பெறுவதோர்ப
யனுண்டோவவை பண்ணாதுறுவதோர் பழி யுண்டோ,
மண்ணிற்பிறரிவ னிவையுற்றிலனென மதியா ரவைசெய்
தவிதியாரால்............................................✲

(இ-ள்.) கண்ணாலே காணவும், மனதாலேநினைக்கவும், அரிதாகிய ஆதமாவைத்தரிசனமுந் தியானமுஞ்செய்து அந்த ஆத்மாவே நஷ்டமில்லாமல் மிகுந்திருக்க அதனால்வரப்பட்ட களிப்பு மிகுந்தவன் விசாரித்தா லவனுக்குச்செய்யவேண்டிய காரியமொன்றுமில்லாததினாலே கருமத்தால்வருகிற பலனையடையும் படிக்குச் சம்மதியான்ஆதலால் ஆத்மதரிசனம் சித்தியானவனுக்குச் சகலமும் ஆதும்வயல்லாமல் வேறேசகல கருமங்களையும் பண்ணிப்பெறுவதொருபிரயோசனமுண்டோ அதுவில்லை ஆனால்அந்தக் கருமத்தைப்பண்ணாததினாலே யடைகிறதொருபழியுண்டோ அதுவுமில்லை ஆனாலிவனையுலகத்தில் மற்றப்பொருள் இவன் இந்தக்கருமத்தைச்செய்து இந்தப்பிரயோசனத்தை யடையவில்லாதவ னென்று மதியார்கள் அதேதென்னில் அந்தக்கருமத்தையுண்டாக்கின விதியினாலே யென்றவாறு. ✲ விதியென்கிறலது விதியாவொன்றது-உபசாரம்- விதியாவது-பிரமம் பலனையிச்சியாதவனுக்கு உலகம்மதித்தாலென்னபிரயோசனம் மதியாமையால் என்னநஷ்டம் இரண்டு மில்லை யென்பதுகருத்து. (௰க)

(எழுசீரடியாசிரியவிருத்தம்.)

ஆதலானீயும்பலத்தின்மேலவவவற் றடுத்தகாரியஞ்செய்வாயதனற் ✲
றீதிலாவீடே சேருவாய்முன்னஞ் சேர்ந்தவரனேகர்முன்றேறிற்.. ✲

காதலாலரசன் சனகனேமுதலோர் கருமமேமொடொழுகியேயஞ்ஞே-
போதலாவுலகு புக்கதுமற்றும் புகுந்தனரனேகர்முன்பொலிவார்*

(இ-ள்.) ஆகையால்நீயும் பலத்தின்மேலாசையற்று இராஜ க்கருக்கு அடுத்தகாரியத்தைச்செய்வாய் அதனாலேகுற்றமில்லாதமோக்ஷத்தைச்சேருவாய் இப்படி முற்காலத்திலே சேர்ந்தவர்கள் அனேகம்பேர் அவர்களாரென்று ஆசையாலே முன்னே விசாரிக்கில் ராஜாவான சனகனேமுதலானவர்கள் கருமத்தோடே நடந்தேயல்லவா மற்றவர்களா யாரும்போகமாட்டாதமோக்ஷமாகியஉலகத்திற்புகுந்து பின்னேயு முன்னேபுகுந்தன ரனேகர்விளங்குவா ரென்றவாறு.※ விளங்குவாரென்றது அவர்களையுலகர் புகழ்ந்து கொண்டே யிருக்கையால் விளங்குவாரென்றார். பலத்திலாசையற்றவன் அடுக்காத காரியத்தைமுயற்சிபண்ணான். அடுத்தகாரியத்தைச்செய்வான்-அடுத்தது-பசிவந்தபோது தனக்கல்லவென்று பொசித்தது -அடுக்காதது-பசியில்லாதபோது பொசிப்பைக் கண்டாற் பசிவாராமற் பொசிக்கவேண்டுமென்று பொசித்தல். இன்னமும் அடுத்ததாவது-அவரவர்குலத்துக்கு அடுத்தகருமம் அடுக்காதது பரகருமம்சனகராசாவைச்சொன்னதேதென்னில் இந்த அர்த்தம் அன்னிய சாதிக்கென்று நினையாமற்காட்டினது கருத்து. (௰௨)

பெரியவர் பயின்ற படியலாற்பயிலார் பின்புளோ ரென் பதன்
றாயி-னுரிய விவ்வுலக மூன்றினுமெனக்குச் செய்யவேண்டுவ
துமொன் றுண்டோ - வரியவையென்று வுறுதவுமுறுதற் பா
லவுமியா வையிங்கையா - பரியவிவ்வுலகு மகிழவும் வினைதான்
பண்ணுதற்கென்னையும் பாராய்..........................*

(இ-ள்.) பெரியவர்கள் ஆசரித்தபடியே மற்றசனங்களும் மாசரிப்பார்களே யல்லாமல் மற்றொன்றையு மற்றசனங்க ளாசரியார்கள் இப்படியென்றுசொல்லப்படும் அப்படியாகில் உரியதான இந்தப் பூமியந்தர சுவர்க்கமென்ற மூன்று லோகங்களிலும் என் னிச்சையாயிருக்கிறவெனக்குச் செய்யவேண்டிய தொன்றுண்டோ ஒன்றுமில்லை என்றாலே கூடாதஅரியதுவுங் கூடத்தக்க வுரியதுவும் என்ன இந்தவுலகங்களிலொன்றுமில்லை ஐயா யிப்படியெங்கும்என்னிச்சையாயிருந்து ஒன்றுடனுங்கூடாதவனும் இனிமேற் கூடுகிறவனு மல்லாத எனக்குச் செய்யவேண்டுவ தொன்றுமில்லையே இப்படிக்கொ

த்தநான் பருத்த இந்த வுலகங்கள் சந்தோஷிக்கவும் ரக்ஷிக்கவும்க ருமம்பண்ணுகிறேன் இப்படிப்பலனை யிச்சியாமற் கருமம் பண்ணு கிறதற்குமுன்னே ஜனகமகாராஜன் முதலான அனேகரைப் பார்க்கச் சொன்னேன் இப்போது என்னையும்பாரென்றவாறு. ✲மகிழவுமெ ன்றவும்மையாற் றுக்கிக்கவுமென்று வருவித்தது. என்னையுமென்ற வும்மையால் முற்காலத்துச்சனகன் முதலானோரையும் இந்தக் கால த்திலென்னையும் பாரென்று முற்பாட்டினையை எதிரது தழுவியது.

என்செயறவிறில்யான் செயாவினைக ளியாவருஞ் செயாதனு
லே மன்செய்த குலங்கண் மயங்கிமாய்ந்திடுவர் மற்றவர் மற்ற
தற்காகப் - பின்செயலறியா தவாவொடு முயலும் பேதை யை
ப்போற்பிறர் பொருட்டா - னுன்செயல்களைச் செய் யவைசெ
ய்வார் தம்மை யுணர்வுவே ருக்கலுமுறைப்பான்...............✲

(இ-ள்.) இப்படிக்கொத்த வென்னுடைய செயலானது செய் யாமல்விட்டால் நான்செய்யாத கருமங்களை யாருஞ் செய்யார்கள் அதனாலே நிலைமையாகச் செய்தகுலங்கள் மயங்கிநாசமாவார்கள்ஆ னாலிந்தநாசம் நானேபண்ணினவனானேன் பற்ற அஞ்ஞானி யான ஜனங்கள் அந்தக்கருமத்தைத் தங்களுக்காகச்செய்து பின்னே வரு கிற அனுபவச்செயலை யறியாமல் ஆசையுடனே செய்யப்பட்ட மூ டனைப்போல நீயும் பிறர்நிமித்தமாக உன்கருமங்களைச்செய அந்தக் கருமத்தைச்செய்கிறவர்களை யறிவுவேறாக்குவதையுஞ் சொல்லுவா னென்றவாறு. ✲ என்செயல்தப்பில்யாவருந்தப்புவாரென்றதினாலே என்செயல்தப்பாவிடில் யாவருந்தப்பாரென்றது அருத்தாபத்திகு லங்கள்மயங்குவதாவது எல்லாமொன்றாகிச் சங்கிரமாகிறது. கருமத் தைவிட்டது தானபடியினாலேஅந்தநாசமும் என்னாலேவந்ததெ ன்றது கருமத்தைத்தங்களுக்காகச் செய்தாற் பின்னாலே வருகிறது ஜெனனமரண சுகதுக்கமென்றறிவது மூடன் தனக்காகஎப்படிகரு மம்பண்ணுவானோ அப்படிப்பிறருக்காகவுங்கருமத்தைப்பண்ணெ ன்றது உனக்காகப்பண்ணாதே என்ற கருத்தாபத்தி. (௰௪)

மெய்வகைதனக்கும் புலன்கட்குமுள்ள வேறுபாட் டினைமிக
வறிந்தோன் - ஐவகையியற்கைப் புலன்களேமொழியுற் றழுந்
துகின்றனவென மயங்கா - னிவ்வகையறியா தவனிரு வினையு

மியான்செய்தேனெனவிளைந்தெங்கும்- உய்வகையிது நீபுணர்
ந்தெனக்கடுத்த வினைசெயென் றுரைத்துமீட்டுரைப்பான்...*

(இ-ள்.) உள்ளபடிக்குத் தனக்கும் விஷயங்களுக்குமுள்ள வேறுபாட்டை நன்றாக அறிந்தவன் அஞ்சுவிதசுபாவத்தை யுடைய விஷயங்களை யிந்திரியங்களில்விழுந்தழுந்துகின்றனவென்றும் தான் மடங்கான் இப்படியறியாதமூடன் புண்ணியபாவமான இரண்டுகருமமும் நான்செய்தேனென்று அகங்காரம்பண்ணி யிளைத்துத்தவிப்படுவன் தப்பிப்பிழைக்கிறவகையிது நீயறிந்து உனக்கு அடுத்தகருமத்தைச் செய்யென்று சொல்லித் திரும்பவுஞ்சொல்லுவா னென்றவாறு. ஆ மிகஅறிதலாவது நன்றாகஅறிதல்- பொறியுற்றதுபுலன்களேயென்ற தேற்றேகாரத்தினாலே விஷயங்களேயல்லாமல் ஆத்மாவல்லவென்ற நிச்சயமடங்கானென்றபாடத்லத அசங்கா னென்று பாடமோதில் அசையானென் றுரைகொள்ளும் இளைத்தலாவது அகங்காரத்தினாலே பிறந்திறந்து சுகதுக்கங்களை யனுபவித்துழன் றிளைத்தல் திகிலாவது இந்தத்துன்பம் எப்போது தீருமோ யாராலே தீருமோ இது நம்மைவிடாதோ வென்றேவருந்தல். (௰௫)

(அறுசீரடியாசிரியவிருத்தம்.)

என்யாற்பொறுமை யினைத்தவிர்ந்தேன் கருத்தாயுள்ள வினை
யதனை-யன்பாற்டயில்வா ரியாவர்சில ரவர்கள் வினைகளறவிட்
டா - ரென்பாற்பொறுமை யாலேயா னுரைத்தவிவற்றை யிக
ழ்கிற்பார்-வன்பார்த்தரையி லெழுமரம்போன் மாய்ந்தா ரறி
வுமாய்ந்தாரோ........................................... *

(இ-ள்.) என்னிடத்திற் பொறுமையை விட்டுத்தன்கருத்தேனென் கருத்தாய் அவரவருக்குள்ள கருமத்தை அன்பினாலே ஆசிரிக்கிறவர்களெவரோ சிலபேர் அவர்களே கருமங்களை அறவிட்டவர்கள் இனியென்னிடத்திற்பொறுமையாலேநான்சொன்ன இந்த வாக்கியத்தை யிகழுகிறபேர் கற்பாறையான தரையிலேமுளைத்த மரம்போலமாய்த்துபோவார்களதுவல்லாமல் அறிவுமாய்ந்தபேர்களென்று சொன்னார் ஸ்ரீகிருஷ்ணதேவ ரென்றவாறு. (௰௬)

[கலிவிருத்தம்.]

பண்டுநின்ற பழவினை யின்படி.................... *
கொண்டுநின்றது கூடுமவர் கட்குக்......................*

கண்டுநிற்றவர் கற்பனை யென்செயு........ ... ........*
முண்டுநன்றிதெனுவுரைநண்ணுமோ.... ........ ........ *

(இ-ள்.) தேகமெடுத்திருக்கிற பேருக்குமுன்னே பழையதாயிருந்த வினையின்படி கைகூடுமென்று வஸ்துவைக்கண்டு மிருக்கிறபேர்களுக்குக்கற்பனை யான வினையென்னசெய்யுமென்று அறுவகைச் சுவையுண்டு நல்லதென்று லதுநாவுடனேசேரும் அப்படிப்போல வஸ்துவைக் கண்டு இருக்கிறபேரை வினைசேராது என்றுசொன்னார் ஸ்ரீகிருஷ்ணதேவரென்றவாறு. (௰௭)

(இதுவுங்கலிவிருத்தம்.)

அஞ்சுபலன் வழிதொடரு மஞ்சுபொறியில்வையாம்.... -*
வெஞ்சுரனி லுழறியுயிர் வெம்பியழிவுறுவோ......... ...*
ரஞ்சுபுகும் வழிதகைய வொன்றுபகையுளகே......... *
ளெஞ்சுதலி லின்பமிட வொண்பகைவயையிகழ்நீ... ... *

(இ-ள்.) ஐந்துபுலனையும் ஐந்துபொறிதொடரு மதினால்உலகத்திலிருக்கிறபேர் கோபத்தினாலேயுழன்று உயிர்வெம்பி யழிந்துபோவார்களப்படிக்கொத்தபேர்பிறந்திருக்கிறவழியைமறிக்கிறதற்குஒருவகையுண்டுசொல்லுகிறேன் கேள் அது எப்படியென்றால் சுகதுக்கமென்கிறவை யிரண்டு இழந்துவிடுகிறதே பிறந்திருக்கிற வழியைமறிக்கிறவகை ஆகையினாலேநீயுமிகழ்ந்துவிடுமென்று சொன்னார்ஸ்ரீகிருஷ்ணதேவரென்றவாறு. (௰௮)

தடுத்ததொழில் செய்வது தகாதது தனக்கே.... .........*
யடுத்ததொழில் செய்துகொடு மேனுமழகையா ........ *
விடுத்தகருமம்பெரிது செய்வதெனின் மேலோர்.......*
தொடுத்தகருமஞ்சிறிது செய்கைதொழி லென்றான் · *

(இ-ள்.) ஞானவான்கள் வேண்டாமென்னத் தொழிலைசெய்கிறது ஆகாது தனக்கு அடுத்த தொழிலைச் செய்வது யாதாகிலுங் கெடுக்கிறதே அழகையாவென்று விட்டுவிட்டக் கருமத்தைத் திரளாய்ச் செய்கிறதினாலேயு மேலோரானஞானவான்கள் செய்கிறகாரியங் கொஞ்சமாகிலு மதைச் செய்கிறதே தொழிலென்று சொன்னார் ஸ்ரீகிருஷ்ணதேவ ரென்றவாறு. (௰௯)

(அறுசீரடியாசிரியவிருத்தம்.)

மாயனிவைவென்றுரைசெய்ய விசையன் மறுத்துக்கூறுவான்.... *
தீயவினைசெய்டாதவரைத் திகைப்பச்செய்து திறலல்லே ..........*
யேயபணிகொள் வாரைப்போ லியற்றுவிப்பா ரொன்றுன் ........*
பாயலியர்வைபார்க்கொண்ட பழையோ னிவ்வாறெனப்பணித்தான் *

(இ-ள்.) இந்தவிதம் ஸ்ரீகிருஷ்ணதேவர்சொல்ல அதற்குத் திரும்பவும் அருச்சுனராசன்கேட்கிறுன துர்ப்படியென்றால்கொடி தான வினைசெய்ய தமபேரைத் திகைக்கச்செய்துவல்லமையிருலே வேண்டிய தொழில் செய்வித்துக்கொள்ளுகிறவர்களைப் போலச் செய்விக்கிறபேர் ஆரென்றுகேட்க அதுக்கு யாக்கையென்கிறபொம்மையை ஆட்டிவைக்கிற ஸ்ரீகிருஷ்ணதேவர்சொல்வாரொன்றவாறு. (உ௰)

(கலிவிருத்தம்.)

தீமனந்தனி லேசெனனஞ் செயக் ........... ............ *
காமமெனனுங்கைத் தாய்வளர்கின்றது ........... ......... *
வேமனங்கொள் வெகுளியென்கிற்பது ... ........... ... *
நாமமற்றதன்னனலந் தன்னைக்கேள் ... ... ........ .... *

(இ-ன்.) அக்கினியிலேபிறந்தது- மனது - மனதிலேபிறந்தது- காமங்காமத்திலேபிறந்தது - குரோதகர்மமென்கிறது தாயினுடையகைபோலச் சகலமும்வளர்கின்றது - குரோதமென்கிறதுமதமையங்கொண்டிருக்கிறது-இது இரண்டையும் பேரறவிட்டுவிடுகிறதேநல்லநலம். அதை இன்னந் தெரியச்சொல்லுகிறேன் கேளென்றுசொன்னுர் ஸ்ரீகிஷ்ணதேவரொன்றவாறு. (உக)

எவ்வகைப்பய னுந்தினவல்லது ............... ...*
மெவ்வகைப்பெரும் பாவமுமிவ்வகை............ *
யெவ்வகைப்பொருட் குப்பகையாவகை ... ...... *
யெவ்வகைத்தெனப் பேசுவதின்னங்கேள்...... *

(இ-ன்) எந்தத்தருமமுஞ்செய்தாலு மந்தத்தருமத்தைவிழுங்கிப்போடுகிறதும், எந்தவகையினுலேயும்வெறும்பாவத்தையுண்டாக்கிறதும், எந்தப்பொருளுக்கும் பகையாக்குகிறதும், எந்தவகையினுலேயுந் தினம்பேசுகிறதுங் காமக்குரோதத்தினுலே என்று இன்ன

ஞ்சொல்லுகிறேன் கேளென்றுசொன்னார் ஸ்ரீகிஷ்ணதேவர்.—எ-று.

நெருப்பைமுற்றிய தூமமுநீரொளி.................. *
தருப்பணத்தை மறைத்தனமாகுமொத்.......... *
திருப்படைத்த வருள்ளுணர்வியாவையும்........ *
விருப்பமுற்றவெங் காமம்விழுங்குமால்............ *

(இ-ள்) புகையினாற்பிறந்த அக்கினிக்குமதிகப் பிரகாசம்பொருந்தியதன்னைக் காமமானது எப்படிமறைத்தது என்றால் - தங்கப்பணத்தை மாசுமறைத்தாற்போல உலகத்திலேயிருக்கிறபேர்களுக்குளன்றுண்டான உள்ளுணர்வான மனமெல்லாவற்றையும் விருப்புமுற்றகாமமும் விழுங்கிப் போமென்று சொன்னார் - ஸ்ரீகிஷ்ண தேவரொன்றவாறு. (உரு)

காதலாற்றவிக் காமம்புலன்களை.................... *
வாதலாற்புகுந் துள்ளமயக்குவ.................... *
வாதலாற்புலனைந் துமடக்கியே .................... *
யேதலாற்கடுங் காமமிறக்குவாய்................ *

(இ-ள்,) ஆசையினாலே தவிக்கிறகாமமானது - ஐம்புலன்களினுடையவாசலிலே புகுந்து மனதை மயக்குமாகையினாலே-ஐந்து புலனையுமடக்கி ஒப்பிலாத காமக்குரோத பாரத்தையிறக்கிப் போடுவாயென்று சொன்னார் ஸ்ரீகிஷ்ணதேவரொன்றவாறு. (உச)

ஆற்றுமிவ்வுடம் பிற்பரமைம்புலன்..................*
மாற்றுமைம்புல னிற்பரமாமனம்..................*
போற்றும்புத்தியினிற்பரப்பத்தியி.... ............. *
தேற்றுமிங்கிவை காண்பதுதொல்பரம் .......... *

(இ-ள்.) வாயுவினாலே சஞ்சரிக்கிற தேகத்துக்குப் பரமாயிருக்கிறது ஐம்புலன் தேகத்தைமாற்றுகிற- ஐம்புலனுக்குப் பரமாயிருக்கிறதுமனது மனம்போற்றுகிறதற்குப் பரமாயிருக்கிறதுபுத்தி. அந்தப்புத்தியிலே பரமாயிருக்கிறதுகாணு மதைக் காண்பது மேலானபரமென்றுசொன்னார். ஸ்ரீகிஷ்ணதேவரொன்றவாறு. (உரு)

(அறுசீரடியாசிரியவிருத்தம்.)

மேலாயுள்ளவிப்பொருளை மெய்யாவறிந்துபொய்மாய.....*
மாலான்மயங்குமனத்தினையு மடக்கியத்தயனங்கலக்கும் ...... *

காலர்யுள்ள காமத்தைக் காப்பாயென் றுபதேசித்தான். ..... *
சேலாயுலகமுறுபுலவோர் செவியிற்புரையிற்செலுத்தினான் *

(இ-ள்.) சகலத்துக்குமேலா யிருக்கிறவஸ்துவை மெய்யாகவறிந்து பொய்யானது இறந்து போகத்தக்கதாக மயங்குகிற மனதை யடக்கிக்கலக்கிறதற்குக்காலாயிருக்கிற காமத்தைக் காப்பாயென்று முன் செலாயுலகத்திலே அவதரித்து இப்போது சனங்கள் செவியின் வழியாக ஞானத்தைப் போதித்தார் ஸ்ரீகிஷ்ணதேவர்.—ள்-று .(உ௯)

மூன்றாவது - தேவபூசா- அத்தியாயம். முற்றும்.
ஆக அத்தியாயம்-மூன்றுக்குக்-கூடியசெய்யுள் (௱௰௬.)

நான்காவது.

# சம்பிரதாய

## அத்தியாயம்.

(கலிவிருத்தம்.)

நற்றவமகிழ்தரு கருமஞானமும்............*
மற்றதுமறவுனக் கறியக்கூறினேன் .........*
மற்றவைகளினவர் வாறுகேளெனக் ......*
குற்றமிலாழியங் கையன்கூறுவான்.........*

(இ-ள்) நல்லதவமகிழ்விலே யுண்டானதல்லாமல்- முன்னிருந்தபேருக்குஞ், சொன்னேனென்றும், கருமஞானமிரண்டும்-மனக்குமயக்கமறத்தக்கதாக அறியச்சொன்னேனென்று-சொன்னதல்லாமல் முன்னிருந்தபேருக்குஞ் சொன்னேனென்று, அவர்கள்பெயரையுஞ் சொல்லுகிறேன் கேளென்று குற்றமில்லாதகையிலே சங்குசக்கரத்தைத் தரித்த ஸ்ரீகிஷ்ணதேவர் சொன்னதொன்றவாறு. (க)

எவமறமுன்பியா னிரவிக்கோதினே.........*
ரவன்மனுவரசனுக் கறியக்கூறினு ........ *
னுவகையோடவனுமிக் குவாவுக்கோதினன்,
தவமுயலரசநீ யறியுந் தன்மையார் ... *

(இ-ள்.) மயக்கமறக் கியானத்தை முன்னாலே சூரிய னுக்குச் சொன்னேனென்றுஞ், சூரியனு மனுராசனுக்குத் தெரியச்சொன்னானென்றமனுராசனிக்குவாவுக்கு வகையாய்ச் சொன்னானென்று மாயையினாலே ஞானயோகத்தைத்தமுயன்று- ஆசரிக்கிறபேரிதையறிவார்களென்று மின்னமதின் வகையைத் தெரியச் சொல்லுகிறேன் கேளென்றுசொன்னார் ஸ்ரீகிஷ்ணதேவரென்றவாறு. (௨)

கருகரும்வகைநிகழ் காலஞ்சேரலா ...... *
மருவரும்வகைபதாய்மறைந்தவாய்மையை,
யிருவினைகெடவரு போகநீர்மையை.....*
யொருவருமறிவரி தாயவுண்மையே......*

(இ-ள்.) முற்காலத்திலே மாயைவஸ்த்துச்செந்து-அனேகவிதமுண்டான வகையுங் கருவுண்டாய் முன்பிறந்திறந்துபோன வகையையுமிப்போது பிறந்து இனி யிருக்கிற வகையையு மிருவினைகள் கெடவருகிறயோக நிலைமையையு முன்னுடைய வுண்மையு மறிகிறதற்கு எவர்களாலேயு மரிதென்று சொன்னானருச்சுனன்.— எ-று.

நல்லகாதல்செய் நண்பெனுமாயனை............ *
யல்லதியாவு மறியலாதலால்.... ......... ......... ...*
சொல்லன்மெய்யின தென்றனன்றூயவன்.....*
மெல்லவேறு விசயன்விளம்புவான் ........... ...*

(இ-ள்.) இந்தவகைகளெல்லா மறிகிறதற்கு - எனக்குத்தொண்டுபட்டு- என்பேரிலேயன்பாய் மனதுவைத்து என்னாலே யறியவேண்டுமென்னை யல்லாமலறியப்போகாது ஆகையினாலே யிதுமெய்யென்றதுாயவனான ஸ்ரீகிருஷ்ணதேவர்சொல்லவிசயனான அருச்சுனனுங் கேட்டு மெள்ளச் சொல்லுவானென்றவாறு. (௩)

(கலிவிருத்தம்.)

ஞானமாமிதுநல்லவர் கேட்டிடப் .... ........... .... ...*
போனகாலமும் யான்புகன்றேனென ............. ... ...*

வர்ணதாயினு மவ்வுடம் பன்றிது.......................*
தானதாம்வகை தாமறி தக்கதோ........ ............*

(இ-ள்.) ஞானமானதை நல்லவர்கள் கேட்கத்தக்கதாகமுற்கால த்திலேயும் நான்சொன்னேனென்று சொன்னீரே யுமக்கு மெனக் குமுன்னே மாயா தேகம் வந்த வகையு மிப்போது தேகம்வந்தவ கையும் நமக்குத் தெரியுமோ வென்று அருச்சுன ராசன் கே ட்டானென்றவாறு. (௫)

(அறுசீரடியாசிரியவிருத்தம்.)

சொல்லார்விசைய னிதுமொழியத் துளபமுடியோ னருள்செ
ய்வான்-பல்லாயிரங்கா லுடம்பெனக்கு முனக்குநடுவும்பிறந்
தழிந்த-தெல்லாமறிவன் யானீயுமேதுமறியா யிது வன்றே -
வில்லார்தோளாய்நமக்குள்ள வேறுபாடு விளப்புங்கால்......*

(இ-ள்.) விசேடத்திலேலே விசையனான அருச்சுனராசன் இந்த வகைகேட்க. அதற்குத் துளசிமாலை முடியோனான ஸ்ரீகிருஷ்ண தே வர்கிருபைபண்ணிச் சொல்லுகிறா ரது எட்படியென்றால் பல்லாயி ரமாய் எங்கும் வியாபித்து இருக்கிற தேகங்களெனக் கென்றும் உனக்கென்று முனககுநடுவே தேகம்வந்து அழிந்துபோனது மிப் போதுதேகம்வந்ததும் நானெல்லாமறிவேனென்றும் நீயேதுமறி யாயென்றும் இவையல்லாமல் வில்லைத்தோளிலே தரித்த அருச்சுன ராசனே ! நமக்குள்ளவேறுபாடான விருத்தாந்தத்தைச்சொல்லுகி றேன் கேளென்று சொன்னார் ஸ்ரீகிருஷ்ணதேவரென்றவாறு. (௬)

(கலிவிருத்தம்.)

சாவாதுபிறவாது தனிமுதலா யிருந்தவனு ..............*
னுவாவிவ்வுலகுபடு மழிதுயர்தீர்ப் பதற்காக ........... *
மேவாதுநின்றேயென் மாயையினுல் மெய்போல .....*
வோவாதுபிறந்திடுவ னுகந்தோறு முகந்தோறும்... *

(இ-ள்.) என்னுடைய விருத்தாந்த மெட்படியென்றால் நான்சாகி றதுமில்லைப்பிறக்கிறதுமில்லைத்தனிமுதலாயிருக்கிறவனென்னை ய றியாமல் உலகத்திலே யிருக்கிற பேர் நாலு விதமாய்ப் பிறந்து அழிகிற துயரைத்தீர்க்கிறதற்காகஉலகத்தைச் சேராம லிருந்து எ ன்மாயை யினாலே மெய்போல ஓய்பில்லாமலும் தலங்கடோறு ம்பிறந்திடுவேனென்று சொன்னார் ஸ்ரீகிருஷ்ண தேவரென்றவாறு.

மெய்வகைப்பிற வென்னவேண்டியார் வேண்டியன *
வைவகையுந்தெய்வமா யானே தானளிப்பேனு * *
மிவ்வகைமெயன் செயல்களினை யறிந்தாரிவ்விடம்பையினின் *
றுய்வகையநெறிபெற்று ருயர்ந்தாரை யுரைப்பரிதால் *

(இ-ள்.) இந்தவகை நான்சொன்னதேமெய்யென்று எவரெவர்களுக்கு எத்தத்தெய்வத்தின்பெரிலே யிச்சையோ அந்த விதம்பலவகையானதெய்வங்களை யுண்டாக்கினவனுமென்று மென்செயல்களை யிந்தவகைமெயன்று அறிந்தபேர் ரிடும்பையான சனனமரண வகையைச்சேராம லுலகத்தார்க்கெல்லா முயர்ந்த கதியடைவார்கள் அவர்கள் பெருமையைச் சொல்லுகிறதற்கு அரிதென்றுசொன்னார் ஸ்ரீகிருஷ்ணதேவனென்றவாறு. (அ)

செயலாலுங்கருத்தாலுஞ் செயனுடைங் குணனாலு * *
மியலான்முன்படைத்தேனிப்பொழுது காப்பேனுன் *
மயலாலவ்வினைப்பயனின் மனமவையேன் மற்றதனு *
லயலாயேயிருக்குமெனக் கவையிலவேவறறிவாரார் *

(இ-ள்.) மகிமையுண்டானநான்குகுணத்தை வல்லமையினாலேயு மனதினாலேயு மியலாகமுன்னேயுண்டாக்கினவனுமிப்போதெல்லா வற்றையுங் காக்கிற வனும் நான் ஆசையினாலே காமப் பலத்தி தின்பேரிலேமயலாகியமனத்தை வைக்காததினாலே யென்னையெதுவுஞ்சேராம லிருக்கு மிப்படிச்சேராமலிருக்கறனென்கிறதை அறிகிறபேரரென்றுசொன்னார்ஸ்ரீகிருஷ்ணதேவனென்றவாறு (கூ)

(அறுசீரடியாசிரியவிருத்தம்.)

உய்யும்பரிசிலுணர்ந்தவர்களுணர்ந்தவினைமேலொருப்படுநீ *
செய்யுங்கருமஞ்செய்யாமை தீயகருமமொன்றிலதை *
மெய்யும்பொய்யு மறிவறிய வேண்டும்பொருளு மிவையன்றி *
யெய்யுஞ்சிலைக்கையுரவோய் மற்றிவற்றின்செயலையியம்பக்கேள் *

(இ-ள்.) வினையொழிக்கிறகாரியமறிந்தபேர் செய்தகருமத்தின் பேரிலே நீயு மொருமையாய் மனதை வைத்துச் செய்யென்று முன்னேசெய்தகருமமல்லாத் தீதானகாரியமென் றறிந்து அதைச் செய்யவேண்டாமென்று மெய்யானஞானத்தையும், பொய்யானகருமத்தையும், விசாரித்து வத்துவைநன்று யறிய வேண்டுமென்று

கருமத்தை யெய்கிற விலக்கையுடைய அருச்சுனராசனே! மனதி னுட்செயலைச்சொல்லுகிறேன் கேளென்றுசொன்னார் ஸ்ரீக்கிருஷ்ண தேவரென்றவாறு.] (௰)

ஓடுகின்றபுனல்யாற்றி னோடத்துடனே யோடுதான் ...... *
மாடுநின்றமரமோடத்தானின்றாற்போலவாச்செய்தே .... *
நீடுநின்றமரங்களினைவநிற்கு மியற்கைத்தன்மனத்தி ..... *
லோடுகின்றன் யானேயென்றுணர்வுமிக்கோனுணர்ந்தாற்போல்.

(இ-ள்.) ஆறுபோலேயோடுகிற புலன்வழியாய் மனதோடுகிறபேர்மாட்டுக்குச்சயானமென்று மதுவல்லாமல் மனத்தானது ஆற்றங்கரையில் நின்ற மரம்போல வோடாத யாற்றிலே யோர்மைக்கையிலே உருவாயுயர்த்திருக்கிற மரத்திலேதட்டுப்பட்டு நின்றாற் போலச் செய்துநிற்கு மியற்கையாகமனத்தை நிறுத்திஓடினது மரம் நிறுத்தின அடிநாலிமர மதினாலே யெல்லாந்தானேயென்று அறிவினாலறிந்தபேர் அறிந்தாற்போல நீயுமறியென்று சொன்னார் ஸ்ரீகிருஷ்ணதேவரென்றவாறு. (௰௧)

செயன்மேனின்றவறிவிடையே செயலின்மையுமச்செயல்செய்யா-வியன்மேனின்ற புலன்களிலே யெல்லாவினையு மிசைவதுவும் - மயன்மேவின்றியறிந்தான்யா ரவனேயெல்லா மறிந்தானு-முயன்மேனின்றயோகியுநல்வினைக ளெல்லா முறுவானும் ........................................ *

(இ-ள்.) மனதிற்குமேலாயிருக்கிற அறிவு மனதிலே யடங்கிமனது வழி போகாதென்று மனதிற்குமேலாயிருக்கிற புலன்களிலேயெல்லாவினையுஞ் சேருமென்றும் விகார மேலிடாமல் ஞானத்தையறிந்தபேர் ஆத்மா அவர்களெல்லா மறிந்தவர்களென்று அவர்களேமனதிற்கு மேலாயிருக்கிற யோகிகளென்று மவர்களே நல்லகருமங்களையெல்லாஞ் செய்கிறபேர்களென்றுஞ்சொன்னார்ஸ்ரீகிருஷ்ணதேவரென்றவாறு. (௰௨)

(கலிவிருத்தம்.)

ஆவதென்பது மாசையு மற்றது .............. ..... *
மேவஞானம்வெந் தீயிடை வெந்ததீ ................... *
யாவதாந்தொழி லிவ்வகை யோர்களே .................. *
சாவதும்பிறப் புந்தவிர்ந்தார்கடாம் .................... *

(இ-ள்.) என்னாலே ஆகிறது என்கிறதையு மெனதென்கிறதையுமற்றதே மேலான ஞானமென்றுந் தன்றொழிலை ஞானாக்கினியினாலேசுட்டு வெந்ததியாகரும்பேரோ அப்படிக்கொத்தபேர்சனன மரணத்தைச் சுட்டுச் சாம்பலாக்கினபேரென்று சொன்னார் ஸ்ரீகிருஷ்ணதேவரென்றவாறு. (௰௩)

எண்ணுமின்றி யிகபரன் யானிவை........................ *
பண்ணுகின்றன னென்றுமப் பான்மைபோ.......... *
யுண்ணுமேவினை யுண்டென வோர்கிலார்............. *
நண்ணுகின்ற வினைநலி வுண்ணுமோ...................... *

(இ-ள்.) இகபரமாயென்றுமிருக்கிறவனு மிகபரத்தை யுண்டாக்கினவனும் நானென்கிறதாயறிந்தபேர் மனதிலே வினையையென்று நின்றுபோட்டு வினையுண்டென்று சொல்லார்களப்படிச்செய்திருக்கிறபேர்களை வினையானது நலிபண்ணுமோவென்று சொன்னார் ஸ்ரீகிருஷ்ணதேவரென்றவாறு. (௰௪)

அடங்குகின்ற புலன்களொ டாசைபோய்.................. *
மடங்குகின்ற மனத்தின னவ.............................. *
னுடம்பிதன்பொரு டாலுள தாமெனத்................ *
தொடங்குகின்ற வினைத்தொடக் குண்ணுமே......... *

(இ-ள்.) ஆசைசேர்ந்திருக்கிற புலன்களுடனே மனது சேர்ந்திருக்கிறபேர்களுக்கு அதினாலே தேகமுண்டாம்தேகந்தனதென்றெண்ணிவினைதொடர்ந்திருக்கிற பேர்களுக்கு வினையென்கிற தொடக்குக் கெட்டுப்போகாதென்று சொன்னார் ஸ்ரீகிருஷ்ணதேவரென்றவாறு.

பெற்றதேகோடல் வைந்துமுன்பேறிழ......... *
வுற்றபோழ்திலொத் தொன்றுமொருவர்பாற்.... *
செற்றமேதுமிலாதவன் செய்வினைக்.................. *
குற்றமோவவற் றின்றிறங்கூறக்கேள்................. *

(இ-ள்.) தேகமுண்டானதுகொண்டு-ஐம்புலாதிகளின் விவரத்தைநன்றாக முன்னேதெரிந்த ஞானவானகளவற்றிலொன்றிலேயுஞ்சேருகிறதுமில்லை அவர்களுக்கு மொருவரிடத்திலேயும், சினேகமுமில்லை- அப்படிக்கொத்தபேர் செய்கிறவினை குற்றமாமோவெ

ன்றுமதினுடையவிவரத்தை யின்னஞ்சொல்லுகிறேன் - கேளென்
றுஞ் சொன்னார் ஸ்ரீகிஷ்ணதேவனென்றவாறு. (௰௬)

விட்டுமுற்றும் வினைகள்வினைப்பயத் ............ *
திட்டமற்றிவை தன்னிலெழுங்கருத் ............ *
தொட்டநின்றவன் யாகம்பொருட்டுறப் ............ *
பட்டகாமம்பலத்துடன் மாயுமால் ............ *

(இ-ள்.) கருமங்களையெல்லாம்விட்டுக் கருமபயத்தினுடையநடத்தையு மற்றுலோகத்திலேயுண்டான கருவைத்தொட்டவஸ்துவே தாமாகவெண்ணி யிருக்கிற ஞானவான் செய்கின்ற கருமம்பலத்துடனேமாயுமென்றுசொன்னார் ஸ்ரீகிருஷ்ணதேவனென்றவாறு. (௰௭)

பிரமநேயப்பிரமநெருப்பிடை ............ *
பிரமமாகியமந்திரந்தன்னினற் ............ *
பிரமமாயசருவுடன்பெய்துபின் ............ *
பிரயமேயடை வாருளர்பின்னுங்கேள் ............ *

(இ-ள்.) நேசப்பிரமமானபிரமாக்கினியிலே நேசப்பிரமமாயிருக்கிற மந்திரத்தினாலே பிரமம் மாயா சமித்தானதேகத்தை யாகுதிபண்ணிப்பின்புபிரமத்தையடைகிறபேருண்டு இதுவல்லாமல் இன்னம்பிரமத்தையடைகிறபேர் செய்கிறவிதத்தைச் சொல்லுகிறேன் கேளென்றுசொன்னார் ஸ்ரீகிருஷ்ணதேவனென்றவாறு. (௰௮)

அறிவதாகியவங்கியிலேகொள ............ *
வறிவையேசிலராகுதிபண்ணுவர் ............ *
செறிவதாஞ்சமதத்தியிடையோசில ............ *
பொறியதாயபுலன்களையீவர்கள் ............ *

(இ-ள்.) அறிவாகிய அக்கினியிலே சேரத்தக்கதாக அறிவைத்தானே சிலபேர ராகுதி பண்ணுவார்களென்றுஞ் சமத்தினாலேதாமுண்டாக்கின அக்கினியிலே அறிவைத் தெறிவதுபோலச் சிலபேர் ஐம்புலன்களை யீவார்களென்றுஞ் சொன்னார் ஸ்ரீகிருஷ்ணதேவனென்றவாறு. (௰௯)

புத்தியாப்பொறி யைந்தையும்போக்கவே ...... *
யித்தியபத்தழல் வாயிடுவார்சில ............ *

ரிந்திரியத்தொழில் யாவையுஞான்றெய ............... *
சிந்தியோககவெந் தீயிடுவார்சிலர்............. *

(இ-ள்.) நடுவாயிருந்து- ஐந்துபொறியையும் - இந்திரியாக்கி னிவாயிலிடுகிறபேர்சிலபேரொன்றுமிந்திரியத்தொழிலெல்லாவற்றை யும், ஞானமென்கிறநெய்வார்த்து யோகத்தினாலே வெந்த அக்கினி யிலேயிடுகிறபேர் சிலபேரென்றுஞ்சொன்னார் ஸ்ரீகிருஷ்ண தேவ ரொன்றவாறு. (உ௰)

( அறுசீரடியாசிரியவிருத்தம். )

தேடியபொருள்களாலுஞ் செயலறிதவங்களாலும்...... *
நாடியயோகத்தாலு நவின்மறைஞானத்தாலும் ........ *
கூடியபரிசில்வேள்வி குலவுவாரனேகரிங்குப் .............. *
பாடியவிவர்களன்றி யிவர்சிலபரிசுங்கேளாய் ........... *

(இ-ள்.) சம்பாதித்ததிரவியங்களினாலேயும், வல்லமையினால் செ ய்ததவங்களாலேயும், பிரமத்தைநாடிச்செய்தயோகத்தினாலேயுஞ், சொல்லுகின்ற நால்வேதஞானத்தினாலேயும், பிரமத்தைக் கூடுகிறநி மித்தியம்- யாகஞ்செய்கின்ற பேரனேகம் பேருண் டென்று மிப் போதுசொன்ன விவரமல்லாம லின்னம்பிரமத்தைச் சேருகின்றவி வரமுண்டு- அதுவுஞ்சொல்லுகிறேன் கேளென்று சொன்னார் ஸ்ரீகி ருஷ்ணதேவரொன்றவாறு. (உக)

(கொச்சககலிப்பா)

மிகமேநின்றபிராணனையங் கபானனிடைமேயபுகவிட்டுள்............ *
ளகமேநின்றவபானனையிப் பிராணனிடையாகுதியண்ணி ........... *
யிகமேயிரண்டுமயக்கமற விருப்பார்சிலர்மற்றிவர்கள்காண் .......... *
டகமேநின்றபிராணயா மத்தேதலைநின்றவரென்பார் .................. *

(இ-ள்.) முகத்திலே யிருக்கிறபிராணனை அபான னிடத்திலே யேகவிட்டுமனதுக்கு அதிசமாயிருக்கிறஅபானனையிந்தப் பிராண னிடத்திலே யாகுதிபண்ணி யிகத்திலேயிந்த இரண்டு மயக்கமுமற த்தக்கதாக விருக்கிறபேர்சிலபேருண்டு பின்னையுமிப்படிக்கொத்த பேர்தேகத்துடனேயிருந்தாலும், பிராணயாமத்திலேமேலாயிருக்கி றபேரென்பார்கள் என்றுசொன்னார் ஸ்ரீகிருஷ்ணதேவரொன்றவாறு.

(கலிவிருத்தம்.)

இன்னவர்கள்யாவர்களும் யாகமறிவாரோ ............... *
யன்னவர்களையறனிற்றிகழ்மையினைகளைறூர்............ *

சொன்னபரிசாலிவை தொடங்கிமுடியாதார்க் ........ *
கென்னன்பரிசாலுமிக மில்லைபாமுண்டோ ........ , ... *

(இ-ள்.) இப்படிக்கொத்த பேரெல்லாரும், பிரமத்தைச்சேருகிற விவரத்தையறிவார்களென்றும், இது வல்லாமலிவர்களை திமையை நீங்க அறுத்திருக்கிறபேர்களென்றும், நான்சொன்னபிரகாரமித்தவகைசெய்துமுடியாதபேர் எந்தவகைசெய்தாலு மவர்களுக்கு இகபரமிரண்டுமில்லையென்றுசொன்னார் ஸ்ரீகிருஷ்ணதேவரென்றவாறு.௨௩

( அறுசீரடியாசிரியவிருத்தம். )

இப்படியுரைத்த விந்த யாகங்களியாவுமுன்னுஞ் ......... *
செப்பியபிரமத்தின்கண் செனித்தனஞ்செய் யுங்காலை .... *
யொப்பரிதாயபுத்தி கருமத்தினுளவாமுள்ள ........... *
தப்படியறிந்துநீயும் பாவத்தினகலநிற்பாய்......... *

(இ-ள்.) இந்தவிதஞ்சொல்லுகின்றயாகங்களெல்லா முன்னேசொன்னபிரமத்தினுடையகண்ணிலே பிறந்தனவென்று, மதுவல்லாமல் ஒப்புக்கு அரிதான புத்தி கருமத்துக்குள்ளாவாமென்றும், இதுவுண்டான காரியமென்று நீயுமறிந்து பாவத்துக்கு அகலநில்லென்று சொன்னார் ஸ்ரீகிருஷ்ணதேவரென்றவாறு. (௨௪)

தொன்மையாகமுன்சொன்னதொகைக்கெல்லாம் .... *
நன்மையாமிசற் பாலதுஞானமே ......... ................ *
பின்மையாலுறுத் தாங்கதுபேணிடுந்.................. *
தன்மையாதெனி லாங்கதுசாற்றுவாம் ..... ................ *

(இ-ள்.) என்போலாகிறதற்கு விவரமாய் முன்னே சொன்னதொகைக்கெல்லாம் நன்மையான தென்னவென்றால் களங்க மில்லாத அமிர்தமாயிருக்கின்றது ஞானமென்றும், இது வல்லாமல் பின்னையுந் தேகம் நானாகத்தானே செய்கின்றவகை யெப்படியென்றாலதுவுஞ் சொல்லுகிறேன். கேளென்றுசொன்னார் ஸ்ரீகிருஷ்ணதேவர்.--௭-று.

( கலிவிருத்தம். )

விழியாமெனவறிவாலறி வுறுவார்விழிவசமே .. ......... *
வழிபாடுசெய்தவர்சேவடி மலர்சூடிடவவர்தா ...... .... *
மொழியாதவர்களும்யாவையு மொருநீபனதிடையே. *
யழியாவகையதுவாவதோ ரறிவேயருளுவரால்..... .... *

(இ-ள்.) அறிவின்கண்வசமாய் வழிபாடுசெய்தவர்கள் - சேவடியி
லேமலர்சூடினபேர்கள் தளையிலாத நீச்சராகிலும்; அவர்களுக்கு
வழிபோலே அறிவினாலே அறிவுண்டாமென்றுமான படியினாலே
எல்லாவற்றையும், நீ விட்டுஉன்னிடத்திலே அழியாவகையாயிருக்கி
றபேரறிவை யறியென்றுசொன்னார் ஸ்ரீகிருஷ்ணதேவ ரென்றவாறு

அதனால்வருபயன்யாதெனி லழிபாதகமுதலாம் ....... *
விதனுடரும்வினையாழியி னிடையேவிழுகுறுவார்.... *
இதனுங்கயவறிவாகிய சிதையாமிதனையினு ...... ..... ... *
விதனும்வகைகளாசேர்வர்களெங்ஙனே யெனிலதுகேள்.

(இ-ள்.) தயவுஞ்சாதவீகமுமில்லாம லோகத்திலேயிருக்கிறபேர்
களுக்கு அதினாலேவருகிறபயனென்னவென்றால்-பழிபாதகமுதலா
ன வெல்லாமுண்டாம் வினையென்கிறசமுத்திரத்திலே விழுந்து அழு
ந்திப்போவார்களது எப்படியென்றால்- அதிதனையிருக்கிறதறகுஅறி
வாகியவாளினாலே வினை யெல்லா வற்றையுஞ் சங்கரித்தால் எனைப்
போலாகிறவகையாய்ச் சனாசேருவார்களது எப்படியென்றால் அது
வுஞ்சொல்லுகிறேன்கேளென்றுசொன்னார் ஸ்ரீகிருஷ்ணதேவர்.எ-று

எறியாவெரிவருகானிடை யெரியாதனவெவைதா.....*
னறியாவறிவுடையீர்களு மறிவீரதுவதுபோற் ......*
குறியால்வருகுணஞானமே யனலேகொளுவிடுமேற் . *
பொறியால்வருவினையாமிவைபொடியாமிதுபொருளோ *

(இ-ள்.) காடானது வெந்துபோமென் றறியாமல் காட்டுமரந்தா
னேயிழைஞ்சு படுதிப்பட்டுக் காடுவெந்ததுபோல மனதினாலேவரு
கிறதையுங் குணத்தினால்வருகிறதையும், மெய்ஞ்ஞான மென்கிற அ
னல்கொளுத்திப் போடுமென்று அறிவுடையபே ரறிவார்க ளென்
றும், அது வல்லாமல் பொறியினாலே வருகிறவினைப் பொடியாகிற
து ஒருபொருளோ வென்றுஞ்சொன்னார் ஸ்ரீகிஷ்ருணதேவர். எ-றும்.

(கலித்துறை.)

தீதற்பாலாம்வினைபுரிவோருஞ் சிலநாளி ............... *
லேதற்பாலாமறிவறிதக்கோயாவொன்னி .......... ........ *
லோதற்பாலார் பாலுமிவ்வுண்மைப்பொருள்யாலுங்... *
காதற்பாலாளாம்புலன்வென்றரிவர்கண்டாய்..... . .... *

(இ-ள்,) கருமத்தைச்செய்கிறபேர் சிலநாளையிலே கருமத்தைப் போலத் திதையடைவார்களறிவைநன்றாகவறிந்தபெரியோர்களா ரென்றால் ஞானத்தைச்சொல்லுகிற பெரியோர்க ளிடத்திலேயு, முண்மையான வஸ்த்துவினிடத்திலேயுங், காதலுடனே மனதுவைத்த பேர்களவர்களே ஐம்புலனையும்வென்ற பேர்களென்றுசொன்னார் ஸ்ரீ கிருஷ்ணதேவரென்றவாறு. (உகூ)

சொல்லருஞானப்பொருடெரியாதுசொன்னாலு.*
மல்லவிதாமென்றையுறுவார்களன்பில்லா .... . .. *
ரில்லவராவரிகபரமில்லா ரிவர்கண்டாய் .. ... .....*
தொல்லறிவாலே யையுறவற்றார் துறவுற்றார்......*

(இ-ள்.) கருமிகளுக்குச் சொல்லுதற் கரிதான ஞானத்தி னுட் பொருள்தெரியாது அல்லவென்று ஞானத்தைஎத்தனைசொன்னாலும்,இதுவரமல்லவென்று சந்தோஷிப்படுவார்கள் சொல்லுகிறஞான த்தினிடத்திலே யன்பில்லாதபேரவர்களுக்குச் சுகயிகபரத்திலுமில் லைபோறிவினாலே சந்தேகமற்றிருக்கிறபேர் துறவான ஞானத்தைத் யறிந்தபேர்களென்று சொன்னார் ஸ்ரீகிருஷ்ணதேவ ரென்றவாறு.

( அறுசீரடியாசிரியவிருத்தம். )

அறியாமையிலேபிறந்தன்ற னகத்தேவளர்ந்தேவையுறவை .... *
நெறியாநின்றஞானமெனும் வாளால்வெட்டியறநீக்கிக் ..... .. *
குறியானுன்றன்வினைவிளைத்துக் கொள்வாயென்றுங்கூறினான். ... *
உறியார்வெண்ணெய்தொட்டுண்டிவ்வுலகமுண்டபெருவாயான் *

(இ-ள்.) என்னையறியாமையினாலே யிதுவணாக்கும், உலகத்திலே யனேகசனனமெடுத்தாய் இனி யுன்னுடைய மனதிலேவளர்ந்த சந் தேகத்தைச் செவ்வையாயிருக்கின்ற ஞானவாளினாலே நீக்கியறவெ ட்டிப்போட்டுக்குறிப்பாய்என்பேரிலேமனதைவைத்துஉன்னுடை யகருமத்தைச் செய்துகொடு வாவென்று வெண்ணெயுறிதாவியெ ட்டியுண்டுபூலோலத்லையு முண்ட பெருவாயனான ஸ்ரீகிருஷ்ணதே வர்சொன்னாரென்றவாறு. (ருக)

நான்காவது-சம்பிரதாய- அத்தியாம் - முற்றும்-

ஆக அத்தியாம்-ச-இ- கூடிய செய்யுள். (ரசஎ-)

ஐந்தாவது.

# சந்நியாசயோக

## அத்தியாயம்.

(கலிவிருத்தம்.)

பூத்தருளியொருமலராற் புவனமவை யீரேழுங்...... *
காத்தருளிவிளையாடிக் கடையொடுக்கிக்கண்வளரும் *
தீத்தன்மறைமுறைமொழிந்த திருவாக்குத்தெரியாது *
பார்த்தனவனெதிர்நின்று சிலபின்னும் பகரலுற்றான்... *

(இ-ள்.) திருவுந்தித்தாமரைப் பூவொன்றினாலே ஆதியிலே பதினாலுலோகத்தையுஞ் சிருஷ்டித்தருளி நடுவிலே அவைசக்காத்தருளித் தாமுங்கூட நின்று திருவிளையாடலாடி அந்தத்திலேயொடுக்கி யோகநித்திரை செய்தருளுகிற சுவாமி வேதவிதியாகச்சொன்ன திருவாக்குத்தெரியாமல் அந்தச்சுவாமிமுன்னே நின்று பின்னையும் அருச்சுனன் சிலவசனஞ் சொல்லுகிறானென்றவாறு. ❊ கடையென்றதனாலே ஆதிமத்தியம்வந்த தருத்தாபத்தி- ஒடுக்குதலாவது திருவயிற்றிலேயடக்குதல். (க)

(கலிவிருத்தம்.)

கருமநன்றெனவுமெதிர் கழறுகின்றனைதுறவை.... *
யருமருந்தெனமொழிதி யவையிரண்டினுமமல... *
ஒருமையென்றுயர்தல்லவை யுரைசெயென்றனன்விசைய.
னிருமையின்பரிசு மிதுவெனவியம்பிடு மிறைவன்... *

(இ-ள்.) கருமத்தைநல்லதென்றும் முன்னே சொல்லுகிறீர் ஞானத்தைஅரிதான அமிர்த சஞ்சீவி யென்றும் பின்னே சொல்லுகிறீர் நின்மலமானசுவாமி அந்தக்கர்மஞானமென்றவிரண்டிலும் ஒன்றென்று அதிகமானதெது அதைச்சொல்லுமென்றான் அருச்சுனன் அதற்குச்சுவாமி யிரண்டின்விதமு மிதுவென்று சொல்லுவானென்றவாறு. ❊ மருந்தெனவுமென்றும்மை வருவிக்க. (உ)

துறவுநன்றருவினைசெய் தொழிலுநன்றி வைதுணியி... ...*
லறவுநன்றருவினைகள் விடலிலங் கலைவ முயல்கை ... ... ... ...*
பெறவிலின்பமுமிழவினிடரு மொன்றிலர்பெரிது.......... *
துறவினின்றவர்பிறர்கருமியரினின்றிடுதொழிலர்... ... ......... *

(இ-ள்.) ஞானமும் நல்லது அரியகாரியத்தைச் செய்கிற கரும
மும் நல்லது இந்தஇரண்டிலும் அதிகமேதென்று சொல்லத் துணி
ந்தால் அரியகருமங்கள் மெத்தவும்நல்லது அந்தக்கர்மங்களை விடு
கிறதிலுஞ் செய்கிறது நல்லது பலன்பெறுதலிலே சந்தோஷமும்
இழக்கிறதிலே துக்கமும் இவைகளொன்றுமில்லாதகர்மிகளே பெரிய
ஞானத்தில் அசையாமல் நின்றவர் இப்படி இல்லாதவர்களான ஞானி
களே துக்கத்தி லசையாமல் நிற்கிறகருமிகளென்றவாறு. ❈ பிறர்க
ளாலது பெறுதலிலே சந்தோஷமும் இழக்கிறதிலே துக்கமுமுள்ள
ஞானிகள் பெரிய கருமியென்று மறிவது. (௨)

பெருமையொன்றிய துறவுகருமமென் றிருமையினு.... .... *
மருமையொன்றினை யறிஞரவை யிரண்டையுமுடைய . . .... *
ரிருமையென்றறியு மவரிவையறிந்தில ரியல்பி... ... ........ *
லொருமையென்றுணரு மவரிவை யுணர்ந்தவருணர்வில்...... *

(இ-ள்.) பெருமைபொருந்திய ஞானம்கர்ம்ம மென்ற இரண்டி
லும் ஒன்றைபருமையாக அறிந்தவர்களே அந்தவிரண்டையுமுடை
யவர்கள் இரண்டையுமொன்றென் றறியாம லிரண்டென் றறிகிறவர்
களே இரண்டையுமறிய அறிவில்லாதவர்களிந்த இரண்டும்ஒருசுபா
வத்திலே அறிவிலொன்றென் றறிகிறவர்களே யிரண்டையு மறிந்தவ
ர்களென்றவாறு. ❈ துறவாவதுவிடுதல்- இந்த விடுதலை ஞானமென்
றுரைபெறுதுவார்மென்னில் அறம்பொருளினபமான கர்மமூ
ன்றையும் விட்டதே ஞானமானபடியாலே துறவை ஞானமென்றுரை
யெழுதினது இரண்டாகவறிதலினாலே கர்மபந்தப்படுவனென்பது
இயல்பினொருமை யென்றுணருமவரென்பது கர்மானுபவத்தையு
ம், ஞானானுபவத்தையும், முன்னிலாராய்ந்து மனதிற் கொண்டு ட்
கொண்டதுசுபாவம் இந்தச் சுபாவத்திலே இரண்டனுபவத்தையு
மொன்றாகக்கண்டு கொண்டபோது இரண்டனுபவமுமொன்றான
திலே ஞானகருமமென்ற விரண்டும் ஒன்றென்று கொண்டறிகிற
வர்களென்பது இதனாலே யிரண்டென்றறிகிறவர்கள் அந்த விரு

ண்டையுமே அறியார்களென்பது ஒன்ருக அறிந்தவன் ஞானியெ ம்பதருத்தாபத்ரு. (௪)

வினைப்பயனை விடவதனில் வினைதருநற் றுறவுகோ...... *
டனையடைந்திடுவ ரெவர்களு மதன்செயலெனைத்தெனி ...... *
றினைவருந் தகைய பொருணெறியறிந்தவர்க ளெனறி...... *
யனையதந் தொழில் புரியுமவர்க ளெம்பதனையறி...... *

(இ-ள்.) பலனையிச்சியாத கருமத்தைச்செய்ய அந்தக்கருமபு லத்தில் ஞானம்விளையும் அந்தஞானத்தைக்கொண்டு எவர்களும் எ னையேச்சேருவார்கள் அந்தக்கருமத்தின் செய்கையேதென்றால் நினை க்க அரிதான சுபாவமுள்ள பொருளின்மார்க்கத்தை அறிந்தவர்களு டையவழியையொப்பான தங்கள்கருமத்தைச்செய்கிறவர்களென்கிற தை நீயறியென்றவாறு. ※ என்னையடைதலாவது-பிரமத்தையடை வதென்பது இந்தப்பிரமத்தையடைகிறது இவனுக்குண்டு இவனு க்கில்லையென்பதில்லை எவர்களுங் கருமநிஷ்டராகிற பிரமத்தை யடைவார்கள். அந்தக்கருமச்செய்கையேதென்னிற் பிரமத்தை யடை கிறவர்கள்வழியே கருமம் நினைக்க அரிதானசுபாவமுள்ள பொருளா வது பிரமம் நினைவருந்தகைய பொருணெறியறிந்திடுதலரி தனைய தந்தொழில் புரியுமவரறிந்திடுவாரறியென்று பாடமோதில் பிரம மார்க்கத்தையறிதலரிது அதையறிவதாமென்னில் அதையொப்பா ன தங்களுடைய கருமத்தைச்செய்கிறவர்க ளறிவர் அதைநீயறியென் றுரைகொள்ளும். (௫)

கவைதருங்குணமுமிகு களிதரும்புலனு மெனு...... *
மிவைகடந்தவர்களெனையறி வினின் நிசையுமவர் ...... *
நவைதருந் தொழில் செயினுநலிவதெங்க வனையவை *
யவையுகந்தவர்கள் வினையவைதுறந் தடைகுவதென்...... *

(இ-ள்.) கருமத்தைத்தரப்பட்ட குணமுமிகுந்த சுகத்தைத் தரப் பட்ட விஷயமுமென்று சொல்லப்பட்ட இதைக் கடந்தவர்க ளெ ன்னையறிவிலே நின்று பொருந்தப்பட்டவர்க ளிவர்கள்குற்றத்தைத் தரப்பட்ட கருமத்தைச்செய்தாலும் அந்தக்கருமம் அவர்களை எங் கேவருத்தப்படுத்தும் வருத்தமாட்டாது தானேகெடும் அந்தக்க ருமத்தை இச்சிப்பவர்கள் அந்தக்கருமத்தினாலே விளைகிறபலனைவி ட்டுப் பெறுவதென்ன அந்தப்பலனையே பெறுவா ரென்றவாறு. ※

குணத்தையும் விஷயத்தையுங் கடந்தவர்கள் நிருமலராகையாலே அவர்களுக்க நுட்பமான அழுக்கடையாது இச்சித்தவர்கள் குணவிஷயங்களுடனே கூடினவராகையாலே பலனாகிய அழுக்கடையுமென்பது.— (சு)

(அறுசீரடியாசிரியவிருத்தம்.)

காணுங்கேட்குமுறுமுகக்குங் காலானடக்குங் கண்வளரும்........*
பேணுந்திறக்குமூச்சுவிடும் பேசும்விழிக்குஞ் சிம்பிளிக்கும்... *
பூணுமின்னும்பலவெனினும் புலன்சேர்பொறியின் புணர்ப்பென்
றே-தூணுங்கிரியுமென்வென்றுத் துளங்கான்விளங்குந் துணிவுடை
யோன்.................*

(இ-ள்.) கண்பார்க்கும் காதுகேட்கும் தோல்பரிசிக்கும் மூக்கு முகக்கும், கால்நடக்கும், நித்திரைபண்ணும் கூடும்விடு மூச்சுவிடும், பேசும் கண்விழிக்கும் கண்மூடும். இப்படித்தரிக்கப்பட்ட இந்தவிதங்களனேகமாகிலும் விஷயங்களைச்சேர்ந்த விந்திரியங்களின் அனுபவமென்றே நிச்சயமாக இவையெல்லாம் தான்பண்ணினவனல்லவென்றும் தூணைப்போலும் மலையைப்போலும் என்றைக்குங் கலங்காத அறிவுவிளங்கப்பட்ட துணிவையுடையவனென்றவாறு.※ இவையெல்லாம் தான்பண்ணினவனென்றுந் தன் அனுபவமென்றும் அறிந்தவன் இரும்பைப்போலும் அணுவைப்போலுந் தடுமாறுவனென்ற கருத்தாயத்து.— தானல்லவென்று விளங்காதவன் றுளங்குவனென்றும். (எ)

யாரும்வினைகளெண்பொருட்டார் வியற்றிப் பயனை யிகழ்
வார்கள் - சேரும்வினைகள்வற்றோடு சேராரோவத்திரனு
ளைக்கிற் - சாருமுடனே பிறந்தெழினுந் தண்டாமரையி
ன்றகையிலையு - நீருமெனலா யிருப்பரது நின்றாற் கென்
றுதிகழாதால்...............*

(இ-ள்.) ஆராவது மென்னிமித்தமாகக் கருமங்களைச்செய்து பிரயோசனத்தைவிட்டவர்கள் தங்களைச்சேரப்பட்ட கருமங்களோடுந் தாங்கள்சேரார்கள் அந்தக்கருமங்களோடு சேராதவர்களுடனே அந்தக்கருமங்கள் சேர்ந்தவிதத்தைச் சொல்லில் சார்பாகப்பட்ட தண்ணீருடனே கூடப்பிறந்தெழும்பினாலுங் குளிர்ந்ததாமரையினி

டமான இலையும் நீரும்ஒன்றோடொன்று கூடினாலும் ஒட்டாதது போலவிருப்பார்கள். அப்படி ஒட்டாமல் நின்றவர்களுக்கு எந்நைக்கும் அந்தக்கருமம் நடவாதென்றவாறு. ✲ நடவாதாவது அவர்களுடனே கூடிநடவாது அப்போதே யழியுமென்பது, ஒழினுமென்றவும்மை-சிறப்பும்மை நீரிலேபிறந்து, நீரிலேவளர்ந்து - நீரிலேமூழ்கி யெல்லாம் நீராலே விளங்கினாலு மந்தநீரும், இலையுங் கூடினாலும்-ஒட்டாததினாலே சிறப்பும்மை. (௮)

(கொச்சகக்கலிப்பா.)

உடலாயபுலனானு மனனானுமுடப்பானு .................... ✲
நடமாகுமெனமுயல்வார் நாடோறுமுயன்றாலும் ..... ✲
விடமாகும்வல்வினையே வீடாகும்வலைப்பயனைக் .... . ✲
கடனாகுமெனமுயல்வானவற்றாலேகட்டுண்பான் ...... ✲

(இ-ள்.) கருமத்துக்குடனாகிய விஷயத்தினாலும், மனதினாலும், உடம்பினாலும், பலசங்கம - நஷ்டமாகுமென்று கருமத்தைச்செய்வார்கள்-நினைந்தினமுஞ் செய்தாலும், விஷயத்தை யொப்பாக வெறுக்கப்பட்ட வலுமையான கருமமே மோக்ஷமாகும், கருமப்பலனைத்தனக்கு அனுபவிக்கக்கடனுமென்றிச்சித்துச்செய்கிறவன் அந்தக் கருமத்தாலே கட்டுண்பானென்றவாறு. ✲ பலசங்க நஷ்டமாவது கருமபலத்துடனே கூட்டம் நாசமென்பது பலத்துடனேகூடின சித்தத்துக்குப்பலசங்கம்-நஷ்டமாகவே சித்தசுத்தியாமென்றறிவது பலனை விஷமாக நினைத்துச்செய்கின்ற கருமிக்கு அந்தக்கருமமே மோக்ஷமாம்வேறில்லை கருமப்பலனை அமிர்தம்போல அனுபவிக்கக் கடனுமென்றிச்சித்தவன் கருமபந்தப்படுவனென்பது லக்ஷித்தால் அந்த அமிர்தம்-ஆகுபெயர், (௯)

(கலிவிருத்தம்.)

அன்பவினையாகுபயன் விட்டமைதியாலே ...... ✲
யொன்பதுபொய்வாயிலமை யூரதனிலுள்ளே ✲
இன்பவுருவாயினி திருப்பனியல்பாயே ......... ✲
முன்பயில்வதாம்வினைசெய் யென்முயல்வியேறல்.

(இ-ள்.) தோழா! கருமத்தாலுண்டாகிறபிரயோசனத்தைவிட்டு-அடங்கி யமைந்தவிவேக சித்தத்தினாலே ஒன்பது பொய்வாசலமைந்த ஊரானதேகம்-அந்தத்தேகத்தினுள்ளே சுக சொரூபமாய்

ச் சுகமாயிருப்பான் கருமமானது சுபாவமாகவே அநாதியேவந்த பழக்கமாம், நான் கருமத்தைச் செய்தேன் செய்வேனென்றவாறு. ※ இதன்பொழிப்புரை- இந்திரியஞ்செயமுண்டானவன் எப்படியிருப்பானென்னில்- அடங்கியமைந்த விவேகசித்தத்தினாலே கருமத்தாலுண்டாகின்ற பிரயோசனத்தைவிட்டுத் தான்கருமப்பண்ணேன் பண்ணுவேனென் கருமமானது - நவத்துவாரபுரமான தேகத்துக்குச்சுபாவமாக அநாதியேவந்த பழக்கமென்று அந்தத்தேகத்துள்ளே சுகசொரூபமாய்ச் சுகமாயிருப்பனென்பது இதனையமைந்தயாலே வினையாகுபயன்விட்டு வினைசெய்யேன் முயல்வேனென்பது பொய்வாயிலமையூரியல்பாமே முன்பயில்வதா மதனினுள்ளேயின்பவுருவாயினிதிருப்பனெனமாறுக. (௰)

இவ்வகையினுயசெயல் யாவுமியல்பேகா............ *
ணவ்வகையமாயையதனாலறிவுறுதே.......... ......*
செய்வகையன்யானெனது செய்கையிவையென்றே... *
பொய்வகையினாலழிவரே புலனிலாதார் ... ...............*

(இ-ள்) இந்தவிதத்தினாலுண்டாகிய கருமங்களெல்லாஞ்- சுபாவமேகண்டாய் உருச்சுரு அந்தவிதமான மாயையினால் அறியமாட்டாமல் கருமங்களைச்செய்தவன் நான் இந்தக்கருமங்கள் நான்செய்தேனென்று நிச்சயமாகப் பொய்விதத்தினாலே நாசமாகிறவனையறிவில்லாதானென்றவாறு. ※ என்றேயென்ற ஏகாரமும் இயல்பேயென்ற ஏகாரமும், உருதேயென்ற ஏகாரமும், அழிவரேயென்ற ஏகாரமும், தேற்றேகாரம், அறியமாட்டாமலாவது - கருமங்களைச் சுபாவமென்றறிய மாயாமயக்கத்தினாலே மாட்டாமலே நான்செய்தேன் என்கருமமென்றே பொய்யான அகங்கார சுதந்தரவிதத்தினாலே யறிவில்லாதானாசமடைகிறதேயல்லாமல் இருக்கமாட்டுவானுமாட்டானென்பது- இயல்பேயாவது- சுபாவமே யல்லாமல் வேறல்லவென்பது அறிவுறுதேயாவது- அறியமாட்டாமலே யல்லாமல் அறிந்ததல்லவென்பது என்றேயாவது நான்செய்தேன்கருமமென்றேயெல்லாம் சுபாவமாகச்செய்யப்பட்டது சுபாவமாகவுள்ள கருமமென்றெண்ணமல்லென்பது- அழிவதேயாவது அழிவதல்லாமலிருப்பதில்லையென்பது அறிவுள்ளவர்கள் மாயையை நீங்கிச் சுபாவமென்றறிந்து தன்செயலுஞ் சுதந்திரமும், மற்றும் அழியாமலிருப்பமென்பதருத்தாபத்தி. (௰௧)

(கலிவிருத்தம்.)

அறிவினாலறிவிலாத வையெலாமழியவே.........*
செறிவினாரறிவுவா னிரவிபோற்றிகழுமா......*
னெறியினிலிதனினேர் நிலையுமாயிதனிலோர்...*
பிறிதிலாவகையினார் பிறவியானவையிலார்... ...*

(இ-ள்) ஞானத்தினாலே-அஞ்ஞானமெல்லாம் நாசமாகவேகண்டானவர்கள் ஞானமானது ஆகாசத்திலேவிளங்குகிற சூரியனைப்போலப்பிரகாசிக்கும் இந்தமார்க்கத்தினாலே ஞானத்திலேநிலையையும் நிஷ்டையையுமாகி இந்தஞானாத்மாவானவைதந்நியனிடத்திலேவேறொன்றில்லாதவிதத்தினாலே பரவசத்தை யுடையவர்கள் இனிமேற்பிறக்கிறதானசனனமில்லாதவர்க ளென்றவாறு. ❁ வேறொன்றவனு அஞ்ஞானத்திலே மயங்கி ஆங்காரத்தை யடைந்து மறுபடிபிறக்கிறது.

(அறுசீரடியாசிரியவிருத்தம்.)

நன்றேஞானம்வருமறையோ னாட்டினாயினிறைச்சியினைத்.........*
தின்றேயுழலுமவன்யானே யாவேனறிந்தநிறத்தெல்லா ..........*
மன்றேயென்றதாமென்று தறிவாய்நின்றவனையெங்கும்..........*
ஒன்றேயாகக்கண்டிருப்பா னுடம்போடிருந்தேயுடப்பறப்பான்.*

(இ-ள்.) நன்மையுள்ளஞானம் வரப்பட்டபிராமணன் நாட்டிலே நாயினிறைச்சியைத் தின்றுசுழமாறுகின்றநீசன் ஆனைபசு இப்படியென்றறிந்தவிதத்திலெல்லாம் ஏற்றக்குறைச்சலினாலே அல்லவென்றுமல்ஆமென்றுமல்ஆத்துமாவாய் நின்று அந்தக்கருமங்க ளெக்கும் ஒன்றாகவே கண்டிருக்கிறவன் அந்தவுடம்போடே யிருந்த சிரேஷ்டதேகத்தை இனிமேல் வாராம லறுப்பா னென்றவாறு. ❁ இப்படியெல்லாரிடத்திலும் ஆத்மாவொன்றாகக் கருமங்களு மொன்றாக இசையல்லவென்றுமல் ஆமென்றுமல் சமமாகக் கண்டிருக்கிறவனிந்தத்தேகத்துடனே இந்தப்பிறவியை யொழிப்பானென்பது.(௰௩)

இகமேநிகழும்புலன்விளைந்த வின்பமெல்லாமறவிகழ்ந்துள்......*
ளகமேநிறையுப்பேரின்ப மடைந்தார்க்கென்றுமழியாதாற் ...*
புகமெய்யென்றபுலன் பொறிகள் புணர்ந்தேயின்பமென்றுந் ...*
தகமேவிடார்மெனவுமவை தக்கோரொன்றுஞ்சாரராரால் ..........*

(இ-ன்.) வெளியிலேவிளங்கும் விஷயங்களிலே விளைந்தசிற்

றின்பமெல்லா மறவிட்டு- உள்ளே நிறைபட்டபட்ட பேரின்பத்தையடைந்தவர்களுக்கு என்றைக்குமந்தப் பேரின்ப மழியாதபடியே புதுத அனுபவிக்கின்ற விஷயங்க ளிந்திரியங்களைப் பொருந்திச் சுகமாமென்றும், அனுபவத்துக்குத் தக்கதாகவேயிட்ட துக்கமாமென்றும். அவைகளை ஞானத்துக்குத் தக்கவர்களான பிரமஞானிகளென்றைக்குஞ் சேரார்களென்றவாறு. ஷ்ஷ்பேரின்பமாவது ஆத்மசித்தி ஆகையால் ஆத்மலாபம்பெற்றவர்களுக்குப் பிரமநிஷ்டையைவிடாதென்பது. ஆல்-அசை. சுகமாமென்ற சந்தோஷத்தையும், துக்கமாமென்ற க்லேசத்தையும் ஆத்மஞானிகளடையானேவ யிதுவிளையாத திருத்தியா யிதைமோகியாத அமோகியாயிருப்பானென்பது அருத்தாபத்தி. (௰௪)

(கலிவிருத்தம்.)

உடம்புடனேயுள னாகியிருந்தே ... ... ... ... ... *
விடம்புரைகாமவெகுளியின்வேகாச் ... ... ... ... *
சடம்பொறைாமைதவிர்ந்தவனேநல ... ... ... *
விடம்புகுஞானியுமின்புறுவானும் ... ... ... ... *

(இ-ள்.) உடம்புடனே யுள்ளவனாகியிருந்தே விஷத்தையொப்பான காமத்தின்வேகம் கோபத்தின்வேகம் இந்தவேகங்களாலாகிற தேகம்பொறுமையைத் தீர்ந்தவனே நல்லிடமான மோட்சத்தைக்கூடுகின்றஞானியு மானந்தப்பெறுவா னென்றவாறு. ஷ்ஷ் உடம்புபோனபின்பு அறிவுவாராதினாலே வுடம்புடனே இருக்கும் போது தானே ஞானம்பெறவேண்டு மாகையா லுடம்பிருக்கும்போது தானே காமக்-குரோதாதிகளின் வேகத்தைப் பொறுக்க அறிகிறவனேஞானிடஞ் சுகிபமென்பது இதையறியாதவன் மூடனுந் துக்கியுமென்றதருத்தாபத்தி. (௰௫)

மெய்யறிவே விளையின்பமதாகவு... ... ... ... *
மெய்யறிவேவிளையாடிடமாகவு ... ... ... ... *
மெய்யறிவேயொளியாகவுமேயா ... ... ... ... *
மெய்யறிவம்பெறு மின்பம்விடாதார் ... ... ... *

(இ-ள்.) ஆத்மாவே விளைப்பட்ட சுகமாகவும், ஆத்மாவேவிளையாட்டிடமாகவும், ஆத்மாவேசோதியாகவும், இப்படியாகுமவர்கள் ஆத்மாவேபெறப்பட்ட மோட்சசுகத்தை விடாதவர்களென்றவாறு.

※ விளையாடுமிடமாவது-ஆத்மா-ராம மானந்தமாவன யிதைஆத்மா ராமனென்பார்கள். (௰௬)

காவல்செய்தஞ்சுபுலன்கணிரண்டு.................*
மேவவரும்பருவத்திடைவிட்டிட.................*
டாவகைநின்றவபானபிராண.................*
னேவலினன்றியக்கமறுத்தே.................*

(இ-ள்.) பஞ்சேந்திரியங்களை விஷயங்களிலோடாமற் காவல் செய்து கண்களிரண்டும் போகத்தைக்கூட வருகிறபுருவத்தினடுவி லேவிட்டு நிறுத்தியோகத்துக்கான விதமாகநின்ற அபான வாயுவையும்,பிராணவாயுவையுந் தன்னுடைய ஏவலின்றிமேலோடிமீறுவதல்லாமல் அவைகளின் சுபாவமாக ஓடுவதான அசைகின்றதையறுத்து அடக்கியென்றவாறு. (௰௭)

அஞ்சுபொறித்திறனாசையடக்கா.................*
னெஞ்சுபயத்தொடுகோபமுநீவா.................*
வெஞ்சுதிறத்திலியோகிகளேகா.................*
ஞஞ்சுபிறப்பிட ரியாவுமுதிர்ந்தார்.................*

(இ-ள்.) பஞ்சேந்திரிய விதங்களின் ஆசையையடக்கி - மனசுபயத்துடனேகோபமுநீக்கி ஒருநிமிஷமானாலு மிளைத்துவிடுவதில்லாமல் நிரந்தரமுமிப்படி யிருக்கிறயோகிகளே கண்டாய் கருமத்துக்குத்தப் பிழைத்துப் பிறவித்துக்கமுதலான துக்கமெல்லாங் கீழேவிழஅடித்தவர்களென்றவாறு. ※ காவல்செய் தென்றகவியும், அஞ்சுபொறியென்ற கவியும், ஓரொருதொடர் இந்திரியங்களைக் கட்டிக்கண்ணிரண்டையும் புருவநடுவே நிறுத்திப் பிராணபானமானவிரண்டும் அவைக ளிச்சையாக அசையாமற்றனக்கு வேண்டியபோதசையை அடக்கியிந்திரிய ஆசையையடக்கிமனப்பயத்தையுங்கோபத்தையுங் கைவிட்டுஇளையாமலெப்போதுமிப்படி யிருக்கிறயோகிகளைதப்பிப் பிழைத்துப்பிறவித் துக்கமுதலான துக்கமெல்லாம் விழத்தள்ளினவர்களல்லாமல் இப்படியிராதவர்க ளல்லகண்டாயருச்சுனனென்று (இரண்டுகவிக்கு மிதுபொழிப்புரை) உதிர்ந்தலாவது இப்படி யிருக்கிறயோகிகள் மேலேவினவர்களாகையால் அங்கே கூடவிருந்தபிறவித் துக்கமுதலான வெல்லாங்கீழேயுதிர அடித்தவர்களென்பது இவர்களுக்குப்பிறவி முதலானதுக்கமுமில்லாதவரென்றகருத்தாபத்தி. (௰௮)

(அறுசீரடியாசிரியவிருத்தம்.)

சாதிபுரியுந்தொழில்களுக்குந் தக்கோர்செய்யுந் தவங்களுக்குந் ... ❋
தீதிலுலகமேழினுக்குஞ் சேருமிடமா யுள்ளவனை ... ❋
யோதிமுடியம்பரிசேமெய் புணர்ந்தார் பிறவாவெனவுரைத்தா ... ❋
ராதிமுடிவொன்றின்றியெல்லாந்தானே யாய்நின்றான் ... ❋

(இ-ள்.) அந்தந்தச்சாதிகள் செய்யப்பட்டகருமங்களுக்கும் பெரியோர்கள்செய்யப்பட்ட தவங்களுக்குங் குற்றமில்லாத வேழுலோகங்களுக்குஞ் சேரப்பட்ட இடமாயிருக்கிற என்னையோதிமுடியப்பட்ட முறைமைபோலமெய்யாக அறிந்தவர்கள் இனிப்பிறவாரென்றுசொன்னார் அவர்யாவரென்னில் ஆதியந்தமொன்றுமில்லாமலே யெல்லாந்தானே யாகின்ற ஸ்ரீகிருஷ்ணசுவாமியெனவாறு. (யக)

அஞ்சாவது சந்நியாசயோகவத்தியாயம் முற்றும்.

ஆக அத்தியாயம்-ரு இ - கூடிய் செய்யுள் (ாகயக.)

ஆறாவது.

# அப்பியாசயோக

# அத்தியாயம்.

(கலிவிருத்தம்.)

யோகமனத் தவர் யோக மதற்கே ... ❋
யேகமுதற் பொருளாகி யிருந்தே ... ❋
நாகடணைத்திடை யேநட மாடு ... ❋
மேகமவாக்கிவை மீள விரிப்பான் ... ❋

(இ-ள்.) யோகமனமுடையவர்களின் யோகத்துக்கு ஒன்றாகிப்பொருளாகியிருந்தே காளிங்கனென்னு மொருபாம்பின் நடுவேகூத்தாடப்பட்டமேகநிறமான திருமேனியையுடைய ஸ்ரீகிருஷ்ணசுவா

மி அருச்சுனனுக்குத் திரும்பச் சொல்லுவாரென்றவாறு. (க)

செய்கரு மப்பலன் விட்டவை தீரா ................ .... *
செய்கை விடாற்றி யிருப்பவ னேகா ... ........ ........ .... *
னுய்ய நினைத்த நல் யோகியு ஞானியும் .... ..... ...... .... *
வெய்ய தழற்பொலி வேள்விசெய் யானும் ............... *

(இ-ள்.) செய்ககருமபலத்தை யிச்சியாமல்விட்டு அந்தக் கருமத்தைவிடாமற் சேரச்செய்துகொண்டிருக்கிறவனை கண்டாயருச்சுனா! தப்பிப் பிறப்பைக்கடக்க நல்லயோகியும் ஞானியும் உளதினைமுள்ள அக்கினியிலே லவிவேள்வியாகஞ் செய்கிற கருமியு மென்றவாறு. ※ இவன்பலத்தைக்கேணாயல்லாமல் கருமத்தைக்கணவ லெலன்பது. இதைஞானயோகமென்பார்கள். இதுவேசந்நியாசயோகமென்றறிவது. (உ)

மேவினை யாவையும் விடுத லில்லா ........................ .... *
ரியாவர்க ளேனு நல் யோகிக ளாகா ........................ *
ராவரிசனர்க்கில் வாசை றலேசா .................................. *
னேறுவிலாத மெய் யோக முமையா.....................*

(இ-ள்.) ஐயா தங்களைச்சேர்ந்ததான சங்கற்பமெல்லாம்நாசமில்லாதவர்க ளெவர்களானாலும் நல்லயோகிகளாகமாட்டார்கள். சங்கற்பமுள்ளவர்கள் யோக்கரானவர்களல்ல. ஆசையறுதலேகண்டாயிந்நிலை. விகற்பமில்லாத மெய்யோகமும் மெய்ஞ்ஞானமுமென்றவாறு. ※ இத்தொல்லாசையற்றவிடத்து சங்கற்பமறாது சங்கற்பமறாவிடில் யோக்கியராகார்கள். ஆவர்களென்னில் அவர்கள் பொய் யோகியும், பொய்ஞ்ஞானியு மென்பது. திருத்தாபத்தி யோகமுங்கருமமாகவிருக்கயோகம்வேறுகருமம் வேறாகச்சொல்லுவதேதென்னில் சரியைகிரியையோகம் ஞானமென்று நாலாம் - இந்தநாலுங் கருமமே இதைப் பகவிபேதத்திறுலே ஒன்றைநாலாக்கினது பதவியாவது சாலோகம் சாமீபம் சாரூபம் சாயுச்சியமென்று நாலாம். சாலோகம்-கடவுளுலகத்திருத்தல். சாமீபம்-கடவுள் சமீபத்திருத்தல். சாரூபம்-கடவுளுருப்போன் றிருத்தல். சாயுச்சியம்-கடவுளிற் கலந்திருத்தல். (௩)

உய்வகையோக மொருப்படு வார்க்கது .......... .. *
கைவரு மாசெயல் காரண மேகாண் ..... ..... ........ *
மெய்வகை யோகம் விளைந்தபின் மெய்யே..... .... *
செய்வனவானவை தீமைய வேயாம் ..................*

(இ-ள்.) தப்பிப்பிழைக்கிற விதமானயோகத்திலொருமைப்படுகிறவர்களுக்கு அத்தியோகங் கைவருகிறபடி செய்கிற கருமமே காரணங்களாயிருக்குது அப்படிமெய்யான விதமாகியயோகம் விளைந்தபின்பு செய்கிறதான அர்த்தக்கருமமானது மெய்யாகவே பொல்லாதாகுமென்றவாறு. ஏகாரம்-அசை. யோகநிமஞானம் ஞானத்துக்குமப்படி யென்ப தருத்தாபத்தி. (௪)

புன்மையவாய பொறித்திறத் தோடும் .. ............ *
பன்மையவாய வினைப்பயன் றோடும்.................. *
அன்மையனாவனப் பொழுதையா......... .... ...*
தன்மையில்யோக மதித்தலை நின்றான்.................. *

(இ-ள்.) புல்லியதாகிய விந்திரிய விதங்களோடும் பதவிதமாகிய கருமபலத்தோடுங் கூடாதவன் அப்பொழுதே ஐயா தன் சுபாவமில்லாதயோகத்திலே தலைமையாக நின்றவனென்றவாறு. கூடினவன்கீழாகி நாசமானவனென்ப தருத்தாபத்தி. அன்மையனாவது- அல்லாதவன்- அதாவது- விஷயங்களோடும் பலத்தோடுங் கூடினவனல்லாதவன் ஆகையால் கூடாதவனென்பது அப்பொழுதேயென்றது- பின்னேவருமென்னாமல் அப்பொழுதே யென்றது சங்கைநிவர்த்தி.— (௫)

தானலதியாவர்தன் மேன்மை செயத்தக்கோர் .. *
தானலதி யாவர்தன் கீழ்மை சமைப்பார்............ *
தானலதியாவர்தன் மெய்ப்பகைய ராவார் ....... *
தானலதி யாவர்தனக்குறவ ராவார்................ *

(இ-ள்.) இப்படிஞானசிரேட்டனாக நின்றவர்தானே தனக்குமேன்மைசெய்யத்தக்கவனல்லாமல் வேறேயார் தனக்குமேன்மைசெய்யத்தக்கவர்களாருமில்லை இப்படி ஞானநிலையில் நில்லாதவன் தானே தனக்குக் கீழ்மைசெய்கிறவனல்லாமல் வேறேயார் தனக்குக்கீழ்மைசெய்கிறவர்களாருமில்லை இப்படிக்கொத்த அஞ்ஞானி தானே தனக்குமெய்யான பகையல்லாமல்வேறே யார்பகையாகிறவர்களாருமில்லை ஞானிக்குத்தானே தனக்கு உறவல்லாமல் வேறேயார் தனக்குறவாகிறவர்கள் யாருமில்லை யென்றவாறு. இதனால்ஞானியாயிருந்தால்தானே தனக்கு மேன்மைசெய்கிறவனும் உறவாகிறவனு

ம் அஞ்ஞானியாயிருந்தால் தானே தனக்குத்தீமை செய்கிறவனும் பகையாகிறவனும் தன்னையல்லாமல் வேறேயாருமில்லையென்பது அஞ்ஞானியாலே வருகிறதேதென்னில் அதுவுந்தம் ஞானாஞ்ஞானங்களால் வந்ததாகையால் அன்னியராலே வந்ததல்ல தன்னாலேவந்ததேயாம் ஆகையால் தனக்குநன்மைவேண்டில் ஞானியாயிருமென்றது இது அருத்தாபத்தி. (௬)

(அறுசீரடியாசிரியவிருத்தம்.)

இறவாவகைதம் முள்ளத்தை யடக்குமவரோ தமக்கென்று ...... *
முறவாயுள்ளாரல்லாதார் தமக்கே பகையாயொழுகுவார் ...... *
துறவாதொழுகுந் துவந்துவங்க ளெறிந்தான்மனையே தொடர்ந்தவ
ரீபான் - மறவாதெழுந்தமெய்யறிவிம்மாயைமறைக்கமறையாதால் -

(இ-ள்.) ஆத்மஞானத்தை நாசமாக்காதபடிக்குத் தங்களின் மனதையடக்கப்பட்டவர்களே என்னறக்குந் தங்களுக்கு உறவாயுள்ளவர்களிப்படியல்லாதவர்கள் தங்களுக்கே பகையாய் நடப்பார்கள் விடாமல்நடக்கப்பட்ட யாவத்தொடர்புகளைவிட்டு ஒன்றான ஆத்மாவையே தொடர்ந்தவர்களிடத்தில் மறவாத அனுசந்தானத்திலெழுந்தமெய்ஞ்ஞானமானது இந்தமாயைமறக்க அதனாலே மறையாதென்றவாறு. ஃ இதனாற்றன்மனதைச் செயித்தவனுக்கு அந்தமனதேவுறவுசெயிக்காமலேவிட்டவனுக்கு அந்தமனதேசத்துருதுவந்துவமான மாயாசம்பந்தங்களைவிட்டு ஆத்மாவையே தொடர்ந்தவனுக்கு அனுசந்தானத்திலெழுந்தஞானத்தை இந்த மாயை மறையாதென்பது ஆகையாலாத்மஞானமிலாமல் மனதைச் செயிக்கமாட்டான் இவன்ஞானத்தை மாயை மறைக்குமென்ப தருத்தாபத்தி.— (௭)

பாடும்பனுவல்பலவோதி யவற்றாலறியும் பயனுணர்ந்து ..... *
நீடும்புலன்களைவென்று நிலையிற்கலக்கற்கரியானு ... ..... *
யோடும்பொன்னுமொருபொருள்போலோக்கப்பார்க்குமவ
னேயிங் - காடும்பெரியமாய்க்கூத்தாடாத்துகண்டமைந்திரு
ப்பான் ... ... ... ... *

(இ-ள்.) பெரியோர்களாலே பாடப்பட்ட பலநூலுமோதி யந்த நூலாலே யறியப்பட்ட பலனையறிந்து வளரப்பட்ட விஷயங்களை

ச்செயித்துத் தான்நின்றநிலைமையில் நில்லாமல் கலங்கச்செய்கிறத
ற்கு அரிதானவனாய் ஒடும்பொன்னும்மொரு பொருளைப்போலச் சரி
யாகப்பார்க்கப்பட்டவனே யிங்கேகாட்டப்பட்டபெரியமாயக்கூத்தா
ட்டத்தைக்கண்டு அமைந்திருப்பானென்றவாறு. ஃ நிலைகலங்காத
தும்மனசுசெயமான து-ஓடும்பொன்னுஞ் சரியாகப்பார்க்கிறதாவது-
நிருவிகாரம்- இப்படிச்சித்தேந்திரியனாய் நிருவிகாரனாய்ச்சித்தசெய
வானாயிருக்கிறவனே மாயக் கூத்தாட்டத்தைக் கண்டமைந்திருப்
பவனிப்படி யிராதவன்மாயக்கூத்தி லகப்பட்டாடுகிறவனென்றதரு
த்தாபத்தி-இங்கேளன்றது இகபரலோகங்கேயென்றது பரம இகத்திலிந்
திரியவியாபாரனாய் விகாரனாய்ச்சித்தசஞ்சலனாய் இருக்கிறவன்மா
யக்கூத்தில் அகப்பட்டவன் - இவைகளில்லாதவன் பரத்தில்மாயக்கூ
த்தாட்டத்தைக்கண்டு முன்னியிச்சத்தற்கூடிடாதமாயக்கூத்தொழிந்
திருப்பானென்பது. (அ)

கைம்மாறில்லாதனசெய்வான் காதற்றேழன்கடும்பகைஞன் ...... *
விம்மாதெவற்றுமொத்திருப்பான்வேண்டப்படுவான்வேண்டாதா*
னம்மாமறைநூனெறிபுரிவானுகாதனவாக்கிடுவானென .... .... .... *
நிம்மானிடவரனைவர்க்கு மொப்பான்யோகியெனப்படுவான் ..... *

(இ ள்.) எதிருபகாரமில்லாதவுபகாரம் செய்கிறவன் அன்புள்
ளசினேகிதன் கடுமைபுள்ளபகைஞன் இக்கஷ்டம் வந்தபோது சந்
தோஷமுங் கிலேசமும்படாமல் எல்லாவற்றிலுமொத் திருக்கிறவ
ன்- வேண்டப்பட்ட வுறவின்வேண்டாதபாவி த்ததும்பெருமை
யமுண்டய வேதசாஸ்திரத்தில் சொன்ன மார்க்கத்தைச் செய்கிறவ
ன் ஆகாதகாரியத்தை யாகப்பண்ணி எல்லாராலும் உதாசனிக்கப்பெ
ற்றவனென்று சொல்லப்பட்ட இந்த மனிதரெல்லாருக்கும் ஆத்மா
சமமென்றறிந்து சமமாயிருக்கிறவன் யோகியென்று பெரியோரா
லேசொல்லப்படுவனென்றவாறு. ஃ இவர்கள் முதலானவர்களெல்
லாநம்தானாய்- இவர்கள் செய்வதெல்லாம் தான்செய்வதாய் இவர்க
ளுக்குவருகிற பிரயோசனங்களெல்லாந் தனக்குவந்ததாய் இவர்கள்
அனுபவமெல்லாந் தான் அனுபவிக்கிறதாக நிச்சயமாக அறிந்துச
மமாயிருக்கிறவனே யோகியென்று பெயருண்டா னவனென்பது.
தலையாய்ந்தபோகத்தைத் தலைநின்றொழுகுந்தன்மைகே ...... *
ளுலையாவான்சயறமாற்றி யொன்றுந்தனகமொக்கெருழுகாதே ..... *

மலையார்முழைஞ்சேமுதலாக யோகங்களுச்குவகுத்துரைத்த...... *
நிலையாவையினுமொன்றினில்வந் தியாதுநலியா நிலத்தினிலே... *

(இ-ள்.) சிரேஷ்டமான இந்தயோகத்தைமோக்ஷத்துக்குமு தன்மையாகநின்று நடக்கப்பட்ட வியல்பைக்கேள் - அருச்சுனா;வருத்தஞ் செய்யப்பட்ட ஆசையைநன்றாயறவிலக்கிஒருவிஷயமாகிலுந் தனக்குவேணுமென்று அந்தவிஷயத்துடனேகூடிநடவாமல் யோகங்களுக்கு வகுத்துச்சொன்ன மலையிலிருக்கிற முழைஞ்சுமுதலாக உள்ளவிடங்களெல்லாவற்றிலும் மோரிடத்தில் மிருகபட்சிமுதலானவைகளெல்லாம்வந்து வருத்தாதநிலத்திலென்றவாறு ❋ இதனால் ரகசியதலத்தில் ஏகனாய் ஆதமாவிலிடத்தில் நிறுத்தினவனாகாக்கிறசித்தனாய் ஆசையிலொகவனாய் விஷயபதார்த் தங்களிலேகூடாதவனாய் சுசியானதலத்திலே மிருகபட்சியால் வருத்தமில்லாத நிலத்திலே யிருக்கவேணுமென்பது யாதுநலியாதாவது தழைநீர்விறகு தருப்பைமுதலானவை கிடையாமல்வருத்தாத கிடைக்கிறநிலத்திலென்றுஞ் சொல்லலாம். (௰)

ஒக்கும்வகையாற்குசைபரப்பி யதன்மேலுழைபின்றோல்படுத்துத்
தக்கபுடைவையதன்மேலே விரித்துத்தானங்கிருந்து ........*
மிக்கமனனையறவொடுக்கி வேறுசெய்யும் விஷயங்களுடன்.... ....... *
றொக்கபுலன்கடமையடக்கி புணர்வுதூய்தாவதன்பொருட்டால்...*

(இ-ள்.) உயரமும் தாழ்வுமில்லாமல் ஒத்தபடியாலேதருப்பையைப்பரப்பியதன்மேலே மானின்றோலைப்படுத்துச்சுத்தமாகத்தக்கபுடைவையை அந்தக்கிருஷ்ணாசனத்தின்மேலே விரித்துஅந்தப்புடைவையின்மேலே தானங்கிருந்து சேட்டைமிகுந்த மனதைச்சேட்டையற ஒடுக்கித்திரமாக்கி ஞானத்தை வேறுபடுத்தப் பட்ட கருமங்களுடனே கூடின விஷயங்களை யடக்கி அறிவுசுத்தமாகிறநிமித்தமாகவென்றவாறு. ❋ அறிவுசுத்தமாவது- சித்தசுத்தி ஒக்கும்வகையாவது- மேடுபள்ளமில்லாதபடி புடைவையென்ற படாதத்தைத் துணியென் றேதுவாருமுளர் (௰௧)

சல்புங்காமத்துமுடம்புமிவை செவ்வேதளராதேயிருத்தி........*
நல்லங்கிருந்துகண்களைத்தன் மூக்குநுனிமேலேநிறுத்தி............ *

தலையுங்கடல்போற்காமமுமெய் பயமுந்தன்னைவிட்டகல.........*
உலையுமனமுள்ளடக்கியென்னை யுணர்ந்தேயிருக்குமதுயோகம்... *

(இ-ள்-) தலையுங் கழுத்தும்-உடம்பும் இவைகளைச் செவ்வையாக அசையாமல் நிறுத்திப்பத்மசனமுதலான ஆசனத்திலிருந்து தன் மூக்குநுனியின்மேலே கண்களை நிறுத்தி-அலையா லலையப்பட்டகடலைப்போலான ஆசையுஞ் சர்ப்பயமும் விட்டுப் போகவிலைவிபஞ்சவிலேதிரியப்பட்ட மனதைத் திரியாமலுள்ளடக்கி என்னைமேலானபரனென்றறிந் திருக்கப்பட்டதுவே யோகமென்ற வாறு. ❀ தலையாமென்றகவியும், ஒக்குமென்றகவியும்- தலையுங்கழுத்துமென்றகவியும்-ஒருதொடர். (௰உ)

(கொச்சகக்கலிப்பா.)

என்னடிகழும்யோகத்தை யிப்பரிசா லெப்பொழுதுங்.... *
கொண்டுபயிலபவர்கடைக்கா லென்னையேகூடுவா...... *
ருண்டியினின் மிகவாவருண்டெறப்பார்மிக்குறங்கிக்... *
கண்டுயிலையறத்துறப்பா ரவர்க்குக்கைவாராதால்..... *

(இ-ள்.) உலகத்தார் மதித்துவிளங்கப்பட்ட யோகத்தை இந்தவிதத்திலெல்லாநாளும் என்னிடத்திலே மனதை நிறுத்திக்கொண்டு பழகுகிறவர்கள் முடிவுகாலத்தி லென்னையேசேருவார்க ளல்லாமல் மாயையிலே கூடார்கள் போசிப்பில் மிகுந்தவர்கள் அந்தப்போசிப்பைவிட்டவர்கள் மிகுந்து நித்திரிக்கிறவர்கள் நித்திரையைச் சுத்தமாகவிட்டவர்கள் அந்தநாலுபேருக்கும் இந்தயோகங் கைவராதுபசித்தபோது அற்பபோசனமும், நித்திரைவந்போது அற்பநித்திரையுஞ்செய்து யோகத்தைச்செய்தாற் கைவருமென்றவாறு. ❀ கைவருத லாவது பலித்தல்-என்னைக்கூடுவாரென்று பாடமோதிலிருவருக்குமிடம் வேறுபடும் அதேதெனில் - ஓரிடத்தி லிருக்கிறவனை வேறொரு இடத்திலிருக்கிறவன் வந்து கூடுவதாகுமதனாலேஎன்னை வந்து கூடுவாரென்றபாடமாகாது அற்ப போசனமும் அற்பநித்திரையும் செய்கிறபோது யோகஞ் செய்யக்கூடாதிறதல்ல அவ்விரண்டையும்விட்டு எந்நேரமும், யோகமொழியாமல் யோகஞ்செய்யலாமே அதனாலறவிட்டவர்களுக்குங் கூடயோகம் பலியாதென்றதன்னில்.பிராரத்தமமூன்றுவிதம் அதாவது சுவிச்சையாபிராரத்தமென்றும் அநிச்சையாபராரத்தமென்றும் பிரவிச்சையா பிராரத்தம்

மென்றுமாம் இவற்றில்சுவேச்சையாயிராரத்தமாவது தானிச்சித்து
வருகிறது- பரவிச்சையாயிராரத்தமாவது - அன்னியருடையவிச்
சையினாலே வருவது அநிச்சையாயிராரத்தமாவது சுபாவமாகவந்து
கொண்டேயிருக்கிறது. இவற்றில்சுவேச்சையான காமக்குரோதா
திகளைவிட்டுப் பரவிச்சையானவிருசபக்ஷிவருத்தாதலிடத்திலிருக்க
ச்சொன்னதினாலே சுவேச்சைபரவிச்சை இந்தஇரண்டுந்தன்னாலா
கிறது இனித்தன்னாலாகாததான அநிச்சியாபிரார்த்தமான பசிநித்
திரைமுதலானவைகள் சுபாவமாகவேவந்து கொண்டிருக்கிறதா
கையால் அவைகள் பிறவியற்றவல்லாமல் விடா அவைகளைச்சத்
துபரிசத்தடக்காவிட்டாலவைபேயொழியாத் தன்பமா வுபசரித்
தடக்கிக்கொண்டே யோகஞ்சாதிக்கவேணுமென்றது இதனால் ஒரு
நாள் அறுபதுநாழிகையுங் கழிவதி லவைகளை யுபசரித் தடக்குகிற
தொருநாழிகை கழிவது நன்று ஐம்பத்தொன்பது நாழிகையோக
மே யோதுமென்பது குறிப்பு இதனாலே கொஞ்சப்பழிப்பைச்செ
ய்து பெருவத்தை கீர்த்தியடைதல் நன்றென்றறிவது பழிப்பில்லா
மற் கீர்த்திவாராது செலவில்லாமல் ஆதாயம்வாராது போலென்
றறிவது.— (௰௬)

துயிலுமுணவுஞ் செய்தொழிலுமிகாமேகுறைந்துதோ
ன்றுமே - பயிலுமவனே யோகத்தைத் தன்யாற் படக்கு
ம்பான்மையா - னயிலும்பொறிவிட் டவ்வறிவு தன்பா
லடக்குமப்பொழுது - குயிலுமியோகந்தனினின்றனெ
ன்றுங்கவனைக்கூறலாம்.................................*

(இ-ள்.) நித்திரையும்போசனமுஞ் செய்கிறகாரியங்களும் அதிக
மாகாமற் குறைந்துகாணமற் சமனாக தனக்குத் தக்க நித்திரையும்
போசனமுங் காரியமுஞ் செய்யப்பட்டவனே தன்னிடத்தில் யோக
த்தையொழியாம விருத்தப்பட்ட சுபாவத்தையுடையவன் பொசிக்
கிறவிந்திரியத்தைவிட்டு நியமமான அந்தச்சித்தத்தைத்தன்னிடமா
கிய ஆத்மாவினிடத்தில் நிறுத்தியடக்கப்பட்ட அப்பொழுது சகல
இச்சைகளிலும் விடுபட்டுச்செய்யப்பட்ட யோகத்தில் முதன்மை
யாகநின்றானென்றவனைச் சொல்லலாமென்றவாறு. ✻ அநிலைச்சி
த்தமென்பது அறிவுண்டாகிற இடமாகையால்சித்தமென்றது. அறி
வையோ சொல்லலாகாதோவென்றால் அறிவையடக்கிலாத்மாதோ

ன்றது ஆகையால்லென்ற சித்தத்தையலையாம லடக்கியென்று சொன்னது ஆனால் அறிவினால் ஆத்மாவிளங்குகையால் அறிவென்றும்ஆத்மாவென்று மிரண்டாகிறதே அறிந்தபின்பு ஆத்மா வொன்றாகவேயிருக்கையால் அப்போது அறிவுகாணுமே காணுகிறதேயடங்குமென்றுசொல்லலாகாதோ வென்னி லறிவடங்குமாயில் ஆத்மாவை யொன்றெனக் காணப்பெற்று கொண்டு ஆகையால் அறிவே சொரூபமான ஆத்மாவைச் சைதன்னியனென்று சொல்லுவதல்லாம லசேதனமென்று சொல்லக்கூடாது ஆதலால் அறிவுபிறந்த சித்தத்தை அடக்கியென்றுரை யெழுதினது.— ஆந்து-அசை. (௰௪)

(கொச்சகக்கலிப்பா)

இப்பரிசுபயில்கின்ற யோகிகாலில் விடத்து.... ... .... *
மெய்ப்பரிசுநடுங்காத விளக்குப்போல் விளங்குமா.... *
லெப்பொழுதங்கவனுணர்வவ் வுண்மையிலேசென்றிசையு-
மப்பொழுதுபரமானந்தத்தினையேயடையுமால்..... *

(இ-ள்.) இந்தப்படி பழகுகிறயோகியினுடைய சரீரசுபாவமான துகாற்றில்லாதவிடத்து அசையாதவிளக்கைப்போல் விளங்குமாகையால் அவ்விடத்தி லவனுடைய ஞானம் அந்தஆத்மாவிலெப்போது கூடிப்பொருந்துமோ அப்போது அந்தஞானமான துபரமானந்தத்தையே அடையமல்லாமல் விஷயானந்தத்தை யடையாதென்றவாறு. ஸ்ரீ யோகி மெய்ப்பரிசுகாலில் விடத்தி தெனவும் உண்மையிலெப்பொழுதெனமாறுக எப்பொழுதப்பொழு தென்றன்றுலேயிச்சையுமென்றுகாரம் வருவிக்கக்காரத்தேதற்றகாரம்ஆல் அசை ஆனந்தமாவது-சுகம்-தேசவிவ்வையாலே தேகமைய புண்மை யென்றது.— (௰௫)

யாதொன்றிந்தப் புலனறியா வளவிலின்பமாயிருக்கும்..... *
யாதொன்றினைச்சென் றடைந்தார்கள் பின்னையதனிவிரண்டா-
கா-ரியதொன் றினைப்பெற்றவரிதனின் மிக்க தொப்ப துண்
டென்று - ரியாதொன்றறிந்த வறிவிற்கே யறிவாய் நிற்கு மறி
வின்றார்..... ........ ..... ........ ...... ...... ..... ......*

(இ-ள்.) யாதொன்று இந்தவிஷயங்களறியாத அளவான புத்தியிலே சுகமாயிருக்குமோ யாதொன்றைச்சென்று கூடினவர்கட்பி

ன்ப அவையிரண்டாகாமல் ஒன்றாவர்களோ யாதொன்றைப் பெற்றவ ர்கள் இதிலேமேலானது இல்லைப்பானது உண்டென்று சொல்லார் களோ யாதொன்று இந்த அறிவுக்கே அறிவாய்நிற்குமோ அந்தயோ கத்தில் நிலைநிற்பவர்களா மென்றவாறு. ❋ புலனறியாவளவாவது விஷை யாதம்.— (௰௯)

(கலிவிருத்தம்.)

வஞ்சவேல்கொடு மார்பெறியினும்.................... *
மெஞ்சவேதமுன் மூழ்கியெரியினும் ... ... .................. *
நஞ்சினாலுழலுக நலியினும் .................................... *
மஞ்சிடா ரஃது தானந்த மாவதே............................*

(இ-ள்.) கொலைத்தொழிலைக் காட்டாமலுள்ளடக்கிக் கொண்டிரு க்கிற வஞ்சனையுடைய வேலாயுதத்தைக் கொண்டு மார்பிலெறிந்தா லும் எப்படிப்பிழைப்போமென்றுமனதிளைக்க அக்கினி மூழக்கொ ண்டிருந்தாலும் விஷத்தினாலே நிறைந்த அக்கினிவீசப்பட்ட நா கமான்து வருத்தினாலும் அவர்களுக்கு அது ஆனந்தமாவதேயல்லா மல் துக்கமாவதை யடைந்து பயப்படார்களென்றவாறு. ❋ யாதொ ன்றினைகளையும் வஞ்சவேலென்றகவியும், ஒருதொடர். (௰௭)

போகமாய புலன்களின் போக்கறுத்.......... ..... .... *
தாகமாமெய் யறிவிடை பேயந்த........... ......... *
வேகமாய மனத்தினை மெல்லவே......... .......... .... *
மேகமாக விருத்திக லாதுநீ..............................*

(இ-ள்.) போகமாகிய விஷயங்களை யிந்திரியங்களிலே புருகிற போக்கைநீக்கி அந்தவிஷய போகங்களின்திக்கிலேபோகிற இந்தி ரியங்களைத் தொடருகிறவேகமாகிய மனதைத்தப்பகையாமல் மெள்ள மெள்ள யேகமாக உள்ளானமெய்யான ஆத்மாவினிடத்தில் நியிருத் தென்றவாறு. ❋ இந்தைப்புலன்களைப்போகமாய் போக்கறுத் தந்த வேகமாய் மனத்தினையிகலாது மெல்லவே யேகமாக வாகமா மெய் யறிவிடையே நீ இருந்தனெனப் பொருளுக் செற்பமாறுக அறிவி டையே யென்றதனு லிந்திரியவிஷயபோகங்கள் இருத்தாமல் ஆத் மாவிலே நிறுத்தென்பது மெல்லவேயென்றதனால் சீக்கிரமாக நிறு த்தில் தப்பிமாறிப்போம் -அதனால்- மெல்லவே நிறுத்தென்பது போ கமாய்போக்காவது விஷயங்களின்பின்னே இந்திரியங்கள் போற

போகிக்கின்றது அதை விஷயபோகங்களிருக்கிறதிக்கை இந்திரியங்கள் நாடிப்போகிற போக்கையென்றுஞ் சொல்லலாம் ஒன்றையொன்று கொண்டதாகையால் ஆத்மா மெய்யறிவென்றார் ஆத்மாவை மெய்யாத்மாவென்ப தேகந்தன்னில் நித்தியமா யிருக்கையால் ஆனால் பொய்யாத்மாவு முண்டோவென்னில் அஞ்ஞானிகளுக்குத் தேகயிந்திரியங்கரண முதலானவைகள் ஆத்மாவாக மயக் குகையாலும் அவைகள் அநாத்மாவாய் அழிகையாலும் பொய்யாத்மாவுமுண்டென்பது இகலாதென்ற பாடத்தை யிகழதென்று பாடமோதில் வெறுக்காதென்றுனா சொல்வதுபகைத்தாலும் வெறுத்தாலும் மனசுவேறுபடுந் தன்வசப்பட்டடங்காது. (௰அ)

வாங்கியைம்பொறி நின்று மனத்தினை............ .....*
நீங்கிடாவகை நெஞ்சு விருத்தியே.... ........ .... ........ *
நீங்கியாவையுஞ் சிந்தைசெய் யாமையாற்.......... .... *
பாங்கியாதது வேபயில் வாயரோ..................... ......*

(இ-ள்.) பஞ்சேந்திரியங்களில் நின்றும் மனத்தையிப்பால்வாங்கி ஆத்மாவை விடாதபடி நின்று ஆத்மாவில் மனத்தை யிருத்தி மற்றப் பொல்லாங் கெல்லாவற்றையும், நினையாதது சுபாவமாகையால் வேறு சுபாவப்படாமல் அதுவேபழகுவா யருச்சுனா வென்றவாறு. ❁ மனத்தினை வாங்கியெனமாறுக. அரோ-அசை. அதுவேயென்றதனால் வேறுபாவனைபண்ணாமல் அதுவேபாவிப்பாயென்ற தேற்றேகாரம்-போகமாயவென்றகவியும் - வாங்கியைம் பொறியென்றகவியும்-ஒருதொடர். (௰௯)

தேறுநெஞ்சினனாய்த் தன்செயலல்லால்.........*
வேறுகண்டறியாமெய் யறிவினு ..... .... .... .... *
னூறியிந்தவுடம்புடன் வீடுபெற் ... ........... *
றேறுகின்றவனேயின்ப மெய்துவான் ... ....... *

(இ-ள்.) இப்படியெந்தெந்த விசாரத்தினாலே தெளியவேணுமோ அந்தந்தவிதத்தினாலே தெளியப்பட்ட மனதுடையவனாய் ஆத்மாவினுடைய செயலல்லாமல் வேறுசெயல் கண்டறியாத சத்திய ஞானத்தினாலே ஆனந்தவெள்ளமூறி யிந்தவுடம்புடனே மோக்ஷத்தைப்பெற்று ஏறுகிறவனே சுகத்தை யடைவானென்றவாறு. ❁ (௨௰)

உளறுதலாவது- முன்னே ஆற்றூரலாசலூறி வாவரப்பெருகிநிறைந்துதேங்கி வெள்ளமேற்கொண்டு முழுகுவதற்கு ஆரம்பம்- உளறுவது-உடம்புடனேமோக்ஷம்- பெறுதலாவது-சீவன்முத்தி-உடம்புவிட்டமோக்ஷமாவது-விதேகமுத்தி- விதேகமுத்தியென்பதாவது-சிரேஷ்டம் பெறுதல். (௨௰)

(அறுசீரடியாசிரியவிருத்தம்.)

இழியாவிந்தயோகத்தை யென்றுந்தலைநின்றவனென்று.....*
மழியாவின்பத்தினையின்பத் தாலேயடையுமதுநிற்க..... ....*
ஒழியாவெல்லாவுயிருந்தன் னுள்ளேகாணுமவற்றுள்ளே. ... *
கழியாதெங்குந்தானின்றபரிசுந்தெரியக்காணுமால்......... .*

(இ-ள்.) இழிவில்லாத இந்தயோகத்தை யென்றைக்கு முதன்மையாகநின்றவன் என்றைக்குமழியாத சுக சொரூபமான பிரமத்தையானந்தத்தாலேயடைவன். அதுநிற்கஒழிவில்லாத சகலஆத்மாவையும் தன்னுக்குள்ளே காண்பான் சகலஆத்மாவுக்குள்ளுந்தீங்காமலெங்கும் பரிபூரணமாகத்தான் நின்றபடியுந் தெரியக்காண்பனென்றவாறு. ❊ தலைநிற்றலாவது - யோகமேசிரேஷ்டமாக மற்றெல்லாமிழிவாக நிற்றலென்பது- இழியாதெனவே வுயர்ந்தயோகமென்பதுசகல ஆத்மாவினுக்குள்ளே தானுந்தனக்குள்ளே சகலஆத்மாவுங்கண்டு எங்கும்பரிபூரணமாகச் சமமாகவிருப்பனென்பது.(௨௧)

யாவனொருவனென்னையெல்லா வுயிர்களிடையுமென்னிடையே.....*
மேவவெல்லாவுயிர்களையும் வேறாகாமைமெய்காண்பான்.........*
தேவர்பகைமுன்செகுத்தோனே யவன்யாதேனுஞ்செய்திடினு..*
மாவவனாகின்றேனனது நீயேதுமையுறேல்........................*

(இ-ள்.) எவனாகிலு மொருவன் என்னையெல்லா வுயிர்களிடத்திலும்-என்னிடத்திலெல்லாவுயிர்களையுங் கூடாதபடி காணாமல்கூடும்படிமெய்யாகக் காண்பவனெவனோ அவனேதானாலுஞ் செய்தாலுமந்தச்செயலாவதாகச் செய்தவனே தானாகிறவன் அதைமுன்னே தேவர்களுடைய பகையான அசுரராட்சதர்களைக்கொன்ற அர்ச்சுனா நீயொன்றுஞ் சந்தேகப்படாதே யென்றவாறு. ❊ வேறாகாமையாவது-சகலவுயிர்களும் வெவ்வேறு என்னை வேறாகக்காணாமல் எல்லாவுயிர்களிலும் என்னையும் - என்னிலெல்லாவுயிர்களையுங்கூட மெய்

யாகக்காண்கிறவனெவனோ அவனென்னசெய்தாலும், நான்செய்த தேஅதெப்படி யென்னில். அவனாகிறவன் நானாகையால் அவன் செ செய்ததும் நான்செய்ததே அதை நீ சற்றாகிலுஞ் சந்தேகப் படா தேயென்பது தேவர்பகைமுன் செகுத்தோனே யென்றதனாலிப் போதுன்பகையான மனிதர்களைக் கொல்பவனே யென்ற தருத்தா பத்திவருவிக்க முன்செய்தவனேயென்றதனாற்பின்செய்பவனேயெ ன்றது குறிப்பு. (உஉ)

இடரானதுதானின்பந்தா னியாரோனாக்குமாயிடுகப் ...................*
படராநின்றவதுதானு முறுவானன்யோகியெனப் படுவான்..........*
சுடராநின்றவடிவேலோய் தெளிநீயென் றுதுழாயலங்க ... ........ *
லுடராநின்றநெடுமுடியோ னருளிச்செய்யவவனுரைப்பான்......*

(இ-ள்,) யாருக்கானாலுந் துக்கந்தான் சுகந்தான்வந்தாலவ்-வாராநின்றஅந்த துக்கசுகங்களைத் தானு மடைகிறவன் யோகியென் றுலகஞ்சொல்லப்படுவன. பிரகாசித்துநிற்கிறநீண்டவேலாயுதத்தை யுடைய அருச்சுனா இந்தப்படிதெளியென்று திருத்துழாய் மாலைய சைந்துநின்ற நீண்டகிரீடந்தரித்த ஸ்ரீகிருஷ்ணசுவாமி யருளிச்செய் யக்கேட்டு அருச்சுனன் சொல்லுவா னென்றவாறு. ※ சகலஆத்மா க்களிலுந் தானுந்தன்னிற் சகலாத்மாவுமாய் சமமா யெங்குநிறைந் துநின்றயோகிக்கு எந்தஆத்மாவுக்குத் துக்கசுகம் வந்தாலும் தானு ம்அதைச் சமமாகஅடைகிறவனே யோகியென்றுலகஞ்சொல்லுமா லகையால் இந்தப்படி சீக்கிரமாகஅனுசந்தானம்பண்ணியுன்னுடை யகலக்கத்தைத் தெளியென்றுசொன்னது. (உரு)

எல்லாவுயிருமொன்றாகப் பார்ப்பதியோகமெனவுரைத்தாய்......*
மல்லார்தோளாயிதற்குநிலை காணேன்மனமாகின்றவிது ....... ..... *
நில்லாவியற்கைத்தாயபுலன் கலக்குமிதனை நிலைநிறுத்த ............*
ஒல்லாதெனவுங்காற்றடக்கற் கொக்குமெனவுமுணர்கின்றேன் .... *

(இ-ள்.) மற்போர்செய்யுந் தோளையுடைய சுவாமி யெல்லாவு யிரையுமொன்றாகப்பார்ப்பதுயோகமென் றுசொன்னீர்இதற்குமன சுசஞ்சல சுபாவமானதினாலே கல்லையொத்தநிலைகாணேன் இப்படிக் கொத்தமனசாகிறஇது அசையாதநிலையில் நில்லாதச்சஞ்சல சுபாவத் தையுடையதாய் விஷயத்தைக்கலக்கும் இதையசையாத நிலைநிறு

த்தக்கூடாதென்றும் இதைநிறுத்துகிறேம் என்கிற காற்றைப்பிடித்த டக்கிறதற்கு ஒப்பாகுமென்றும் அறிகிறேனென்றவாறு. ✲காற்றுவமானம் காற்றலைவதேசுபாவமாகையால் அதைப் பிடித்து அலையாமலடக்கிறதற்குக் கூடாதுபோல அலைகிறமனதை அலையாமலடக்குவது கூடாதென்பது. (உச)

( அறுசீரடியாசிரியவிருத்தம். )

இவ்வகைவிசையன் கூற மாயவனியம்பல்செய்வா.... ✲
ஐவகைப்புலனுநெஞ்சு மடக்குகையரிதானாலு....... ✲
மெய்வகையுரைத்தயோக முஞற்றலிதானும்மாவா...... ✲
வைவகைப்புலன்செயின்ப மனத்தையும்வெறுத்தலானும் ✲

(இ-ள்.) என்றிப்படி யருச்சுனன்சொல்ல ஸ்ரீகிருஷ்ண சுவாமி சொல்லுவார் அஞ்சுவிதமான விஷயங்களையும் மனதையடக்குதலரிதானாலும் பிழைக்கும்படிசொன்ன யோகாப் பியாசத்தினாலும் விடாதபஞ்சவிஷயங்கள் செய்கிறவெல்லாச்சுகத்தையும்வெறுக்கிறவயிராக்கியத்தினாலுமென்றவாறு. (உரு)

(கலிவிருத்தம்.)

வெய்யநெஞ்சமடங்கிடுவேறிதற் ...................... ✲
கையமில்லையென்றேயறியாதலாற் ........................ ✲
பையவேகரணம்பதினான் கையுங்................... ✲
கைகடந்தவர்யோகமுங் கைகண்டார்............ ✲

(இ-ள்) இந்த அப்பியாசத்தினாலும்,வயிராக்கியத்தினாலும்,கொடுமையுள்ள மனசுஅலையாமலடங்கும்இதற்கு அடங்காதென்கிறசந்தேகமில்லை இதுநிச்சயமென்றேயறி அருச்சுனா ஆகையால்சீக்கிரப்படாமையால் மெள்ளமெள்ள பதினாலுகரணத்தையடங் கைகடந்தவர்களே-யோகமும்-ஞானமுங்கைகண்டவர்களென்றவாறு. ✲ அடங்குதனுக்குவேறுவது- அடங்காதது பதினாறு கரணமாவது ஞானேந்திரியமஞ்சும், கன்மேந்திரியமஞ்சும், அந்தக்கரணம் நாலும் கூடியதுபதினாலுகரணம். (உசா)

என்றகூறவிசையனியம்புவா .......................... ✲
னின்றியோகத்திலேநெடுநாளெலாம் ............... ✲
பொன்றுங்காலத்த யாந்துயிர்போயினற்....... ✲
சென்றுநற்கதியேயன்றிச்சேருமோ ............... ✲

(இ-ள்.) இப்படியென்று ஸ்ரீகிருஷ்ண சுவாமிசொல்ல அருச்சுனன்சொல்லுவான் யோகத்திலே அனேகநாளெல்லாம் நின்றுசாகிறகாலத்தில் மறந்து சிவன்போனால் நல்ல மோட்சத்திலே போய்ச்சேருமோ அல்லாமல் பொல்லாத நரகத்திலே போய்ச் சேருமோவென்றவாறு. (உஎ)

யோகமேவவிளைகவொருவினன் ............... *
மோகமேவலின்யோகமுடிந்தில ............... *
னேகமோவிருபாலும்விட்டானிற்ற... ... .... *
மேகமேயெனவீழ்ந்துகழியுமோ...... .... .....*

(இ-ள்.) யோகத்தையடைய வேண்டிக்கருமங்களை விட்டவன் மோகத்தினை தேவலான் இச்சைபினாலே மனசுசஞ்சலப்பட்டுயோகமுடியவில்லாதவனுக்குக் கெதி மோட்சமோ நரகமோ மூடனும் ஞானியுமல்லாமல் இந்தஇரண்டும்விட உபையபிரஷ்டனாயொன்றிலுங் கூடாதவன் ஆகாசகமன மற்ற மேகத்தைப்போலக் கீழேவிழுந்தழிவானோ மேலெழும்பியிருப்பானென்றவாறு. (உஅ)

(கலிவிருத்தம்.)

மையவிதுவென் மனத்தினின் மற்றிந்த.......................*
வையமறுக்கவல் லாரில்லை நீயன்றி ..... ................... .... *
யுய்யவிதனை யுரையென்ன யோகத்தின்............................*
மெய்யனிதனை விரிய வுரைக்கின்றான் ............. .......... *

(இ-ள்.)என்மனதில் சந்தேகம்இந்தச்சந்தேகத்தைத்தீர்க்கச் சர்வக்கியனான நீயல்லாமல் வேறுவல்லவர்களில்லை நான் பிழைக்க இந்தச்சந்தேகத்தை விளங்கச்சொல்லுமென்று சொல்லஇந்த யோகத்தினில் சத்தியனான ஸ்ரீகிருஷ்ணசுவாமி விளங்கச் சொல்லுவாரென்றவாறு. ※ மற்று—அசை. (உகூ)

பொய்மையடையாப் புலனுடைமாந்தர்க.............. *
ளிம்மையிடையு மறுமை யுலகத்தும் ... .... . ... .... ...*
வெம்மையடைகிலா மெய்மை விடாவொன்னுஞ்......... *
செம்மைதெளிய வின்றுசெப் பிடுவல்கேள்......... ...*

(இ-ள்.) மாயையடையாத அறிவுடையயோகசஞ்சலமானமனிதர்களிந்த சென்மத்திணிடத்தி லிச்சையானதை யடையார் மறு சென்

மமான மரணநிலையிலே கொடுமையான நரகத்தையடையார் சத்தியமான மோக்ஷத்தை விடாரென்று சொல்லப்பட்ட செவ்வையானது தெளிவுஇன்னஞ்சொல்லுவேன்கேள் அருச்சுனாவென்றவாறு. ❈ செம்மையாவது இம்மைக்கு விருப்பமும் மறுமைக்கு மரணமுமாகவிரண்டு பொருள்கொண்டது. (௬௰)

யோகமுடியா திடையே யிறந்தவனி ......... ........ *
யாகவினைபலசெய் தாங்கிவைந் திமின் ........ ........ *
சோகமினுடெய்தித் துன்பம் தொடராத......... ........ *
போகநுகர்ந்துபல காலங்கள் போயபின் ........ ........ *

(இ-ள்.) யோகமுடியாத நடுவிலே போகத்திலிச்சித்து யாககர்மங்கள்பலவாகச்செய்துசெத்தவன் அந்தப்போகம்பொருந்தி யிருக்கப்பட்டவெளிவில்லாதலோகத்தையடைந்து துக்கந்தொடராதபோகத்தையநுபவித்துவெகுகாலங்கள்போனபிறகுஎன்றவாறு. ❈ யோகமுடியாதிடையே யாகவினைபல செய்திறந்தானுங்கெளமாறுக (௬௧)

சிறந்தவரசா திருக்குலத் தாத ........ ........ *
லறந்தருமியோகி கடங்குலத் தாதல் ........ ........ *
பிறந்துபெறுவ தெலாம்பெற்றும் பின்னு ........ ...*
மறந்தவியோக மகிழ்வுடனே யதுமால் ........ *

(இ-ள்.) சிறந்தராசாக்களுடைய அழகியகுலத்திலாகுகல்தருமத்தைத்தரப்பட்ட யோகிகளின் குலத்திலாகுதல பிறந்து பெறவேண்டிய போகமெல்லாம் பெற்றுப்பின்னையும் முன்சென்மத்திலே மறந்த யோகத்தைப் பின்சென்மத்திலே மகிழ்ச்சியுடனே யடைவனென்றவாறு. ❈ யோகமுடியாதென்ற கவியுஞ் சிறந்தவரசவென்றகவியுமொருதொடர்.— (௬௨)

கொண்டுபயிலுங் குணமில ராயினு ........ ........ *
மூண்டு தெளிவென் றுணர்ந்த வியோகந்தான் ........ *
பண்டுபயின்ற பயிற்சியன் றோர்களைத் ........ ........ *
தண்டுதலின்றி முன்றுனேதலைப்படும்........ ........ *

(இ-ள்.) யத்தினம் பண்ணிக்கொண்டு அப்பியாசம்பண்ணப்பட்ட குணமில்லாதவனானாலும்தெளிவுண்டென்றறிந்த யோகமானது பூ

ஏவம் அப்பியாசம்பண்ணின அப்பியாசிகளை நீங்குதலில்லாமல்அவர்கள் முன்னேதானேவந்து தலைப்படுமென்றவாறு. ❁ மேவ வொரு பத்தினத்திலும் வேறொருவராலும் வரவேணுமென்கிற பிரயோசனமில்லாமல் எளிதாகத்தானேவந்து முன்னிற்குமென்றது. (௧௩)

அனையவியோகத்தை யாற்றுவனென்று ... ........ .... ✽
நினையுமவனுநெறிபிறழாமே ...... ......... .... ... ......... ✽
வினைகள்பலசெய்து வேழவி முடித்தாற் ... ........ ... ✽
கனையுங்கதிர்மேற் கதியை யவன்பெறும் .... ........ ... ✽

(இ-ள்.) அப்படிக்கொத்தயோகத்தைச் செய்வனென்று நினைக்கப்பட்டவனுஞ் சாஸ்திர மார்க்கந்தப்பாமற் கருமங்களைபல்வாகச் செய்துயாகத்தை முடித்தாற்சத்திக்கப்பட்ட சூரியனுக்கு மேலாகதியை யவன்பெறுவனென்றவாறு. ❁ நினையுமவனுமெனறவும் மைசிறப்பும்மை அதாவது நினைக்கிறவனுக்கு மேற்கதி பெற்றார். செய்கிறவனுக்குஞ் செய்து நடுவிலேவிட்டவனுக்கும் பெறுவதுசந்தேகமில்லையென்ற சிறப்பும்மைகளையுங் கதிராவது நித்தியமாயடங்கின சீவன்களை யெழுப்பிப்பேசுவிக்கிற சத்தத்தைக் கொடுக்கையாலே சத்திக்கப்பட்ட சூரியனென்றது. (௧௪)

நீடுமதினிலே நின்றில ராயினும் ... ........................ ✽
மோடுமவகையின் விடாதே யுழன்றவன் ....... ..... ✽
பாடுப்பவங்கள் பலகடந் தாயினும் ........ ........ ✽
வீடும்பெறு மின்னம் வேறுஞ்சில கேளாய் ........... ✽

(இ-ள்.) பெரிய அந்தயோகத்தி லசையாதநிலையாக நிற்கவில்லாதவனானாலு மிச்சைகளினாலே சஞ்சலப்பட்டோடப்பட்ட விதத்தினாலும் விடாமலந்தயோகத்திலே யுழன்றவன் சொல்லப்பட்டபிறவிகளனேகங்கடந்தாலு மந்தத்தப்பிறவி முடிவிலே மேலோகங்களைப் பெற்று முடிவுபிறப்பிலே மோக்ஷத்தையும் பெறுவன இன்னம்வேறுவிதமுஞ் சில சொல்லுகிறேன் கேட்பா யென்றவாறு. ❁ ஆயினுமென்ற வும்மையுஞ் சிறப்பும்மை. (௧௫)

எல்லாத்தவமு மியற்றிநின் றேனினும் ......... ......... ✽
மெல்லாக்கலைகளுங் கற்றுணர்ந்தோனினுஞ் ........... ✽
செல்லாக்கரும மெல்லாஞ் செய்தவனினு ........ ... .... ✽
நல்லானியோகியே நீயவை நண்ணுவாய்........... ✽

(இ-ள்.) எல்லாத்தவங்களுஞ்செய்து நின்றவனிலும் வேதமுதலா
னநூல்களுங்கற்றுத் தெளிந்தவனிலும் நல்லவனயோகியேயல்லாம
ல்வேறொருவனல்ல ஆகையால் நீயு மந்த யோகத்தைச் செய்வாயெ
ன்றவாறு.— (௫௪)

(கொச்சகக்கலிப்பா.)

இருவகையவினையறுக்கும் யோகியரெல்லார்களினு *
மருவிரியமனத்தினையு மன்னையுமென் பால்வைக்கு *
மொருவனுமேயானுவக்கப் படுகின்றா னெனவுணா *
த்தா - னருவெனவு முருவெனமுன் பாராவு மறிவரி
யோன்...... ...................................*

(இ-ள்.) நல்வினை தீவினையென் றிரண்டுவிதமான கருமங்களை யொ
ழிக்கப்பட்ட யோகிகளெல்லார்களிலுங்கூட அரிதானமன தையும்
அன்பையுமென்னிடத்தில் வைக்கப்பட்ட ஒருயோகியுமே நான் சந்
தோஷிப் பத்தக்கவனல்லாமல் மனதையு மன்பையும் என்னிட
த்தில் வைக்காதமற்றயோகிகள் நான்சந்தோஷிப்பதற்குரியரல்ல
வென்றுசொன்னார் அருவமென்றும் அல்லவுருவமென்று முன்புள்
ளத்தை ஆராலுமறிய அரிதான ஸ்ரீகிருஷ்ணசுவாமியென்றவாறு. ௫

ஆறாவது-அப்பியாசயோக - அத்தியாயம்-முற்றும்-

ஆக அத்தியாயம் ௬ - க்கு கூடிய செய்யுள். (௨௱௫-)

ஏழாவது.

# மாயாரூப-அத்தியாயம்.

(அறுசீரடியாசிரியவிருத்தம்.)

உய்யவன்பினொடு மென்னையேயடைய யோகமேபயிலும்யோ
கித்தா-னையகன்றியென்னை யேயடைந்திடும தையநீயுமறிவாயெ
னு-ஷ்வையமுண்டுமறை நீர்மையுண்டிடையர் மாதருண்டிடம

லர்ந்திடுஞ் - செய்யதன்பவள வாய்திறந்துதிரு மாது கேள்வ
னிவைசெப்புவான். ... ... ... ... ... ... ... ... ... ... ... ... *

(இ-ள்.) ஸ்ரீமகா லட்சுமிக்கு நாயகனான ஸ்ரீகிருஷ்ணசுவாமியும் பூமியையும் வைகுண்டத்தையுண்டு இப்போது இடையருடைய பெண்களுண்ணத்தக்கதாக மலரப்பட்ட சிவந்த குளிர்ந்த பவளத்தையொப்பான திருவாயைத்திறந்து ஐயா பிழைக்கவேண்டியபத்திபேடும் மெய்ஞ்ஞானத்தோடும் என்னையே சேரத்தக்கதாகயோகத்தைச்செய்யப்பட்ட யோகிதான சந்தேகமில்லாமல் வேறொருவரையடையாமல் என்னையடைவான் அதைநான் உனக்குச்சொல்ல நீயுமறிவாயெனவே மேலறியவேண்டுவ தில்லையென்றது குறிப்பு.

மாயுமாயைமறையாதநெஞ்சினிடை மற்றெனுண்மையினை
வாய்மையா - லேயுமாறறிவதிந்துள்ளோர்களறி யாததொன்று
மில்லையெண்ணினு - மாயுமானிடரனேகர் பாலொருவனென்னை
யாயமனம்வைத்துளா - ராயுமானுடர னேகர்பாலொருவனே
யறிந்துமுடிவர்களையா; ... ... ... ... ... ... ... ... ... *

(இ-ள்.) அழியப்பட்ட மாயையால் மறையாதமனதினிடத்தில் மற்றஎன்னுடைய உண்மையைஞானத்தினாலேயிசையும்படி ஞானத்திலறிந்திருக்கிற பேர்களறியாத தொன்றுமில்லை யென்றாலும்நாசமாகப்பட்ட மனிதரனேகரிடத்தி லொருவனென்னை ஆராயமனம் வைத்திருக்கிறவன் இப்படியாராயப்பட்டமனிதரனேகரிடத்திலொருவனை என்னையறிந்துகவலையொழிவானல்லாமல் எல்லாரும் ஆராயவுமறியமாட்டார்களையாவென்றவாறு. ❁ ஆராய்த லாவது ஞானத்தால்விசாரித்தல். (௨)

மண்ணுநீருமெரிதீயும்வாய்வுமவ வானினோடு மனம்புத்
தியு; மெண்ணுநீர்மைகளின் யானெனும்பதமுமென்
றவ்வெட்டுமிவை யன்றியே, பண்ணுநீர்மைகளின் மேல
தாயுலகில் யாவையுங்கொடு பரித்துடற், கண்ணுநீடுயிரு
மாகியென்னுடைய மாயைநிற்பதுகை வேலினோய் *

(இ-ள்.) பிருதிவியும்-அப்பும்-எரிகிறதேய்வும்-வாய்வும்- அந்தஆகாசமும்- அதனுடனேமனசும் புத்தியுமறிக்கப்பட்ட குணங்களிலே தானென்றுசொல்லப்பட்ட ஆங்காரமும்- இந்தவெட்டும் உண்டா

கிறகாரணமான பிரகிருதிஇது அபரப்பிரகிருதி இல்லாமற் பண்ணப்பட்ட குணங்களிலே மேலானதாய்ச் சகலசெகத்தையுந் தாங்கிக்கொண்டுசுமந்து அபரப்பிரகிருதியான உடலிடமுந் தானாகவிருக்கிறஉயிரும் போலவாகி-என்னுடைய பரப்பிரகிருதியான மாயை நிற்பது கையில்வேலையுடைய அருச்சுனனென்றவாறு. (௩)

கண்ணினிற்றெரிப வுற்றுணர்ந்தவிவ் விரண்டி னாலும்
வருகாரியம், பண்ணினிற்பன நடப்ப வென்றபொருள்
யாவுமற்றிவ்விரு டான்மையே, நண்ணிநிற்பதுலகா தலா
னுலகி னுசவுற்பவமு தானல, தெண்ணின்மற்றறிவதில்
லெபெட்டெபருளு மென்னிலன்னியம தல்லவால......*

(இ-ள்.) கண்ணிலே தெரிப்பட் டறிந்த இந்தப்பராபரப்பிரகிருதி இரண்டினாலும், பிறக்கப்பட்ட காரியத்தைப் பண்ணி நிற்பன நடப்பனவென்ற பொருள்கள் சகலமுமுன்சொன்ன இந்தஇரண்டு பிரகிருதிகளினுடைய சுபாவமேபெற்று நிற்கிறது உலகமாதலால் உலகத்திலே செனனமரணமும் இவைகளைச் செய்கிறகாரணமும் நானேயென்னையல்லாமல் வேறேயுண்டோ வென்று விசாரிக்கில் வேறில்லாதினாலே யுண்டென்றதில்லை ஆகையாற் பிரகிருதியுமதனாலுண்டாகிறசெகத்துமுதலானதும் எந்தப்பொருளுமென்னிலன்னியமல்லாமல் எல்லாம் நானேயென்றவாறு. அபரப்பிரகிருதியாவது-சடமானவுடம்பும்- பரப்பிரகிருதியாவது - அச்சடமான சீவன் இல்லையென்றதனாலே பிரமமே நான் இதற்கு மேலானது நிச்சயமாகவில்லை யென்பது. (௪)

(அறுசீரடியாசிரியவிருத்தம்.)

வேதமாகிநிகழ் யானலா துலகி லென்னில்வேறெனவிளங்
கிடும், பூதமானவை பொருக்க வேறுபொறை யாளரில்
லையது போலெனி, லோதுமாமணி யனேக மூடுருவு
கோவை நூலினுரு பான்மைபோர்; பேதமாய பொரு
டோறு நான்மருவி நின்றவாறு தனி பேசுவாம்......*

(இ-ள்.) சொல்லும் பொருளு மொன்றுபோலவும்-பொருள்சொல்லுமன்ற சொல்வேறுபொருள்வேறான விரண்டுபோலவும் இப்படி இரண்டாகப் பிரிக்கக்கூடாததொன்றாகவும் இப்படி இருக்கிறவேதத்தையொப்பாகி உலகமென்னும் நாமெனன்றுமிரண்டாய் உற்றறி

யும்யோதொன்றாய் விளங்கப்பட்ட நானல்லாமல் என்னில் வேறெ
ன்று சொல்லாத தக்கதாக உலகத்தில் விளங்கப்பட்ட பஞ்சபூதங்க
ளையுந்தாங்க வேறேதாங்குவாரில்லை நானே தாங்குகிறவன் அதெப்
படிப்போலவென்னில்சொல்லப்பட்ட அழகுள்ள ரத்தினங்களனே
கம் ஊடுருகும்படி கோவைப்பட்ட நூலி லிருக்கிறபடி போலநா
னே செகத்துக்கு ஆதாரம் இப்படி அளவற்றபேதமாகியபதார்த்தங்
கள்தோறும் நான் கலந்து நின்றபடியைய மிகுதியாகச்சொல்லுவே
னென்றவாறு (௫)

(கொச்சகக்கலிப்பா.)

திரியுமிருகதிரினிடை திகழொளிநான் திருமறையி .... *
னரியமுதலெழுத்துநா னடவர்பாலாண்மையுநான் .. *
விரிபுனலிற்சுவையுநான் மேதினியில்வாசமுநா ...... *
னெரியில்வருவெம்மையுநா னாகாயத்தெழுமொலிநான்.

(இ-ள்.) ஆகாசத்திலே சஞ்சரிக்கப்பட்ட சூரியசந்திராளிடத்தில்
விளங்கப்பட்ட பிரகாசம்நான் ஓத அரிய அழகியவேதத்தில்-முத
லெழுத்தான பிரணவம்நான் புருஷர்களிடத்தில் ஆண்மையும் நான்
விரிவானசெலத்தி லருசியும் நான் பிருதிவியிற் கெந்தமும் நான்
அக்கினியில்வரப்பட்ட உஷ்ணமும்நான் ஆகாசத்திலெழும்புகிறச
த்தமுநான் என்றவாறு. (௬)

ஆன்றவறிவுடையோர்பா லறிவுநானடங்கினர்பால்.... *
வான்றவநான்வளநன்மை பூண்டவர்பால்வான்புகழ்நான்
தோன்றுமிகுதிறலோர்பாற் காமமுறுத்தேவலிநா *
னூன்றுபொருளனைத்திலுக்குமுயிராகியுள்ளேனுன் *

(இ-ள்.) அமைந்த அறிவுடையோரிடத்தில் அறிவுநான் - துறவிக
ளிடத்திற் பெருமைபொருந்திய தவசுநான் - வளமையானநன்மை
யைத் தரித்தவர்களிடத்தில்வளமையுள்ள கீர்த்திநான் மிகுந்துகாண
ப்பட்ட பெலமுள்ளவர்களிடத்தி லசையப்படா புசபெலம் நான்
இப்படிப்பிரபஞ்சத்தில் நிறுத்தப்பட்டசகலபதார்த்தங்களுக்குஞ்சீ
வனுயிருக்கின்றவன் நானென்றவாறு. (௭)

மூன்றுகுணவகையாகி முடிகின்றபொருண்முழுதுந் *
தோன்றுவதுமென்னிடையே யெனைதமதாடர்ந்தித்திற்

பதுவு, மானறவவற்றவற்றினிடை யான்றேன்றேனவற்
றிறுக்குச், சான்றென நிற்குவனல்லா லவைசார்ந்து
வாழேனல் .......... .......... .......... .......... *

(இ-ள்.) மூன்றுகுணபேதமாகி யறியப்பட்டபதார்த்தங்களெல்லாம் உண்டாவதும் என்னிடத்திலே நிற்பதுவும் என்னைத்துடர்ந்தே அல்லாமல் வேறிடத்துண்டாகவும் வேறொன்றினைத்தொடரவும் என்னையல்லாமல் வேறொன்றுமில்லாநிருலே கூடாது இப்படி என்னிடத்தி லுண்டாய் நிறைந்த அந்தந்தப் பதார்த்தங்களிடத்தில் நான்பிறவேன் அவைகளுக்குச சாட்சியென்று நிற்பேனல்லாமல்அவைகள்என்னைத்துடர்ந்துவாழ்வது போலநான் அவைகளைக்கூடியிரேனென்றவாறு. ※சகலமும்-என்னிடத்திலுண்டாகி என்னைக்கூடியிருக்கும்நான்அவைகளிற்பிறவேன் அவைகளிற்கூடேன்எல்லாவற்றுக்கும்நானேசாட்சியாய் நிற்பேனென்றவாறு. (அ)

மைக்குணங்களெனுமவற்றின் மயமாகிமமதத்துவுமா *
யிக்குணங்கண்மூன்றானு மயக்கப்பட்டறிவிழந்து... *
தொக்குணங்குன்றவுயிரவையெல்லாஞ்சுடர்வேலோ*
யக்குணங்கள்கடந்தவென்னை யறியுமோவறியாவால் ...... *

(இ-ள்.) முக்குணங்களென்று சொல்லப்பட்ட அந்த அஞ்ஞானகுணமயமாகி அஞ்ஞானமனசுடையதுமாகி இந்ததாமசராசத-சாத்விகமென்றகுணங்கள்-மூன்றினாலு-மயக்கப்பட்டு-அறிவுகெட்டுக்கூடி சரீரமறந்து கிடக்கிறசீவன் இந்தச் சீவனெல்லாம்-அந்தக்குணங்களைக்கடந்த என்னையறியுமோ பிரகாசமுள்ள வேலையுடைய அருச்சுனா அறியா வென்றவாறு. ※ குணங் கடந் தவனு வது. குணாதீதன் — (கூ)

இவ்வகையகுணமூன்றி னியற்கைத்தாமாராலுஞ் ......*
செய்வகையதல்லாவென் மாயைப்பிணிற்றிகைப்பொழிந்திங்
குய்வகையதறிவெதவர்க்கு மென்னையேயெப்பொழுது *
மெய்வகையோடடைகின்ற மனமிலரோல்வேல்வேந்தே*

(இ-ள்.) வேலையுடையராசாவே என்னைத்தானே எந்தநாளும்மெய்யன்போடு சரணமடைகிற மனதல்லாதவர்களாகில் - இந்த விதமான முக்குணத்தினுடைய சுபாவமானதால் ஆராலுஞ்செய்ய

த்தக்கதல்லாத வென்மாயையினுடைய மயக்க மொழிந்து இப்படி த்தப்பிப்பிழைக்கின்றவிதம் எவர்களுக்குமரிதென்றவாறு. என்னை யடைந்தவர்கள் மாயையைக் கடப்பரென்ப தருத்தாபத்தி எப்பொழுதுமென்றதனால் ஒருநாள் வேறுசெய்யினும் யோகப் பிரஷ்டனாவனெனறவாறு. (௰)

ஊழாலேவருமந்த மாயையினாலேயுள்ளம் ............... *
பாழாகவுழிவங்கே பறியுண்டுநெறிநின்றோர்........... *
வீழ தகிவினையே வினையாகவிளைகின்ற ............. *
கிழாரேன்னையடையா ரடைவாருஞ்சிலருளர்கேள்...*

(இ-ள்.) பூருவ வினையாலே தொடர்ந்து வரப்பட்ட அந்த மாயையினாலே மனதுழுடமாக அங்கேஞானமானது மாயையாலே பறியுண்டு அஞ்ஞானமார்க்கத்தில் நின்றபேர்கள் தொலையாதேபாபமேகர்ம்மமாகவினையப்பட்டஹீனபேர்கள் என்னையடையார் என்னையடைகின்றபேருஞ் சிலருண்டு சொல்லுகிறேன்கேள்.எ-று.(௰௧)

(கலிவிருத்தம்.)

செல்ல விரும்பினர் செல்ல லடைந்தோ.............. *
நல்லிகழந்தென்னை யன்புசெய் வோர்க............... *
ளல்லதறிந்தமெய்ஞ் ஞானியினால் வரும்......... *
வல்லதிதென்னை வணங்குத வத்தோர்............ *

(இ-ள்.) செல்ல இச்சித்தவர்கள் பிர்ம்மத்தைக் கூடுதலாக ஆத்மசொரூபமறியவேணுமென்று ஆரம்பித்தவர்கள்மாயையைவிட்டுப்பிரிந்து என்னை யன்புசெய்கிற பத்தர்கள் நல்லதானசொரூபத்தையறிந்தசத்தியஞானி யிந்தநாலுபேருந் தங்களாலேசெய்யவல்லமட்டும் என்னைவணங்கின தவத்தின் ரொன்றவாறு. (௰௨)

இன்னவர் தங்களி லென்னொடு வேறு.................. *
யுன்னலிலாமையின் ஞானி யுயர்ந்தோ............... *
னன்னவனல்ல னெனக்கவ னுக்கே................... *
தன்னலம்வைப்பது நானு நலத்தோய்.............. *

(இ-ள்.) இந்தநாலுபேர்களி லென்னோடு கூடின சித்த முண்டானவனாகித் தான்வேறு நான்வேறாக்கி நினைப்ப தில்லாததினாலே ஞானியானவன் அந்தஞானி யெனக்குநல்லவன் நானும் அவனுக்கே நல்

லைகத்தை வைப்பதல்லாமல் வேறுள்ளவர்களுக்கு வைப்ப தில்லை ண்டாய் நன்மையுள்ள அருச்சுனா! வென்றவாறு. (௰௩)

ஓதருமஞானியென னுண்மையி னுள்ளே......... *
ஏகவிலா மையினையாமென லேயா ............ *
மாதவி ழுலவ னேசில வாய .......... *
காதவினுய பவங்களி லெய்தா.......... *

(இ-ள்.) சொல்ல அரிதான ஞானியானவன் என்னுடை யவுண்மையி னுள்ளே கூடினவ னாதலா லவனே நானென்றுசொ ல்லலாம் அல்லாமல் நான்வேறு அவன்வேறல்ல ஆதலாலவனே கொ ஞ்சமான ஆசையிலுண்டாகிய பிறவியைக்கடந்ததென்றவாறு. (௰௪)

விரியவுணர்ந்த விழுப்பொருளெல்லா........ *
மூரியவெனன்றியிலாத வொழுக்கந் ........ *
தெரியவறிந்தென்னை யேசெறி கற்பா.......... *
னரியனவன்பெறு தற்கயில் வேலோய்........ *

(இ-ள்.) விஸ்தாரமாக அறிந்த சிறப்புள்ளபொருள்களெல்லா மூரிமை யுள்ள வென்னையல்லாம லில்லாதசெய்தியைத்தெரியஅறி ந்து எல்லாம் நானே யென்று என்னையே கூடுகிறவன் ஆகையா ற்கூர்மையுள்ள வேலையுடைய அருச்சுனா! அப்படிக்கொத்தஞானிகி டைக்கிறதற்கு அரிதானவனென்றவாறு. ※ ஓதருஞானியென்ற கவியு ம், விரியவுணர்ந்தவென்றகவியுமொருதொடர்.— அரியனென்றதனா லிப்படிக்கொத்த ஞானமெல்லாருக்கும்வாராது எவனாகிலுமொ ருவனுக்கு வருகிறதினாலே யவனைக்காண்கிறது அரிதென்றறிவது.

மற்றவருந் தம் மனங்களிலவைத்த........ *
பற்றதில்லை பறியுண் டறிவெல்லா.......... *
முற்றவை தத்திடு தெய்வவொழுக்கா........ *
னற்றவநின்றவை நண்ணுவர் நல்லோய்...... *

(இ-ள்.) இந்தஞானியையல்லாத மற்றவர்களுந் தங்களுடைய மன துகளில்வைத்த இச்சையிலே ஞானமெல்லாம் பறிகொடுத்துத் தங்க ளுடையமனதுகளிலிச்சித்தபோகங்களைக்கொடுக்கிறஅந்தந்தத்தே வதைகளுடையவொழுக்கத்தாலே நல்லதவசுகளில்நின்றுசெய்து அந்தயி

ச்சைகளை அந்தந்தத்தேவதைகளாலே அடைவார்கள் நல்லவரென அர்ச்சுநனென்றவாறு. ※ தெய்வவெழுக்கமாவதுள்ள தேர்தவிச்சைகளையுற்றெந்தத்தெய்வங்கொடுக்குமோ அந்தந்தத்தெய்வங்களுக்குப்பூசைவிதியெதெந்தப்படியோ அத்தந்தப் பூசாவிதிமுறைநியவது.— (௰௬)

யாவனொருத்தனி யாதொரு தெய்வ............*
மேவலர்ச்சனை யன்பின் விளைப்பா.............*
னுவல்சலிப்பறு மன்னவ னுக்கே..............*
நாவலமுற்ற நளித்திடு வேனே................*

(இ-ள்.) எவனுகிலுமொருத்தன் எதாகிலுமோர் தெய்வத்தைத்யிச்சித்தனைதக்கூடி வேண்டியபத்தியிலேயாராதனைபண்ணுவானோ அவனுக்கு ஆவதான சலிப் பற்று இச் சித்தனு பெறுவன அவனுக்குநாக்கினுடையபெலமும்அதிகமாகத்தோத்திரம் பண்ணப்பட்டபத்தியைநிறைவேற்றநான்கொடுப்பேனென்றவாறு.※பத்தியைநான்கொடுப்பேனென்றதனால்அந்தந்தத்தேவதைகள் தங்களாலேகொடுக்கத்தக்க பலனைக்கொடுப்பதல்லாமல் தங்கள்மேலே பத்தியுங்கொடுக்கமாட்டாது அந்தத்தெய்வங்கள்மேலே பத்தியுங்கொடுத்து அந்தத்தெய்வரூபமாகப் பலனையுங்கொடுக்கிறவன் நானேயென்றது.— (௰௭)

அளித்தனனன்பொடுமத்தெய்வநாளுங்.........*
களித்துவணங்கினர் காதல் வெல்லாம்........*
வெளிப்பட முற்ற விளைத்திடுவேனே.........*
ளெளிப்பரி தாமுரு மஞ்சவுடன்றேய்..........*

(இ-ள்.) ஒளிக்கஅரிதானே இடியானது பயபடச் சண்டைசெய்த அருச்சுநனே கேள் இப்படிநான் கொடுத்ததான அந்தப்பத்தியுடனும் இச்சையுனுங்கூட அந்தந்தத் தெய்வத்தைத்தினந்தினமும் மனதுசந்தோஷித்து வணங்கினவர்களின் இச்சையை யெல்லாம் அந்தந்த தெய்வங்களுக்குள்ளே யிருந்து பெறும்படிகுறையாமல் வெளியாகவுண்டாக்குவேன் நானென்றவாறு. ※இச்சைகளை வெளியாகவுண்டாக்குவனென்றதினாலே அந்தந்த தெய்வங்களுக் குள்ளே யிருந்துஉண்டாக்குவனென்ற தருத்தாபத்தி. (௰௮)

சிந்தையிலத்தெய்வமெய்த்தெய்வமென்றே ... *
முந்தவரிச்சனை யன்பின முடிக்கு ......... ... ...... *
மந்தமனத்தர் பெறும்பயன் வாறு ......... ... ...*
எந்தமுடைத்த தனிற்றமு மையா ...................... *

(இ-ள்.) ஐயாகேள் மனதிலே யிச்சைகளைக் கொடுக்கிற தெய்வத்தையழியாத மெய்த்தெய்வமென்று நிச்சயித்து முதன்மை யான பூசையை பத்தியினாலே முடிக்கப்பட்ட அந்தமன துடையவர்கள் பெறப்பட்டபலனும்ஆய்சும்நாசத்தையடைகிறது அந்தத்தெய்வமு ம்நாசமுடைய தென்றவாறு. ✻ இதனாலே யென்னைப் பூசிக்கிறவர்கள்பெறும் பலனும் ஆய்சும் நாளும் நாசமில்லாத தென் றருத்தாபத்தி.— (கசு)

(கலிவிருத்தம்.)

தானந்தமிலியுவமை தலைநின்று தாவரிய...... ...... *
வானந்தவுருவமென வெனவென்றுமறிவதிலா.. .... *
கோனந்த மகனரசா குலமைந்த னிவணிபலா........*
வானந்த மிலிலொருவ னிவனென்பாறிவிலிகள்..... .... *

(இ-ள்.) என்னை ஆதிதான அந்தந்தான உவமைதான் இல்லாதவனிவன் அழியாமல்நின்று ஆராலுங்கொடுக்க அரிதான ஆனந்தசொரூபமென்று ஒன்றுமறிவதில்லாதவர்கள் இவன் இடையருக்குராசாவான நந்த கோபன்மகன் ராசாவங்கிஷத்திற்பிறந்த ராச குமாரன் இந்தப்பூமியிலிருக்கிற மனிதவியற்கையானவன் நம்மிலொருவனென்பார் அறிவில்லாத மூடர்களென்றவாறு. ✻ தாவரியவாவது தன்னைத்தானே யாருக்காகிலுங் கொடுப்பதல்லாமல் வேறொருவ ராலே தன்னையாருக்குங் கொடுக்க அரிதானவனென்றது ஆனந்த மாவது பரமசுகம் அறி வுள்ளவர்கள் என்னை ஆதியும் அந்தமும் உவமையுமல்லாத சுகசொரூபமென்றறிவார்களென்ப தருத்தாபத்தி. (உo)

மருவுற்றபிரகிருதி யதிலுற்று மறைவன்மிக ........... *
வொருவற்கு மறியும்வகைவெளிநிற்பதிலையுலகில் .... *
வெருவுற்ற பெருமயரின் மன்முற்று விழிமறைய .... *
வருவுற்றவெனையுலக மறிகிற்ற திலையடைய ... ......... *

(இ-ள்.) நான் என்னுடனே கூடின பிரகிருதியிலே கூடிக்கா

படாமல் மிகவுமறைவேன் ஒருவருக்காகிலு மறியும்படி வெளியா நிற்பதில்லை யுலகத்திலே பயமுள்ள பெரியமாயையினது மயக்கத்தில்மனது கூடி அதினாலேகண்மறைப அதினாலே அருவமான வென்னை யுலகமெல்லாம் அறியமாட்டாதில்லையென்றவாறு. ✲ பிரகிருதியாவது —போகமாயை. (உ௧)

(எழுசீரடி யாசிரிய விருத்தம்.)

போனவையினிமேற் புகுதநின் றனவிப்பொழுதுபோ
கின்றனவனைத்தும் - யானறிந்திருப்பன் யானவையு முலகிலவன்றேமற் றியாவருமறியார் - மானவெஞ் சிலை யாய்
வேண்டல்வேண்டாமை தன்னிலே வருங்குணமயக்காற்
றுணையர்ந்துருவாய்ச் சனித்திடும்பொழுதே தத்தமெய்
யறிவுசார்ந்திடலால்........................ *

(இ-ள்.) கொல்லுந்தொழிலாலே கொடுமையுஞ் செய்ததினாலே பெருமையுள்ள வில்லையுடைய அருச்சுனா! போன காரியத்தையும் இனிமேல்வருகிறதாக நின்றகாரியத்தையும் இப்பொழுது நடக்கிறகாரியத்தையும் எல்லாவற்றையும்நானறிந்து நாசமில்லாம லிருப்பேன் உலகத்திலுள்ள யாவரு மென்றசராசீவன்களும் யாவையுமென்ற அசாசீவன்களும் விருப்பு வெறுப்பான ராகத்து வேஷங்களினாலே வரப்பட்ட திரிகுண மயக்கத்தினாலே தானே மறந்து ரூபமாய்கெற்பிககிறபோதே தங்கள்தங்களுடையசரீர அறிவான அஞ்ஞானம் அடைந் ததினாலே திரிகாலங் களிலும் என்னை யறியார்களென்றவாறு. ✲ இதனைப்பொருளுக்கேற்ப மாறுக மற்றவென்றது என்னை நான் அறிவதல்லாமல் மற்றியாவரும் யாவையும் அறியமாட்டாரென்பது. மெய்யறிவாவது-சரீரத்தையே தானென்றறிகிற அஞ்ஞானம்.— (உ௨)

வியக்கமே முயன்ற நல்வினைமாந்தர் விரும்பவராகிமுன் செய்து - பயக்கமேவிய தீவினையெலாமறவே பற் றறப் பரிந்தமுன் போனாற்-துய்க்கமேபுரியுஞ் சோகமே முதலாந் துவந்துவக் குணங்களிற்றொடர்ந்த - மயக்கமே வலரா வொழுக்கமே நிலை நின் றென்னையே மனத்திடைவைப்பார்.............................. *

(இ-ள்.) எல்லாருமதிசயிக்க மேலாகச்செய்த புண்ணியத்தை மனிதர்கள் இச்சியாதவர்களாகிப் பூருவத்திலேசெய்த அந்தப் புண்ணியம் பலனைக்கொடுக்க அவைகளாலே பூருவமேதொடர்ந்துவந்தபாவமெல்லாம் நாசமாகவே கருமபந்த மறப்பரிபக்குவமாகிப்போனாற் றுன்பத்தையேசெய்யப்பட்ட சோகமுதலான தொந்தக்குணங்களினாலே தொடர்ந்தமோகத்தைக் கூடாதவர்களாகின்றதிடபத்தியான வொழுக்கமே நிலைமையாகநின்று என்னையே மனதில் வைப்பார்களென்றவாறு. ❊ நல்வினையாலே தீவினையற்று ஒன்றாக்கொண்டிடாக இருவினைக்கட்டுமற்றுப் பரிபக்குவமாகிப்போனாற்றுன்பகாரணமான சோகமுதலாகத் தொந்தமாக அநாதியிலே தொடர்ந்தகுண மோகத்தைவிட்டு நிச்சயஞானபத்தியை யொழியாமல் நின்றென்னையே தங்கள்மனதில்வைப்பார்களென்பது. (உரு)

எறிவரும்பிணிமூப்பிறப்பொடு பிறப்பென்றிவைகெடுத்
திடற்பொருட்டாகக், குறிவரும்பரிசு நினைந்துமற்றெ
னையே கூடுதன்மேவிநின்றவர்க, ளறிவருப்பிரமந் தன்
னையுமதனை யறியுமெய்யறிவையு மறிவி, னெறிவருங்கரு
மமனைத்தையுமறிவா ரறிந்தபின்னிகழ்வதுங்கேளாய்.. ❊

(இ-ள்.) விலகிப்போய்விட அரிதான வியாதிமூப்பிறப்புக் கழிந்தவுடனே பிறப்புமென்றறிந்த நாலையுங் கெடுக்கிற நிமித்தமாக ஆத்மஞான சொரூபமான குறிவரும்படி நினைந்து என்னையே கூடுகிற முயற்சியையடைந்துநின்றவர்கள் அறிய அரிதான பிரமத்தையும் அந்தப் பிரமத்தை யறியப்பட்ட சத்திய ஞானத்தையும் அந்த ஞான மார்க்கத்தினாலே வரப்பட்டசகல கருமத்தையும் அறிவார் அப்படியறிந்தபிறகு நடப்பதுங்கேட்பாய் அருச்சுனனென்றவாறு.

(அறுசீரடியாசிரியவிருத்தம்.)

தேடும்பழையவதிபூத மதிதெய்வத்தோடதியெச்சங் ❊
கூடும்பரிசுநின்றவெனை யறிவாரிந்தப்புழுக்கூடு ..... ❊
வீடும்பொழுதுமென்னைமெய்யே யறிவாரென்றூர்யாய்வெ
றூடும்பலபமாயக்கூத் தாட்டுகின்றவம்மாயன். [வ்வே

(இ-ள்.) எல்லாரும் விசாரிக்கப்பட்ட பழையதான அதிபூதத்துடனும் - அதிதெய்வத்துடனும் - அதியெஞ்ஞத்துடனும்- கூடு

ம்படி நின்றவென்னை யறிகிறவர்கள் அவர்களுடைய இந்தப்பழுவிருக்கிற கூடாரமான தேகம் அழியும்போதும்-என்னையேயடையாக அறிவார்களென்று சொன்னார். நாம்வேறும்வேறாக ஆடப்பட்ட பழையதான மாயக் கூத்தையாட்டுகின்ற அந்தப்பரமாசுந்தவ னென்றவாறு. ※ தேகமிருக்கையில் தானே சகலபூதங்களிலும் சகல தெய்வங்களிலும் சகலகருமங்களிலும் பரிபூரணமாக நின்றவென்னை இந்தப்படியறிகிறவர்கள் தேகம்போகின்றபோதும் என்னையே சத்தியமாக அறிவார்களென்றிது இப்படி அறியாதவர்கள் சாகிறபோதும் மறந்துபிறவித்தொந்தப்படுவாரென்றருத்தாயத்து. (உ௰)

ஏழாவது-மாயாரூப-அத்தியாயம்-முற்றும்.
ஆக அத்தியாயம்-எ-க்கு- கூடியசெய்யுள். (உஉ௮)

எட்டாவது.

# அட்சரயோக

# அத்தியாயம்.

(கலிவிருத்தம்.)

அடையஞாலத்தை யார்த்ததிலார்ப்புறா ......... ※
யிடையதாம்பிடை யார்ப்பவிருப்பவற் ......... ※
குடையனுசமுன்னோதினவேகொடங் ......... ※
கடையருளவன் மீனவியம்புவான் ................ ※

(இ-ள்.) ஜகத்தையெல்லாந்தனக்குள்ளேகட்டி அந்தச்செகத்திலே தான்கட்டுண்ணாமல் இந்த அவதாரத்தில்-இடையருடையகயிறுனது-தன்னிடையைக்கட்ட அதனாலேகட்டுண்டிருக்கின்ற ஸ்ரீகிருஷ்ணசுவாமிக்குத் தன்னைச்சீஷித்துவமுடையவனாக முன்புசொன்னதையே சங்கையாகக் கொண்டு அப்போது பாண்டவர்களுடையமத்திபனுன் அருச்சுனன் திரும்பச்சொல்லுவானென்றவாறு. (க)

ஆயபிரமத்தோடாதி யாவமமைகரும ................. *
மேயவதிபூதமதிதெய்வமதியெச்சங் ................... *
காயமதிலுள்ளபரி சுங்கெழுமுகாயம் .................. *
வீயுறுறுபோதிலுனை மெய்தெளியுமாறும் ............. *

(இ-ள்.) நீர் சொன்னதாகிய பிரமத்துடனே ஆதியாக அமைந்த கருமம் இவைகளுடனே கூடின அதிபூதம்- அதிதெய்வம்- அதியெஞ்ஞமமென்று சொல்லப்பட்ட இந்த ஆறும் - தேகத்திலிருக்கின்றவிதமும்- இந்தஆறுடனுஞ் சினேகமானதேகம் நாசமடைகிறபோதில் உம்மையுண்மையாகத் தெளியப்பட்ட வழியும், இந்தவேழுமென்றவாறு. ❁ இந்தவேழையுங் கிரமமாகச் சொல்வது- பிரமம்-அதியாகம்-கருமம்-அதிபூதம்-அதிதெய்வம்-அதியெஞ்ஞம்- உண்மைதெளிவித்தல். ஆகவேழு இவைகட்கு எழுவகைவிருவென்று பெயர் மெய்யென்றும், உண்மையென்றும், சத்தியமென்றும், நித்தியமென்றும், பிரமத்தைச்சொல்லுவார்கள். இதனாலே- பொய்யென்றும், இன்மையென்றும், அசத்தியமென்றும்- அநித்தியமென்றும்; மாயையைச்சொல்லுவார்கள். உனைமெய் தெளியுமாறுசது உன்னையுண்மையாகத் தெளியும்படியென்றது. இதனாலே இப்பொழுது உன்னை மாயாதேகியாய் மயங்கியதினாலே அந்தியகாலத்தில் உன்னைப்பிரமமாகத் தெளியும்படியென்றது. (உ)

விரியவுரைசெய்தருள வேண்டுமெனமீண்டே ... *
வரியரவிலேதுயிலு மாயவனுரைப்பா........... *
னரியதழியாமையத னைத்தினுமுரைக்கிற் ..... *
பெரியதுமொழிந்தபிர மம்பிறவையுங்கேள்.... *

(இ-ள்,) தெரியும்படி விரிவாகத் திருவாய்மலர்ந்தருளிச்செய்யவேண்டுமென்று அருச்சுனன் சொல்லப் பொறியுள்ள ஆதிசேஷன் மேலே யோகநித்திரைசெய்தருளுகிற ஸ்ரீகிருஷ்ணசுவாமி திரும்பச் சொல்லுவார் சொல்லுமிடத்தில் வாக்குமனங்களுக் கெட்டாதது அழியாதது நித்தியமானது பெரியதுக்கும் பெரியதாய் எத்தனை சொல்லப்படுமோ அவைகளுக்கெல்லாம்பெரிது அது முன்னுக்குச்சொன்ன பிரமம் இனிப்பின்னுக்குச்சொன்ன மற்றஆறையுங்கேள் அருச்சுனாவென்றவாறு. ❁ ஆயபிரமத்தென்றகவியும், விரிய வுரைமயென்றகவியும், ஒருதொடர். உரைக்கிலரியதெனமாறுக:மொழிந்தபிரமம்பி

றவையுமென்றதனால் மூன்றாக இனிப்பின்னாகவெனவந்தது இவ்வ
ழும் மொழிந்த பிரமமென்றதனாற் பிரணவஅட்சரமாகச் சொன்
னபிரமமென்றுஞ் சொல்லலாம். (௩)

(அறுசீரடியாசிரியவிருத்தம்.)

அந்தக்கரணங்களினின்ற வறிவத்தியாகமாகின்ற......*
திந்தப்பிறவிதனையாக்கு மியாகங்கருமமென்பதுதா··*
னந்தற்கமைந்தவுடம்புதனை நானென்கின்றததிபூதம்.*
பந்தப்படுமிவ்வுடற்கமைந்தபுருடன்றெய்வமெனப்படுவான்.

(இ-ள்.) அத்தியாகமாகின்றது-அந்தக்கரணங்களிலேநின்ற அறிவு-கருமமென்பது-இந்தப்பிறவியை யுண்டாக்குகின்ற யாகமான சிருட்டி-அதிபூதமாகின்றது- அழிகிறதற்கு அமைந்த உடம்பை நானென்கின்ற ஆங்காரம்-அதிதெய்வமாகின்றது - கட்டுப்பட்டவிந்த வுடம்புக் கமைந்தபுருடனென்றவாறு. ✻ அத்தியாகமாகிறது-அத்தியாத்மகமென்னப்படும், (௪)

எஞ்சுதலையிலதியெச்ச மாகின்றதுதானிறக்குங்கா.................*
லெஞ்சுகவருநெறிகளெல்லா மடைத்துநினையப்படுவதுதா...... *
னஞ்சுபுலனும்பொறியைந்து மடக்கியறிவென்பாலதாயத்...... *
துஞ்சுமவர்களெனையடைவ தெவ்வாறெனனிற்சொல்லக்கேள்...*

(இ-ள்.) குறைவில்லாத அதியெஞ்ஞமாகின்றது-மனசைக்கிரிசிக்கிற விந்திரியவிஷயாதி வழிகளையெல்லாம் அடைத்துத் தான் சாகின்றபோது என்னுண்மையை நினைக்கப்படுவது பஞ்சேந்திரியத்தையும் பஞ்சவிஷயத்தையும், அடக்கி அறிவை என்னிடத்தில் வைத்துச் சாகின்றவர்கள் என்னை யடைவதெப்படி யென்றால்சொல்லக்கேள் அருச்சுனா;வென்றவாறு. (௫)

இந்தவுடலம்விடும்பொழுதி லேபாவனியாதொன்றினைநினைந்தா ....*
னந்தவகனையந்தப்பாவனையாலடையுமாதலினால்..................*
ரந்தனியல்லையெப்பொழுது மிதயத்திடைகொண்டென்பாலுஞ் *
சிந்தையொடுவாளமர்தொடங்கி லதனாலெனையேசேருதியால்......*

(இ-ள்.) எவனாகிலுமொருத்தனிந்தத் தேகம் விடுகிற போது எதை யாகிலும் ஒன்றையெந்தப் பாவனையாக நினைத்தானோ அவன் அதை அந்தப்பாவனையா லடைவான் ஆகையாலே யென்னுடைய

யான சுபாவத்தையெற்றாரு முன்னிருதயத்தினிடத்தில் வைத்துக் கொண்டு என்னிடமாக வைக்கப்பட்ட மனதுடனே கீர்த்திப்பிரகாசமுள்ள சன்னடையைத்தொடங்கிச் செய்தல்நானுனக்குள்ளும் நீயெனக்குள்ளு மானதினாலே யென்னையே நிச்சயமாகச் சேருவா யென்றவாறு. என்னையே யென்றதனால் சந்தேக மில்லையென்றது. (௬)

நல்லகருமயோகத்து ஞானயோகமதனினுந் …….. ………… *
செல்லுமன்னை மிகச்செலுத்திப் பிறிதொன் றினையுஞ்சேராதான். *
சொல்லவரியகதிரவன்மண் டலம்போற்றோன்றுந்தொல்லேனை …. *
யல்லதடையானவனிபற்றை யடையும்பரிசையறையக்கேள் …… *

(இ-ள்.) நல்லகருமயோகத்திலும்- ஞானயோகத்திலும் - என்னைச்சேரத்தக்கதாக மனதை மிகவுஞ்சேர்த்து வேறொன்றையுஞ் சேராதவன் இவ்வளவென்றுசொல்ல அரிதான அளவற்றசூரியமண்டலம்போல விளங்கப்பட்ட பழையவனை என்னையடைவானல்லாமல்வேறொன்றையுஞ்சேரான் அவன்சுபாவத்தை யடையும்படியைச்சொல்லக்கேளருச்சுன வென்றவாறு. (௭)

எல்லாப்பொருளுமறிவானை யெல்லாப்பொருட்கும்பழையானை *
எல்லாவையுந்தன்னிலே நிறுத்துவானை யிறப்பச்செறிவானை …. …. *
எல்லாப்பயனுமீவானை யார்க்கு நினைத்தற் கரியானை… …… ……*
எல்லாவிடத்தும் பொய்யிருளீர்த் திலங்குகதிர்போலெழுவானை -*

(இ-ள்.) எல்லாப்பொருளையு மறிந்த சருவக்கியனையெல்லாப்பொருளையு முண்டாக்குகிற சிருஷ்டியினாலே யெல்லாப் பொருளுக்கும்பழையவனை யெல்லாவற்றையுந் தன்னிலையில் நிறுத்துவதான திதிசெய்கிறவனை யெல்லாரையுஞ் சாகச்செய்து தான் சாகாமற் சங்காரஞ்செய்தவனானை யெல்லாப்பிரயோசனத்தையுங் கொடுக்கிற திரோபாவஞ்செய்கிறவனை யாருக்கும் நினைக்கிறதற்கெட்டாதவனை எல்லாவிடத்திலு மிருக்கிறபொய்யான யிருளைப்போக்கிப்பிரகாசிக்கிறஞானசொருபமாக வெழுந்து அனுக்கிரகஞ்செய்கிறவனை யென்றவாறு. ✲ இதனாற்பிரமத்த விரமற்றப் பொருள்களெல்லாம் அறிவில்லாததென்றும் புதிதென்றும் அநாதரரென்றும் அநித்தியரென்றும்அசுவதந்திரரென்றும் அடங்கினவரென்றும் மாயாமயமென்றும் அறிவது இதனுள் சிருஷ்டிதிதிசங்காரதிரோபவம் அனுக்கிரகமென்ற பஞ்சகிருத்தியமுங்காண்க. (௮

மருவற்குரிய வன்புடையான் மயங்காவியோகமனத்தாலே ...... *
புருவத்திடையே தன்னுடைய புனர்திருயிரைப் புகநிறுத்தி......*
யுருவத்தினைவிட்டிடிலிந்த யோகத்தாலே யவ்வொன்றும் ... ... [லோய்.
பொருவப்படுமிப் பொருண்மேலு மின்னம் புகல்வன் பொருவே

(இ-ள்.) இப்படிக்கொத்த வென்னைச் சேருகிறதற்குரித்தான பத்திமையுடையவன் வேறொன்றிலும் மயங்காதயோகந்திட சித்தத்தினாலே சத்திசெய்து குற்றந்தீர்ந்த தன்பிராணவாயுவைப் புருவநடுவே சேரநிறுத்தித் தேகத்தைவிட்டால் இந்தயோகத்தாலே அந்தப் பிரமமான வென்னோடுங் கூட்டப்படுவான் இந்தப் பொருளின் மேலே இன்னமொன்று சொல்லுவேன்கேள் சண்டைபண்ணுகிற வேலையுடைய அருச்சுன வென்றவாறு. ※ எல்லாப்பொருளு மென்ற கவியும் மருவற்குரிய வென்றகவியு மொருதொடர். (௯)

(கொச்சகக்கலிப்பா.)

யாதொன்றைமறைதெரிந்தோரழியாதென்றெடுத்துரைப்பா ... ...*
ரியாதொன்றை யவாவறுத்த யோகிகளா மெய்திடுவா ..........*
ரியாதொன்றையுற வுணர்ந்தோர் காமமுதவிய வீழ்ப்பா .........*
ரியாதொன்றைப் பரம்பொருளைச் சுருக்கமா யியம்புவன்கேள் -*

(இ-ள்.) வேதந்தெரிந்தவர்கள் எதையழியாதென்று தான் இச் சொல்வார்களோ ஆசையைக்கெடுத்த யோகிகள்எதை அடைவார்களோ காமக்குரோத லோப மோகமதமாற்சரியங்களை யழித்தவர்கள் எதையடைய வேண்டுமென்று தெரிந்தார்களோ அந்தவொன்றான பரம்பொருளைச்சுருக்கமாய்ச் சொல்லுகிறேன்கேள் அருச்சுனவென்றவாறு. ※ எண்டம்பன்றது யெந்தச்சொருபத்தை.. (௰)

(கலிவிருத்தம்.)

அஞ்சுபுலனைவ்வழி யடைத்தயலு றாமே ...........*
நெஞ்சுதனை யிதயகமலத்திலினிருத்தி ... ...... ... *
யெஞ்சலிலுயிர்வளியை யுச்சியினிலேற்றி ..............*
யுஞ்சுபுகு நெறியெனவி யோகமொடிருந்தே.........*

(இ-ள்.) பஞ்சவிஷயங்களையும் அன்னியமானவைகளிலே சேராமல் அந்தந்தவிஷயங்களை அந்தந்த விடமான இந்திரியங் களிலே தானேயடைத்து மனதையிருதயகமலத்தில் நிறுத்தியினைப்பில்லா தபிராணவாயுவை பிரமமந்திரமான வுச்சியிலேற்றிக் கருமாணுபவ

கு நூறுவருஷமென்றகாலஞ் சரியானாற் பிரமாதிலோகங்க ளெல்லா
ம்நாசமடையும் அதனாலே பிரமலோகத்தைச் சேர்ந்தபேருந்திரு
ம்புவாரென்றது. (௰௪)

(அறுசீரடியாசிரியவிருத்தம்.)

நெறியில்வருவியத்தமோ டவ்வியத்தங் கூடாத நிலைமையென்
றும்-பொறியழியும் யாக்கையினி லழியாதபுலனென்றும் புனி
தமென்று - மறிவரியவுருவென்று மழியாதபொருளென்று ம
டைந்தோர்பின்னைப் - பிறிவரியநெறியென்று பெரியோர்கள்
பேசுவதென்பெற்றிகண்டாய் .................................... *

(இ-ள்.) பிரமாதிலோகங்கள் அநித்தியமென்று அதற்குள்
ளசுபாவத்தைச்சொன்னீரோ வும்முடைய நித்தியசுபாவ மெப்படி
யென்றால் சொல்லுகிறேன்கேள் அருச்சுனா! பிரகிருதிவழியில் வர
ப்பட்டவியத்தத்துடனே அவ்வியத்தம் இந்தவிரண்டுங் கூடாதநி
லைமையென்றும் இந்திரியங்கள் நாசமாகப்பட்டதேகத்திலிருக்கிற
கெடாத ஞானமென்றும் சுத்தமென்றும் யாருமறியவரிதானசொ
ரூபமென்றும் கெடாதவஸ்துவென்றும் அதனையடைந்தவர்கள்பி
றகுபிரியவரிதான கெதி யென்றும் பெரியோர்கள் சொல்லுவது
என்னுடைய சுபாவமே கண்டாய் அருச்சுனா வென்றவாறு. ✻ இத
னாலேயென்னையடைந்தவர்கள் திரும்பார்களென்றவாறு. (௰௫)

எப்பொருளும்யாதொருவனுள்ளடங்கிற் றெங்குமாய்நி
ற்கின்றான்யா, ரப்பரமப்பொருளாகியுள்ளவெனையன்பி
னாலடைவதையா, விப்பரிசுவருங்காலத் திறந்தார்கள்பிற
வாதார் பிறப்பரொன்னி, லப்பரிசுவருங்காலத் தினையறிய
வுணர்க்கின்றேனதனைக்கேளாய் .................................... *

(இ-ள்.) எவனொருவனுள்ளே இந்தப்பூதங்களுமடங்கினவோ எங்கு
ந்தானாகநிற்கிறவனுமோ அந்தப்பரம்பொருளாகவிருக்கிறவென்னைப்
பத்தியினாலே யடையத்தக்கது ஐயா இந்தச்சுபாவம் வருங்காலத்தி
ல்மரணமானவர்கள் திரும்பிப்பிறவார்கள் பிறப்பாரொன்னில். அந்த
ச்சுபாவம்வருகிறகாலத்தை யுனக்கு அறியச்சொல்லுகிறேன் அதை
க்கேட்பாய் அருச்சுனா! வென்றவாறு. (௰௬)

அங்கியொளிபகல்வெண்மை யாங்காலந் தேவதையா ம
வைகளோடு, தங்கியறு திங்களுடை யுத்தராயனஞ்சார்

வார் மறித்துஞ்சாரார், கங்குல்புகை கறுப்பென்னுங்கா
லத்தேவதையடைந்து பிறக்குங்கண்டா, மெங்கமறுதிங்
களுடைத் தெட்சணாயனத்திறந்த யோகியென்பான். *

(இ-ள்.) அக்கினிப் பிரகாசம் பகல்சுக்குலபக்ஷம் இவைகள்
அதிதேவதையாகப்பட்ட அவைகளுடனேகூடித் தைமாதமுதல்ஆ
னிமாதமட்டும், ஆறுமாதத்தை யுடைய உத்தராயணத்தை யடைந்
தயோகிகள் பிரமத்தையடைவார் திரும்பவமிந்தச் சகத்திலேவாரா
ர்கள். இராத்திரிபுகை அமரபக்ஷமிந்த அதிதேவதையை யடைந்த
எங்கும்- ஆடிமாதம்முதல் மார்கழி மாதமட்டும், ஆறுமாதத்தையு
டையதெக்ஷணாயனத்திலே மரணமான யோகியென்னும் பேருடை
யவன் திரும்பவுமிந்தச் சகத்திலே பிறப்பான் கண்டாய்அருச்சுனா;
என்றவாறு. (௰௭)

ஏதமானதின்றியிவ்விரண்டுமோயும்யோகிதான் ......... *
வேதமோதிவேழ்விதான மெய்தவங்கள்செய்துளோ ... *
னேதுவாயநற்பந்தங்க ளெய்திவிடுமெய்துவா ... ...*
னாதலானீயோகமேசெய் யென்றுமாயனோதினான்... *

(இ-ள்.) குற்றமான தில்லாமல் இந்தவுத்தராயணம் தெக்ஷ
ணாயனமென்கின்ற விரண்டும் விசாரிக்கப்பட்ட யோகியானவன் வே
தங்களையோதி யாகங்களைப்பண்ணித் தானங்களைக் கொடுத்துச்சத்தி
யமான தவசுகளைச் செய்திருக்கின்றவன் அடைகின்றபடிக்கு நல்ல
பதவிகளையடைந்து பிறகு மோக்ஷத்தையு மடைவான் ஆகையால்
அருச்சுனா; நீயோகத்தையே செய்யென்று ஸ்ரீகிருஷ்ணசுவாமிசொ
ன்னாரென்றவாறு. (௰௮)

எட்டாவது-அக்ஷரப்பிரமயோக-அத்தியாயம்-முற்றும்.

இந்த அத்தியாயத்துக்குக்கிரந்தத்திலே அக்ஷரப்
பிரமயோகமென்றும்- சத்தப்பிரஞ்ஞாதா
ரயோகமென்றும்- போதமிழில் - ஏழு
வகை வினாவென்றும் பெயர்.

ஆ அத்தியாயம்- அ இ - கூடியசெய்யுள். (உசசு)

லென்னையென்றனியற்கையெனைப் பாராயிந்தச்சகமெல்லா .....*
மன்னையென்றன்மாயைபெறு மாங்காரமுநான்றருவன்காண்...*

(இ-ள்.) எல்லாவற்றிற்கு முன்னை நான் ஒன்றுங்கலவாமல்நிற்பேன் நான்சகல்ரூபமாய் நின்ற ஆந்த நுண்மையிலே என்னுடையுலகமெல்லாஞ் சொரூபங்களாவது-ஆதலால் என்சுபாவத்தைப்பாராய் அருச்சுனா; எப்போதும் என்மாயை யுண்டோ அப்போதேயிந்தவுலகத்தையெல்லாம் மாயையுண்டாக்கும் இப்படியென்னிலுண்டானது மாயையாகையால் ஆங்காரமும்நானுண்டாக்கினதுகண்டாயென்றவாறு. (௫)

(கலிவிருத்தம்.)

என்னுருவிற்புணராதே யென்னைவிடத்தோன்றாதே *
மன்னுயிர்களெனையெங்குஞ் சார்ந்துவரும்வகைகேட்கி
னுன்னுமிடனெங்குநிறைந்தொளிர்கின்றவானெங்குந்*
துன்னுமியற்செறிகாற்றின்றோற்றம்போல்சுடர்வேலாய்.

(இ-ள்.) என்னுடையசொரூபத்திலேபொருந்தாமலும் என்னைவிடவுண்டாகாமலும் நிலைமையானசகலசீவன்களும் எங்கும்என்னையே சார்ந்துவரும் அதுவரப்பட்ட வகையைக்கேட்கித் பிரகாசிக்கின்றவேலாயுதத்தையுடைய அருச்சுனா! சொல்லுகின்றேன் கேள் நினைக்கப்பட்ட விடமெங்கும் நிறைந்து பிரகாசிக்கின்ற ஆகாயமெங்கும்நெருங்கின சுபாவமுங்கனமுமுள்ள காற்றினுடைய தோற்றம் போலவென்றவாறு. ※ வாயுவானது ஆகாசத்திலுண்டாய் அதிலே கூடாமல் அதுள்ளமட்டுந் தானுள்ளதாய் அதினுடைய விஸ்தாரமட்டும்நிறைந்ததாய் அதைவிடவேறிடமில்லாததாயிருக்கிறதுபோலச்சகலசீவனும் என்னிலுண்டாய் என்னிலேகூடாமல் நானுள்ளமட்டுந்தானுமுள்ளதாய் என்னுடையவிஸ்தார மட்டும்நிறைந்ததாய்அதைவிடவேறிடமில்லாததாயிருக்கின்றதுபோலச் சகலசீவனும் என்னிலுண்டா யென்னிலே கூடாமல் நானுள்ளமட்டும் தானுமுள்ளதாய் என்னுடையவிஸ்தாரமட்டும் நிறைந்ததாய் என்னைவிடவேறிடமில்லாததாய் இருக்குமென்றதுவிரிவு. (௬)

ஈண்டுபொருளிவையனைத்து மிறக்குநாளென்னிடையே ........*
மாண்டுபுகும் பிறக்குநான் மற்றவைதன்வரன்முறையே ..........*

மீண்டுபுறப்படு மெல்லாமாதலி ஞன் மெய்ப்பார்க்கில் ................ *
யாண்டுமுயிர்படைத்துக் காத்தழிக்கின்றேனியானேகாண்..........*

(இ-ள்.) இவ்விடத்திற்சொல்லப்பட்ட பூதங்களிவை சகலமும் நாசமாகிறநாளில் நாசமாகி யென்னிடத்திலே புகுந்தடங்கும் இவை தவிரப்பிறக்கிறநாளில் அவைகளொடுங்கின வரன்முறைப்படியேயெல்லாந் திரும்பிப்புறப்படும் ஆகையாலே சத்தியமாகவிசாரிக்கில் எந்தவிடங்களிலும் சகலசீவனையும் சிருஷ்டித்து ரக்ஷித்துச் சங்கரிக்கிறவன் நானே யல்லாமல் வேறில்லைகா ணென்றவாறு. ※ வரன்முறையாவது பிருதிவு அப்புவிலடங்கி அப்பு தேயுவி லடங்கி தேயுவாயுவிலடங்கி வாயு ஆகாயத்தி லடங்கி ஆகாய மாயை யிலடங்கி மாயையென்னிலடங்கின வரன்முறைப்படியே என்னில் மாயை யுண்டாய் மாயையிலாகாசாதி பஞ்சபூதமு மொன்றி லொன்றுண்டாவது (எ)

(அறுசீரடியாசிரியவிருத்தம்.)

விலங்கலனையாய் பலங்களுடன் வேண்டல் வேண்டாமையைவி
ட்டுச் - சலங்கொள்வினைக ளவைசெய்வே னதனுலெனையவை
சாரா-வுலண்டுதானே நூறந்த நூலாற்கண்டுண்டுலந்தாற்போ
ல்-பலங்கணினைவார வற்றுலே கட்டுண்டாங்கேபட்டுழப்பார்*

(இ-ள்.) மலையையொப்பான அருச்சுனா! பிரயோசனங்களுடனே விருப்பு வெறுப்பைவிட்டு அழிக்கப்படாத வைராக்கொண்டு சிருஷ்டியாதி கருமங்களைச்செய்யவேண்டிப் பிரயோசனத்தில் விருப்பு வெறுப்பில்லாததினாலே அந்தச்சிருட்டியாதிகருமங்கள் என்னைச்சேராவாம் உலண்டு என்று பெயரையுடைய கொம்புப்புழுவானது தானே நூலையுண்டாக்கி யந்த நூலாலே எந்தக்காலத்திலும்எந்தவுபாதிக்கும் அழியாத கூடுகட்டவேண்டுமென்று தன்னையுள்ளாக்கிக் கட்டித் தான் அந்தக்கூட்டுக்குள்ளே கட்டுண்டுவெளியிலேவர வழியில்லாமல் அந்தக்கூட்டுக்குள்ளே செத்தாற்போலப் பிரயோசனத்தை யிச்சையாகநினைத்துக்கருமங்களைச் செய்தவர்கள் அந்தக் கருமபலத்தாலே கட்டுண்டு அந்தக் கருமத்திலேதானே துக்கப் பட்டுழலுவார்க ளென்றவாறு. (அ)

(கலிவிருத்தம்.)

உளர்வனநிற்பவர்க வுலகையுண்டாக்கு மென்னை ................ *
யோர்வுறவறியாதேயோர் மகனென விகழாநிற்பா................*

வேறொனெஞ்சத்தாசை வினைகளை மிடையச்செய்வா...* 
ராரெனிலவர்கடாமு மரக்கரோ டசுரரானார் ......... . *

(இ-ள்.) ஊர்வதாகிய சரமும் நிற்பனவாகிய அசரமும்இந்தச் சராசரரூபமாகச் சகத்தையுண்டாக்கப்பட்ட வென்னைமனத்திற்கிசையும்படியாகச் சகலத்துக்குஞ் கர்த்தனென்றறியாமலே ஒருமனிதனென்று அவமானம்பண்ணுவார்கள் மனசிலே வேர்விழுந்ததுபோல எழும்பின ஆசையினாலே கருமங்களையிருந்து செய் வார்கள் அவர்களாரென்னில் ராக்ஷதருடனே அசுரரும்ஒப்பானவர்களென்றவாறு.

அறிவினாலென்னையேயாக வறிந்துகொண் டமைதியாலே...... *
பொறிவழியடைத்தெப்போது மென்னையே போற்றிசெய்து,
நெறியினால்வழுத்திவாயா லென்னையே நினைந்துநெஞ்சாற்..*
செறிதருமவர்கண்டாய் தேவரிற்றெரியப்பட்டார்.... .....*

(இ-ள்.) அறிவினாலே யென்னையேகாத்தனாக அறிந்துகொண்டு அடங்கின் சுபாவத்தினாலேயிந்திரியங்கள்போகிறவிஷயவழியை யடைத்து எப்போது என்னையே ஆசைபண்ணிப் பத்தி மார்க்கத்தினாலே வாயினாலே கீர்த்தனம்பண்ணி வேறொருவரையும் வேறொன்றையும் நினையாதமனதினாலே யென்னையே நினைந்துகொண்டிருக்கிறகனமானவர்களே கண்டா யருச்சுனா தேவர்களைப்போலே தெரியப்பட்டவர்க ளென்றவாறு. ❈ மனதொன்றை நினைந்துவாக்குவேறொன்றைச்சொல்லித் தேகம்முன்னிரண்டு மல்லாததைச் செய்கிறது தேகசுபாவமாகையால் என்னையேயறிந்து என்னையே போற்றிசெய்து என்னையேவழுத்தி யென்னையே நினைந்து என்றுந்திடப்படுத்ததற்காக என்னையே யென்றுந் திரிகரணத்துக்கும் புத்திதிடப்படச்சொன்னார் தேவரீர் தெரியப்பட்டாரென்றதனால்தேவர்களைப்போலத் தெரியப்பட்டார்களென்பது இதனால் முன்பாட்டில்! அரக்கரோடசுரரானாரென்றதற்கும் அவர்களைப்போலானவர்க ளென்பதுதேவரசுரர்களைச்சொன்ன தெதுக்கென்னில் தன்னை அறிந்த தற்கும் அறியாததற்குந் திஷ்டாந்திரஞ்சொன்னது இந்தத்திஷ்டாந் திரஞ் சகலசீவனுக்குஞ் சரியாகக்காட்டினது செறிதரு மவர்க ளாவது கனமானவர்கள் கனமானவர்களாவது மகாத்மாக்கள்செறிவுகனமாகையால் செறி தருமவைகளை மகாத்மாக்க ளென்றது மகாத்மாக்களென்பது வடசொல் கனவான்களென்பது தமிழ். (ம)

காலத்தாலும்பொருளிடங்க ளாலுங்கணித்தற் கரியவென்னை...... *
ஞாலத்தார்கள்புகலரிய ஞானயோகங் களினாலே ...... ...... *
கோலத்தால்வே றாகவுமெய்க் குறியாலொன் றாகவுங்கொண்டு...*
சீலத்தாழ்வா ரவருடைய தன்மையியான் சாற்றுவன்கேள்...*

(இ-ள்.) காலத்தினாலும்பஞ்சபூதவிடங்களினாலும் அள விடுதற்க ரிதான என்னையுலகத்தி லுள்ளவர்களினால் மாயாபதார்த்தபே ரூபமுடையாளங்களினாலே வேறுவேறான அநேகமாகவுஞ் சத்தியமா னவடையாளத்தினாலே யொன்றாகவுந் திடம்பண்ணிக்கொண்டுமெ த்தவும் பூசைபண்ணிவணங்குவார்கள். அவர்கள் சுபாவத்தை நான் சொல்லுகிறேன் கேள் அருச்சுனா வென்றவாறு. ✿ என்னை யனேக மாகவு மொன்றாகவுந்திடம்பண்ணிக்கொண்டு ஞான யாகத்தாலே பூசைபண்ணுகிறவர்களுடைய சுபாவத்தைச் சொல்லுகிற தென் றுமொழிப்புரை சொல்லுவது. (௰௧)

(கலிவிருத்தம்.)

வேதமொழிவேள்விதி வேள்விபிதி ரர்க்கே...... ......*
ஈதலுறுவேள்வியெரி நெய்சரு விவற்றாற்... ......... *
காதல்புரிவோர்கள்புரி காரியம தெல்லா......... ...*
நாதமுதலாயபொரு ளாயவையு நானே..............*

(இ-ள்.) வேதவாக்கியப்படி செய்கிறயாகம் தினந்தினஞ் செய்ய விதித்த ஓமம்பிதிர்களுக்குக் கொடுக்கிறபிண்டதருப்பணயாகம்அக் கினிநெய்பிண்டம் இவைகளாலே ஆசையுடையவர்கள் செய்கிற கா ரியங்களெல்லாம் நானே சத்தமுதலாகிய விஷயப்பொரு ளாகிய தும் நானே யென்றவாறு. ✿ சத்தமுதலாவது சத்த பரிச ரூப ரச கெந்தம்.— (௰௨)

ஆயினுலகங்களை யளித்தொளி வளர்க்குந்... ...... ... *
தாயுமொடுதந்தையவர் தந்தைதலை கண்டோன் .. ... ...*
போயினவினைப்பய னளிதல்புரி வோனு ... ..... .... *
னேயுமறைநான்களுட னோமெனு மெழுத்தியான்...*

(இ-ள்.) விசாரிக்கில் உலகங்களைப்பெற்றுப் பிரகாசிக்க வளர்க்கப் ப்பட்டதாயும் அவனுடனேதகப்பனும் அவர்களிருவருடைய தகப்

பழகிய பாட்டன்மாரும் அந்த இரண்டுபாட்டன் பாட்டன் மாரு டையதகப்பன்மாராகியமுப்பாட்டன்மாரும்இப்படிப்பரம்பரையாகப்போகப்பட்ட முதல்களும் நானேமுன்செய்து மறந்து போன கருமபலனை மறவாமற் கொடுக் கிறதைச் செய்கிற வனும் நானே இசையப்பட்ட நாலுவேதங்களும்நானே அந்தவேதங்களுடனே ஓமென்றபிரணவ எழுத்தும் நானேயென்றவாறு. (௰௩)

(கலிவிருத்தம்.)

எல்லார்க்குங்கதியு நா னிருவினைப்பா ரகனு நா......*
னெல்லார்க்குந் தலைவனு னெப்பொருட்குஞ் சான்று நா*
னெல்லார்க்குமுறைவிட நா னியார்க்குமிடர்தீர்ப்போனு
னெல்லார்க்குநல்லோனு னெப்பொருட்கும்வித்து நான்.

(இ-ள்.) எல்லாருக்குமடைகிற கதியம்நானே புண்ணிய பாவத்தை நடத்துகிறவனும் நானே எல்லாருக்கும் கர்த்தனும்நானே எல்லார்க்குந் துக்கந்தீர்க்கிறவனும் நானே யெல்லாருக்கும் நல்லவனும்நானே எல்லாப்பொருளுக்கும் விதையும்நானே யென்றவாறு.

(அறுசீரடியாசிரியவிருத்தம்.)

தாங்கியநீரையெல்லா மிரவியின் றலத்தி னின்று...... ......*
வாங்குகின்றேனுமீண்டு மழைகளாய்க் கொடுக்கின்றேனு...*
மீங்குமெய்யுணரினானே யாதலாலியானொன்றேனு ...... ...*
மாங்கருச்சனை செய்கின்றா ரென்னையே யரிச்சிக்கின்றார்......*

(இ-ள்.) பூமிதாங்கியநீரையெல்லாஞ் சூரியனிடத்தில் நின்றுவாங்குகிறவனும் திரும்பிமழைகளாய்க் கொடுக்கிறவனுமிப்போதுமெய்யாகவிசாரிக்கில் யானேயெல்லா மாகையால் என்ன வாகிலுமொன்றாகிலும் அங்கேபூசை பண்ணுகிறவர்கள் என்னையே அருச்சனைபண்ணுகிறார்களென்றவாறு. (௰௫)

ஞானமாயொன்றாய்நின்ற வென்னையே நானுவாகப்.... ... ... ...*
போனதிவினையின் மாந்தர் வேள்வியாற் பூசித்ததால் ........ *
வானமாமுலகமேறி வாழ்ந்துபுண் ணிடையேவீழ்ந்திட்..... ... ...*
டீனமாமாயையாலே பிறப்பது பிறப்பதாவார்...... ............ ...*

(இ-ள்.) ஞானமாகியொன்றாகிச் சலியாமல் நின்றவென்னைத்

தானே யீனமான ஆசையினாலே அஞ்ஞானசொரூபமாய்ப் பலவாக ச்சலனமுள்ள தேவர்களாகப் பாவித்து அந்தத்தேவ போகத்துக்கு இச்சைப்பட்டு அந்தந்தத்தேவதாப்பிரியாகச்செய்த யாகங்களினாலும் பூசைகளினாலும்- பாவங்களைப்போக்கின மனிதர் தேவலோகத்திலேயிப் புண்ணியந்தீருமட்டும் திவ்வியபோகத்தை யனுபவித்துப் பிறகு மண்ணிடமாக விழுந்துசாகிறதும் பிறக்கிறதுமாகித் தேவலோகத்துக்கும், பூலோகத்துக்கும், போக்குவருத்தாய்த் திரிவார்கள் என்றவாறு. ஞானமாயொன்றாய் நின்றவென்னையே யீனமாயிச்சையாலே நானாவாகவேழ்வியாற் பூசித்தாற் பேன திவினையின்மாந்தர் வானமா முலகமேறி வாழ்ந்து மண்ணிடையே வீழ்ந்திடப்பிறப்பது பிறப்பதாவாமொனமாறுக. நானாவாகவென்றவிடத்திற் சப்தவன் வருவிக்க. (௰௬)

மின்னையேயனையவேலா மேவுவார்வேண்டிற்றெல்லாம் ............... *
பின்னையேயென்றுசொல்றே யளித்தவர்க்காப்பன்வானோர் .... ...... *
மன்னையேமுதலாந்தெய்வம் வணங்குகின்றருமற்றேன் ............. *
றன்னையேவணங்குகின்றார் தாமறியாததேகாண ......................*

(இ-ள்.) மின்னையொப்பாகப் பிரகாசிக்கும் வேலையுடைய அருச்சுனா! அன்னியசிந்தையில்லாமல் என்னைக் கூடுகின்றவர்களுக்குவேண்டியவெல்லாம் பிறகுகொடுக்கிறேனென்னாமல் அப்போதேகொடுத்து அவர்களைக்காத்துக்கொள்ளுவேன் தேவர்களுக்கிராசாவான இந்திரனை முதலானதெய்வங்களை வணங்குகின்றவர்களுக்கும் நான் அந்தந்தத்தேவதாரூபமானதினாலே யென்னையே வணங்குகின்றார்கள். அது அவர்கள் என்னை அறியாமற்செய்ததல்லால் அறிந்துசெய்ததில்லை கண்டாயென்றவாறு. (௰௭)

தேவரையடைந்தார்தேவ ராவர்கள்பிதிரர்தம்மை..... .*
மேவரவடைந்தாரந்தப் பிதிரராய்விளங்காநிற்ப ........*
ரியாவர்களியாவர்பாலா ரவர்களேயாவரொன்று ... ..... *
லாவவென்னையடைந்தாரியானே யாவதற்கையமுண்டோ.

(இ-ள்,) தேவர்களையடைந்தவர்கள் தேவர்களாவார்கள்- பிதிர்களை மனசுபொருந்தி விரும்படி யடைந்தவர்கள் - அந்தப்பிதிர்களாய் விளங்கிநிற்பார்கள் யாராயினும் யாரிடமாக அடைந்தார்களோ அவர்களேயாவரொன்றல்- என்னையடைந்தவர்கள் நானேயாகி

றதற்கு ஆ! ஆ! சந்தேகமுண்டோ இல்லையென்றவாறு. ❀ ஆ ஆவெ ன்றது இழிவானவர்களை யடைந்தவர்களு மவர்களே யாவராகில்மே லானவென்னை யடைந்தவர்கள் நானாகுநதற்குச்சந்தேக முண்டோ ஆஆ-இதுவென்ன ஆச்சரியம் நாம்தேவர்களிலு மின்றே னென்று காட்டின ஆச்சரியக்குறிப்பு. (௰௮)

பேரிலைகனிகாய்நீரோ டெற்றவைகொண்டுபோற்றிக்..*
காதலாற்றாமவெண்பாற் றந்ததேகளித்துக்கொள்வே...*
னாகலாலேவேறாற்ப வுண்பமற்றவைகளைக்கொண் ...*
டுதலாமமனைக்காய்த்தந்தா லென்னையேயெய்தலாமால்..*

(இ-ள்.) பக்தியினாலே சுத்தமான அன்புடையவர்கள் பூஇலைப் பழங்காய் சலம் இவைகளிலே கிடைத்தவைக் கொண்டு என்னைப்பூ சைபண்ணிக் கொடுத்தவையே மிகுந்த சந்தோஷமாக அங்கிகரிப் பேன் ஆகையால்கொடுக்கின்றது விரதம் நோறகிறது பொசிக்கிற துமற்று முள்ளவைகளைக்கொண்டு இவையெல்லாம் எனக்காகக்கொ டுத்தா லென்னையே யடையலாம் அன்னியகெதிவாராது.—(எ-று.)

எப்பொருட்னக்குமியானொத்திருத்தலாலெனக்கியாரு*
மொப்பவரினியரின்னா தாரெனவொருவரில்லை ........*
இப்படியறியுமன்பர் பக்கலேயானுநிற்ப ................*
னப்படியவருமென்பா லங்ஙனேயமர்ந்துநிற்பார் ....*

(இ-ள்.) எந்தப்பொருள்களுக்கும்; நான் சமமாயிருக்கிறதி னாலே எனக்கு ஒப்பானவர்களும் பிரியமானவர்களும் விரோதமா னவர்களும் யாதொருவருமில்லை இப்படியறியப்பட்ட அன்பரிடத்தி லே நானும் நிற்பேன் அந்த அன்பர்களும் அப்படியேஎன்னிடத்தி ல்அமர்ந்து அங்கேநிற்பார்கள் வேறுபடார்களென்றவாறு. (௨௰)

ஊணையேமுதலாவென்பா லாக்கியயணர்வோர்நாளு.*
நாணையேவிட்டுத்தீமை புரியினுமவர்கணல்லோ . . *
ரேணையேபுயத்தாவென்றுங் கேடிலாவின்பமல்லா... *
தாணையேபொருகேடில்லையவர்களுக்கெங்குமென்றும்.

( இ-ள். ) உண்பதுவேமுதலாக உள்ளவெல்லா மென்னிட் மாகச்செலுத்தின அறிவுடையவர்கள் தினந்தினமும் லச்சையைவி ட்டுப் பொல்லாங்குசெய்தாலும் அவர்கள் நல்லவர்களே யெக்கால

றுங் கெடாதநிலையுடைய மகிமையும் அழகுமுள்ள சோலையுடை அருச்சுனா; அவர்களுக்கு என்றைக்குங் கேடில்லாத சுகமேயல்லாமல் ஆணைப்படிக்கு எங்கேயாகிலும் என்றைக்காகிலும் ஒருகேடுமில்லையென்றவாறு. ஃ எனக்குச் செலுத்தாத மூடருக்கு என்றைக்கும் எங்கும் ஆணைப்படிக்குக் கேடுண்டென்பது அருத்தாபத்தி. (௨௧)

வணிகருமற்றைவேளாண் மாந்தருமகளிர்தாமும்......*
பணிவொடுமென்னைப்பேணிற் பற்றறுத்திடுவரென்று*
லணிமுடியரசர்மேன்மை யந்தணரடைவராகிற்......*
றுணிவரும்பிறவிதீரச் சாற்றவேண்டுவதுமுண்டோ..*

(இ-ள்.) மற்றவைசியருஞ் சூத்திரரும் பெண்டுகளுமிவர்கள்வணக்கத்துடனும், அன்புடனும்; என்னையாசரித்தாற் கருமபந்தத்தையறுத்து மேலானகதியையடைவார்களென்றால் அழகியகிரீடந்தரித்த ராசாக்கள் எல்லாருக்கு மேலானசாதியுடைய பிராமணர்கள் இவர்கள் என்னையடைவாராகில் அவர்களுக்கு யாகாதி மகாதானதிவிரதாதிமுதலான புண்ணியங்களினாலே அரிதானபிறவிதீருமென்றதற்குச் சொல்லவேண்டுவதுமுண்டோ இல்லை நிச்சயமாகப் பிறவிதீருமென்றவாறு. (௨௨)

மின்னையேயனையவாழ்வி னின்றனிவிருப்பினோடு....*
மென்னையேவணங்கியென்றுமென்னையேயிசைதியாகி*
லென்னையேயடைதிமீதென் றியம்பினனிலங்குவாட்கட்
பின்னையோமுறுவலோடும் பேய்முலையுண்டவெம்மான்.....*

(இ-ள்.) ஆகையாலருச்சுனா! மின்னையொப்பான அநித்தியவாழ்விலேயது நிலையென்று நின்ற நீயிதைமறந்து என்னிடத்தில் ஆசையுடனும், பத்தியுடனும்; என்றைக்கு மென்னையே பூசைபண்ணிவணங்கி என்னையேபரமகதியென்று உன்மனசுக்கு இசைந்திருந்தாயானால் என்னையேயடைவாய் இது நிச்சயமென்று சொன்னார். பிரகாசிக்கின்ற வாளையொப்பான கண்களையுள்ள மகாலட்சுமிதேவியின் நாயகன் அழகியபுன்சிரிப்புடனுங் கூடப்பூதனையென்னும், பெயரையுடைய பேயினுடைய முலையையுண்ட கருத்தனான ஸ்ரீகிருஷ்ணசுவாமியென்றவாறு. (௨௩)

ஒன்பதாவது-மாயாவிகார-அத்தியாயம்-முற்றும்.

ஆக அத்தியாயம் - ௯ - க்கு - கூடியசெய்யுள். (௨௱௬)

பத்தாவது.

# விபூதிவித்தாரயோக அத்தியாயம்.

( அறுசீரடியாசிரியவிருத்தம். )

அரியவெனதுநிலைமையைமுன் பலமேவசொன்னேனதுகேட்டே *
புரியமனிதர்களிகூர வொவ்வாநின்றவுனக்கதனை ............ *
விரியமொழிவல்கேளென்று வேதத்தலைக்கேவிற்றிருக்குங் ...... *
கரியமுகிறன்செவ்வாயாற் காதல்கூறக்கட்டுரைப்பான் ............ *

(இ-ள்.) யாராலும் அறிய அரிதான என்னுடைய சத்தியமான உண்மையைமுன்புபிரமாணமாய்ச்சொன்னேன் அந்தப்பிரமாணத்தைக்கேட்டே யுனக்குச்சித்தமனதிலே களிப்புச் சிறப்பாகச்சந்தோஷிப்பாநின்ற உனக்கு அந்தப்பிரமாணத்தைப் பிரத்தியட்சமாகவிஸ்தாரமாகச் சொல்லுகிறேன்கேள் அருச்சுனனென்று;வேதச்சிரசிலேயிறுமாந்திருக்கப்பட்ட கரியமேகத்தை யொப்பானதிருமேனியையுடைய கிருஷ்ணசுவாமி தம்முடைய சிவந்ததிருவாயினாலே அருச்சுனனுக்கு அன்புமிகுதியாகச்சொல்லுவார்.—எ-று. (க)

தேவரொடுமுனிவரர்கள் சித்தர்வித்தியா தரர்கள்..........*
யாவர்களுமறியாவென் பெருமையையுமுன் பழமையினுந் ....*
சாவதும்பிறப்புமில்லா வென்னையறியத் தருவாரோ ..........*
பாவவினையறவிட்டுப் பரகதி யடைகிற்பார்.................*

(இ-ள்.) தேவர்கள் அவர்களுடனே மகாமுனிகள்சித்தர்வித்தியாதரர் இவர்கள் முதல் எல்லாரும் என்னுடைய பெருமையையறியார்கள். அது அவர்களுக்கெல்லாம் நான் ஆதியாய் அநாதியானதினாலே யாருமறியார்கள் ஜெனனமரணமுமில்லாத வென்னையின்னதென்றறியத்தக்கவர்களாகிலவர்கள் பாவகருமங்களை யறுத்துத்தாதுவிட்டுப் பரகதியையடையமாட்டுவார்களென்றவாறு. (உ)

புத்திபொறை தவஞானம் புகழ்பழிதீர்கொலைதெளிவு.....*
சத்தியநற்சமைதவரி தவிந்தானஞ்சாவுபிறப்... ... ....*
பத்திகொடு நிறைவின்ப மிடரஞ்சலஞ்சாமை ........ *
யித்தனையுந்தோன்றுவதென் னிடைநின்றேயெனத்தெளிவாய்

(இ-ள்.) புத்தி பொறுமை தவசு ஞானம் கீர்த்தி அபகீர்த்தி சொல்லுகிறதற்கரியதெளிவு சத்தியம் நல்லசமைத யிந்திரிய நிக்கிரகமுதலான விரதம் தானஞ் சாவு பிறப்பு ஆசை கொடுமை நிறைவு சுகதுக்கம் பயப்படுதல் பயப்படாமைஇத்தனையு மென்னிடத்தில் நின்றேயுண்டானவென்று தெளிவாயென்றவாறு. ※ வேறொரு விடமூண்டென்று மயங்காதேயென்றருத்தாபத்தி. (௩)

(கலிவிருத்தம்.)

இனைத்துவிரித்த தவத்தெழு வோரும்..........*
அனைத்தையுநிற்ப நடப்பன வாக ...........*
அனைத்துமனுக்கள் பன்னால்வருமற்றென் .... ........ *
னினைப்பி லுதித்தன ரென்பது நேர்வாய்...............*

(இ-ள்.) அநேகவிதச் சகலத்தையும் நிற்கிறது நடக்கிற தா இயசராசரங்களைமனதிலே கூட்டங்கூட்டமாகச் சிருஷ்டித்த தவசையுடைய சத்தரிஷிகளும் இவைகளையரசாண்ட பதினாலு மனுக்களும் என்னுடைய நினைப்பிலே பிறந்தார்களென்று உன் மனதிலேதிடமாகச்சம்மதிப்பா யருச்சுனா வென்றவாறு. (௪)

இப்பரிசென்னை யறிந்தவ ரென்பால்.........................*
வைப்பர்கள் சிந்தையை மன்னுயிரோடு........ ..........*
மப்பரிசேயறி வாரையு மங்கே .........................*
யுய்ப்பருரைப்பர்க ளிப்பரு வப்பார்.................*

(இ-ள்.) இந்தப்படி சகலத்துக்குங்காரணமாகச்சகலமுமென்னிடத்திலெ நானேவர்த்திக்கிறதாக என்னை நன்றாக அறிந்தவர்கள் தங்களுடைய சீவனோடுங்கூட மனதைஎன்னிடத்தில் வைப்பார்கள் அந்தப்படியே முன்னே அறிந்தபேரையும் அங்கே வைப்பார்கள் என்னையேபேசுவார்கள் ஆனந்த மடைவார்கள் சந்தோஷிப்பார்களென்றவாறு. (௫)

நிரந்தரமிப்படி யென்னை நினைப்பார்க் ………… *
காந்தைகெடுத்தெனை யாயு மனத்தைப் ………… *
புரந்துகொடுத்தவர் தேர்பொரு ளாயே ………… *
வரங்களுமுற்ற வளித்தவ ரத்தால் ………… *

(இ-ள்.) இந்தப்படி நிரந்தரம் என்னை நினைக்கிறவர்களுக்குத் தீதுன்பத்தைப் போக்கிக் காத்து என்னை விசாரிக்கிற மனதைக் கொடுத்து அந்தமனதாலே விசாரிக்கிற வஸ்துவாகியே பிரசன்னமாகவந்து முன்கொடுத்ததுமல்லாமற் பின்புவரங்களும் குறையாமற்கொடுத்து அந்தவரத்தினாலே யென்றவாறு. (௬)

மற்றவர்நெஞ்சின் மயக்கிரு ளெல்லா ………… *
முற்றறிஞான விளக்கொளி யாலே ………… *
பற்றறவிப்ப னெனப்பழ மொன்றான் ………… *
கொற்றவன்மற்றிவை கூற வலித்தான் ………… *

(இ-ள்.) அந்தவரத்தினாலே முற்றறிப்பட்ட ஞான மாகிய விளக்கொளியாலே அவர்களுடைய மனதிலிருந்து மயக்கப்பட்ட அஞ்ஞானமாகியவிருளெல்லாம் பற்றறச்செய்வேனென்று சொல்ல அந்த அநாதியான கிருஷ்ணசுவாமி முன்னே அருச்சுனனாகியராசன் இந்தவசனஞ்சொல்ல உத்தியோகப்பட்டானென்றவாறு. ❀ மற்றவர்களென்றது என்னைத்தவிர அவர்களென்பது மற்றிவையென்றது முன்சொன்னதைத்தவிரவென்றேயிதுவென்பது. (௭)

(அறுசீரடியாசிரியவிருத்தம்.)

பேதமுடைய பிறப்பிறப்புப் பிறழாநின்ற பெருஞ்செல்வ ………… *
மாதிதேவன் பரப்பிரமமழிவிலாதா ரணங்க ………… *
ளோதவரியவுத்தமனிவ் வெல்லாமுயிர்ப்பா னெனவுன்னை ………… *
நீதிமுனிவருரைத்ததெலா நீயேயருளிச் செய்தனையால் ………… *

(இ-ள்.) எண்பத்துநாலு நூறாயிரம் அச்சப் பேதமுடைய பிறப்புச்சாவு இவைகளாலே தவறாதபூரணம்பெரிய செல்வம் ஆதி தேவன் பரப்பிரமம் அநித்தியமில்லாத நித்தியன வேதங்க ளோதவரிதான உத்தமன் இந்தப்பிரவஞ்சமெல்லாம் பெற்றவன் என்று உன்னை நீதியுள்ள மகாரிஷிகள்முன் எனக்குச் சொன்னதெல்லாம் அப்படிக்

கொத்த நீதியேயிப்போது எனக்கு அருளிச்செய்தாயென்றவாறு.

எல்லாப்பொருட்குந் தன்வித்தேயெல்லாப்பொருட்குமீ
சனே - நல்லலார்புகழுந்தேவருக்கு முலகங்களுக்கு நா
யகனே - யல்லாவறிவாரியாரொன்னை யானேயறிவனென
வருளாற்-சொல்லாடினவப் பொருளெல்லா மெய்யே
யானுந்துணிந்தொழுத்தேன்..........................*

(இ-ள்.) அளவற்றபேதங்களுள்ள சகலவஸ்த்துக்களும்அந்
தந்தப் பேதங்களாக முளைக்கிறதான ஒருவிதையே சகல வஸ்துக்க
ளுக்கும் சுவாமியே பெரியோர்கள் புகழப்பட்டவனே தேவர் களுக்
கும் லோகங்களுக்கும் கர்த்தனே உன்னையல்லாமலுன்னை யறி கிறவ
ர்களார்யாருமில்லை என்னை நானேயறிவனென்று கிருபையினாலேசொ
ல்லிக்கொண்டு வந்த அந்த அருத்தமெல்லாஞ் சத்தியமே அல்லா
மற்சந்தேகமில்லை ஒன்று மறியாதநானும் நீயேயெல்லா மென்றுநி
ச்சயமாகத் தெளிந்து உன்னை யல்லாத மற்ற விகற்பமெல்லாம் விட்
டேனென்றவாறு. ❊ தனிவித்தாவது எந்த வஸ்து விதையானாலும்
அந்தவிதை அந்தவஸ்துவாக முளைக்கிறதல்லாமல் ஒருவஸ்த்துவினு
டையவிதை வேறொருவஸ்துவாகமுளையாது ஒருவஸ்துவிதைஅனே
கம்வஸ்துவாகமுளையாது அந்தந்தவிதை யந்தந்த வஸ்துவாக வருகி
றதாகையால் நீ அனேகபேதவஸ்துவாக முளைக்கிற ஒரேவிதை யெ
ன்றது எல்லாப்பொருளுக்கு மீசனாவது சகலதத்துவங்களுக்குச்சாமி
யென்றது.— (௬)

(கொச்சகக்கலிப்பா.)

மெய்வகையிவ்வுலகிடை நீவேறு வேறாய்நிற்ப........*
தெவ்வகையெவ்வுருச் சார்ந்ததெனலேது மறிகிலே...*
னவ்வகையேயொரு பொருளுமொழியாம லடியேனுக்*
குய்வகைதெறியாக வுரைத்தருளென்றேயுரைப்பான்...*

(இ-ள்.) இந்தப்பிரபஞ்சத்தினிடத்தில்மெய்யாகவேறுவே
றானபேதமாக நீ நிற்கிற தெந்தவிதம் எந்தரூபமடைந் தது என்று
நான் ஒன்றுமறியேன் நீயெந்தரூபமானாயோ எந்தெந்தப் பேதவ
ஸ்துவாக நின்றாயோ அந்தப்படியேஒருவஸ்துவும்விடாமல் அடியே
னுக்குப்பிழைக்கிறவிதமான மார்க்கமாகத் திருவாய் மலர்ந் தருள
வேண்டுமென்று சொல்லுவானென்றவாறு. (ய)

(கலிவிருத்தம்.)

பருகாநின்றோர்க்குணர்ந்திருவிக்காசின்றபாலருந்த...... *
பொருகாலருமிரிக்கின்றநிலையின்னமைந்தியக்குணா வென்ன *
வருகாலுஞ்செல்காலுநிகழ்காலமென்றுமின்றவற்றிற் ...... *
பெருகாதுநிற்பனதுகுமிப் பெருமாயன்றான் பேசினான். *

(இ-ள்.) இந்தப்பாட்டைப் பருகாநின்றோர்க்குணர்ந்து வாசிக்கப் பாலருந்தி பொருகாலுமிரிக்கின்ற நிலையாலுமையென்ன வருகாலுஞ்செல்காலுங் கழிகாலமென்று மிவற்றிற் பெருகாதநிறுகாத பெருமாயன் பேசுவானென்றுபாடமொழிவார்கள் என்றது உம்முடைய திருவாக்கினு லருளிச்செய்கின்ற திருவார்த்தையாகிய பாலமிர்தத்தைக் காதிரண்டாகிய வாயினாலே குடிக்கின்ற எனக்கு ஒருகாலமுந் திருந்தா திருத்திபாகிறதில்லையாகையால் இன்னமும் அடியேனுக்கு அருளிச்செய்யுமென்று சொல்ல இனிமேல் வருங்காலமிப்போது நடக்கிறகாலமும் முன்போனகாலமென்று சொல்லப்பட்ட இந்தமூன்று காலத்திலும், பெருகாமிறுகாத சமனாகவிருக்கின்ற பெருமையுள்ள கிருஷ்ணசுவாமி சொல்லுவாரொன்றவாறு, ஃ பாட்டிரண்டுபேதமாகிலும், உரையொன்றேயல்லாமற் பேதமில்லை. (௰௧)

(கலிவிருத்தம்.)

இறந்தவென்விபூதிக்கோ ரெல்லையின்மையிற் ...... ...... *
பிறந்தன்முடிவுதப் பேசவொண்ணுமோ ........................ *
வறந்தருமனத்தினு யவற்றிலேசில ........ ..... ............... *
சிறந்தனகூறுவனென்றுரைசெப்புவான் ......................... *

(இ-ள்.) சொல்லும்பொருளுமிறந்த என்னுடைய ஐசுவரியத்துக்கும், ஒருபிரமாணமில்லாதபடியினாலே-என்னிடத்திலுண்டான ஐசுவரியத்தை முடிவுமட்டுஞ்சொல்லக்கூடுமோ கூடாதேயாகையாலே கருமத்தாலுண்டான மனைதயுலடைய அருச்சுன அந்தஐசுவரியத்திலே சிலஐசுவரியஞ் சிறப்பாயிருக்கின்றதைச் சொல்லுவேன்கேளென்று சொல்லுவாரொன்றவாறு. ஃ கூடாதாவது- செட்கின்றவனுக்கு காலங் கொஞ்சமானதினாலே இந்தக்காலத்துக்குள் ளேசொல்லிமுடியாதென்பது. (௰௨)

(ஆசிரியவிருத்தம்.)

ஆதிற்பெருகும்பூதங்களெல்லாமிதயத்துள்ளவனுன்............... *

பேறித்திடுமிப்பொருட்கெல்லாம் பிறப்புநிலைகேடாவேனு …… *
னாதித்தியரில்விஷ்ணு நான் மருத்தேவரில்மரீசிநான் ……… *
சோதிக்கதிரிலிரவியஞ்சு வென்றுசொல்லப்படுவேனான் ……… *

(இ-ள்.) என்னுடைய ஐசுவரியத்தைச்சொல்லில் அளவற்ற அநேகபேதங்களாகப் பெருக்கப்பட்ட சகலபூதசீவராசிகளுக்கெல்லா மிருதயத்திலிருக்கின்றவன் நான் அனேகபேதமாகப்பட்ட இத்தச் சீவன்களுக்கெல்லாம்- பிறப்பும், நிலைமையும், நாசமுமாகின்றவனு மாதித்தரில் விஷ்ணுதான்-வாய்வு தேவரில்மரீசுநான்- பிரகாசமுள்ள சோதிகளிற் சூரியனென் றுசொல்லப்பட்டவனுமென்றவாறு. ௨௧

(கலிவிருத்தம்.)

சந்திரனுநான்மீனிற் சாமநானன்மறையி …… *
னிந்திரனன்றேவர்களிந் திரியங்களின்மனநா … *
னந்திரமாமுருவுகளிற் சேதனநானுருத்திரரின் *
மந்திரமாஞ்சங்கரனி யக்கரில்வைச்சிரவனன். *

(இ-ள்.) நக்ஷத்திரங்களிற் சந்திரனை நாலுவேதங்களிற்சாமவேதநான்றேவர்களிலிந்திரனை இந்திரியங்களில் மனதுநான்பிறந்திருந்து சூழலப்பட்டரூபங்களில் அறிவுநான் ருத்திரரில்மந்திரமானசங்கரனுன் இயக்கரிற் குபேரனுமென்றவாறு. (௨௨)

மலைகளின்மாமேருநான்வசுக்களிற்பாவகனன்போர்த் *
தலைவர்களிலறுமுகனன் சலநிலையிற்சாகரனு……… *
நிலையிலாயாகத்திற்செய்யாகமாவேனு ……… *
நிலைபுடையவெனுமவற்றி லிமவானுநிற்பேனன்… *

(இ-ள்.) மலைகளில் மகாமேருநான் வசுக்களிலே பாவகனுநான் சேனைபதிகளிற் சுப்பிரமணியனன் தண்ணீர்நிற்கிறவிடங்களிற் சமுத்திரநான் அழிவில்லாத யாகத்திற்செப யாகமாகின்றவனன் நிலையாய்நிற்கிற தாபரங்களிலும் வந்தமாகநிற்கின்றவனன்.—எ-று.

பெருமுனியிற்பிருகுநான்புரோதெரிந்திதகனன் …… *
மருவியவக்காந்தோம்நான் மரங்களிலச்சுவத்தநான். *
பொருவரியநாரதனன் புத்தேனமாமுனிவரிற் …… *
திருவியல்கந்திருவர்களிற் சித்திரத்தேரவனுநான் …… *

(இ-ள்.) மகாரிஷிகளிற் பிருகுமுனிதான் புரோகிதரிற்பிரகஸ்பதிதான் சகலத்திலுங்கலந்த வசனங்களில்- ஓம்- தான் மரங்களில் அரசுதான் தேவமகாரிஷிகளில் ஒப்பில்லாதநாரதமுனிதான் அழகிலுசந்தகந்தருவர்களிற் சித்திராதனான் என்றவாறு. (௰௬)

சித்தர்களிற்கபிலமுனி திரைகடலிலேசெனித்த......*
யுத்தமமாங்குதிரையினை யானென்றேயுணர்கண்டா .*
யத்தமுடைவிலங்குகளின் யானையிராவதமாவேன்.....*
வித்தகமானிடப்பிறப்பில் வேல்வேந்தராவேனான்,...*

(இ-ள்.) சித்தர்களில்கபிலமுனிதான்குதிரைகளில்- அலையுடைய திருப்பாற்கடலிலேபிறந்த உத்தமமான உச்சை சிறவமென்றுபேயரையுடைய குதிரைதானென்றேயறி கண்டாயருச்சுனா கையையுடைய மிருகமானயானைகளில் அயிராவத மாகின்றவனான் திறமையுள்ள மனிதப்பிறப்பிலே வேலையுடைய ராசாவாகிறவனானென்றவாறு.— (௰௭)

(கலிவிருத்தம்,)

படைகளில்வச்சிரம் பாம்பில்வாசுகி.............*
நடைதருமனந்த னாகர்தங்களிற் ..........*
கொடையயில்சுரபிகோ குலத்திற்கூறிய.......*
வடைவொடுமிவையெலாம் யானென்றேயறி ...*

(இ-ள்.) ஆயுதங்களில் வச்சிரம்நான் பாம்பில் வாசுகிநான் நாகங்களிலே நடக்கப்பட்ட ஆதிசேஷன்நான் பசுக்களிற் கொடுக்கின்றகொடைபொருந்திய காமதேனுநான் என்றேயறியருச்சுனா. எ-று. கூறிய வடை வோடும் இவையெல்லாம் யானென்ற வற்றிறனு னாயேயுள்ளேகாண்க. (௰௮)

வருணனுமியமனு மலைவிலாளியும்.....................*
பெருமைசெய்யசுரரிற் பிரகலாதனு... ...... .......,*
மிருமையிலெண்ணுவா ரெண்ணும்யானெனச்...... ... *
செருமவிழ்தாளினாய் தெளியத்தேறுவாய் ........ ......*

(இ-ள்.) சலவாசிகளில் வருணனும், தெண்டிக்கிற வர்களில் யமனும், சொல்லுகின்றவர்களில் மகாமேருவை வில்லாகவுடைய வனும், உலகத்தார் பெருமைசெய்யப்பட்ட அசுரர்களில்பிரகலா

னும் இம்மைமறுமையிரண்டிலும் என்னுகின்றவர்களுடைய இல்லச்சமும் நாமென்று தெளியத்தக்கதாக நன்றாகத்தேறுவாய்சண்டையிருந்து செய்யப்பட்ட தோளையுடைய அருச்சுனனேயென்றவாறு.

போராவருகருடன்யான் புள்ளினமாக்களில் ..... ....... .*
விராவருமடங்கலுன் வாயுவேகநா .... ... ........ ...... .....*
ளிராமனுனெறிபடை வீரர்தங்களிற் ..... ..... ....... ..... .*
காராமுநான்மீனகளியாற்றிற்கங்கைநான் ..... ..... ... ...*

(இ-ள்.) பட்சிகளிலொப்பிலாத கருடனுன மிருகங்களிற்கிட்டப்போசக்கூடாத சிங்கம் நான் வேகத்தில் வாயுவேகம் நான் விசப்பட்ட ஆயுதவீரர்களில் ரகுராமனுன் மீன்களில் முதலை நான் நதிகளிலேகங்காநதி நானென்றவாறு. (உ௰)

(அறுசீரடியாசிரியவிருத்தம்.)

மிக்கசொற்றொகையனைத்து நானரியவித்தையிற்பிரமவித்தைநா..*
னக்கரங்களிலகார நானழிவில்கால நானதுவுமன்றியே.... ... .........*
தக்கதொத்துவசபாச நானிருவினைப்பயன் கடருவோனுநா... ..... *
னுக்கமன்னுயிர்களைக்கொல்வோனுமவையுற்பவஞ்செய்திடுவேனு
நான் .......................................................................*

(இ-ள்.) மிகுந்தசொல்லுடைய தொகையெல்லாநான் வித்தையிற்பிரமவித்தைநான் அட்சரங்களில் அகாரம்நான் காலங்களில் அழிவில்லாதகாலமான அட்சயகாலம்நான் அதுவுமல்லாமல் மயக்கங்களில்லதகுமான தொந்தமுள்ள வசப்பட்டபாசம்நான் புண்ணியபாபத்தினுடைய பலன்களை தருகின்றவனும் நான் நிலைமையானசீவன்களை நிலைமைகெடக் கொல்லுகிறவனும் அந்தச் சீவர்களைப் பிறக்கச்செய்கின்றவனும் நானென்றவாறு. (உக)

பெண்களிற்புகழ் திருச்சொன்மேதைபொறை திண்மைபேசுமறமென்னவே, பெண்பகுத்தவெழு வோருநாளிருதுவாறில்வந்தவிளவேனிலியா, னடைபநற்பெரிய சாம்பநாலுரிய சாமமேழினுநலத்தினுன, மணகளிற்பெரிய திங்களிற்புகழநின்றமார்கழியுமற்றுநான் ...................................*

(இ-ள்.) பெண்கலேகீர்த்தி லட்சுமி வாக்கு தெளிவுபொறுமை திட்சித்தம் எல்லாருஞ்சொல்லப்பட்ட தருமம்இப்படியென்றனன்

னைப்பட்ட வகுப்புள்ள சூழ்பேருந்நான் ஆறுருதுவில்வந்த வசந்த ருதுநான் சாமவேதத்திலுள்ள எழுவ பதியித்திலே சாந்தொனாக்கிய பதியித்துநான் பூமியிலேபெருமையுள்ள மாசங்களிலே தன்மையி னுலேமார்கழி மாதமும் மற்றமாதங்களும் நானென்றவாறு. (௨௨)

( கலிவிருத்தம். )

வல்லாருந் தொளிரும் கவிகளிற்சாயத்திரிநான்... ...... *
னெல்லாயங்களிற்சூது துணிவோரிபாற்றுணிவுநான்...*
வெல்வர்பால்வென்றிநான் மிகுதிறலோர்பாற்றிறனே.*
னல்லாரியாணன்மைநான் ஞானிகள்பான்ஞானமுநான்*

(இ-ள்.) மல்லையொப்பான தோளையுடைய அருச்சுனகவி களிலேகாயத்திரிநான் பலழபஆதாயங்களிற் சூதுநான் துணிகிறவர் களிடத்திலே துணிவுநான் செயிக்கின்றவர்களிடத்திலே செயம்நா னிருந்த திறமையுடையவர்களிடத்தில் திறமைநான் நல்லவர்களி டத்தில் நன்மைநான் ஞானிகளிடத்தில் ஞானம் நானென்றவாறு.

கண்ணனுநானியாதவரிற் கவிகளில்வைத்துசனுன் ...*
றண்ணனிசேர்பாண்டவரிற்றனஞ்செயனுகின்றேனு *
விண்ணவர்கோமுனிவரில் வேதவியாசனுநானே... *
யெண்ணரியமறைவுகளி லியம்பாவையாவேனுன் ... ...*

(இ-ள்.) யாதவர்களில் கிருஷ்ணனும்நான் கவிகளிலேசுக்கி ரநான் குளிர்ந்ததயவுசேர்ந்த பாண்டவர்களில் அருச்சுனனுகின்ற வானுன் தேவரிஷிகளில் வேதவியாசனும்நான் எண்ணவரிதான அவ வற்றரசியங்களிலே மௌனமாகின்றவனுநானென்றவாறு. (௨௩)

(அறுசீரடியாசிரியவிருத்தம்.)

இரும்புவனமனைத்திலுக்கும் வித்துநானெனவேப்போக்கியா தி யிலலே; வருந்தினுமென்பெருமைக்கும் வரம்புணைக்கமுடியா மை யருத்துச்சொன்னேனென், பொருத்திருவையுடையனமெய்ப் பெருமுயற்சியனவென் றுரீடதமித்த, வருட்பொருள்களனைத் துமெனதொளியிலுல்வருவனவென்றறிகநீயும் ... ...... ........ *

(இ-ள்) பெரியபிறவஞ்சத்து எல்லாவற்றுக்கும்,பீசம்நான் னேத்தவிர ஒன்றுமில்லையென்னுடைய பெருமைக்களவில்லை சொ ல்லவேருற்றித்தவன யோசஞ்சாதித்தாலும் முடியாதுகைத் தொகையுட

க்கூட்டிச்சொன்னேன் பெரியசிறப்பையுடையது நீர்மையமானவெ தீயமுயற்சியையுடையது என்றுசொல்லப்பட்ட ஆச்சரியபொரு ள்களெல்லாம் என்னுடைய பிரகாசத்திலேபிறந்ததென்றறிந்தி யக்கடவையென்றவாறு. ❀ நீயுமென்றது எல்லைப்போலேநீயுமறி யென்பது. (௨௰)

பல்விளிபுனாத்தேனிந்தயீ பல்லுயிர்ளைத்து மெல்லா ..... ......*
யுல்களுமொருங்கிருந்த தென்னிலோரிடத்திலுள்ளே ................ *
கல்வலாயிவரோடென்றான் கஞ்சனுருயிர்போயித் துஞ்ச.........*
வலைகடல்வளராதேயோர் தாயர்பால் வளர்ந்தமெய்யான்............ *

(இ-ள்.) இனிப்பலதாகச்சொல்லி யென்னைப் பிரயோசனமிந்தப்ப லசீவன்களுஞ் சகலப்பிரபஞ்சமுமிந்த சண்டைக்குவந்து நிற்கிறவர் களுடனே என்னிலுள்ளே யொருமிடத்தி லொடுங்கிநிற்பதுகால்த் திரவல்லவருள்ள அருச்சுனுவென்று சொன்னார்கஞ்சனுடையசீவன் போய் அவன்சாகவேண்டி அலையையுடைய திருப்பாற்கடலிலேயி நக் கண்வளர்ந் தருளாமற் பூமியிலேபோயிடைய ரிடத்தில்வளர்ந் தருளிய ஸ்ரீகிருஷ்ணசுவாமி யென்றவாறு. ❀ இவரோ டூந்தபல்லு யிமானமாறுக.— (௨௧)

பத்தாவது விபூதியோக வத்தியாயம் முற்றும்.
ஆக அத்தியாயம் பத்துக்கு செய்யுள் (௨௱௧௰)

பதினோராவது.

# விசுவரூப அத்தியாயம்.

(எழுசீரடியாசிரியவிருத்தம்.)

அருளார்இன்றதுமாப்முடியாய் சொல்லுமனைமுந் தொடர் வுரி
யா-யருளார்சகடமிறவுதைத்தா யுயிர்கட்கெல்லா முள்ளுறுமிரோ;
யிருளார்பவத்தே கிடந்துழைக்கு மென்பாவிரங்க நீயுலகத்தை
வருளாசமுதென் சேவிகளாலாரப்பருகி யறவொழிந்தேன்.. *

(இ-ள்.) அருச்சுனன் சொல்லுவது சுழிகைக் கொண்டையிலமர்ந்திருந்த திருத்துழாய்மாலைமுடியை யுடையவரோ சொல்லுமனத்துந்தொடர எட்டாதவரோ உருளமைந்த சகடாசூரனைச்சாகவுதைத்தவரோ சகலஜீவன்களுக்கெல்லாம் முள்ளாக விருக்கிற ஜீவனே அஞ்ஞானமென்னு மிருளையுடைய பிறவியிலேகிடந்து உழைத்துக்கொள்ளப்பட்ட என்னிடத்திற் கிருபைசெய் தருளி நீர் உபதேசித்தகிருபைநிறைந்தஅமுர்தத்தை என்னுடைய காதுகளாகியவாய்நிறையக்குடித்துக்கிலேசந்திர்ந்தே னென்றவாறு. (௧)

தெரியாவகைநீ யேயெங்கு மாகிநின்றதிருக்கோல்...... ...*
மரியாயெய்ய யடியேற்குக் காணலாமோவென்வன்பாற் *
பரியாநின்றசிந்தையொடு பார்த்தன்வினவப்பழமறைதேர்- *
கரியானவனுக் கப்பரிசே காட்டவேண்டிக்கட்டுரைப்பான் *

(இ-ள்.) கிடைத்தற்கரிதான சுவாமியாருக்குத் தெரியாதபடி யெங்கும்பரிபூரணமாகி நீயேநின்றதிருக்கோலத்தை மெய்யாக்அடியேனுக்குப்பார்க்கலாமாவென்று அன்பினாலே யுருகப் பட்டமனதுடனே அருச்சுனன்கேட்க அவனுக்கு அந்தப்படியே காட்டவேண்டி பழையவெதங்கள் தேடப்பட்ட பிறவஞ்சசாக்ஷியானகிருஷ்ணசுவாமிசொல்லுவா ரென்றவாறு. (௨)

(கலிவிருத்தம்.)

எண்ணினியற்கைய தெண்ணி னிறைந்தது...... ........... *
பண்ணியொருத்தர் படைத்தறி யாதது. ...................... *
விண்ணினியற்கை சுருங்க விரிந்தது ... ... ........... ..... *
கண்ணினளப்பரி தாயது காணுய்............................ *

(இ-ள்.) இலக்கத்தினுடைய சுபாவத்தினாலே எண்ணிலக்கமிறந்து அப்பாற்பட்டதுஒருத்தர்பண்ணிப்படைத்தறியாததுபிருதிவி யப்புத்தேயு வாய்வுவென்ற நாலுபூதங்களை மடக்கின ஆகாயத்தினுடைய சுபாவமான விஸ்தாரமானது கொஞ்சமாய்ச்சுருங்கத்தக்கதாகவிஸ்தாரமானது கண்ணாலேபார்த்து அளவிட அரிதானதுப்படிக்கொத்த திவ்வியசொருபத்தைப் பார்ப்பாயென்றவாறு. (௩)

மருத்துவர் சூரிய ரட்டவசுக்க.................................. *
ளுருத்திரரொன்னிடை யேயுள ரியாரு.............. ......... *

மருத்திசெய்யற்புத மாயவ னேகங் ..................... *
கருத்திறவென்னிடை யேயுள் காணாய் ..................... *

(இ-ள்.) அசுவனி தேவர்கள் சூரியரஷ்ட வசுக்களுருத்திர ரிவர்கள் முதலான சரசீவன்கள் என்னிடத்தி லிருக்கிறார்கள் எல்லாரும் மன துபொருந்த அன்புசெய்யப்பட்ட ஆச்சரியமான அனேக மாகிய அசரசீவன்கள் என்னிடத்திலே யிருக்கின்றனகண்டாயருச்சுனா வெ ன்றவாறு. (௬)

என்றருளிச்செய் தவன்க ணிரண்டு ..................... *
நன்றறிகிற்கென ஞான மளித்திட் ..................... *
டன்றவனுக்கருள் செய்வகை யாயே ..................... *
நின்றவருக்கறி யாவகை நின்றான் ..................... *

(இ-ள்.) இப்படிச்சராசரங்களு மென்னிடத்திலேயிருக்கின் றனயான் அருளிச்செய்த அந்த அருச்சுனனுடைய கண்க ளிரண்டு நன்றாகப்பார்த்தறிய மாட்டா வென்றும் ஞானக்கண்களைக்கொடுத் து அப்போது அந்த அருச்சுனனுக்கு அருளிச்செய்தபடியே சொ ரூபமாகி அருச்சுனனல்லாமல் நின்ற பாண்டவர்கௌரவராயிருக்கி றவர்களுக்கு மறியாதபடிக்குநின்றா னென்றவாறு. ※ அன்றருளிச் செய்வகையென்றதனாலே சாஸ்திரபுராணங்களினால் முன் சொன்ன திவ்வியமங்களரூபமல்லாமல் அப்போதுசொன்ன பிரமசொரூப மாகநின்றானென்பது இன்னமும் அனேகவிதங்களில் அன் றருளி ச்செய்தவிதப்படி என்றுமாம். (௭)

(கலிவிருத்தம்.)

பருந்தினி தாளைப்பவென வனைப்படிவ மேலாய் ..................... *
விரிந்துலகமெங்கணும் விளங்கொளியி னாலே ..................... *
யெரிந்தனதிசைப்புறம தின்னவென வேதுந் ..................... *
தெரிந்திலர்கள்வானவர்க ளானவர் திகைத்தார் ..................... *

(இ-ள்.) கேளுந் திருதராஷ்டித மகாராசாவே அந்தவிசுவரூப த்தைப்பரிந்து நன்றாகச் சொல்லுவதென்ன உலகமெங்கு மவனு டைய சொரூபமேயாய்ப் பரந்தது அந்தச்சொரூபம் விளங்கப் பட் டசோதியினாலேபத்துத்திக்குமிருந்து பிரகாசித்தது அந்தப்பிரகா சத்தைப் பார்க்கமாட்டாமற் றேவர்களானவர்கள் திகைத்து அந்த

ச்சோதியது இன்னதென்று ஒன்றுந்தெரியாமல் வெளிச்சப் பட்டு
நின்றார்களென்றவாறு. ✲ தேவர்கள் திகைத்துந்திக்குகளைச் சோதி
க்கப்பக் கொண்டதுஞ்சஞ்செயனுக்குத்தெரிந்தது வியாசமகாமுனி
வரத்திருமேலும் அருச்சுனனுக்குத்தெரிந்தது கிருஷ்ணசுவாமி கொடு
த்த திவ்விய திஷ்டியினாலுமென்றது அருத்தாபத்தி வந்தது (௬)

(கலிவிருத்தம்.)

அங்குமால்கொள்கோலமிங் களர்ந்துகூற வாகுமோ...... .... *
கொங்குண்மாலை யாண்டசாந்து கொண்டகோலமேவியே ... *
யெங்குமாகியெல்லையின்றி யெண்ணில்கோடி பலகதிர்... ...*
மங்குல்வானில்வந்துதித்த தொக்குமற்றதன்கணே....... .... *

(இ-ள்.) கேளுந்திருதராட்டித மகாராசாவே அந்தக்குருபூ
மியிலே கிருஷ்ணசுவாமி கொண்ட விசுவரூபத்தை யிங்கேயளவிட்
டுச் சொல்லலாகுமோ ஆகாது பூந்தாதுக்கள் நிறைந்ததிவ்வியமாலை
பீதாம்பரம திவ்வியசந்தனமிவைகள் தரித்துக் கொண்டசொரூபத்
தைக் கூடியெங்குந்தானாகி யிப்பட்டென்று மட்டில்லாமல் அளவி
ல்லாதகோடி ஆனேகசூரியர்கள் மேகங்கள் சஞ்சரிக்கப்பட்ட ஆகா
யத்தில்வந்து உதயமானதையொப்பான சோதியுள்ளதாகும் அந்த
ச்சொரூபத்தினிடத்தில் என்றவாறு. (௭)

(கலிவிருத்தம்.)

எயவனைதாள்களோடு தோள்களு மனேகமு ........... *
சாய்பெறவணிந்தவணி தானுமனேகம் ....... .... . *
வாய்களுமனேகமொளிர்வாண்முக மனேக .... ........ *
மாயுதமனேகமெழு மற்புத மனேகம்....... ..... .... *

(இ-ள்.) அந்தவிசுவரூபத்தி னிடத்தி லிசைந்தபடி அனேகந்
திருவடிகள் அதனுடனே தோள்களுமனேகம் சாயைபெறமுன்னே
தரித்ததிவ்வியாபரணங்களுமனேகந் திருவாய்களுமனேகம் பிரகாசி
க்கப்பட்ட திருமுக மனேகம் ஆயுதமனேகம் எழும்புகிற ஆச்சரியம
னேகமென்றவாறு. (௮)

அவ்வகையமாயனமர் கோலமதனுள்ளே .... ... ... .... *
மெவ்வகையவாயபொருள் யாவுமெதிர்காணு ........... *
முய்வகையருயினனுவுவகை கூரச் ... .... ......... *
செய்வதறியாவிசைய னிவ்வகைசெய் தானல் ..... ...... *

(இ-ள்.) கிருஷ்ணசுவாமி யமர்ந்தசொரூபமப்படிக்கொத்ததைக் கேளுந் திருதராட்டிரமகாராசாவே அந்தச்சொரூபத்துக்குள்ளேயநந்தவிதங்களாகிய சகலபொருள்களும் ஒதிராகக்கண்டுதப்பிப்பிழைக்கின்றவிதத்தையுடையவனென்று சந்தோஷமிகுதியாக அதனுலேசெய்வதொன்று மறியாத அருச்சுனனிந்தப் படிசெய்தானென்றவாறு.— (௯)

தொழும்புகழுமெய்மயிர் குளைங்குமுயிர்சோரு...... *
மெழும்புவளமெழுவனன்றியெதிர்காணுன் ......... .... *
விழுங்குபலுவானென்ன விருப்புமெய்மயங்கா..... .... ... *
அழும்பரியுமென்செய்தன னென்றறியலாமால்....... *

(இ-ள்,) தெண்டனிடுவான் தோத்திரம்பண்ணுவான் சரீரத்துமயிர்புளகிதமாகி நடுங்குவான் ஜீவன் சோருவான் எழும்புவான் சகலபிரபஞ்சமும் அந்தக்கருஷ்ணசுவாமியையல்லாமல் வேறொன்றையுமெதிராகக்காணுன் அந்தச் சொரூபத்தை விழுங்கப்படுகின்றவனென்னத்தக்கதாக ஆசைப்படுவான் சரீரந்தெரியாமல் மயங்கிஅழுவான் இரங்குவான் இவைகளிலென்னசெய்தானென்றறியாமல் எல்லாஞ்செய்தானென்றவாறு. (௰)

அஞ்சிமெய்நடுங்கமிக வன்புறுமனத்தே................. *
நெஞ்சுமறிவுங்குழைய நின்றுதொழுநேரோ ............ *
புஞ்சகமோகண்டனனெனுருவுவகைகூரும்................ *
வெஞ்சுடர்கொலென்றனனவெயர்க்கும்வெயரொய்தான்.

(இ-ள்.) பயந்து வெயர்வையடைந்த அருச்சுனன் இந்தச் சொரூபத்துக்குப் பயந்துசரீரம் நடுங்கியிருந்த அன்பையமனநிலேயடைவான் இருதயமும் அறிவுங்குழைந்துருக எதிரேநின்று கைகூப்புவான் பிறவிக்கடலுக்குத் தப்பிப்பிழைத்துக் கரைகண்டேனென்று சந்தோஷமிகுதியாவாண். உஷ்ணமுள்ள சோதியோவென்றுன் சரீரம் வியர்வை யுண்டாகுமென்றவாறு. (௰௧)

மண்ணுறவணங்குமுயிருச்செனநினைக்குங் ...*
கண்ணுமனமுங்களைய நின்றுகைமுழத்தே... *
யெண்ணுமுலகங்களையு மியாவனையுமேனுட்...*
பண்ணுமவன்முன்புசில நின்றுபகர்வுற்றுன்.... *

(இ-ள்.) தன்னுடையசரீரம் பூமியிலேபடத் தெண்டனிடுவான் மயிர்க்குச்செறிந்து நிரைய கநிற்கப் புளகிப்பான்கரையாதகண்ணுங்கரைந்து ஆனந்தக்கண்ணீரோடக் கரையாதமனசுங் கரைந்துருகநின்று கைகூப்பியெண்ணப்பட்ட சகலபிராணிஞ்சத்தையுஞ் சகலரிஷிகளையும் பூர்வகாலத்திலே சிருஷ்டிக்கப்பட்ட அந்தக்கிருஷ்ணசுவாமி முன்னேநின்றுசிலவசனஞ்சொல்லுவானென்றவாறு. ௰௨

( அறுசீரடியாசிரியவிருத்தம். )

தேவரும்வணங்குந்தேவ னின்றிருக்கோலத்துள்ளே ...;.... *
யாவருமெல்லைகாணாப் பொருளெல்லாமிசையக்கண்டேன் *
மூவரின்முதற்புத்தேளை முனிவரரோடுங்கண்டேன்......... *
மேவருநாகங்கண்டேன் விண்ணவர்குழாமுங்கண்டேன் .. .*

( இ-ள். ) மனிதர் வணங்கப்பட்ட தேவர்களும் உம்முடைய அழகியசொரூபத்துக்குள்ளேஎல்லாரும்எல்லைகாணுதபொருள்களெல்லாம் இசையக்கண்டேன் திரிமூர்த்திகளில் முதலானதெய்வத்தை மகாமுனிகளுடனுங்கண்டேன் சேரஅரிதான பாதாளத்துப்பாம்புகளைக்கண்டேன் தேவலோகத்துத் தேவர்களுடைய கூட்டங்களையுங்கண்டேனென்றவாறு. (௰௩)

கண்களும்வயிறுந்தோளு முகங்களுங்கருதிநோக்கி...*
லெண்பலவுடையவாயு வுருவுகளனேகங்கண்டேன்....*
றண்கதிர்முடியுந்தண்டுஞ் சக்கரப்படையுமேந்தி... *
யொண்கதிரனலோடொன்றுயனையநின் னுருவினுள்ளே.

(இ-ள்.) குளிர்ந்த பிரகாசமுடைய கிரீடமுந்தெண்டாயுதமுஞ் சக்கராயுதமுந்தாங்கி அழகியசூரியர் அக்கினிகளுடனே யொன்றாய்க் கலந்ததையொப்பான உம்முடைய சொரூபத்தினுள்ளே கண்களும் வயிறுகளும் தோள்களும் முகங்களும் விசாரித்துப்பார்க்கிலெலக்கம் அனேகமுண்டானதாகிய ரூபங்களனேகங்கண்டேனென்றவாறு.— (௰௪)

( கலிவிருத்தம். )

இந்தவுருவெந்தவுரு வென்றறிகிலேனு.... ......... *
னந்தமறியேனடுவு மாதியுமனைத்து .................*

அந்தலறியாததனை நான்மறையுநாடித் ......... *
தந்தபொருளாயதனை மாயைதருசார்வை......... *

(இ-ள்.) இந்தச்சொரூபத்தை யெந்தச் சொரூபமென் றறிய மாட்டேன் ஆதியும் நடுவு மந்தமு மெல்லாமறியேன் நாசத்தையறியாததை நாலுவேதமுந்தேடி தரப்பட்ட வேதாந்தபொருளாகியதை மாயையைத்தரப்பட்ட சார்வானதையென்றவாறு. (௰௫)

என்றுமுனதாயதை யியற்றருமமெல்லா.........*
நின்றுபிறழாவகை நிறுத்துநெறிவாழ்வைச்...... *
சென்றுகுறையாததனை யென்பழைபசேர்வை...*
கன்றுதொடராயசு நின்றனெதிர்கண்டேன்... *

(இ-ள்.) என்றைக்குமிருக்கிறதாகியதையியல்பானதருமமெல்லாந்தப்பாதபடிக்கு நின்றுநிறுத்தப்பட்ட தருமமார்க்கமானசெல்வத்தைக்காலஞ்சென்றுகுறையாத நிறைவை இப்படிக்கொத்தசொரூபத்தை நான்சேவிக்கப்பட்ட வென் னுடையபழைய சேர்வையைக் கன்றைத்தொடர்ந்த பசுவைப்போல நீ யென்னைத்தொடருகின்றதை யுப்புடைய முன்னேகண்டேனென்றவாறு. ஃ இந்தவுரு வென்றபாட்டு- மென்றுமுளதென்றபாட்டும், ஒருதொடர்பு.(௰௬)

வலந்தருநிறத்தொடு வருங்கதிரிரண்டே ................... *
யலர்ந்தழவிழிப்பலதயமுங்கனெருப்பை...........*
மலர்ந்தெழுமுகத்ததை மபங்கவுலகெங்கும் ............ *
கலந்துசுடருற்றதை வியந்தனெதிர்கண்டேன் ......... *

(இ-ள்.) பாராக்கிரமத்தையுடைய திருமார்புடன் உலகத்தில் வரப்பட்ட சூரியர்சந்திரர் பரந்தெழும்ப விழிக்கின்ற கண்களாற்சுடப்பட்ட உஷ்ணத்தையுடைய அக்கினியைப் பரந்தெழும்புகிறதிருமுகத்தையுடையதை வெளிச்சப்பட்டுப் பிரவஞ்சமெங்குந்தெரியாமல்மயக்கந்தந்து சோதியெரிகிறதை யிப்படிக்கொத்த சொரூபத்தையெதிரேகண்டேன் அதிசெயித்தே யென்றவாறு. ஃ திருமார்புடனே திருக்கண்ணைத் திருமுகத்துச்சோதியைக்கண்டேனென்பது.

நிலத்திறெனடுவானுறநிமிர்ந்துதிசைநேர்போய்.*
விலக்கமறநீயுனது மேனியைவிரித்தா.......... *

லலக்கணடையாதவர்க ளாரடையவையா...... *
கலக்கமுறுகின் றவுல கங்களிவைகாணாய்...... .. *

(இ-ள்.) பூமியினுடனே ஆகாயமெங்கும்நிறைந்து திக்குகளி லேசெல்லவடாய்ப்போய் விலக்கப்பட்ட இடமில்லாமல் உம்முடைய திருமேனியை நீவிரித்தால் துன்பமடையாதவர்களார் ஐயா எல்லாருந்துன்ப படைந்தவர்களே அதிலேதிரிலோகங்களுங் கலக்கபடுகின்றது இதைப்பாருமென்றவாறு. (௰௮)

வணங்கியிமையோர்களொடு மாதவர்வழுத்திக்.... .... *
கணங்கொளவியந்துபுகழ் சித்தரதுகண்டே... ..... .. *
ணங்கவுயிர்தானவர்கள் கந்திருவருள்ளோ..............*
ரிணங்கியிமைதென்றறிகிலாமையெதிர்கண்டேன் .... .... *

(இ-ள்.) தேவர்க்களுடனே பெரியசவமுனிகள் உம்மைவணங்க வேண்டித்தோத்திரம் பண்ணிக்கொண்டு கூட்டங்கூட ஆதிசெயித்துத்தோத்திரம்பண்ணுகிறசித்தர்கள் ஒன்றுந்தெரியாமல் மயங்கிப்பெருமூச்சுவிடுகிற அசுரர்கள் கந்தருவர்கள் முதலாயுள்ளவர்கள் கூடியின்னதென்றறியமாட்டாதவர்களை யெதிரேகண்டேன்; எ-று.

வாணடையவிம்பிவரு ணம்பலவுடைத்தாய்ப்... *
பேயநடையவாய்பிறை போலெயிறுபேழ்வாய் *
தாணுடையவாய்மன முகம்பலதழைக்கும் ...... *
யானடையலாம்வகைய தன்றியுருவெந்தாய்....*

(இ-ள்.) ஆகாயமெல்லாம் நெருங்கிநிறைந்து அனேகம்வர்ணங்களையுடையதாய்ப் பேயினுடையசுபாவம் போலவாகிய பிறையினையொத்த கோரைப்பல்லுகளும் பெரியஆழமுள்ள வாய்களும்தனக்குடையதான அனேகம்வாய்களு மனேகமனசுகளும் அனேகமுகங்களும் கோரமையாகவளருகின்ற அந்தச்சொருபம்நான் சேரலாம்படியான தல்லசுவாமியென்றவாறு, (௨௰

(அறுசீரடியாசிரியவிருத்தம்.)

தஞ்சமிவ்வுலகுக்கெல்லா மாயநின் றன்மைகண்டே........ ... *
னுஞ்சனமெனன்றுமாய வுருவுறக்காணக்காண...... .........*

நெஞ்சமு நடுங்கி நிற்க நிலையிலென் றிசையுங் காணே......*
னஞ்சலென் றருள்வேண்டு மகிலமுமாய வெந்தாய்......*

(இ-ள்.) சகலமு நீயாகிய சுவாமி இந்தப்பிரபஞ்சத்துக்கெல்லாமாதாரமாய் நின்ற சுபாவத்தைக் கண்டேன் பிழைத்தே னென்றுமாயாதேகத்திலுள்ள மனதிலே தங்கத்தக்கதாகப் பார்க்கப்பார்க்க மனது நடுங்குகின்றது நிற்கநிலையில்லை ஓட ஒருதிக்கையுங்காணேன் ஆகையாலே பயப்படாதே யென்றருளிச்செய்ய வேண்டுமென்றவாறு.— (உக)

நூற்றுவர்தாமு நீதங்கள் சேனையுமவர்க்கட் காகி......*
யேற்றெதிராசர்தாமு மென்படைதானமு நீதன்......*
கூற்றுறழெயிற்றிற்பட்டுக் குறையுடலாக நின்றன்......*
காற்றுறு தீயினன்ன முகங்களில்வீழக் கண்டேன்......*

(இ-ள்.) கௌரவர்கள் நூறுபேரும் அவர்கள்சேனையும் அவர்கள் நடத்தி யெதிராகநின்று எதிர்த்தராசாக்களும் எங்கள் சேனையுமும்முடைய யமனையொப்பான தந்தங்களிலே பட்டு நறுக்குண்டு குறையுடலாகிற் தற்குக் காற்றிலிருக்கிற அக்கினியை யொப்பானவுமும்முடைய முகங்களிலே விழக்கண்டே னென்றவாறு. ※ அவர் கட்காவேற்றெதிராசரொன்று பாடமோதில் அவர்களுக்காக வெதிராக வெதிராகவெதிர்த்த அரசரொன்பதும் என்படையென்றதனுலெங்களைத்தவிரவென்றகருத்தாபத்தி. (உஉ)

ஓதருநதிகளெல்லா மொண்கட லடைந்தாற்போலப்......*
போதரும்பொருள்களெல்லா முன்னுளேபுகுதக்கண்டேன்......*
தீதனில்விட்டிற்பாய்ந்தாற் போற்றிரு முகங்களுள்ளே......*
மாதவவுயிர்களெல்லாம் வீழ்ந்துமாய் குதலுங்கண்டேன்......*

(இ-ள்.) இத்தனையென்றுசொல்ல அரிதான நதிக ளெல்லாம் அழகிய கடலைக்கூடினாற்போலப் போகப்பட்ட பொருள்க ளெல்லாம் உமக்குள்ளே புகுதக்கண்டேன் நெருப்பில் விட்டிற்பூச்சி பாய்ந்தாற்போல உம்முடைய திருமுகங்களுக் குள்ளே சகல சீவன் களும் விழ்ந்துசாகிறதுங் கண்டேன் மாதவா சுவாமியென்றவாறு. (உங)

ஒளியினிலுலகமெல்லா மொழித்தலை யூண்போதாமல்......*
வெளியிரு ணீட்டி நீட்டி வெறுஞ்சுவைகொள்ளா நின்றாய்......*

தெளிகிலேனுன்னையுந்தன் செய்கையுந்தெரிக்கமாட்டேன்..... *
னளியினாலடியேற்குன்னை யுள்ளவா றருளிச்செய்வாய்...... *

(இ ள்.) சோதியிலேசகலப்பிரபஞ்சத்தையும் விழுங்கிபந்தப்பொசிப்புப்போதாமல் வெளியிலே நாக்குகளை நீட்டி நீட்டி வெறுஞ்சுவையை நக்கிக்கொண்டிருக்கிற வுன்னை யின்னானென்று தெளியமாட்டேன் உன்செய்கையையு மின்னதென்று தெரிந்துகொள்ளமாட்டேன் இப்படிக்கொத்த அடியேனுக்குக் கிருபையினாலே யுன்னை யுள்ளபடி யருளிச்செய்வா யென்றவாறு. (௨௪)

என்றடிவணங்கிக்கேட்ப யாவுமா யெல்லையின்றி ............ *
நின்றவனுரைப்பானும்மை யொழியநின் றவரையெல்லாங் *
கொன்றுயிர்பருகலுற்றேன் கடையுகங் குறுக லுற்ற .... ... *
வன்றுலகடையமாய்க்கு மவனியா னறிநீயையா..... .... .... *

(இ-ள்.) என்று திருவடிகளில் வணங்கிக்கேட்க எல்லாமாகி எல்லையில்லாமல்நின்றகிருஷ்ணசுவாமி சொல்லுவார்ஐயாவுங்களைத்தவிர நின்றவர்களையெல்லாங் கொன்று சீவனைக்குடிக்கிறகாரியத்தையிப்போது செய்கிறேன் இது நான்பண்ணுகிறகாரியம் உகாந்தமுடிகிற அன்றைக்குச் சகலபிரபஞ்சத்தையுங் கொல்லுகிற கால சொரூபன் நான் என்னையின்னானென்று நான்செய்கிறகாரிய மின்னதென்றுஞ்சொல்லவேண்டுமென்று கேட்டையே அந்த விரண்டுஞ் சொன்னேன் அதை நீயறி யருச்சுனா வென்றவாறு. ✻ அன்று என்றதனா லின்றென்றதருத்தாபத்தி.— இப்போது செய்கிறகாரியத்திலும்மைத்தவிர வென்றதனால் உங்களஞ்சுபேரையுந் தவிர மற்றைப் பேரையென்றும் அருத்தாபத்தி வரும். (௨௫)

(கொச்சகக்கலிப்பா.)

இறந்தாரோயெனக்கருதிங் கிவர்களெல்லா மென்னாலே ........ *
யறந்தானும துநீயே யாங்கவரைக் கொன்றாயார் ... ... ......*
சிறந்தாரவ்வரசினையுஞ் செகத்தினில்வாழ்ந் திருவினையும் ... *
பிறந்தார்கள் பெறுதபெரும் புகழினையும்பெறென்றான் .... *

(இ-ள்.) இங்கேநின்றவிவர்களெல்லாரும் நீ கொல்லா விட்டாலும என்னாலே செத்தவர்களென்றேநினை தருமமு மதுதான்நீயே அவர்களைக் கொன்றாயாகில் சிறந்தாசாக்களுடைய அந்த அர

னையும் பிரபஞ்சத்தில் வாழப்பட்ட செல்வத்தையும் பிறந் தவர்கள்
பெறுகிற பெரிய கீர்த்தியையும் ஆதரியென்று சொன்னவாறு. ❁ இற
ந்தானென்ற வேகாரத்தினாலே நீ கொல்லாவிட்டால் சாகாமலி
ருந்தவர்களென்று நினையாதே யென்றாலே செத்தவர்க ளென்றே
நினையென்றல் - தேற்றேகாரம்- நான் கொன்றதனாற் பிரயோசனமெ
ன்னவென்று நீ கேட்கில் நீ கொன்றாற்சகல அரசுஞ் சகலசெல்வமும்
கீர்த்தியு முனக்கே வருமென்பது. (௨௫)

(அறுசீரடியாசிரியவிருத்தம்.)

இவ்வகைமொழிபக்கேட்ட விசையனென்செய்தானென்னிற்,
கைதலைமிசையவாகக் கட்டினா குளரக்கண்ணீர் ...... ...... *
பையவேமார்பிற்சோரப் பயத்தொடும் பரிவினோடும் ... .... *
மைவரையெடுத்தவள்ளல் பெருமையை வழுத்தலுற்றான்...*

(இ-ள்.) இந்தப்படி கிருஷ்ணசுவாமி சொல்லக்கேட்ட அரு
ச்சுனன் என்னசெய்தானென்று கேட்கிற் கேளுந்திருதராட்சமகா
ராசாவேயென்று சஞ்சயன்சொல்லுகிறான் அருச்சுனன் கைகளைத்த
லைமேலே கூப்பிக்கொண்டவனாக வார்த்தைகுளரக் கண்ணீர்கள் மெ
ள்ளமார்பிலே யுதிரப்பயத்துடனும் பத்தியுடனும் மேகஞ்சூழ்ந்த
கோவர்த்தனமலையைக் குடையாகவெடுத்த ஸ்ரீகிருஷ்ண சுவாமியி
னுடைய பெருமையைத் தோத்திரம்பண்ண வுத்தியோகப் பட்டா
னென்றவாறு. (௨௬)

(கலிவிருத்தம்.)

சாயாவிமையோர் சனகாதிகடா பதரானோர்..........*
சேயாயணியா யுனைவேறறியார் தெளியாதார்........ *
மாயாமனனே மதுசூதனனே திருமாலே ....... ........*
யாயாவரசேயுனைவே றறியே னடியேனே..............*

(இ-ள்.) சாயாமலிருக்கிற தேவர்களுக்குஞ் சனகாதியர்களு
க்கும் முனிவர்களுக்கும் தூரமானவனென்றும் சமீபமானவனென்
றும், உம்மைவேறொருவர்க ளறியார்களென்றும்; மாயா மனமு
டையவனேயென்றும், மதுசூதனனேயென்றும், திருமாலேயென்
றும், ஆயனேயெனறும்; அரசனேயென்றும், உம்மையல்லாமல்வே
றொருதெய்வத்தையறியேன் அடியேனென்று தோத்திரஞ்செய்தா
னருச்சுனனென்றவாறு. (௨௭)

ஏகாவழகேபிசழாவுருவே யென்தாழிப்...... ................*
பாகாவிமையோர் பருகாவமுதே பழையோனே......*
தீகாணிலநீ ருளவெறெவையுந் தெரிகல்லா ................*
வாகாயமுமேயுனைவே றறியே னடியேனே ............ ...*

(இ-ள்.) ஏகமானவனே அழகனே இசழப்பட்டாவுருவேஎன க்குத்துணையானவனே பாகனே தேவர்பருகாத அமிர்தமே பழைமை யானவனே ஐம்பூதனே உன்னையறியாமல் வேறொன்றையு மறியே னென்றும் சொன்னா னருச்சுன னென்றவாறு. (உகூ)

சாதீவினையாழியிலே விழுநா டபியேனைப்...... .........*
போதிதழியா நெறியென் றருளும் புனையாளா.... .......*
சோதியருவேயுருவே சுருதித்தொகைகூறு..............*
மாதிமுடிவே யுனையே றறியே னடியேனை.......... ...*

(இ-ள்.) தீவினையென்கிற சமுத்திரத்தில் விழுந்து இறக்கின் ற அடியேனை அழியாத மார்க்கமாய் இப்பொழுது நின்று இரட்சித் தெனையாளாவென்றும் சோதியே அருவேயுருவேசுருதியினுடை ய தொகைசொல்லுகிறவனே ஆதிமுடிவே உம்மை யல்லாமலடியே னுக்கு வேறேயொன்றுமில்லை யென்று சொன்னா னருச்சுன னென் றவாறு.— (௩௰)

இருவேறுயிரோவெனவே றுலகா மெவையாவுந்......*
தருவாமுதலேயவைபோ யழிநாடமியேனே..... ...*
யருவேயுருவேயுயிரோ மெனயற் றவசேரா......... ....*
வுருவேயுறவே யுனைவேறறியே னடியேனே.... ..........*

(இ-ள்.) இருவகையுயிரான உலகையெல்லா முண்டாக் கின கற்பகதருவிற்கு வேர்முதலானவனே யென்றும் உலகத்தை யழிக்கி ற நாளைக்கு உசசாகமானவனேயென்றும், அருவை யுருவையுயிரா ச்சேராத உருவேயென்றும் உறவேயென்றும், உன்னை யல்லால் வே றொருவரை யறியே னடியேனென்றுஞ் சொன்னா னருச்சுன னென் றவாறு.— (௩க)

மடலேலவடிவாய் தருமாயையிறேன் மறையாவு .........*
மியலேயிசையே யெழின்மாகவைபோ லினியானே...*

செயலேனையே மனமேயெனமற் றவைசோர ... .... *
வயலேயறிவே யுனையேவே றறியே னடியேனே .... ........ *

(இ-ள்.) மயக்கமேவடிவாகத் தருமாயையினாலே மறையாவுமானவனே இலக்கணமானவனே இசையானவனே அழகானவனே மகத்தாகிய சட்சுவைபோலும் இனிமையானவனே செயலானவனே உளையானவனே மனமானவனே அயலானவனே அறிவானவனே உன்னையல்லாமல் வேறொன்றும் அறியேனென் றருச்சுனன்.—எ-று.

ஒருநாகநடா வொருநா கமனா வுயமோதங் ....... .... *
கரநாண்மலரா லமுதாயெழவே கடைவோனே..... .... *
வரநான்முகனே மறைதேடரியே மழுவாள்சே .... .....*
ராருமவனே யுனைவேறறியே னடியேனே .... ........ *

(இ-ள்.) திருப்பாற்கடலிலே மேருவைநாட்டி ஒருநாகமேலாகவும், ஒருநாகங்கீழாகவும், நாணைப்பூட்டி உயர்ந்த ம்பனைக்கூட்டிக் கயலம்போன்ற லகயினாலே அமிர்தமுண்டாகவேண்டு மென்று இழுத்துக்கடைந்தவனே யென்றும்வாந்தருகிற பிரமாவேயென்றும்வேதந்தேடுகிற விஷ்ணுவேயென்றும் மழுவையும் வாளையுந்தரித்த அரனானவனே யென்றும், உன்னையல்லாமல் வே றொன்றையுமறியேனென்று சொன்னானருச்சுன னென்றவாறு. (௫௩)

ஞானமுதலிந்திரிய மனைத்தினுக்கு நாயகனே .... ..... *
யூனவினை தனையறுப்பா யுன்னுடைய புகழ்கேட்கில்- *
வானவருமுனிவரு மனங்களித்து மகிழவெய்தத் ...... *
தானவருமரக்கர்களுஞ் சாதுயரப் படுவர்களால் ....... *

(இ-ள்.) ஞானமுதலானவிந்திரிய மெல்லாவற்றிற்குங் கர்த்தனே குற்றமுள்ள தீவினையான பவத்தை யறுக்கிறவனே உன்னுடைய கீர்த்தியைக்கேட்கிற தேவர்களுக்கும் ரிஷிகளுக்கும் மனசுகளிப்புண்டாய்ச் சந்தோஷத்தையடைய அசுரரும் ராக்ஷதரும் மரணதுக்கப்படுவார்களென்றவாறு. (௫௪)

(அறுசீரடியாசிரியவிருத்தம்.)

கையும்பதமுந்திருவாயுங் கண்ணுஞ்செய்யகருமுகிலே ........... *
யையைம்பொருளுமறிவரியா யயனூர்தாயேயந்தமிலாய்..... ....... *

மெய்யும்பொய்யுமில்லாதா யெல்லாமாகிவிரிந்தாயே..................*
யுய்யும்பரிசுநினைந்தவர்க ளுன்னைவணங்காதவருளரோ.......... ....*

(இ-ள்.) திருக்கைகளுந் திருவடிகளுந் திருவாயுந் திருக்கண்களும் சிவந்தநிறத்தையுடைய நீலமேகம் போலுந் திருமேனி யையுடையவனே ஆத்மதத்துவ மிருபத்துநாலுஞ் சீவாத்துமா வொன்றுமாக விருபத்தஞ்சுபொருளும் அறி யவாயவனே பிரமாவின் தாயே முடிவில்லாத அனந்தனே மெய்யும் பொய்யுமில்லாதவனேமெய்யும் பொய்யுமான வெல்லாந்தானுகிப் பரந்தவனே பிழைக்கிறவிதத்தை நினைந்தவர்கள் உன்னைவணங்காதவர்களுண்டோ எல்லாரும்வணங்குகின்றவர்களே யென்றவாறு. (௬௫)

ஆதிதேவனுவாய்நீ யாக்கைக்கமைந்த வாருயிர்நீ......*
யாதுமறியப்படாமையுநீ யெல்லாங்கடைகாற்புகலிட நீ.
யோதியுணர்வாருணர்வுநீயுணர்வா லுணரப்படும்பொருணீ
நீதிமனுயழிப்பாய்நீ நீருங்காற்றுமாவாய்நீ.............*

(இ-ள்.) சகலதேவர்களுக்கு முந்தினதேவனுன ஆதிதேவனுனவன் நீ-தேகங்களுக்கு அமைந்த அரியசீவன் நீ- ஒன்றுமறியப்படாமையும், எல்லாவற்றையும் அறியப்பட்டவனும் நீ-முடிவுகாலத்தில்-எல்லாம்புகுதுமிடம் நீ- வேதங்களையோதி வேதாந்தத்தைத்தெளிகின்றவர்களிடத்துத்தெளிவும் நீ- அந்தத்தெளிவாலே தெளியப்பட்டபொருள் நீ- நீதியையுடைய யமனுய்க் கொல்லுகின்றவனும் நீதண்ணீருங் காற்றுமாகின்றவன் நீயென்றவாறு. (௬௬)

எயும்பரிசிவ்வுலகெல்லா மென்றும்பிறப்பித்திடுகின்ற........*
தாயும்பிதாவுமாவாய்நீ தாய்தாய்தந்தைதந்தையுநீ...... .*
யாவும்படியையல்லாத வையாவுன்னையடியேனென்.........*
மாயும்பிறவித்துயர்தீர நூறுயிரங்கால்வணங்கேனென்.......*

(இ-ள்.) இசையும்படிக்கு இந்தப் பிரபஞ்சத்தை யெல்லாமென்றைக்கும் பிறப்பிக்கிறதாயுந் தகப்பனு மாகின்றவன் நீதாயினுடைய தாயானபாட்டியுந் தகப்பனுடையதகப்பனுனபாட்டனும் நீ-விசாரித்துத் தேடியறியப்பட்ட சுபாவத்தை யல்லாத விசாரித்துந் தேடியுமறியப்படாத சுபாவத்தையுடைய சுவாமியென் பிறவித்து

ஷ்பந்தீரவேண்டி அடியேன் உன்னை நூறுபிரந்தரம் வணங்கினே
னென்றவாறு. (௬௭)

என்பேரிடும்பைக்கெடும்வண்ண பின்னந்தொழுதேனெந்தாயு .. *
முன்பேதொழுதேனுன்னுடைய பின்பேமுறையால்வணங்கினேன்.. *
னன்பேயடியேனாரமுதே யகலாவிந்தப்பெரும்பிறவி.... ...... *
வன்பேகெடவுன்றனையெங்குமறித்துமறித்துவணங்கினே.... .... *

(இ-ள்.) என்பெரியதுக்கங் கெடுகின்ற நிமித்தமாகஇன்னம்வ
ணங்கினேன்சுவாமி உன்னுடைய முன்னேவணங்கினேன் உன்னு
டையபின்னே முறையையாலே வணங்கினேன் என் அன்பே அடி
யேன்குடிக்கிற அமிர்தமே யென்னைவிட்டு நீங்காத இந்தப் பெரிய
பிறவியினுடைய வலுமையறிடவேண்டி யுன்னையெங்கெங்குந்திரும்
பியும் திரும்பியும் வணங்கினேனென்றவாறு. (௬௮)

தேவதேவனின்னில்வேறு தேவரோதுதெய்வமேது....*
பாவமேதறங்களேது பற்றியாதுவீடியாது .........*
சாவதேதுவாழ்வதேது தனைத்துமாயதன்மைநீ.........*
யாவதேதுமொன்றுதானறிந்திலேனென்மாயனே... *

(இ-ள்.) தேவதேவா உனக்குள்ளே யுன்னைத் தவிரவேறு
தேவர்களேது தெய்வமேது பாவமேது புண்ணியமேது பாசபந்த
மேது மோக்ஷமேது சாவதேது வாழ்வதேது இவை முதலான சக
லமுமாகிய சுபாவம்நீயாவது இதையேதாகிலும் ஒன்றாகிலும் முன்
னேநான் அறிந்ததில்லை அதென்ன சுவாமியென்றுவென்றவாறு.

நீதிவேதம்வானுளோர் நிலத்துளோர்நினைந்துறைந்...*
தோதியோதியுட்கசிந் துணர்ந்தவுன்னைமுன்னெலாஞ்*
சாதிபேதமாகிவாழ் சராசரங்களுக்கெலா ............ *
மாதிமூலமொன்றுநா னறிந்திலேனென்மாயனே.... *

(இ-ள்.) மேலோகத்திலுள்ள தேவர்கள் பூமியிலுள்ள மனி
தர்கள் தெய்வமாரோவென்று நினைந்துமனகுரைந்து நீதியுள்ளவே
தத்தை யோதியோதி மனசுகனிந்து உருகிநீயென்று நிச்சயமாகத்
தேறித்தெளிந்தவுன்னை யிந்தவிசுவரூபங்காணாத முன்னெல்லாமனே
வற்றசாதிபேதமாகி வாழப்பட்ட சராசரங்களுக்கெல்லாம் முந்தின

ழுசமென்று நானறிந்தேனில்லை அதென்னசுவாமி யென்றவாறு.—
ஆதிமூலமாவஸ்து முதற்பீசம். (௪௰)

சாயையோலும்வாழ்வுநாடு வீடுதந்தைதாயெனும்...*
பேயையேறிமாறியே பிறந்திறக்கயீதெலாந்... ..... ....*
தூயையாகியாதுமோர் தொடக்கிலாதுநின்றநின் ....*
மாயையாவதென்றுநா னறிந்திலேனென்மாயனே.... *

(இ-ள்.) நிழலையொப்பான வாழ்வு நாடு வீடு தகப்பன்றாயென்றுசொல்லப்பட்ட பேயை நிச்சயமென்று மேன்மேலும் அதுமேமுயற்சியாகவேறிமாறிமாறிப் பிறந்துபிறந்து செத்துச்செத்துவருகின்றவிதங்களெல்லாம் பரிசுத்தையாகி ஒன்றுகிலும் ஒருபற்றில்லாமல் நின்றவுன்னுடைய மாயையாகின்றதென்று முன்னே நான் அறிந்தேனில்லை அதென்னசுவாமி யொன்றவாறு. (௪௧)

யாதவாவென்மைத்துனவடாவசோதையின்னுயிர்க் *
காதலாபகாலியாய் கண்ணகண்ணவென்றுநா ... ......*
ஞேதவாவதன்றியே யுனாத்ததீமையானையு ... .... .... *
மாதகாதவென்றுநா னறிந்திலேனென்மாயனே ......*

(இ-ள். அடாயாதவா! அடாவென்மைத்துனா! அடாஅசோதையினுடைய விளியசிசுவையொப்பான*குமாரா! அடாபசுமேய்க்கிறவிடையா! அடாகிருஷ்ணா? அடாகிருஷ்ணாவென்றுசொல்லலாகாதசொல்லை நான்சொன்ன பொல்லாங்கு சகலத்தையும் தகாதசொல்லென்று முன்னே நான் அறிந்தேனில்லை அது வென்ன ஆச்சரியமென்றவாறு. (௪௨)

ஏறுமல்லுவென்றுகுன் றெடுத்தவண்ண மெண்ணியே ... ..*
கூறுமல்லதீரவும்பர் கூறுகன்ற கொண்டலே ... ..... .... .... *
வேறுமலையான்றுமல்லை மெய்மைகூறுமப்பொரு......*
ளாறுயல்லையொன்றுநா னறிந்திலேனென் மாயனே.... ...*

(இ-ள்.) கோசலராசாவினுடைய பெண்ணைக் கலியாணம்பண்ணுகிறதற்காக எழுரிஷபத்தையுங் கஞ்சனவிட்டமல்லரையுஞ் செயித்து இந்திரன் வருஷிப்பித்த மழையைத்தடுத்துப் பசுக்களையுமிடையரையுங் காக்கவேண்டிக் கோவர்த்தன மலையைக் கொடையாகவெடுத்துத் தடுத்ததை நினைத்துச்சொல்லப்பட்டவுன்பந்திரத்து

தேவர்கள்கொண்டாடப்பட்ட நீலமேகத்தையொப்பான சுவாமி நீ வேறுவேறான அனேகருமல்ல ஒன்றுமல்ல சத்தியத்தைச் சொல்லப்பட்ட பொருள்மார்க்கமு மல்லவென்று நான்முன்னறிந்தேனில்லை அதென்ன ஆச்சரியஞ் சுவாமி யென்றவாறு. (௪௩)

(கலிவிருத்தம்.)

என்னுடைய தோழனென்ன வேகருதியானு ........ ....*
முன்னுடைய மெய்ம்மையினை யொன்றுமுணராதே... *
வன்மையினி லின்மொழி மறுத்தெதிருரைத்த .... .....*
புன்மொழிகளானவை பொறுத்தருள வேண்டும் .... *

(இ-ள்.) நானும் என்னுடைய தோழனென்றேயுன்னை நினைத்து உன்னுடைய சத்தியத்தையொன்று மறியாமல் என்னுடையவலுமையினாலேயுன்வசனத்தைத்தடுத்து எதிர்வசனஞ்சொன்ன அற்பவசனங்களானவைகளைப் பொறுத்தருளவேண்டுமென்றவாறு. (௪௪)

உண்ணல்விளையாடுத லுறங்குதல் சிரித்தல்.......... ....*
பண்ணுறுபோதுக ளினும்பழமை யானு......... .... .*
மெண்ணலறியாமையினில் வந்தபிழையெல்லாம்......*
கண்ணகருணாகர பொறுத்தருளு கண்டாய் ... ......... *

(இ-ள்.) கிருஷ்ணா! கிருபா சொரூபா! போசிக்கிற போதும் விளையாடுகிறபோதும் நித்திரைபண்ணுகிறபோதும் சிரிக்கிற போதும் இருவருக்குமுள்ள பாரம்பரிய உறவுபழமையினாலும் மைத்துனன் முறைமையினாலும் உன்னைச்சுவாமி யென்றெண்ண அறியாமையினாலே எதின்பிழையெல்லாம் பொறுத்தருளவேண்டுங்கண்டாயென்றவாறு.— (௪௫)

(எண்சீரடியாசிரியவிருத்தம்.)

உண்டாவுலகனைத்து மீன்றாய்நீயே யெவராலு முன்னு
ண்மை புணர்ந்துகூறிற் - கொண்டாடப் பரிவாய்நீ மே
ன்மைநல்கிக் குருவாகிக்குற்றங்க ளோர்க்கின்றாய்நீ - யெண்
டாலுமறையனைத்து முன்னின்மிக்கா ரில்லை யென நின்
றெடுத்து மெடுத்துக்காட்டக் - கண்டாரு நின்பெருமை
காணமாட்டார் கண்ணிலாதவர்வேறுகாண்பதுண்டோ.

(இ-ள்.) உண்டாகிய சகலப்பிரபஞ்சத்தையும், நீயேபெற்றாய் எவ

ராகிலும் உன்னுடைய வன்மையை யறிந்துசொன்னால் அவர் களை நீகொண்டாடி யண்டிசெய்வாய் அவர்களுக்கு மேன்மையைக்கொடுத்துக்குருவாகி யுபதேசித்துக் கீழ்மையானகுற்றங்களை நீ தீர்க்கிறய் உளவைப் பிரமாணமுஞ் சகலவேதமும் உன்னிலும் அதிகமானவர்கள் இல்லை இல்லையென்று துணிந்துநின்று சொல்லி எதுவு மெடுத்துக்காட்ட அதனாலே கண்டவர்களும் உன்னுடைய பெருமையைக்காணமாட்டார்க ளாகையாலே ஞானமென்கிற கண்ணில்லா தவர்கள் காண்பது வேறேயுண்டோ அஞ்ஞானியான குருடன் ஒன்றுங்காண்பதில்லை யென்றவாறு. (௬௬)

அறியாதபருவத்து மகன்செய்குற்ற மருந்தந்தை பொறுத்த
னவுமாமிபோலப் - பிரியாததோழன்செய்குற்ற நட்பிற் பெரி
யோர்கள் பொறுத்தனவும் போலதயேனுன் - குறியாது செய்
துவருங் குற்றமெல்லாங் குணமாகக்கொண்டருளவேண்டுமெ
ன்றே- வெறியாரு மலர்ப்பதங்களிடையே வீழ்ந்து வேண்டி
க்கொண்டிவைபின்னும் விளம்புகுற்றான்.................*

(இ-ள்.) அறியாதசுழந்தைப் பருவத்து மகன் செய்தகுற்றத்தை அருமையானதகப்பன் பொறுத்தாற்போலவும் தேகசீவனைப்போலப் பிரியாததோழன் செய்தகுற்றத்தைச் சிநேகிதத்தினாலே பெரியோர்கள் பொறுத்தாற்போல அடியேனான் உம்மையறியாமல் நாள்தோறுஞ் செய்துவந்த குற்றத்தை யெல்லாங் குணமாகக் கொண்டருள வேண்டுமென்று தேன்நிறைந்த செந்தாமரைப் பூவையொப்பான திருவடிகளிடத்திலே தெண்டனாக வீழ்ந்துவேண்டிக்கொண்டு இன்னமிதைச் சொல்ல வுத்தியோகப் பட்டானென்றவாறு.— (௬௭)

(கலிவிருத்தம்.)

பண்டுகண்டறியாப்பழங் கோலத்தைக்............ .... *
கண்டுநெஞ்சங் கலங்குங் களிக்குமாற்.........  ..........*
றண்டுநீண்முடி சங்கொடு சக்கரங் ............... ........... *
கொண்டகோலத்தை யேகொண்டருளுவாய்...... ..*

(இ-ள்.) முன்னேயொருகாலுங் கண்டறியாத பழையசொரூபத்தை இப்போது கண்டு மனதுகலங்குகிறது ஆனந்தங்கொள்ளுகிறது ஆகையாலே தண்டாயுதமும் நீண்டகிரீடமுஞ் சங்கும் அதனுடனே

சக்கரமுந்தரித்துக் கொண்ட புதிய கிருஷ்ணசுரூபத்தையே கொண்டருள்வா யென்றவாறு. (சअ)

(கலிவிருத்தம்.)

என்றவனுரைத்திடலு மெவ்வுருவு மொன்றாய் ... ... ..... *
நின்றவனுரைத்தருளு வாணிறை யொளித்தாய்..... .... *
மூன்றுமுதற்பொருளு மாய்முழுது மாய ......... ..... *
வென்றனுரு வதினைமுன் னியாவரறிகிற்பார்......... *

(இ-ள்.) என்று அருச்சுனன்சொல்லலும் எந்தரூபமுமொன்றுநின்ற கிருஷ்ணசுவாமி திருவாய் மலர்ந்தருளுவார் நிறைந்தசோதியையுடையதாகி முன்னெல்லாவற்றையுந் தரப்பட்டமூன்றின்பொருளுமான ஆதிமூலமுமாகி எல்லாம் நானாகி என்சொரூபத்தையிப்போது நீயறிந்தாற்போல் முன்யா ரறியமாட்டுவார்கள் யாருமறியாரென்றவாறு. (சகூ)

வேதநெறியானுமிரு வேள்விகளினானும்............ *
மாதவமையாலுமுயர தானவகை யாலுங் ......... ..... .... *
காதலர்கள்காண்முடியா வடிவுகண்டாய்...... ......*
யேதமறியாதவெளி யோகவலி யாலே................ *

(இ-ள்.) வேதமார்க்கமான வைதிகக்கிரமங்களினாலும்மிகுந்துசெய்த யாகங்களினாலும் மகாதபசுகளினாலும் ஏற்கிறவர்கள் மனதுசந்தோஷிப்படக் கொடுத்ததான விதங்களினாலும் இவைகளின்பிரயோசனத்தை யிச்சித்த ஆசையுடையவர்களாலே காணமுடியாதசொரூபத்தைப் பிரயோசனத்தைஇச்சிக்கிறதாகிய குற்றத்தை யறியாதவென்மேலேவைத்த மனதுள்ளயோகமான ஆத்ம யோகவலுமையினாலே நீகண்டாயருச்சுனாவென்றவாறு. (ருய)

இப்பரிசுரைத்தருளி யிரிருகையையா..... ......... ......... *
யப்பழையகோலமது வாயருளியங்கே.................*
மெய்பயமகற்றிவிசை யாக்கிவைகள்வேறே ............... *
யொப்பவரின்மிக்கவரி லாதவனுலாப்பான்............... *

(இ-ள்,) இந்தப்படி திருவாய்மலர்ந்தருளி நாலு கைகளையுடையதாகிப் பழையமனிதசொரூபமா யருளிச்செய்தபோது

அருச்சுனனுக்குச் சரீரபயத்தைத் தீர்த்து தனக்குத் தானேயொப்பி
ல்லாமல் வேறேயொப்பானவரில்லாத வேறே அதிகமானவரில்லாத
கிருஷ்ணசுவாமி யிவைகள் சொல்லுவா னென்றவாறு. (௫௰)

(அறுசீரடியாசிரியவிருத்தம்.)

கண்டவரில்லை நீமுன் கண்டவிக்கோலங்காண .......... *
அண்டருமறியாநின்றா ராதலாலன்புகூருந் .......... *
தொண்டருமாகியென்னை யன்றியோர்தொடக்கில்லாமை,
கொண்டவரடைவரென்றுங் கோக்குலமேய்த்தகோமான்.

(இ-ள்.) நீ முன் கண்ட விசுவரூபத்தை யுன்னைத் தவிரக் கண்டவர்களில்லை தேவர்களுங்காண அறியாமல் நின்றார்களாகையால் என்மேல் அன்புமிகுதியாகப்பட்ட அடியானுமாகி யென்னையல்லாமல் வேறொரு நினைவு தொடங்குவதில்லாத எண்ணத்தின் சித்தமாகக் கொண்டவர்களிந்தச் சுருபத்தையடைவார்களென்று பசுக்கூட்டங்களை மேய்த்த ஸ்ரீக்ருஷ்ணசுவாமி சொன்னானென்றவாறு. (௫௨)

பதினோராவது - விசுவரூப - அத்தியாயம் - முற்றும்.
ஆ அத்தியாயம் - ௰௧ - இ - கூடிய செய்யுள். (௫௪௭.)

பன்னிரண்டாவது.

# பத்தியோக அத்தியாயம்.

(அறுசீரடியாசிரிய விருத்தம்.)

வயநானெதிரே கண்ட வுருவமேயிசைகிற்பாரோ.................. *
ஆ நான்மறைக்குமெட்டாப் பொருளையேதொடர்கிற்பாரோ... *
தாயனைப்பெரியோரென்று தனஞ்செயன்வினவத்தானே..... .... *
நேயனுயிர்நிரைகண்மேய்க்கு மாடல்வேறருளிச்செய்வான்...... *

(இ-ள்.) தாயையொப்பான அன்புள்ளவரோ பெரியோர்களெல்

லாம் உன்னிலேயொருந்த நான்கண்முன்னேகண்ட இந்தவிசுவரூப த்தையேமனதிலே பொருந்திச்சேவிப்பார்களோ அல்லது சுத்தமா ன நாலுவேதங்களுக்கு மெட்டாதபொருளாகிய பிரமத்தையே தொ டர்ந்து சேவிப்பார்களோ இந்தவிரண்டில் எதை நிச்சயங்கொள்ளு வார்களென்று அருச்சுனன் கேட்கத் தானொரு இடையனாகப் பசுக் களைமுன் மேய்க்கப்பட்ட ஸ்ரீகிருஷ்ணசுவாமி வேறேயருளிச்செய் வாரென்றவாறு. ❁ வேறேயென்றதனால் முன்காட்டினதும்போதா மல் வேறும் அருளிச்செய்வாரென்ற கருத்தாபத்தி. (க)

மன்ன நீகாண நான்முன் காட்டியவடிவைநெஞ்சா........ *
லுன்னல்வாய்மொழிகளாலே புகழ்த்தல்செய்பவர்களெல்லா *
மென்னலாற்பிறிதொன்றெய்தா ரியாரினுநல்லாரிங்குச்...... *
சொன்னவான்றிமற்றை யவர்கடந்துறையுங்கேளாய் ... ... *

(இ-ள்.) இராசாவே; நீ கண்ணாலேகாண நான்முன்காட்டினவி சுவரூபத்தைமனதிலே தியானித்தல் வாய் வார்த்தைகளாலே தோத் திரம்பண்ணுதல் இவ்விரண்டுஞ் செய்பவர்களெல்லாம் என்னைச்சே ருவார்களல்லாமல் வேறொன்றைச் சேரார்கள் இவர்களாரிலும் நல்ல வர்களிப்போது சொன்னவிசுவரூப நிஷ்டைகளல்லாமல் மற்றபிர மநிஷ்டர்களுடைய துறையுங்கேட்பா யென்றவாறு. ❁ வேறொ ன்றாவது பிரமாவினுடைய பதவி இந்திரபதவி முதலானவையி வைகளுக்குமேலான வென்னைச்சேருவதினாலே தாழ்ந்த பதவிகளை யிந்தவிசுவரூபநிஷ்டர்கள் தங்களைச்சேர்ந்தவர்களுக்குக் கொடுப் பாரென்பது குறிப்பு. (உ)

உரைசெயற்கரிதாய்நெஞ்சி னுணர்விடப்படாதேயெங்கும்..*
புரையறக்கலந்துபோக்கு வரவின்றிப்பொலிந்ததொன்றைக்,
கரைசெயற்கரியவாய புலன்களைக்கடந்துகாண்பா........ . *
ரசமர்த்தியானேயென் னிலனன்னியமென்னலாமே ... ... ... *

(இ-ள்.) இப்படி யப்படியென்று சொல்லப்படாததாய் மனதி லுண்டாகிய அறிவினிடத் தகப்படாமல் எங்கு மிடையறக் கலந்து போக்குவரவில்லாமல் பொலிவினை யுடைத்தாகிய ஒன்றானபிரமத் தை அனேகவழியாகப் புரண்டோடிக் கரைகட்டக்கூடா தாகியவெ ள்ளத்தையொப்பாய் மட்டுப்படாததாய்ப் பலவழியாகச் சிதறியே

யென்றதாகிய பஞ்சேந்திரியங்களைக் கடந்துகாண்கின்றவன் நானே யென்றால் இராசாவே; யென்னைத்தவிர அன்னியமென்று அவனைச் சொல்லலாகுமோ ஆகாதென்றவாறு. ஃ புணர்தல்என்பது-குற்றமறவென்பதாம். குற்றமாவது-எங்கெங்குங்கலத்தலுக்கு அணுவதத்தை கலவாவிட்டாலும் எங்கெங்குங்கலந்ததல்லாமல் எங்குங் கலந்தமென்றசொல்லுக்குக் குற்றமாகையால்இடையறக்கலந்தமதன்றதுபோக்குவரவாவதுசலனம். (௬)

காரணமிறந்தொன்றிற்குங் காட்சிபிற்படாதவொன்றைச் *
சேர்பவர்வருத்தம்வேறென் செப்பிடலாவதென்னு *
லோர்வரிதிதுதான்வாழு முயிர்களாலாவதென்று *
லாரவர்பெருமைதன்னை யளவறுப்பவர்களையா *

(இ-ள்.) காரணங்கேட்டு ஒன்றிற்குங் காண்பதற்கு அகப்படாததொன்றான பிரமத்தைச் சேருவோர்களுடைய பிரயாசத்தைவேறே என்னசொல்லலாவது என்றால்பேயறியப்படாது இந்தப்பிரயாசமான பிரமநிஷ்டையானது உலகத்தில்வாழப்பட்ட வுயிர்களால் ஆவதானால் அந்தவுயிர்களுடைய பெருமையைப் பிரமாணமாக அளவறுக்கின்றவர்கள்யார் யாருமில்லை ஐயா வென்றவாறு. ஃ பிரயாசமாவதுகாணப்பட்ட தேகிக்குங்காணாத ஆத்மாவைத் தியானிக்கின்றது பிரயாசமென்க. (௭)

யாவர்கள்சிலர்களெல்லா வினையுமென்கண்ணேவிட்டிட் *
டாவர்தம்மறிவென்பாலே யாக்குவாரவர்கடம்மைச் *
சாவதுமுதலாயுள்ள துயர்க்கடனின்றுந்தாங்கி *
யுயர்கிளென்னுங்காலஞ் சிறிதிலேயெடுக்கின்றேனன் *

(இ-ள்.) எவர்களோ சிலபேர்களெல்லாவற்றையுமென்னிடத்திலேவிட்டுவிட்டு அவர்கள்தங்களுடைய அறிவையென்னிடத்திலேயாகப்பண்ணுவார்களோ அவர்களை எவர்களானாலுஞ் சாகின்றதுமுதலாயுள்ளதுக்க சமுத்திரத்திலே நின்றுந்தாங்கிச் சீக்கிரத்திலே எடுக்குமாட்டுவேனென்றவாறு. (௮)

(எழுசீரடியாசிரியவிருத்தம்.)

மெய்யுமவன்னையென்னிலேவைத்தாலென்னில்வேறன்றியொ
ன்று யுறவில்லைய துமுடியாதே லாயினுமதனையேபயி

லிவாய், பொய்யறவதுவும் புரிகிலாதெனிலுன் வினைகளென்பொருட்டிஞற்செய்வாய், செய்யுமவ்வினைக ளப்படிச்செயாயேல் வினைப்பயன் றவிரவேசெய்வாய்...... ..............*

(இ-ள்.) மெய்யாகவென்னிடத்திலே யுன்னை வைத்தால் நீ நானென்று வேறுபடாமல் என்னிலொன்றுகின்றதற்குச் சந்தேகமில்லையென்னி லுன்னைமெய்யாக வைக்கமுடியாதாகில் ஆனாலும் அப்படி வைக்கின்றதையே அப்பியாசம்பண்ணுவாய் அந்த அப்பியாசமும் பொய்யறச் செய்ய மாட்டாயென்று உன் காமங்களை எனக்காகச் செய்வாய் அப்படியெனக்காகச் செய்யப்பட்டகருமங்களை அப்படிச்செய்யமாட்டாயாகில் ற கரும பலனை யிச்சியாமற் செய்வாயென்றவாறு. இதனால் ஆத்மஞானஞ்சித்திக்குமென்பது குறிப்பு. (௬)

(கலிவிருத்தம்.)

அத்திஞானவினையி னதனினு ....... ..............*
மெய்த்தியான மிகுமதன் மேலதாம்..............*
வித்தியை வினைப்பயன் வீடுதல் . ........ .... ... *
சித்தசாந்தி யதனினுஞ் சீரிதால்........... ......*

(இ-ள்.) கருமமாகிய அப்பியாசத்திலும் ஞானமழகியது அந்த ஞானத்திலும் மெய்யான தியானமதிகம் அந்தத்தியானத்திலும் பிறவியிதையை யொப்பாகிய காமப்பலனை யிச்சியாதநியாக மதிகமாம் அந்தத்தியாகத்திலுஞ் சித்தசாந்தி சிறப்புடையதென்றவாறு. இதில் ஆ—ஆல்—அசைகள். (௭)

(எழுசீரடியாசிரியவிருத்தம்.)

இருவகையுயிர்க்கு மினியனுயின்ப துன்பங்களியாமெனதறிபா..*
ஒருபொருளாலுங் குறைவபாடன்றிடன்ஏமுமொருவழிப்பாடாய்ப்
பொருவருந்துணிவுங் கருணையும்புரிந்து புலன்றெறி புணர்வையெயன்பாலே - மருவுதின்றெழுகு மியோகிடென் பவன் காண்மன்னவமத்தெனக்கினியான்.......... ...... ............... .. .........*

(இ-ள்.) சரம் அசரம என்கிற இரண்டுவகையான சீவன்களுக்கு நல்லவனாய் சுகதுக்கங்கள் நான் என்கின்ற அகங்காரசுதந்திரங்கள் இவைகளையறியாமல் கிடைத்தபதார்த்தமென்றது இவைகளிலொருபதார்த்தங்களாலுங் குறைபாடில்லாமல் கிடைத்ததைத்தையனுபவி

க்கிறவனாய் பலவழிப்பட்டுகிற மனதும் ஆத்ம சொரூபமான ஒருத்தியிலேநடக்க ஒப்பில்லாத துணிவுந் தயவுஞ்செய்து பஞ்சேந் திரியங்களாலே தெரியப்பட்ட அறிவை யென்னிடத்திலே சேரநின்றஇந்தப்படி யெப்போதும் நடக்கின்ற யோகியென்கிறவன் கண்டாயிராசாவே யெனக்குப்பிரிய னென்றவாறு. ஐ சுகதுக்கங் களையும் அகங்காரசுதந்திரங்களையும் அறியாமலென்பது அறியப்படுவ தெல்லாம் என்னையேயென்று அறிந்ததினாலே சுகதுக்கங்க ளென்றும் அகங்கார சுதந்தரங்களென்றும் நாமரூப கிரியைப்பகுப்பு அறியவொட்டாது என்றது குறைபாடில்லாமல் என்பது இச்சையில்லாமல் அநிச்சையாக வந்ததை யநுபவிக்கையாலே ஒருபதார்த்தங்களையும் அந்தக்குறையில்லாமலென்பது உள்ளமென்றதனாற் பலவழி யோடுகிற மனதும் ஒருவழியாக நடக்கவென்றது இன்னமுஞ் சகலசீவனுக்கு மினியனாய்சுகதுக்கங்கள் அகங்காரசுதந்திரங்க ளறியாதவனாய் இச்சையில்லாதவனாய் இப்படியிருந்தாலும் மனது ஒருவழிப் பட வேண்டுமென்றுமாம்- துணிவாவது - எத்தனையாபத்து வந்தாலும் ஒன்றுஞ்செய்யமாட்டாதென்று ஆத்மசொரூபம் அறிந்ததனால் வந்ததுணிவு கருணையாவது செய்வ மொன்றுண்டு அது செய்கிற தின்னமென்று பகுக்கவு மித்தனைகாலஞ் செய்வதென்று கணிக்கவுங் கூடாது அவனுடையவிதியையாராலுங் கடக்கக்கூடாது என்றறிந்து இதில் ஆகப்பட்ட எல்லாரும்நானே நானே யெல்லாருமென்று தன்மேலவைத்த தயவைத் தனக்கு நன்மை தின்மை செய்வார்கள் மேலுஞ்செய்வது தயவு துணிவின்னமு மொருவிதம் தெய்வத்தின்விதிக்கு ஒழிவில்லை தடையில்லை ஆகையாலே தேகமெத்தனைவந்தாலும் அந்தத்தேகங்களுக்குள்ள சுகதுக்கங்களெத்தனை வந்தாலும் விதிப்படிக்கல்லாமல் விசாரத்தினா லொழிவில்லையே அதினாலே நடந்த தெல்லாம் நடக்கட்டும் நடக்கிறதெல்லாந் தேகத்துக்கே யல்லாமல் நமக்கொன்றுமில்லையே யென்கிற துணிவுமாம் அறிவாவது விவேகியறிவு.— (அ)

உலகமுந் தானும்வேறிலாமையினா லொருபொருட்கு மஞ்
சாதே-பலகலாவுயிர்கட் கினியனாதலி னுலகமுந் தன்னை
யஞ்சாதே - புலவரானவர்கள் புகழவே நிகழ்வானபொருளை
யுபயக்கருக்களிப்பு - மிலகிடாநெஞ்சத் தியோகியென் பவனே
காணியாரினுமெனக்குமே வினியான்........................*

(இ-ள்.) உலகமுந்தானும் வேறல்லாதினாலே சர்வபதார்த்தத்துக்கும் இச்சியாமல் உலகமெல்லாந்தானாகவும் தானே உலகமாகவுமிருக்கிறதினாலே உலகத்துக்குப் பயப்படாமல் அளவில்லாத சீவன்களுக்கும் நல்லவனானதினாலே எந்தச்சீவன்களுந் தனக்குப்பயப்படாமல் தேவர்களான மேலுலகத்தார்களுந் தோத்திரம் பண்ணத்தக்கதாக நடக்கிறவன் பொருமையும் மயக்கமுஞ் செருக்கு முண்டாகாத மனதையுடைய யோகியென்கிறவன் கண்டாயருச்சுனா! எவர்களிலு மெனக்குப்பிரிய மென்றவாறு.— (௯)

ஒன்றினுமாசையின்றி யிந்திரியங்கடன்வழி யொழுகிடா தொழு
க்கி-நன்றியுந்தீங்குமொத்து நல்வினை தீவினை துறந்
து-பொன்றினுநோவுற் றழிதல்செய்யாமற் பூரித்தல் வாடுதலி
ன்றி-யென்றுமுன் பிழைத்த பொருட்கிரங்காமல் வரும்பொரு
ட்கிச்சைசெய் யாதே.......................................*

(இ-ள்.) ஆத்மஞானமாகிய பிரமத்தைத்தவிர வேறொன்றினுமாசையில்லாமல் பஞ்சேந்திரியங்களினுடைய வழியே போகாமல் அதைப்போக்கி நன்மையினுடனே பொல்லாங்கெல்லாஞ் சமமாகிப் புண்ணியபாவங்களைவிட்டுச் செத்தாலும் வருத்தப்பட்டுத் தாழ்வுசெய்யாமல் நிறைதல் குறைதலில்லாமல் முன்புபோன பொருளுக்கு என்றைக்குந் துக்கப்படாமல் இனிமேல் வருகிற பொருளுக்கு இப்போதே ஆசைப்படாமலென்றவாறு. (௰)

(அறுசீரடியாசிரியவிருத்தம்.)

இகழ்பாராட்டா ரொன்பதின்றியே யின்பதுன்பத்.... ..... .....*
திகழ்வுமானமானஞ் சீதமோடழலின் றீமை ... ....... ....... *
புகழ்பழியிவற்றினொத்தே பொருந்திவா ழிடமொன்றின்றி-*
நிகழ்ந்தருமியோகி கண்டாய் மற்றெனக்குரிய நீரான்.........*

(இ-ள்.) சத்துரு மித்துருவென்பதில்லாமல் சுகதுக்கம் விளங்காநின்ற அவமானமானம் பனிமை அக்கினியின்சுடுதலான உஷ்ணம் கீர்த்திபழியிவைகளிலே சமமாகியாருடனுங் கூடி இன்பமாகவிருக்கிற இடமொன்றில்லாமல் இந்தப்படி நடக்கிற யோகிகண்டாயருச்சுனா எனக்கு உரித்தான சுபாவகுணவானென்றவாறு. ஒன்றினுமாசையின்றி யென்றவிடம் இகழ்பாராட்டா ரென்றது முதற் பொருடேடர் அதெப்படியென்னில் ஆத்மஞானத்தைத் தவிர வே

றென்றிவு மாசையில்லாமல் பஞ்சேந்திரியங்களின் வழியே போ சாமல் அந்தவழியை அடைத்து நல்லதுபொல்லாதெல்லாஞ்சமமா ய்புண்ணியபாவங்களை விட்டு வருத்தம் வந்தபோது தாழ்ந்த காரி யத்தைச்செய்யாவிட்டாற் றீராமற்கொல்லுகிறதான சாவுவந்தாலு ந்தாழ்வுசெய்யாமற் சுகம்வந்தபோது சந்தோஷிக்கிறதுந் துக்கம் வந்தபோது கிலேசிக்கிறதுமில்லாமல் முன்போன பொருளுக்கெ ன்றைக்குந் துக்கியாமல் இனிமேல் வரப்பட்ட பொருளுக்கு இப் போது வரவேண்டுமென்றாசைப்படாமற்பகைக்காரர்சினேகிதனென் கிறபேதமான ராகத்துவேஷமில்லாமல் சுகந்துக்கம் அவமானம் மானம் சீதள உஷ்ணங் கீர்த்தி பழி யிவைகளிலே சமமாகி ஒன்று டனுங் கூடி வாழ்கின்றதானசங்கமில்லாமல் இப்படிநடக்கிறயோ கி தான் கண்டாயருச்சுனா! எனக்குப் பிரியனானவனென்றவாறு. ❀ மற்றவென்பது சகலசீவனும் என்தானாலும் அவர்களைத்தவிர இப் படிக்கொத்தவன் பிரியனென்றது இதற்குமேல் மற்றசீவன்களெல்லாம் பிரியாப்பிரிய மல்லாதவர்களென்ப தாயிற்று. ராகமாவது-ஆசை- துவேஷமாவது - கோபம் கூடிவாழ்கிறதாவது -மனதிலேயென்னை த்தவிர வேறொன்றைக்கூடிவதெல்லாஞ் சங்கமென்பது- ஆகையால் சங்கவாச்சிதப்பண்ணி நிர்ச்சங்கனாயிருக்க வேண்டுமென்றது. இனி விரிக்கில் வெருவாம். (௰௧)

செயத்தகுவதுவுமாகிச் சேர்ந்தவர்க் கல்லறீர ......... ... .... *
வுயத்தொடுபோவதான பொருளையா னுரைத்தவண்ண · ...*
மியபற்படவுணர்கிற்பாருக் கியானமிக வினியேனென்றான் ·· *
மயக்கறவொருவராலு மறிவரிதாய மாயோன் ......... ...... ... *

(இ-ள்.) அப்பியாசஞ் செய்யத்தக்கதுமாகிச் சேர்ந்தவர்க ளுடைய துக்கந்தீரத்தக்கதாகத் தப்பிப்பிழைக்கக் கொண்டுபோகி றதான ஆத்மஞானமான பத்தியை நான் சொன்னபடி இந்தப் பத் தியே சுபாவமாக உண்டாக அறியமாட்டுகிறவர்களுக்கு நான்மிகவு ம்பிரியனென்று சொன்னார் ஒருவராலும் மயக்கந்தீர அறியப் படா தகிருஷ்ணசுவாமி யென்றவாறு.— (௰௨)

பத்தியோக வத்தியாயம் முற்றும்.

ஆக அத்தியாயம்-௰௨-இ-கூடியசெய்யுள் (௩௱௰௬)

பதின்மூன்றாவது.

# பிரகிருதிபுருடயோக

## அத்தியாயம்.

(கலிவிருத்தம்.)

விடம்படுபணமுடி யரங்கின் மிசையேறி ........ ........ *
நடம்பயிலுநாயகன் மறித்துமிகு ஞானஞ் ........ .. *
சடம்படுபிணிப்பிறவி யென்றிவை தரித்த ........ ...... *
முடம்பொடுயி ரானவை யுரைத்தருள லுற்றான்... ...*

(இ-ள்.) விஷமுண்டாகிய படமுள்ள சிரசாகிய நாடகசாலையிலேறியாடுகின்ற கூத்தையுடைய ஸ்ரீகிருஷ்ணசுவாமி திரும்பவும்மிகுந்தஞானமும் மிகுந்த அஞ்ஞானமு முண்டாகிய நோயையுடையபிறவியென்று சொல்லப்பட்ட இவைகளைத் தரிக்கப் பட்டவுடம்புடனே ஆத்மாவானதை உபதேசித் தருளுவ தானு ரென்றவாறு.— (௧)

உடம்பெனவுரைப்பது விருண்பலவைக ளெல்லா .... ..... *
மிடம்பட விளைப்பதெதிர் காணவுறு மீதார்..... ..... .... *
திடம்படவுமற்றிவை தெரிந்துணரு மெய்யைக்..... .... *
கடம்படுமுயிர்ப்பொரு ளெனப்பகர்வர்கற்றோர்......*

(இ-ள்.) உடம்பென்றுசொல்வது-ஆத்மா பொசிக்கின்றவைகளுக்கெல்லாம் விசாலமுண்டாகவிளையப்பண்ணுவது கண்முன்னே காணப்படும் இந்தச்சரீரம் ஆதலால் நிச்சயமாகவும்-சந்தோஷமாகவும்- இவைகளைத்தெரிந்து அறியப்பட்ட சத்தியத்தை ஆதரிக்கப்பட்ட ஆத்மாவாகிய பொருளென்று ஆத்மசொரூப மறியத்தக்கபெரியோர்கள் சொல்லுவார்களென்றவாறு. (௨)

மன்னவுடலியாவையினு மன்னியறிவாகி ........... *
யுன்னுமுயிர் நானிவை யிரண்டினையுமோர்காற்..*
றன்மையினிலியாதறியின் மற்றதனை ஞான ....... *
மென்னவுணர்வாயிஃதெனக்குமிசைவாமால் .. *

(இ-ள்.) இராசாவே; சகலசரீரங்களிலும் நிலைமையாக நின்று அறிவாகி நினைக்கப்பட்ட ஆத்மாவானது நான்இந்தச்சரீரம்ஆத்மா வென்றவிரண்டையு மயங்காமற் றெளிந்த சுபாவத்தி னுமேலாதிவ துயாதொன்றுண்டோ அந்த ஞானமென்றறிவாய் இந்தஞானமென க்குஞ் சம்மதமாம் எல்லாருக்குஞ் சம்மதமா மென்றவாறு. (௩)

மற்றிவ்வுடறன்னின்வர வுங்குணனும்வந்தாங்.......... *
குற்றமைவிகாரமு முயிர்க்குறுநிதானு.................*
நற்றவர்கள்வேறுபட வோதினர்களுனுஞ் ........... *
சொற்றொகையினுலிவை சுருங்கமொழிவன்கேள் ... *

(இ ள்.) ஆத்மாவைத்தவிர மற்ற இந்தச்சரீரத்துடன் வரவு ங்குணமுஞ் சரீரம்வந்த அவ்விடத்தி லுண்டாயமைந்தவிகாரமுமிந் தச்சரீரத்தினுலே ஆத்மாவுக்குள்ளே பிரயோசனமும், இவையெல் லாம் நல்லதவம்பண்ணின ரிஷிகள்வேறுவேறாக முன்விரித்துச்சொ ன்னூர்கள் இப்போதுநானும் இதைச் சொல்லினுடைய தொகையி னுலேசுருங்கச் சொல்லுவன்கேள் அருச்சுனுவென்றவாறு. (௪)

எப்பொருளினும்பரவி யெங்குமுளவாகும் ...... *
அப்பெரியபூதமவை யைந்துமவையினு...... *
மொப்பரியதானுமவை வந்துமுனுதிக்கும்......*
பொய்ப்பகையில்புத்தியகா ணென்றபொருடானும்.

(இ-ள்.) எந்தப்பொருள்களினும் அதிகமாகப்பரவி யெங்குமு ண்டாயிருக்கப்பட்ட அந்தப்பூதமானவைகளஞ்சும் அந்தப் பஞ்ச பூதத்தை யுண்டாக்கப்பட்ட ஒப்பில்லாத அகங்காரமும் அந்த அக ங்காரம்வந்து முன்னே உண்டாகப்பட்ட பொய்ப்பகை யில்லாமல் மெய்ப்பகையாயுள்ள புத்தியும் அந்தப்புத்தி யுண்டாக்கப் பட்டமக மென்ற தத்துவமுமென்றவாறு. ✻ இவ்விடத்தில் நானென்றதக ங்காரம் அகங்காரத்தில் ஆகாசாதிபூதமொன்றிலொன் றுண்டாகின் றது எப்பொருளினும்பெருகு மெங்குமுளவாகுமென் றுபாடமோ தில் பெருகின்பொருளெந்தப்பொருளினும் அதிகமாகப்பெருகப் பட்டு எங்குமுண்டாகப்பட்ட தென்பது. (௫)

காதலிலிவ்வெட்டும்வின் காரணமுமொன்று............ *
யோதவரிதாயபுல னைந்துமவையுள்ளு ........................ *

மாதவறியாதபொறி யைந்துமவையாலே.................*
யேதவினைசெய்கரண மூன்றிஞெடிரண்டாம்.........*

(இ-ள்.) ஆசையில்லாதஎட்டுக்காரியமுமுண்டாகப்பட்டகாரணமுமொன்றுகச் சொல்லப்படாத பஞ்சேந்திரியங்களும் அவைகளினிலைக்கப்பட்ட தாவதையறியாத அஞ்சுபொறிகளும் அவைகளாலேகுற்றமுள்ள கருமத்தைச்செய்யப்பட்ட அந்தக்கரணமஞ்சுமெனறவாறு. (௬)

இற்றிவையனைத்துமிட ரின்பமுதல்யாவுந்..........*
துற்றமைவிகாரதை தொடர்ந்ததொகைகண்டாய்.....*
நற்றவவுடம்பென வியம்புவதுநல்லோ...............*
ருற்றவுடலுக்குரிய ஞானமுமுரைப்பாம்.............*

(இ-ள்.) இவைகளெல்லாம் துக்கசுகமுதலானவெல்லாம் நெருங்கியமைந்த விகாரந்தொடர்ந்த தொகையைத்தான் கண்டாய்நல்லதவம்பண்ணின அருச்சுனு! தேகமென்றுபெரியோர்கள்சொல்வது இத்தனையுமுள்ள விகாரக்கூட்டமாகவிருந்த இந்தச் சரீரத்துக்கு உரித்தான ஞானமும் சொல்லுவோமென்றவாறு. இஃதெப்பொருளென்ற கவியும், காதலிலென்றகவியும், இற்றிவையென்றகவியும்; ஒருதொடர். நற்றவகண்டாயெனவும், நல்லோரியம்புவதெனவுமாறுக. துக்கசுகமுதலானவென்றவையுந்; தேகவிரிவையும் விரிக்கில் வெகுவிரிவாம் ஆகையாற் சுருக்கினது. (௭)

(கலிவிருத்தம்.)

மானமும்பிறர்தனை மறிக்கப்பண்ணலு........*
மூனமும்பிறவுயிர்க் குறுகண்செய்கையு.........*
மியானெனுஞ்செருக்குமிவ் விகபரங்களி.........*
லானபேராசையோ டறுக்குமாற்றலும்.........*

(இ-ள்.) மானமும் அன்னியர்தன்னைத் துதிசெய்யவேண்டிமறிக்கப்பண்ணுகின்றதும் பிறனையூனமாக நிந்திக்கின்றதும் அன்னியசீவனுக்குத் துன்பஞ்செய்கின்றதும் நானென்கிற அகங்காரமும் இந்தஇகலோக அந்தப்பரலோகங்களில் வைக்கின்ற தானஆசையுடனே இவைகளையெல்லாம் ஒறுக்கப்பட்ட பலமுமென்றவாறு. இஃதுமானமாவது-எனதென்கின்றசுதந்திரம்வெகுயானம் அவமானமெ

ன்பாருமுளர். அதாவது-தனக்குபகாரரை வெகுமானித்தலும் அபகாரரை அவமானித்தலுமாம் இவ்விகபரமென்பது இந்தவுபதேசமிருந்து சொல்லுமுலகமிதனுலே அந்தப்பரலோகமென்று வந்தது.

பெற்றனயனையொடு பெண்டிர்மக்கள்பா ...... *
லுற்றெழுமவாவுட னுடம்பின் றாய்மைபு...... *
மைந்றவைப்பொறிகளின் வாயின்வாழ்க்கையுஞ் *
செற்றமுஞ்சிறியவர் சூழுவுந்தீர்தலும் ...... *

(இ-ள்.) தானசஞ்சிதத்தினுலே பெற்றவீடுடனே மனையாள்பிள்ளை இவர்களிடத்தில் வைத்தெழும்பப்பட்ட ஆசையுடனே சரீரசுற்றமுமற்ற அஞ்சுபொறிகளினுலும் பஞ்சேந்திரியங்களினுலும்வருகின்றவிஷயங்களை யனுபவிக்கின்றதுங் கோபமுமுடைய கூட்டமுமிவைகளெல்லாம் விடுதலுமென்றவாறு. ※ இதனுல்மனசுத்தமும்பெரியவர்களினுடைய வுறவும்வேண்டுமென்றகருத்தாபத்தி. (௯)

ஒருபெரும்பொருளையே யுளத்துவைத்தலும் ...... *
மிருவினைகெட்டவ ரிடங்களெய்தலுங் ...... *
குருவினைவழிபடு குணமுங்குற்றமென் ...... *
றுருவினையுள்ளவா றுணருமுண்மையும் ...... *

(இ-ள்.) ஒப்பில்லாதபெரிய ஆத்மாவையே மனதில் வைக்கின்றதும் புண்ணியபாவங்களைக் கடக்கின்றபெரியவர்களிடங்களிலே சேருகின்றதுங் குருவைப்பூசை பண்ணுகின்ற குணமுந் தேகத்தைக்குற்றமென்று உள்ளபடியறிகின்ற வுண்மையும் வேண்டும். (எ-று.) ※ பொருளையே யுளத்துவைத்தலென்ற வேகாரத்தாலேவே றொன்றையும் நினையாதேயென்றது - பெரியவர்களைச் சேருதலாலேஞானம்வளரும் குருவேதெய்வமாகையால்- பூசிக்கவேண்டுமென்றது தேகத்துக்குக் குற்றமாவது- செனனமரணம் பாலயவ்வனகவுமாராதியார்த்திபம் வியாதிதுக்கமிவை முதலானவைகள். (௰)

முன்றிகழ்பிறப்பொடு மூப்பிறப்பினூற் ...... *
சென்றடையிடும்பையைச் சிந்தைசெய்கையு ... *
மென்றிவையனைத்துமற் றிவற்றினலினிச் ...... *
சென்றடைபொருளினை தெரிந்துகேளென ...... *

(இ-ள்.) முன்னேவிளங்கப்பட்ட பிறப்புடனே மூப்புச்சாவினாலேவந் தடைகின்ற துக்கத்தை நினைக்கின்றது மென்றுசொல்லப்பட்ட இவைசகலமும் நீங்கினவிது ஞானம் இந்தஞானத்தினாலே இனிமேற்போய்ச் சேருகின்றஆத்மாவைச்சொல்லுகின்றோம் தெரிந்துகேளென்றவாறு. ※ ஞானமுமென்றகவியும், பெற்றனவென்றகவியும்ஒருபெருமென்றகவியும்;மூன்றிகமென்றகவியும்,ஒருதொடர்.

ஆதியந்தமிலதழியாதுநின்றபெருமையை ......... *
சோதிலுண்டிலையெனுமூனமின்றியொழிவது ..... .*
நீதியின்கணகிலமு மாகியெங்குநிறைதலி ... ....*
னோதருங்கைதலைசெவி கால்களெங்குமுடையது ...*

(இ-ள்.) முதலுமுடிவு மில்லாதது அழியாமல்நித்தியமாகாச்சலியாமல்நின்ற பெருமையையுடையது சொல்லுமிடத்தில் என்றுமுள்ளது இல்லையென்கின்ற குற்றமில்லாமற் நீர்வது நியமிக்குமிடத்தில் எல்லாமாகி யெங்கும் நிறைதலினாலே சொல்ல அரிதாகிய கைகள் தலைகள் காதுகள் கால்களிவைகளை எங்கு முடையதென்றவாறு.

(அறுசீரடியாசிரியவிருத்தம்.)

காணும்புலன்களனைத்திற்குங் கண்ணாய்நின்று காட்டுவது .... ... *
பேணும்புலன்கடனக்கொன்று மில்லாதியன்ற பெற்றியது... ... *
பூணும்பற்றுந் தனக்கின்றி யெல்லாந் தானே பொறுக்கின்ற ..... *
தாணும்பெண்ணு மலிகுணமு மன்றியேநின்றாகியது........... *

(இ-ள்.) காணப்பட்ட கண்களெல்லா வற்றிற்குங் கண்ணாகநின்றுகாட்டுவது மதிக்கப்பட்ட விந்திரியங்களொன்றுந்தனக்கில்லாதது எல்லாம் வல்லசுபாவ முடையது சுமக்கிற பிடிப்புத்தனக்கில்லாமல் எல்லாவற்றையுந்தானே சுமக்கிறதுதான் ஆணும் பெண்ணும் அலியுமில்லாமலே நின்று அந்தமூன்றுமான தென்றவாறு. ※ காணப்பட்ட விந்திரியங்களென்றுமாம் அதெப்படியென்னில் அந்தந்தவிஷயத்தை அந்தந்த விந்திரியங்களால் அறிவதே காக்ஷியாதலால்.— (௰௫)

(கலிவிருத்தம்.)

பூதமைந்தினகத்திலோடு புறத்திலும்பொலிகின்றதிங்......*
கேதமின்றிநடப்ப நிற்பன வாயிருப்ப தினின்னதென்... ...*

றேதரும்படி நுண்ணிதாகிய தொன்றதாகி யிருந்துமெய்ப்*
பேதம்வந்தது போலநின்று பிணங்கவும்படு கின்றதே .....*

(இ-ள்.) பஞ்சபூதங்களினுடைய வுள்ளிலும் புறத்திலும்பொரி லியப்பட்டதுஇவ்விடத்திலே குற்றமில்லாமல் நடக்கிறது நிற்கிறதா யிருப்பதான சராசரங்களில் இன்னதென்று சொல்லக் கூடாத படி நுண்ணியதாகியது இப்படி அளவற்றபேதங்களில் நுண்மையாகவி ருந்தாலும் அனேகமாகாமல் ஒன்றாகியிருந்து சரீர பேதங்கள் வந் து அந்தச்சரீரங்களைப் போலத் தானும் அனேகபேதங்களாக நின் று ஒன்றுக்கொன்று சமாதானமில்லாமற் பிணங்கவு மிதை நிச்சய மாக வறிந்தபோது எல்லாம் தானேயென்றுசமாதானமாகவும்உண் டாகின்றதென்றவாறு. ※ பிணங்கவுமென்ற வும்மையால் இணங்க வுமென்றெதிர்தழுவும் இதை விரிக்கில் வெகுவாம். (மச)

அருவமாயதி தூரமாயதணித்துமாய தலைத்துமா ........ .... *
யுருவம்யாவுமளித்துமீள வொழிக்குநாளி லொழிப்பது... *
பொருவிலாவொளி கட்குமுள்ளொளி யாகிய்யொலிகின்றதிங்.*
கிருமைநீடிய ஞானமோடது நேயமாக விசைந்தது... ....*

(இ-ள்.) உருவமில்லாததாய் அஞ்ஞானிகளுக்கு வெகு தூரமா மீஞானிகளுக்கு வெகுகிட்டமானது சகலமுந்தானாய் உருவங்களெ ல்லாம் உண்டாக்கித் திரும்பப்போக்கிற காலத்திலே போக்கு வது ஒப்பில்லாத சோதிகளுக்கு உளளே நின்ற சோதியாகியேபொலிகின் றது இவ்விடத்திலே இம்மை மறுமையிலே பெருகிய ஞானமும்அ தினுடனே நேயமுமாகப்பொருந்தின தென்றவாறு. ※ ஆதி யந்த மென்றகவியும் காணும்பலனென்ற கவியும் பூதமைந்தென்ற கவியு ம் அருவமாயதென்ற கவியும் ஆத்ம சொரூபத்தைச் சொன்னதினு லே யொரு தொடர். (மரு)

ஆனவிப்பொருண் முன்புரைத்த வவற்றினாலறி யும்பொரு..*
ளூனமற்ற மனத்தனுயதல் லுடம்புமற்றவ் வுடம்புசேர்... *
ஞானமுற்றுமவற்றினாலறி யப்படும்பொரு ளன்மையு......*
மீனமற்றதிறத்திறேறும் சுருக்கமாக வியம்பினேன்........ *

( இ-ள். ) இப்படியான இந்த ஆத்மாவானது முன் சொன்ன சரீரஞானங்களினு லறியப்பட்டபொருள் குற்றந்தீர்த்தமனசுடைய

அருச்சுனா நல்லவுடம்புமற்ற அந்தவுடம்பைச் சொந்தஞானமுதிர்ச்சி இந்த வுடம்புஞானமென்றவிரண்டினு லறியப்பட்ட ஆத்மலாபமும் குற்றமற்றவிதத்துடனே சுருக்கமாகச் சொன்னே னென்றவாறு.— (௰௬)

எள்ளலானதிகழ்ந்தியானமுன் னுரைத்தவிப்பொருளிதெலா *
முள்ளவாறுதெரிந்தெ னன்பர் தமக்குணர்ந்திடவோதினேர் *
கள்ளமாதரு மாயவேலை கடந்துகாதல்செய் யின்பமாம் *
வெள்ளமாமெனை யெய்துவாரென வேறுகூற விரும்பினன் *

(இ-ள்.) இழவானதைநீங்கி நான்முன் சொன்னஇந்த அர்த்தங்களிவையெல்லா முள்ளபடி தெரிந்து என்னுடையபத்தர் தங் கருக்குத்தெளிவிக்க ஓதினபேர்கள் வஞ்சனையான மயக்கத்தைக் கொடுக்கப்பட்ட மாயாசமுத்திரத்தைக் கடந்து ஆசையுண்டாக்கப்பட்ட சுகமானவெள்ளத்தை யொப்பான வென்னை யடைவார்க ளென்று சொல்லிமேல்வேறேசொல்ல விச்சைபானு னென்றவாறு. ❁ இப்பொருளிதெலா மெள்ளலான திகழ்ந்துள்ளவாறு தெரிந்தெனப் பொருளுக் கெற்பமாறுக. (௰௭)

(கலிவிருத்தம்.)

ஓதியவுடம்புக்கு முயிர்க்கு முண்மையா.................. *
யாதிகண்டறிபவ ராரு மில்லையாற்.................. *
நீதியிவ்விரண்டுமுன் செய்வ தேதெனி.................. *
னீதியினவற்றினை நிகழக் கூறுவாம்.................. *

(இ-ள்.) நாம் முன்சொன்ன வுடம்புக்கும் ஆத்மாவுக்கும் சத்தியமாக ஆதியைக்கண்டு அறிகிறவர்களாருமில்லை யாகையால் இவையிரண்டும் அநாதி குற்றமற்ற விந்தவிரண்டும் முன்செய்கிறதேதென்பாயாகில் நியமத்தினாலே அவைகளை விளங்கச் சொல்லுவோமென்றவாறு. ❁ தேகத்தைப்பிரகிருதி யென்றும் உயிரைப் புருஷனென்றுஞ்சொல்லுவாருமுளர் ஆதியையறியப்படாதினாலே அநாதி யென்றது.— (௰௮)

நண்ணியகுணத்தின்வே றின்மை நாட்டலாற்.......... *
கண்ணியவிவைகளுக் குடம்பு காரணம்.................. *
எண்ணியதுன்பமோ டின்ப மென்றிவை.................. *
யுண்ணியகாரண முயிரென் றின்றதே.................. *

(இ-ள்.) சொந்த குணத்தினுடைய செயலையல்லாமல் வேறி ல்லாததை நிறுத்துகிறதினாலே நினைத்தகருமங்களாகிய புண்ணியபாவங்களுக்கு உடம்புகாரணம் இந்தப் பிரகிருதி குணத்தால் வந்தபு ண்ணியபாவங்களைக் கொடுக்கப்பட்டதாக நிச்சயித்த சுகதுக்க மென்ற இவைகளை யனுபவிக்கிற காரணமானது உயிரென்று சொல்லப் பட்ட புருஷனென்றவாறு. ❊ இதனாலுடம்புசெய்து உயிரனுபவி க்குமென்றது. (௰௯)

இவ்வுயி ரிவ்வட லின்னிலேயிருந் ............... ❊
தவ்வுடல் பயிற்றிடுங் குணங்க ளாவைவ ........ ........ ❊
துவ்விமைபிறந்திடுந் தோன்று மிக்குண ............... ❊
மெவ்வநா னுடையன் வென்றிருத்தலால். .......... .. ..... ❊

(இ-ள்.) இப்பப்பிரகிருதியைக் குற்றமுடையதா னென்றும் என் னுடைய தென்றும் அகங்கரித் திருக்கிறதினாலே யிந்தபுருஷனாகிற சீவன் இந்த வுடம்பிலிருந்து அந்தவுடம்பை நடத்தப்பட்டபிரகிரு திகுணங்களான புண்ணியபாவங்களால் வந்த சுகதுக்கங்களை யனுப விக்குமாண மானு சன்னமா மென்றவாறு. ❊ அகங்கரியாமலனுப விக்கிற ஆத்மானுபவத்தைவிட்டு அசங்கரித்ததினாலே சுகதுக்கங்க ளையனுபவித்துச் சனனமரணப்படு மென்றது. (௨௰)

உண்பனயாவையு முண்டிவ்வுடன் மெய்க் ................ ❊
கண்கொடப்பொருளையுங் காண்கின் றுறுநர் ...... . ... ❊
னண்பமெப் பொருட்குமாத் திருக்குநாதனு .... ... ❊
மெண்செய்திவ் வுடம்பிலே நில்ற்ஜீவனே ..... ..... ........ ❊

(இ-ள்.) தோழா அநுபவிக்கப்பட்ட சகலத்தையு மனுபவிக்கிற வனும் உடம்பிலிருக்கின்றகண்ணைக்கொண்டு எந்தப் பதார்த்தங்களை யுங்காண்கின்றவனும் எந்தபதார்த்தங்களுக்கும் சமமா யிருக்கின்ற காத்தனும் இந்தவுடம்பிலே கர்த்தனென்ற கங்காரஞ்செய்துநின் றசீவனு னென்றவாறு. ❊ ஈசனே—சீவன். (௨௧)

இப்படியுயிரையு மியாக்கை தன்னையு ............ ....... ❊
மெய்ப்படவறிந்தவன் வேட்ட வைநுகர்ந் ......... ...... ❊
தொப்பனவன்றியே யொழுகி வாழினும் .. . ........ ..... ❊
பொய்ப்படு பிறவியின் மறுத்தும் போகிலான். ... . .... ❊

(இ-ள்.) இப்படிச்சீவனையும், உடம்பையும், நிச்சயமாகஅறிந்தவன் வேண்டியவைகளைத் தனக்கென்றெப்புகிற தல்லாமல் அனுபவித்து நித்தியமாய்க்கூடிச் சுகித்தாலும் பொய்யாகவுடையபிறவியிலேதிரும்பவும் போய்ப்பிறவான மோக்ஷத்தையடைவானென்றவாறு. ❁ அறிந்தவன் சுகியானென்பது கருத்து.—ஆகலால்அப்பிரகிருதியால் அனுபவம் வந்தனுபவித்தாலும் தனதென்று அகங்கரியான் அதனாலே மோக்ஷமுண்டென்பது. (௨௨)

செறியுமிப்பொருளையே சிலர்தியானமாங் ... ... *
குறியினாற்றம்முள்ளே கண்டுகொள்வர்க ... ... *
ளறிவருஞ்சாங்கிய யோகமாகிய ... ... ... *
நெறியினாலெங்குமாய் நிற்பக் காண்பரால் ... ... *

(இ-ள்.) கனமான்விந்த ஆத்மசொரூபத்தைச் சிலர்தியானமார்க்குறியினாலே தங்களுடையமனதிலே கண்டுகொள்வார்கள்சிலர் அறியப்படாத சாங்கியயோகமாகிய மார்க்கத்தினாலே உள்ளும்புறம்பும் எங்கும்பூரணமாய நிற்பக்காண்பார்களென்றவாறு. (௨௩)

இருமையுமறிவதற் கிடனில்லாதவர் ... ... *
ஒருமகன்றெய்வமென் றுரைத்தவொன்றையே ... *
யருமையில நுச்சினை செய்வரர்தலான் ... ... *
பெருமையினவர்களும் பிறவியேவிடார் ... ... *

(இ-ள்.) இப்படித்தியானமென்றும், சாங்கியயோகமென்றும் சொல்லப்பட்ட இரண்டையும், அறிகின்றதற் கிடமில்லாதவர்கள் ஒருருநவானவர் தெய்வமென்று சொன்ன தொன்றைத்தானே யருமையினாலே பூசைசெய்வார்கள் அந்தப்பூசையினுடைய பெருமையினாலேஅவர்களும் பிறவியேசேரார்கள் ஆத்மாவைக்காண்பார்கள்.எ-று. ❁ பூசிக்கவரும் தெய்வம் காட்டுவதினாலே ஆத்மாவைக் காண்பார்களென்பதாம். (௨௪)

போவனநிற்பனயாக்கைபூண்டுகொள் ... ... *
டியாவருந்துயர்ப்படு கின்றவீதெலாம் ... ... *
மேவருமுயிருடல் வேறுபாடினை ... ... *
யாவர்கண்டறிவதோர் றிவிலாமையே ... ... *

(௨௫)

(இ-ள்.) நடக்கின்றது நிற்கின்றதுமான சராசரமாகிய தேசத்தைத்தரித்துக்கொண்டே யாருந்துக்கப்படுகின்றஇவையெல்லாமமனம்பொருந்துதலாக வரப்பட்டசீவனும் உடம்புமான பிரகிருதிபுருஷக்கூட்டம் இந்தப்பிரகிருதி புருஷர்களுடைய வேறுபாட்டை ஒப்பில்லாத ஞானமில்லாத அஞ்ஞானத்தை யுடையவர்கள் யார்கண்டறிகின்றவர்கள் காணமாட்டார்களென்றவாறு. (௨௫)

(இதுவுங்கலிவிருத்தம்.)

கெடுகின்றபூதங்க டோறுங்கெடாதே.........*
வடுவின்றிநின்ற மறைப்பொருடன்னை..........*
நடுவென்றுகண்டவ னல்லனவெல்லாங்..........*
கடுகின்றனெயொழி யாவகைக்கண்டான்..........*

(இ-ள்.) கெடுகின்ற பஞ்சபூதாத்துமாக்கள்தோறும் பிறந்து கெடாமல் குற்றமில்லாமல் நிறைந்திருக்கின்ற வேதப் பொருளான வஸ்துவானதைப் பொதுவென்றுகண்டேயெல்லாம் நல்லவர்களென்று அப்படிக்கொத்தபே ரணுவுக்கணுவா எங்கும் நீங்காமலிருக்கின்றவகையைக் கண்டவர்களென்றுஞ் சொன்னார் ஸ்ரீகிருஷ்ணதேவனென்றவாறு. (௨௬)

ஒத்தெங்குமாய வொருமைப் பொருளினை......*
யத்தன்மையினா லறியுமவனே....................*
செத்தும்பிறந் துந் திரியாவகைதனை..............*
மெய்த்தன்மையிலே புகவிடுகின்றான்............*

(இ-ள்.) சமமாகியெங்குமாகிய ஒப்பில்லாமையையுடைய ஆத்மாவையெல்லாந் தானாகச்சமமாகியெங்குந் தானாகியஒருமையாகிய சுபாவத்தினா லறியப்பட்டவனே செத்தும்பிறந்துந்திரியாதபடிக்குத்தன்னைச் சத்தியசுபாவத்திலே புகுதவிடுகின்றவனென்றவாறு. ❋ சமமாவது அணுவுக்கு அணுவாய்மகத்துக்கு மகத்தாயிருப்பது. சத்தியசுபாவமாவது பிரமசுபாவம்பிரமமொன்றுதவிரமற்றவெல்லாம் சத்தியமாதலாற் பிரமத்தைச்சத்தியமென்றது. சுபாவமாவது எல்லாந்தானாய் ஒன்றிலுங்கூடாதாய் அசையாதாய் சைதன்னியமாய் நின்மலமாயிருப்பது இன்னஞ்சொல்லில்பிரிவாம் பிரமத்தையே ஆத்மாவென்பது. (௨௭)

(அறுசீரடியாசிரியவிருத்தம்.)

உணரவிகாரியென்றும் வினையெலாமுடம்பினோடே ........ *
புணர்வனவென்றுங்கண்டான் பொய்யிலாமெய்யைக்கண்டா ..... *
னிணர்மலர்முடியாயெல்லா வினைகளுஞ்செய்துமீசன் ........ *
குணமிலியாதலாலே யவற்றொடுங்கூடிநில்லான் .................. *

(இ-ள்.) சைதன்னியமான ஆத்மாவை விகாரங்களில்லாத அவிகாரியென்றுங் கருமங்களெல்லா முடம்போடே பொருந்துவதென்றுங்கண்டவனே பொய்யிலாதமெய்யைக் கண்டவன் பூங்கொத்துக்களைத் தரித்தகிரீடத்தையுடைய அருச்சுனா; இப்படி அவிகாரியான ஆத்மா வுடம்போடேகூடி யந்த வுடம்பாலே கருமங் களைச் செய்தாலுங் குணமில்லாதநிர்க்குணனானபடியினாலே அந்த வுடம்போடுங்கருமத்தோடுங் கூடிநில்லானென்றவாறு; ❀ உணர்வு இவ்விடத்தில் ஆத்மா இதனாலே ஆத்மாவுடம்போடுங் கருமத்தோடுங் கூடாமல்நிற்பனென்றும் அந்தவுடம்புங்கருமமும் ஆத்மாவைக்கூடிநிற்குமென்றும் அறிவது. (௨௮)

உன்னியவானமெங்கு மொழிவறநிறைந்தவேனுந் ........ *
தன்னுடைநுண்மையாலே பிறவொடுஞ்சார்வதுண்டோ .... *
பன்னியவதுபோலெங்கும் பரந்துளனேனுமங்கு .......... *
மன்னியவீசனந்தவுடம்பொடு மருவமாட்டான் .............. *

(இ-ள்.) எல்லாருந்நினைத்த ஆகாயமானது அணுவத்தனையிடமானாலு மில்லையென்பதறவெங்கும் நிறைந்ததானாலும் தன்னுடைய சூக்ஷுமத்தினாலே மற்றவாய்வு-அக்கினி-அப்பு-பிருதிவு-என்ற நாலு பூதங்களோடுங் கூடுவதுண்டோ அந்தநாலும் இந்த ஆகாசத்தைக் கூடாமையுண்டோ இரண்டுமில்லையே யிப்படி வேதங்கள் முறையிட்டனபோல ஆத்மாவெங்கும் பரந்திருக்கின்றவனானாலும், உடம்பான அந்தவிடத்திலிருக்கின்ற ஆத்மா அந்தவுடம்போடுங் கூடமாட்டானென்றவாறு. ❀ ஒழிவறவெங்கும் நிறைந்தவென மாறுக. ஆகாசம்வந்தவிடத்திற் பிறவென்றதனாலேமற்றநாலுபூதமுமாயின. ஆகாசத்தை நாலுபூதமு மாதாரமாக வுடையதுபோல ஆத்மாவை யாதாரமாக வுடையது உடம்பென்பதருத்தாபத்தி. ஈசன் இவ்விடத்தில் ஆத்மா. (௨௯)

இரவிதானொருவனேயாய் நின்றிந்தவுலகத்தோங்கும் ..... *
விரவியவிருளை நீக்கி விளக்குறுமாறுபோலத் .............. *

தரவியாவருமுன்னில்லா சராசரருடம்புதோறும்.........*
பரவியானுரைத்தமாய னொருவனே பரந்துநிற்பான்.... ....*

(இ-ள்.) சூரியனொருவன் தனக்கிரண்டாவதில்லாமற் றானொருவனேயாகிநின்று இந்தவுலகத்திலெங்குங் கலந்தவிருளைப் போக்கிப் பிரகாசிப்பிக்கிறபடிபோல முன்னே தன்னை யுடண்டாக்கயாருமில்லாதவனாய் இப்போது நான்விரித்துச் சொன்ன மாயனான் ஆத்மாவானவன் தனக்கிரண்டாவதில்லாமல்தானொருவனுமேசராசரங்களுடைய வுடம்புகள்தோறும் பரந்துநிற்பானென்றவாறு. ※தரவியர் வருமில்லாமாயனெனமாறுக. இன்னமும்முன் றரவியாவருமில்லாமற் றானே தந்தசராசரருடம்புதோறுந் தானொருவனேபரந்துநிற்பானென்றுஞ்சொல்லலாம். (௨௰)

ஓரிணமேலாகிநின்ற வுயிரினொடுடம்புக்குள்ள .......*
பேரினொடிறப்புமூட்புப்பிறப்பெனுமிவற்றைவேறாய்ப்.
பாரின்மேலறிவார்விம்பற்றினானொன்றான்பார்த்தன் ...*
தேரின்மேனின்றுவேதச் சிரத்தின்மேலிருக்குஞ்சீரோன்.

(இ-ள்.) விசாரித்தறியில் எல்லாவற்றுக்குமேலாகிநின்றஆத்மாவை அது உடனே உடம்புக்குள்ள பேருடனே சாவுமூட்புசனனமென்று சொல்லப்பட்ட இந்தநாமஞ்சாவுக்கிழ்ப்பிறப்பாகியஇவைகளைவேறாகப் பகுத்துப்பூமியினிடத்திலறிகின்றவர்களே மோக்ஷத்தையடைந்தவர்களென்றார். அருச்சுனனுடைய தேரின்மேலே நின்றுவேதச்சிரசின்மேலிருக்கப்பட்ட சிறப்புடைய ஸ்ரீகிருஷ்ணசுவாமியென்றவாறு. (௨௧)

பிரகிருதிபுருஷயோக- அத்தியாயம்- முற்றும்.

ஆக அத்தியாயம்-௰௩-இ-கூடியசெய்யுள்(௨௱௬௰)

பதினான்காவது.

# குணத்திரயயோக

## அத்தியாயம்.

( கலிவிருத்தம். )

செய்யமாமலர் மேலுறைசெல்வியும் ...... ..... *
வையமாமட வாளுமகிழ்ந்ததோ ............ ... ...*
ளையன்மெய்ம்மையன் பாலடிபோமெலா .........*
மூய்யமீளவுணாக்கத் தொடங்கினன் ..... .... . ... .*

(இ-ள்.) சிவந்தபெரியதாமரைப் பூவின்மேலிருக்கின்ற லட்சுமியும், அறியாமையையுடைய பெரியபூமிதேவியுங்கூடி மகிழ்ந்ததிருத்தோள்களையுடைய ஸ்ரீகிருஷ்ணசுவாமிகிருபையினாலே அடிமையான நாமெல்லாம் பிழைக்கும்பொருட்டாகத் திரும்பவும் அந்தச் சத்தியமான ஆத்மாவைச்சொல்லத் தொடங்கினனென்றவாறு. லட்சுமியையும், பூமிதேவியையும், ருக்குமணியென்றுஞ்சத்தியபாமையென்றுஞ் சொல்லலாம். (க)

நல்லவர்மறிவி யாதினு நல்லது .... ............ *
மல்லறீர்தவத் தோர்க்கறியாவது .... ...... .*
மல்லவாவியதோண்முடி மன்னியான்......*
சொல்லமேயவ தன்றுணிவாவதே ......... *

(இ-ள்.) முன்சொன்ன ஞானத்திலும், நல்லதான ஞானமெல்லாவற்றிலு நல்லதாங் குற்றந்தீர்ந்ததவம்பண்ணுகின்ற ரிஷிகளுக்கு அறிவாகியது மறபோலா யிச்சிததோளையுங்கிரீடத்தையுமுடைய ராஜாவே? அந்த ஞானத்தினுடைய உறுதியானதை இப்போது நானுனக்குச்சொல்லப்பட்டதென்றவாறு. (உ)

இன்னதன்மை யின்ஞானத்தி யற்கையா......... .........*
லென்னைவத்தடைந் தாரிவ் வுலகினில்........... .........*
பின்னைவந்தடை யாரிற வராதன் .... ........ ... .........*
றன்மையாதெனி லாங்கது சாற்றுவாம்.................*

(இ-ள்.) இந்தசுபாவமான இந்தஞானசுபாவத்தினாலேவந்து என்னை யடைந்தபேர்கள் பிறகு சிருஷ்டிகாலத்தில் இந்தப்பிர பஞ்சத்திலேவந்து பிறவார்கள் பிரளயகாலத்திலே சங்காரத் துக்குங்கூடார்கள்—அந்த ஞானத்தினுடைய சுபாவமென்னவென்று லதுசொல்லுவோமென்றவாறு. ஆங்கு—அசை—பின்னர்வ்வல கௌமாறுக-காலந்- தோன்றுவெரூவாய் - வந்தடைதலாவது-அஞ் ஞானத்தைநீங்கி ஞானத்தில்வந்தென்னையடைதல். (௩)

மூதவாவெண் குணமவை மூன்றினும் .... .... .... .... .....*
பேதமாகப் பிரகிருதி தன்னிலே .. ......... ....., ........ *
காதலால்வைப்ப னியான்கரு வைக்கருப் ........ ........ *
பூதமியாவும் புலப்படு கின்றதே......................*

(இ-ள்.) பழமைபதவைசையுடைய அருச்சுனா! என்னுடைய குண மூன்று அந்தமூன்றிலும் பேதமாகப் பிரகிருதியிலே நான் விசுவா சமாகக் கருவவைப்பேன் அந்தக்கருவைச்சகலபூதங்களுங்கெற்பிக்கி ன்றதென்றவாறு. (௪)

இந்தவண்ணத் தினுலிவ் வுலகிடை ........ ...................... *
வந்துயோனியெல்லாம்வரு வித்திடுத் .............. ......... *
தந்தையாயிவை யீன்றளிக் கின்றதா .............................. *
யந்தமாமலர் மேலய னுமென்றே......................*

(இ-ள்.) இந்தவிதத்தினாலே இந்தப் பிரபஞ்சத்தி னிடத்திற் பிரகிருதிவந்து சகலயோனிகளையும் வரப்பண்ணுகிற தகப்பனாகி அந் தயோனிகளைப்பெற்று ரெக்ஷிக்கிறதாகிய அந்தப்பெரிய தாமரைப் பூவின்மே லிருக்கிறபிரமம் தேவனாகுமென்றவாறு. (௫)

என்றுமுன்னங் குணமென் றியம்பிய.....................*
மூன்றுமூலப் பிரகிருதி தன்னிலே .... ................ .....*
தோன்றியுள்ளன தொல்லறி வைப்பற்றி ............ .... *
யூன்றிநிற்ப வவற்றை யுணர்த்துவாம்..................*

(இ-ள்.) முன்பொருர்தின் குணமென்று சொன்ன மூன்று ம் மூலப்பிரகிருதியிலே தோன்றியுள்ளது அந்தக்குணங்களானவை பழைய ஆத்மாவைச் சனன மரணத் துக்கு ஏது வாகப் பிடித்து

உளன்றிருப்பது அந்த மூன்றுகுணத்தையும் அறிவிப்போமென்ற
வாறு.— (௬)

சத்துவம்மி ரசத தாமத மென......... ...... ........ *
வுய்த்துவந்த பெயரா யுடையன........................ *
பெத்துவந்து வளர்ந்தரு கிற் பன...... ......... ......... *
மெய்த்துவந் தவற்றின் செயல் வேறுகேள்............*

(இ-ள்.) சத்துவகுணமென்றும் இராசதகுணமென்றும் தமோகுணமென்றும் வைத்துவந்த பெயரை யுடையது எந்ததத்துவங்களையுந் தாமாட்டுவது நிச்சயித்துவந்த அந்தமூன்றுகுணத்தினுடைய தொழில்களை வேறுவேறாகச் சொல்லுவோம் கேள் அருச்சுனா வென்றவாறு. ※ துவந்துவ மென்கிறதை தொந்தமென்று வழக்கமாகச்சொல்லுவார்கள். (௭)

பற்றுமாசின்மை யாற்பளிங் கொப்பன..... ..... ......... *
வுற்றதல்லறி வான துண் டாக்குவ......... . ..... ......... *
தெற்றுமின்ப மலர் துன்ப மென்பது.................*
சற்றுமில்லது சத்துவ மாவதே...........................*

(இ-ள்.) பற்றப்பட்ட ஆசையாகிய களங்க மில்லாமையினாலே பளிங்கைப்போல நிர்மலமானது உறுதியான ஞானத்தையுண்டாக்குவது எது வந்தாலுஞ் சுகமில்லாமல் துக்கமென்பது சற்றுமில்லாதது சத்துவகுணமாவ தென்றவாறு. (௮)

சொற்றமாசையி லேபிறந் துள்ளது .... .................. *
தாதுகற்புரா யுன்னிறஞ் சார்ந்தது........ ......... *
பேதுசெய்வினை போடறி வாய்ப் பின்னர்க்... *
கேதுவாய்வி ராசத மென்றதே.................*

(இ-ள்.) சொல்லப்பட்ட ஆசையிலே பிறந்திருக்கிறதுதாதுகற்புரா யுன்னிறஞ்சார்ந்தது மயக்கமுஞ் சொல்லப்பட்ட கர்மத்தோடு அறிவாய் பிறகுவரப்பட்டமரண சனனத்துக்கு ஏதுவாகியது ராஜத மென்கின்ற குண மென்றவாறு. (௯)

குறிகொளாத மயக்கமுங் கோதிலா.................. .... .... *
மறிகளான திகழ்தலு நித்திரை............................ *

செறிதலான்று மெய்ந்நிவற் றுற் றிண்ண...........*
மறிவைமாய்க்கு மதுதம மாவதே.....................*

(இ-ள்.) சேட்டுங் கேட்டதைக்கண்டும் மெய்யென்று ஒப்புக் கொள்ளாத மயக்கமுங் குற்றங்குடியா இருக்கின்ற மார்க்கங்களெ ண்ணை நடத்துகின்றதும் நித்திரை மிகுதலானது மென்று சொல்லப் பட்ட இவைகளினாலே நிச்சயமாக ஞானத்தையழிக்குமது தமோகு ணமாயதென்றவாறு.— (௰)

(கலிநிலைத்துறை.)

வாழுஞ் சத்துவ மற்றவ்விரண்டையு மறைத்துத்..........*
தாழுமற்றவவ் விரண்டுமே தமோகுணந் தனைட்பின்...........*
வீழுஞ்சத்துவ தமங்களவ் விரசதம் விளையி..............*
னாழிமற்றிவை யிரண்டு தாழ்ந் தொன்றிமிக் குலவாம்....*

(இ-ள்.) சத்துவகுணமானது ஒருவேளை அந்த ராசத தாமத மான விரண்டையமறைத்துத் தானே பிரயலமாக வாழும் அந்தத் தமோகுணமானதொருவேளை பிரபலமாக எழும்பினாலே அந்தசத்து வராசதமிரண்டு மடங்கும் அந்தராசசகுண மொருவேளை மிகுந்து ண்டானாற் சத்துவகுணமுந் தமோகுணமு மிரண்டும்விழும் வை கள் இரண்டுந் தாழ்ந்து ஒன்று அதிகமாக இருக்கிறதுபழைய விதியி னு லென்றவாறு. ❋ மற்ற—அசை. (௰௧)

(கலிவிருத்தம்.)

உரைசெயுந் தத்துவ மின்பந் துய்த்திடு...........*
மிரசத வினைகளோ டறிவை யார்த்திடும்.........*
புரைசெய்திவ் வழுக்கையே பொருந்தப் போர்த்திடும்*
தரைசெறி புகழினாய் தமமென் றின்றதே..........*

(இ-ள்.) பூமியெங்கும நெருங்கிய கீர்த்தியையுடைய அருச்சுனா! சொல்லப்பட்ட சத்துவ குணமானது சுகத்தையனுபவிக்கப்பண்ணு ம்ராஜதகுணமானது கருமத்துடனே அறிவைக்கட்டுந் தாமத மெ ன்றகுணமானதுகுற்றத்தைச்செய்து இந்தஅஞ்ஞானத்தைமூடுமெ ன்றவாறு.— (௰௨)

(அறுசீரடியாசிரியவிருத்தம்.)

ஒத்துநல் லறிவுமிக்க யாதொரு பொழுதப்போது..........*
சத்துவந் தழைத்த போதாந் நாங்கரும் வினைக ளேகொண்*

டுய்த்தவற்றாசைகூர வுலோபம்வைந் துய்த்போது... ... .....*
மத்திய குணமேசால வளர்ந்ததென் றறிநீ யன்று... ..... *

(இ-ள்.) ராசாவேசகலஇந்திரிய அந்தக்கரணங்களிலுஞ் சமமாக்வொத்துஞானமிகுந்தபொழுதெப்பொழுதோ அப்பொழுது சத்துவகுணமிகுந்து வளர்ந்தபொழுது தாம்செய்து முடிக்க அரிதானகருமங்களையே செய்து முடிப்போமென் றுட்கொண்டு வைத்து அபிலாசை மிகுதியாகலோபம்வந்து கூடியிருந்தபோது சத்துவதமகுணங்களுக்கு நடுவான ராசதகுணமே மிகுந்துவளர்ந்த தென்றறிவாய் நீயென்றவாறு. லோபமுஞ்சஞ்சல கருமமுங்காமியகருமமும்விஷய விச்சையும் வந்தபோது ராசதகுணமென்றறிவது.௰௩

தக்கதுதகாதென் றொன்றைத் தானறியாதபோது.... .. ...*
எக்கருமங்கண்மாட்டு மிசஞ்சியோ டிருக்கும்போது ....... *
மொக்குமெய்ம் மயக்கத்தோடு முறக்கவந் துற்றபோது .... *
மிக்கதுதமமேயென்று விசையநீ யறிய வேண்டும்... ......*

(இ-ள்.) அருச்சுனா! ஒருபதார்த்தத்தை இது தகுமானது இது தகாதது என்று தான் பகுத்தறியாத போதும் எந்தக் கருமங்களிடத்திலும் வெறுப்புடனே யிருக்கும்போது உடம்பிலொத்திருக்கப்பட்ட மயக்கத்துடனும் நித்திரைவந் தடுத்தபோதுந் தமோ குணமே அதிகமானதென்று நீ யறியவேண்டிய தென்றவாறு. (௰௪)

(எழுசீரடியாசிரியவிருத்தம்.)

தக்கசத்துவமே நிகழ்ந்தபோ திறந்தோர் தெய்வ யோனி களிலேசார்வார் - மக்களிற்பிறப்பா ரிரசதம்வந்து விளைந்த போதுடம்பினைத் துறந்தோர்-மிக்கெழுதமமே விளைந்தபோ திறந்தோர் விலங்குசாதிகளிலே வீழ்வார்- ஒக்கமற்றிவற்றின் பலன்களுந்தெரிய வுணர்க்கின்றே னிவற்றையுமுணர்வாய்... ...*

(இ-ள்.) தக்கதான சத்துவகுணமே நடக்கிறபோது செத்தவர்கள் மேலானதெய்வ யோனிகளிலே யடைவார்கள் இராசதகுணமே வந்துண்டானபோது தேகத்தைவிட்டவர்கள் மனிதயோனிகளிலே பிறப்பார்கள் மிகுத்து எழும்புகிற தமோகுணமே யுண்டானபோது செத்தவர்கள் மிருகசாதிகளில் வீழ்வார்கள் இதனுடனேகூடியிரு

தத்திரி குணத்திறுடைய பலன்களுந் தெரியச்சொல்லுகிறேன் இதையும்நீகோவாய் அருச்சுநா!வென்றவாறு. ஃ சத்துவமே தம்மேமெயன்றதனால்- இரசதமேயென்று வருவித்தது. ஏகாரமேதுக் கென்னில். ஒவ்வொன்றில்- மூன்றுகுணமுங்கலந் தொன்பது குணமாதலாலே இங்கே தனிக்குணத்தைச் சொன்னதுகலந்து நீர்ந்ததுதிரும்பத்தனியாகவு மிருக்குமோவென்னில். தக்கசத்துவமென்றதனாலும்- மிக்கெழுதயமென்றதனாலுங் கலந்தகுணத்திலும்மூன்றிலொன்று ஏதும்மிருந்ததோ அதும்வருதலாக மற்ற இரண்டுந்தாழுகையால்- மிகுந்ததைக் குணமாகக்கொண்டு ஏகாரம்வந்தது விழ்வாரென்றதனால்- மேலொசத்திலறித் தெய்வயோனியிற் பரம்பரையாகவே ப்பிறப்பாரென்று மத்தியலோகமான பூமியில் மனித யோனியிலே தானே பாரம்பரையாகப் பிறந்து சுழலுவாரென்றும் கீழானமிருக யோனிகளில்விழ்ந்து மேலானமனிதயோனிக்கும் வாராமற் பாரம்பரையாகத் தாழ்ந்துவிழ்வாரென்றது இன்னம்விரிக்கில்பெருகுமாம்.

அருங்குணமாய சத்துவபலமா மழுக்கறலிரசத் பலமாம், பெருந்துயருழற்றல் தமோபலமாகும் பேதைமை பேசியமுறையே, பொருந்திய விந்தக் குணங்கண்மூன்றாலும் பூதசாலங்களுக்கெல்லாம்; வருந்திரு வாயஞான் மோடுலோப மயக்கமென் றின்னணம் வருமால்.....ஃ

(இ-ள்,) அரிதான குணமாகிய சத்துவத்திறுடைய பலமாகும் அழுக்கறலான நின்மலமாயிருப்பது ராசதகுணத்திறுடைய பலமாகும்பெரிய துக்கத்தை யனுபவித்தல்- தமோ குணத்திறுடையபலமாகும் மூடத்துவம் இப்படிச்சொன்னவரிசைப்படியே இந்தமூன்று குணங்களினாலும் பொருந்தின சீவசரீரகூட்டங்களுக்கெல்லாம்வரப்பட்டதென்னவென்னில். சாத்துவிக் குணத்திலேலே சிறப்பாகிய ஞானம்வரும் இராஜதகுணத்திலேலே லோபம்வரும் தாமதகுணத்திலேலே அஞ்ஞானம்வருமென்றவாறு. (௰௪)

சத்துவமாத்தர் பரகதியடைவார் தமத்துளோரதோகதி சார்வார், மத்திமகுணத்தோராயினோர் நடுவின் மானிடப்பிறவியாய் வாழ்வா, சித்திரமாய வுருவமேவிகாரியா னவிகாரியென்றிவற்றை, மெய்த்திறனுக வழிந்தவனதீதப்பொருளிலே விட்டின்ப மடைந்தான். ..................ஃ

(இ-ள்.) சத்துவகுணமுடைய மனிதரான சாத்துவிகாகள மேலான மோக்ஷத்தையடைவார்கள்- ராஜதகுணத்தோரானவர்கள் மத்தியலோகத்திலே மனிதப்பிறவியாயிருப்பார்கள் தமோகுணமுடையவர்களே மேல்நடுவென்ற இரண்டுகதியும் அடையார்கள் இந்த விதமான தேகமேவிகாரி நான் அவிகாரியென்று தன்னையுந்தன்னுடம்பையுமான விந்த விரண்டையும் நிச்சயப்படியாக அறிந்தவன் அறிந்தபொழுதே மோக்ஷசுகத்தை யடைந்தானென்றவாறு. ❋ சாத்துவிகாகள் மோக்ஷத்தையடைந்தார்களெனவே இனித்திரும்பார்களென்னும் ராசதகுணத்தராய்மனிதரா யிருப்பாரெனவே சொர்க்காதிபலங்களுக்குப் போகின்றதும் பூமிக்குமனிதராகவந்து சுகிப்பதுமாகத் திரிவரல்லது தெய்வயோனியும்மோட்சமும்பெறார்களென்றும், மிருகயோனியும் அதோகதியும், அடையார்களென்றுமற்றுளோருங்கதிசாராரெனவே மிருகயோனியும் அதோகதியும்அடையுமென்பது அருத்தாபத்தி வரும். (௰எ)

உடம்புடனிருந்தே யுணாத்தவிக் குணங்கண் மூன்றையு
முள்ளவாறறிந்து, கடந்தவன் பிறப்பு மூப்பிறப்பாதியா
கவேகட்டிலாக்கின்ற, விடம்புறா யிம்மை யாவையுங்
கடந்து விட்டின்பம் விளைபவ னென்றான், றடங்கடலி
டையே வளர்ந்தவனவர்க்கு வேறுதனஞ்செயனுரைத்தான்.

(இ-ள்.) ஆத்மாதேகத்தோடிருந்தே நான்சொன்ன இந்த மூன்றுகுணங்களையு முள்ளபடியறிந்து கடந்தவன்பிறப்பு மூப்புஞ்சாவுமுதலாகச் சொல்லுகின்ற நஞ்சுசம்யோப்பான எல்லாத்துக்கத்தையுங்கடந்து மோட்சசுகம் விளைகின்றவனென்று பெரியதிருப்பாற்கடலின்மேல்ல நிருக்கண்வளர்ந்தருளிய ஸ்ரீகிருஷ்ண சுவாமிசொன்னார் அவருக்கு வேற்றயிந்தச் சொல்லை அருச்சுனன் சொன்னானென்றவாறு. (௰அ)

கண்ணியவுலகிற் கடப்பரிதாயகுணங்கண் மூன்றையுங்க
டந்துயர்ந்த, புண்ணியரியல்பு மவர்களையறியுங்குறியை
யும்புகன் றருளென்ன, வெண்ணியவுலகு முலகிலவாழு
யிருமிருவினையாக்கையுமாகப், பண்ணியுமழித்துமேவி
ளையாடு பரமன்வேறிவ்வகை பணித்தான் ............ ❋

(இ-ள்.) இடமே சுபாவமான வுலகத்திலே யாராலுங்கடக்

ப்படாத மூன்றுகுணங்களையுங்கடந்து மேலான நல்லவர்களுடைய சுபாவமும் அவர்களையறியப்பட்ட குறியையுந் திருவாய்மலர்ந்தருளவேண்டுமென்று அருச்சுனன்சொல்ல அதற்குப் பெரியவர்களாலே யெண்ணமிட்ட வுலகமும் உலகத்தில வாழப்பட்ட சீவனும் நல்வினை தீவினையான கருமமுமுடைய தேகமும் இப்படியாகவுண்டாக்கியும் அழித்துமிதுவெப்பொழுது போக்குதலாக விளையாடப்பட்டமேலான ஸ்ரீகிருஷ்ணசுவாமியானவர் யேறேயிந்தப்படிசொன்னொன்றவாறு. (௰௧)

வாயமையவல்லாற்குண மவைமூன்றின் வருகின்றகாரிய
மாய, தூய்மையுந்தொழிலு மயக்கமுமென்று சொல்லி
யதுறையிவை மூன்றுஞ், செய்மைய் வென்று பெறுத
போதிரங்கல் பெற்றபோர் நிகழ்தல்செய்யாதான், தாமய
லாகாக் குணங்களோடிருந்தே யவற்றினுல்சவிப்பிக்கப்
படாதான்........................................... *

(இ-ள்.) குணமான அந்தக்கரணமூன்றினுல் வருகின்ற காரியமாகியபரிசுத்தமுங் கருமமுமறியாமையுமென்றுசொல்லப்பட்டவிந்த மூன்றுவிதமும்பெறக்கிடையாதபோது தூரத்திலிருக்கின்றதுகிட்டவில்லையென்றுவிசாரப்படுதல்பெறக்கிட்டக் கிடைத்தபோதுவிட்டுப்போகாததைப்போல அவமானஞ்செய்தல் இந்த இரண்டும்வாயினுலேசெய்யாமலிருக்கின்றதுமல்லாமல் மனதினுலுஞ்செய்யாதவன்தாங்களன்னியமாகாமல் ஆத்மாவோடு நீயேநானென்றிருந்தகுணங்களோடு கூடியிருந்தேயந்தக் குணங்களாலே சவிப்பிக்கப்படாதவனென்றவாறு. (௨௰)

(கலிவிருத்தம்.)

மானமவ மானம்வரு மின்பமிடர் மண்பொன் .... .....*
ஞன்யகிழவப்பிரிய மன்பர் பகை யானே..................*
ருனவுனா யோம்புக ழுற்ற பொழு தொப்பா .... .... ...*
னினமுறுகின்றகுண மாணவை யிகழ்ந்தோன்.........*

(இ-ள்.) வரப்பட்ட தானவெகுமான மவமானஞ் சுகதுக்கம் மண் பொன் சந்தோஷங் கோபந் தோஷ டகையர் நிந்தை கீர்த்தி இவைகளடைந்தபொழுது சமமானவன் குற்றமடைகிறகுணமானதை வெறுத்தவனென்றவாறு. ※ சந்தோஷங் கோபத்தை பிரி

ப்ரமப்பிரியமென்றுந் தோழர் பகைவரைச் சத்துரு மித்துருவென்றும் நிந்தையை அபகீர்த்தி யென்றுஞ் சொல்லுவார்களென்னைமன்றேனென்றுஞ் சொல்லலாம். (௨௪)

இப்பரிசினல்வரு குணங்களை யிகழ்ந்தே ........ ..... ... *
மெய்ப்பருவ மாயபெரு வீடுபெற விற்பா... ...,... ...*
ரெப்பரிசி னாலுமிடை யின்றிபெறு மன்பா... ..... ....*
லொப்பவரிலாதவெனை யுன்னுமவர் கண்டாய்.........*

(இ-ள்.) இந்தவிதத்தினாலே வரப்பட்ட குணங்களைக் கடந்தே குணாதீதனாகிச் சத்தியமான பருவமாகிய பெரிய மோக்ஷத்தைப்பெறமாட்டுவார்க ளெந்த விதத்தினாலு மிடைவிடாமலெழும்பின அன்பினாலே ஒப்பானவர்களில்லாத என்னை நினைக்கிற வர்கள் கண்டாயர்ச்சுனா வென்றவாறு. ※ உரைக்குப் பின்னிரண்டு பாதத்தை முன்னாகவு முன்னிரண்டு பாதத்தையும் பின்னாகவுமாறுக. (௨௫)

(அறுசீரடியாசிரியவிருத்தம்.)

ஒழியாதொன்று மியாவர்க்கு மியானேயுணர்த்தி வருகுதலா......*
லழியாவறிவுங் கெடாவீடுங் கேடிலின்ப மானதுவு . ........ ........ *
மழியாவறமு மென்னுள்ளே யளவாகா நின்றனவென்றுமன்......*
சுழியாநின்ற பெருவெள்ளத் திடையேபண்டு துயில்கொண்டான்.*

(இ-ள்.) எல்லாருக்கும் நானே விடாமலென்றைக்குமுபதேசம்பண்ணி வருகிறதினாலே கெடாதஞானமுங் கெடாத மோக்ஷமுங் கேடில்லாத சுகமானதுங் கெடாததருமமும் என்னுள்ளேயுண்டாகிறதென்று சொன்னார் முற்காலத்திலே சுழித்துநின்ற பிரளயாந்தப் பெரியவெள்ளத்தினிடத்திலே ஆலிலைமேலே பள்ளி கொண்டருளிய ஸ்ரீகிருஷ்ணசுவாமி யென்றவாறு. ※ எல்லாமுண்டாகிறதென்னுள்ளேயாகையா லெல்லாவற்றிற்கு நானே ஆதாரமுங் காரணமுமென்றது.— (௨௬)

குணத்திரயயோக அத்தியாயம் முற்றும்.

ஆக அத்தியாயம்-௰௪ இ-கூடியசெய்யுள் (௪௱௰௫)

—?¡?¡*?¡?¡—

பதினைந்தாவது.

# புருஷோத்தமயோக

## அத்தியாயம்.

(கலிநிலைத்துறை.)

சாயையன்னவெவ் வினைத்தளை யறுக்கவோ தகவில...... ...... *
பேயையின்னுயிர் செகுக்கவோ பிள்ளையாய் வளர்ந்தான்... *
வேயையொன்றிய வரிசிலை விசையற்கு மீள ...... .... ........ *
மாயைதன்னையோர் மரமொக்க வருணிக்கலுற்றான்......... *

(இ-ள்.) நிழல்போலத் தொடர்ந்த கொடுமையுள்ள கருமத்தையறுக்கவோ கொல்லத்தக்க பூதனையென்ற பேயையினிய சீவனைக்கொல்லவோ குழந்தையாய் இடையர் சேரியிலேவளர்ந்தகிருஷ்ணசுவாமி மூங்கிலைப் பொருந்திய கட்டுதலையுடைய காண்டிவமென்ற வில்லையுடைய அருச்சுனனுக்கு மாயையை ஒருமரத்தையொப்பாக வருணிக்கத் துவக்கினானென்றவாறு. (க)

(கலிவிருத்தம்.)

வேர்மேலது தலைகீழது வீவில்லது வேத.... ..... .... *
தேர்மேவிய விலைமேவிய தியாரும்புக றலினா...... .... *
லார்மேவிய வசுவத்தம தெனவேயர சதனின்......... *
போமேய்து பெருமாயைசெய் பிறவிப்பெருமரமே.. *

(இ-ள்.) மேலே வேருள்ளது கீழேதலையுள்ளது அழிவில்லாதது வேதமாகிய அழகுபொருந்திய இலை கூடியுள்ளது யாருஞ்சொல்லுகிறதினாலே நிறைவு பொருந்திய அசுவத்தமென்றே சொல்லப்பட்ட அரசமரத்தின்பெயரையடைந்தது பெரிய மாயை செய்யப்பட்ட பெரிய சனன விருக்ஷமாகிய பிறவிமரமென்றவாறு. ※ பெருமாயை செய் பிறவிப் பெருமர மானதுவே மேலது தலைகீழது வீவில்லது வேதத்தோமேவிய விலைமேவியது யாரும்புகறலினால் மேவிய வசுவத்தமதெனவே யரசதனின்- போமேயதென முடிக்க.

இவ்வாறித னியல்பாகிய வகையாதெனி லியாதும்..... *
ஒவ்வாவகை பெரிதாகிய பிரமத்தொரு விடமேய ... ... *
வைவாள்வலி யுழலாவதன் முறையேவரன் முறையெ... *
மெய்வான்முதல் வருமாதலின் மேலானதுவேறே..... *

(இ-ள்.) இந்தப்படி யிதினுடைய சுபாவமாகிய விதமென்னவென்று கேட்கிற கூர்மையுடைய ஆயுதவலுமையினாலே பகைகளைச்செயிக்கிற அருச்சுனா! கேள் ஒன்றுமொவ்வாதபடி பெரிதாகிய பிரமத்தி லொருவிடத்திலே அந்தப்பிரமத்தினுடைய விதிப்படியே வரத்தக்க கிரமப்படியே சிதாகாச முதலாகவெல்லாம் வரும் ஆதலாற் பிரமத்தினிடத்தி லுண்டானசித்திலே வேறாக்கொண்டமாயையாகை யாலமேலான தென்றவாறு. ❁ மெய்வானசிதாகாசம். (௩)

ஊழால்வரு முலகாகிய முயிராகிய மெழலாற் ............ ..... *
கீழான்று தலையாய்வரு முதலீறிடை கீழாய்ச் .................... *
சூழாகிய பிறவித்தொட ரொருகாலமு மடையப்.... ........... *
பாழாய்வஞ்ச யழியாமையி லழியாததோர்படியே .... ..... *

(இ-ள்.) இனிமாயையில் நின்றும் வியாதியால் உலகங்களாகிப்ம் உயிராகியும் வரப்பட்ட அதினாலே தலைகீழானதாய் வரப்பட்ட முதல் நடுகடைமூன்று மாயைக்கு மேலில்லாமல் அதோமுகமாய்ச்சுழல்வதாகிய பிறவித்தொடர்ச்சி யெல்லாம் பாழாமபடி யொருகாலமு மழியாமையினாலே இந்தச்சமான விருக்ஷம் அழியாதது ஒப்பில்லாத சுபாவமுடையதென்றவாறு. (௪)

கருநான்முதல் வினையாவது வளர்காதல்செய்தலினா.........*
லருநான்மறை யிலையேயிலை யவையாமென வறிநீ.........*
வருநாள்களி லொருநாள்பெறு வகையின்மையி னாலே.......*
பெருநாடறி யசுவத்தமதெனலாயது பேரே.... ..... ... .. ....*

(இ-ள்) கருப்பற்று நாள்முதலாகக் கருமமாவது வளரப்பட்ட ஆசையைச் செய்தலினாலே அரியநாலு வேதங்களுமே யிலைகள் இந்தப்பந்தப் பிறவிமர மாகுமென்று நீயறியவருகிற நாள்களிலொருநாள் பெறும்படி யில்லாதினாலே பெரியவர்கள் அறியப்பட்ட அந்தப்பிரவிமரமான மாயையானது அசுவத்தமென்றுபெயருடையதாகிய தென்றவாறு. ❁ கருநான்முதல் வினையாவதென்று பாட

மோதிற் கருப்பற்று நாளைமுதல் வினைவானது வரப்பட்டதென்று
ம்பெருதாடியவென்று பாடமோதற் பெருமையடைந்தவென்றும்.

மற்றிப்படி நிகழ்கின்றவிம் மாயாமரமதனின் ........ *
பெற்றித்திறமிதுவல்லது பிறிதின்மையினாலே ....... *
யுற்றிப்படி திவாய்ப்பொருளெல்லாவுமுணர்ந்தா...... *
ரிற்றிப்பெருமானின்றிறமின்னுஞ்சிலவுளகேள் ....... *

(இ-ள்.) இந்தப்படி விளங்குகின்ற இந்தமாயா மரத்தினுடைய சுபாவிதம் இதுவல்லாமல் வேறில்லாததினாலே இப்படி யுறுதியாக அறிவாய் எல்லாப்பொருள்களையு மறிந்தபோக்கிளில்லை இந்தப்பெரியபிறவிமரத்தினுடைய வகையின்னுஞ்சிலவுண்டுகேள் அருச்சுனனென்றவாறு.— (௮)

கண்ணேபெணவனையாய் பலபிறவிக் கதிவழியே ...... *
மண்ணேமுதல் கீழாமுல இடையேவளர் வனவும் ...... *
விண்ணேமுதன் மேலாமுலகிடையேயிடைவனவு ...... *
மெண்ணேறிய பவமாகிய பனையாலிசைதரும்ம ... ...*

(இ-ள்.) இவன் என்கண்ணேயென்று சொல்லவொப்பான அருச்சுனா! பலபிறவிகளினுடைய கெதிவழியே பூலோகமுதலாகக் கீழானவுலகங்களிடத்தில் வளருகிறதும் ஆகாசமுதல் மேலான வுலகங்களிடத்தில் நெருங்கினது மாகலக்கம் எண்ணின் எண்பத்துநாலு லட்சம் அச்சுபேசப்பட்ட பிறவியாகிய பனைமரத்தாலே பொருந்துதென்றவாறு. * பனைமரமாவது—பருங்கவா. (௯)

நெறியால்வரும் வினைவோபல நிலமாமுலகிடையே ... *
யறியாமையோடுறவிற்கவி வேர்கீழினுமுளதாம் .. .*
பிறியாதெழுகுணமாகிய பெருநீர்மையில் வளரும்.... *
பொறியாகியவிலைவேதளிர் பொனமேயதுபொலிவே.

(இ-ள்.) செய்கின்ற மார்க்கத்தினாலே வரப்பட்ட காரியமே பேர்பலதிலங்களான லோகங்களிடத்தில் அறியாமையாகிய அஞ்ஞானத்துடனே தங்கியெழுசவினாலே கீழினும்வேருள்ளதாம் ஒருகாலமும் பிரியாமலெழும்பப்பட்ட குணங்களாகிய பெரிய நீரினாலே வளரும்பொறியாகிய சத்த-பரிச-ரூப-ரச - கந்தமனவிந்த விஷயங்களே தளிர்போலப்பூர்ட்டையடைந்ததென்றவாறு. (௰)

கனவுந்திகழ் சமுத்தாழிபின் மிருகந்திரு நகரு...*
மெனவந்தழி தலினாலுரு வதுவின்றிமுன்யாது·*
முனவந்திடுமுதலொளொடு முடிவின்மையினாலே
தனதந்தமுமுதலுந்தெரி தரவில்லதுதானே....*

(இ-ள்.) சொற்பனமுந் தோன்றப்பட்டகானலில்மிருந்தநீரைக் காட்டுவதுபோல வந்து அழிதலினாலே மூன் றென்றும் உருவில்லாமல் முன்னேயுண்டான முதல்நாளும் அதனுடைமேலமுடிவுநாளு மில்லாதினாலே தன்னுடையமுதலும் முடிவுந்தெரிவதில்லாததென்றவாறு. ❋ ஆழியைத்தேரொன்றதாகும்பெயர். சமுத்திரமென்ற ஆழியை ண்டிபெயத தேர்கானல். (௯)

(அறுசீரடியாசிரியவிருத்தம்.)

மந்திரமாயவிந்த மரத்தினைத்துறவென் கின்ற........*
தந்திரவாளால்வெட்டித் தற்பரமாகிநின்றே..........*
யிந்திரசாலமென்ன யாவுமென்னிடையேகட்டும்...*
அந்திரமிலாதவென்னை யடைகையேயடுப்பதையா...*

(இ-ள்.) மாயையாகிய இந்தப்பிறவிமரத்தை அசங்கமென்கின்றவுபாயவாளினாலேவெட்டி அந்தப்பிறவிமரத்தைப் பிரமமாக்கிநிஷ்டையில் நின்று இந்திரசாலம்போல வெல்லாம் என்னிடத்திலேகாட்டுகின்றநிரந்தரமான வென்னைச்சேருதலே அடுத்த தென்றவாறு. ❋ என்னைச்சேராதது அடுக்காதென்பது அருத்தாபத்தி துறவாவது கூட்டத்தைவிட்டது- கூட்டமாவது - அந்தக்கரணவியாபாரம்- உபாயவாளாவது- குருவினுபதேச சாணைப்பிடித்தவாள் அந்தரமில்லாதது-நிரந்தரம் துறவை ஞானமெனினும் பொருந்தும். (௰)

துன்னியவாசைகாமங் கடந்தவர்காணத்தோன்று.....*
மென்னுருவியற்கைகேட்கி லியாவையுங்காட்டுகின்ற..*
மன்னியவொளிகள்காணு வகையதாய்வந்தும்சேர்ந்தார்*
பின்னியல்வேறொன்றுகாப் பெற்றியாய்நின்றுபேசும்.*

(இ-ள்.) கலந்த ஆசை காமம் இவைகளைக் கடந்தவர்கள் காணத் தோன்றப்பட்ட என்னுடைய சொரூப சுபாவத்தைக் கேட்கில் எல்லாவற்றையுங்காட்டுகின்றநிலைமையான பிரகாசங்களாகிய சந்திரசூ

ரியாக்கினிக்குங் காணுகபடியாய் என்னைவந்துசேர்ந்தவர்கள் பிறகு
அவர்களுடைய சுபாவம்வேறொன்றாகாமல் என்னுடைய சுபாவமே
யாவதாய் முன்னின்றுபேசும் அருவமாகவும் பேசுமென்ற வாறு.

குடந்தொறுந்தோன்றுகின்ற வாகாசங்கொலைதற்கொப்பத்*
தடம்புனறோறுந்தோன்றுஞ் சந்திரன்றானுமென்ன ........ *
வுடம்புகடோறும்வேறா யுயிரென நின்றேயந்த .................. *
விடம்படுபுலன்கடோறு மியம்புழியியற்றுவேனான் ..........*

(இ-ள்.) குடங்கள்தோறுங் காணுகின்ற ஆகாசம்போலவுங் குளத்துத்தண்ணீர்கள்தோறும் வெவ்வேறாய்ச் சீவனென்று நின்றே அந்தவிடங்களிலுண்டாகிய இந்திரியங்கள்தோறும் நடத்துகின்றவன் சொல்லுமிடத்தில் நானென்றவாறு. ❁ இயம்புழி குடந்தொறுமெனமாறுக. (௰௨)

பூக்கமழ்நாற்றங்கொண்டு பொருமளிபோகுமாபோற்*
றீக்கனலகின்றவேலாய் சீவனென்கின்றசீமான்......*
யாக்கையையெய்தும்போதுமதனைவிட்டேகும்போதும்
போக்கரிதாயவாறு புலன்களைக்கொண்டேபோமால் *

(இ-ள்.) நெருப்புச்சுடுகின்ற வேலையுடைய அருச்சுனா; வண்டானது வரும்போதும் பூவின்மணக்கின்றபரிமளத்துக்காகவந்துபொருந்தும்போகின்றபோது பரிமளத்தைக்கொண்டுபோகும் அப்படிப்போலச் சீவனென்று சொல்லப்பட்ட சிறப்புடையவன் சரீரத்தைச்சேரும்போதும் இந்திரியங்களைக்கொண்டேசேரும் அந்தச்சரீரத்தைவிட்டுப்போகின்றபோதும்இந்திரியங்களைப்போக்கப்படாதபடியினாலே இந்திரியங்களைக்கொண்டேபோமென்றவாறு. ❁ பொறியளி மென்பாருமுளர். (௰௩)

(இதுவும் அறுசீரடியாசிரியவிருத்தம்.)

மின்னேயனையவுடம்பதனை விடுவதடைவதாய்விடையநீ... *
தன்னேரில்லாதான்பலவுந் தானுகின்றதன்மையினை ......... *
யென்னேகாணாரறியாதா ரறிவார்யோகத்தாலேதம் ... ..... .*
முன்னேகாண்பாரிதனியற்கையாதோவின்னமொழிவன்கேள்

(இ-ள்.) தனக்கு ஒப்பில்லாத சீவனானவன் மின்னையொப்பான சரீரத்தைவிடுகின்றது சேருகின்றதாகவிடயங்க ளனேகமுந்தானு

அனுபவிக்கின்ற சுபாவத்தை அறியாதமூடர்களென்னவோ காணார்கள் அறிவுடையவர்கள் யோகதிஷ்டியினாலே தங்களுடையகண்முன்னே காண்பார்கள் இதனுடையசுபாவமென்னவோ அதையின்னுஞ் சொல்லுகின்றேன்கேள் அருச்சுனாவென்றவாறு. ✲ தன்னேரில்லா தானமின்னே யானையவென்றும், விடயம்பலவுமென்று மாறுக. தம முன்னே யென்பது சரீரத்திலாத்மா விருக்கச்சே தானே ஆத்மா வேறுசரீரம் வேறெனக்காணுதல் அறிவில்லாதவர்கள் செத்துங்காணார்களென்ப தருத்தாபத்தி. (௰௪)

இந்திரியங் களுக்குங் கண்ணாயிரவி தீயிந்துவின்பால் *
வந்தெழுங்கதிருநானே மாநிலமாகிநின்று ....... ..... *
தந்தியேற்னையதோழா சாமமுழுகலாந்தன்மை......*
தந்திரந்தவிர்ந்துமெல்லாந் தாங்குகின்றேனுநானே.. *

(இ-ள்.) களிற்றனையை யொப்பானதோழா பஞ்சேந்திரியங்களுக்கும் விஷயங்களைக்காட்டுகின்ற கண்தான் - சூரியன்சந்திரன் அக்கினி யிவர்க ளிடத்திலுண்டா யெழும்புகின்ற பிரகாசமு நானே சாமமுதலான சுபாவதந்திரங்களைவிட்டுப் பெரியபூமியாகிநின்று எல்லாந் தாங்குகின்றவனும் நானேயென்றவாறு. (௰௫)

(கலிவிருத்தம்.)

மூந்துவானசுவை முற்றுமாகியே .......... ......... *
இந்துவாகி நின்றுண்பன யாவையுந் ......... .... *
தந்துசேர்சுவை யகத்திலேதக.................*
நந்திடாவகை வளர்க்கின்றேனு நான் ..... ......... *

(இ-ள்.) முசன்மையான பெருமையுள்ள அறுசுவை முழுதுமாகிச் சந்திரனாகிநின்று பொசிக்கின்றதெல்லாங் கொடுத்து ஆமறன்றாகுகைசேர்ந்த சுவையினிடத்திலே யிருந்து அந்தந்தச் சுவைகளுக்குந் தக்கதாக்க கெடாதபடி வளர்க்கின்றவனும் நானென்றவாறு. ✲ வான்சுவையென்றதனால் ஒருசுவையினா லனேகபேதமுண்டு ...கையால் அநேகவிகற்பங்கூடிய தொருசுவையாகப்பேரிட்டு அறுசுவை யென்று தொகைப்படுத்தனதினாலே வான்சுவையென்றார்.

இன்பநக்குவ தின்சுவையுண்பவா ...................... *
நம்பயன்செயு நல்வகையுன்டிய ...................... *

மின்பமாம்வகை யாக்கைகடோறுநின் ..............................*
றன்பவங்கி யாயழுக்கின்றே ஞன்..... .......... ... ... ,*

(இ-ள்.) தோழாதின் கின்றதும் நக்குகின்றதும் மதாமுண்டாகச் சுவைக்கின்றதும், உண்கின்றதும் ஒன்முக நல்லபலஷோச் செய்யப்பட்டநாலுவிதப்பொசிப்பும் இன்பமாகின்றபடிக்குச்சரீரங்கள் தோறும் அக்கினியாய்நின்றுபாகமாக்கிச் சீரணஞ்செய்கின்றவனும் நானென்றவாறு. (௰எ)

நல்லமாந்தர் நல்லறிவுநன்கிலாப் ................................*
புல்லர் தங்கள்புல் லறிவும்போர்திகழ் ........................*
வில்லமைந்ததோள்வீரர்விரயா.................................*
வல்லதில்லையென்றறியவேண்டுமால்...............................*

(இ-ள்.) போர்செய்துவிளங்கிய வில்லிருந்த தோளையுடையவீரர்களுக்குவீரனுன அருச்சுன! நல்லமனிதர்களுடையஞானமும் நலமில்லாத சிறியவர்களுடைய புல் லறிவாகிய அஞ் ஞானமும் நானேயல்லாமல் வேறில்லையென் றறியவேண்டுமென்றவாறு. (௰அ)

அசைவில்லாமறைக் கறிவுநானதன் ........................*
வசையிலாதமெய்ப் பொருளும்வாய்மைசே.....*
ரிசையினுலெடுத் தேதுவேனும்யான்...........*
விசையங்களின்னம் வேறுமொன்றையே.........*

(இ-ள்.) சலனமில்லாத வேதத்துக்கு அறிவுநான் அந்தவேதத்தினுடைய குற்றமில்லாத சத்தியமான பொருளும் என்னுடையவாக்கிலேசொந்த விசையினுலேயெடுத்துச் சொல்லுகின்றவன் நான் இதுவல்லாமல் வேறுமொன்றை இன்னஞ்சொல்லக்கேள் அருச்சுனுவென்றவாறு. (௰௯)

மருவுகின்றதில் வுலகின்மாய்தலே ..................................*
யுருவமாகமுன் புடையதொன்றுமே.............................*
யருவமொன்றிலா தழிவதின்மையே ..............................*
குருவநிற்றந்தார் குறியிலின்பமே.........................*

(இ-ள்.) குருகுலத்தவனே இந்தவுலகத்தில் முன்பே உருவும்அருவமென் றிரண்டுள்ளன அவற்றில் உருவமொன்றே நாசத்தை

யடைகின்றது அருவமானதொன்றுமில்லாமல் அழிவதில்லை இதுவெ ன்றுமுள்ளதாக நின்றது ஒப்புங்குறிப்புமில்லாததாய் ஆனந்த மெ ன்றவாறு. ❀ குருவமென்றது- குருகுலத்தவனேயென்பது-அருவ மாய் ஒப்புங்குறியுமில்லாததாய் ஆனந்த சொரூபமாய் அழிவில்லா ததாயென்றுமுள்ளதாயு நின்றது என்றுமுடிக்க. (உ௰)

மொழிசெய்கின்ற விவ்விரண்டுமுற்றவே.................... *
விழியினுறு நோக்கின் மெய்ம்மையே........................ *
யழிவதியாக்கையின் சழிவுபாடிலா......................... *
தொழிவதென்னெனி லுயிரொன்கின்றதே..................... *

(இ ள்.) சொல்லுகின்ற விந்தவிரண்டுமுடியக் கண்ணாலேயுற்றுப் பார்க்கில் இந்தவுலகத்தில் உருவானசரீரமே அழிகின்றது நிச்சயம் அழிவுபாடில்லாமல் ஒழிந்திருப்பதென்ன வென்றுகேட்கில் அருவ மான ஆத்மாவென்கின்றதே நாசமில்லாததென்றவாறு. (உக)

இவையிரண்டையுங் கடந்துயாதுமோர் ..................*
நவையுமின்றியே நாசமின்றியே.............................*
யெவையுமின்றியே யாவுமின்றியே...........................*
குவையினின்றதோர் குறியினின்பமே.........................*

(இ ள்.) இந்தவிரண்டையுங்கடந்து யாதுமொருகுற்றமில்லாமல் நாசமில்லாமல் எந்தக்கூட்டமுமில்லாமல் ஒருகருமமுமில்லாமலு ரண்டுநின்றது ஒப்புங்குறிப்புமில்லாத ஆனந்தமென்றவாறு. (உஉ)

இந்தவின்பமியானென்னையுள்ளவா......................... *
சிந்தையின்கணே தெளிதனமேயினார்....................... *
பந்தமொன்றிலார் பழையவிப் பொருட்...................... *
கந்தமாதிவே றறிய வெண்ணுமோ.......................... *

((இ-ள்.) இந்தவுருவம் அருவம் இரண்டையுங்கடந்த ஆனந்தமா வது நான் என்னையுள்ளபடி மனதினிடத்திலே தெளிவையடைந்த வர்கள் பாசபந்தமொன்றுமில்லாதவர்கள் பழையதான இந்தப் பொருளுக்கு ஆதிபந்தம் வேறேயறியப்படாததென்றவாறு. உ௩

வேததாலுநின் றூறைசெய்தாலு மொன................*
முதலாவதென் றுலகறிந்ததோ........................*

காதலாலெனக் கினிய தோழநீ ...... ........ ..... *
யாதலாலுனக் கறிய வோதினேன் ........ ..... *

(இ-ள்) நாலுவேதமும் ஒழியாமல் நின்று சொன்னதும் ஒன்றென்று சொல்லுதலினால் அஃதென்று உலகமறிந்ததுவோ அல்ல ஆசையினாலே எனக்கு இனிதான நீ தோழனாதலாலுனக்கு அறியச் சொன்னேனென்றவாறு. (உ௪)

(அறுசீரடியாசிரியவிருத்தம்.)

கண்ணேயோ ரிடத்து மின்றி யதனிலே வைக்கிற் காதல் ...... *
பண்ணேயோ யாக்கி நின்ற வினையெலாம் பயக்கு மென்றான் *
வெண்ணெயோவிதுரனிட்ட விருந்தையோ வேலை சூழ்ந்த *
மண்ணேயோ வுண்டுமுன்னாள் வரும்பசி தீர்ந்த மாயோன் *

(இ-ள்.) வேறோரிடத்திலு மில்லாமல் அந்த ஆனந்தத்திலே மனக்கண்ணை வைக்கில் ஆசை கூட்டங்களோடு கூடிநின்றகருமமெல்லாம் பலிக்கு மென்று சொன்னார் இடையர்வீட்டு வெண்ணெயையோ! விதுர னிட்ட விருந்தையோ! கடல்சூழ்ந்த பூமியையோ! போசித்து முற்காலத்திலே வரப்பட்ட பசிதீர்ந்த கிருஷ்ணசுவாமி யென்றவாறு. (உ௫)

புருஷோத்தமயோக-அத்தியாயம் முற்றும்.

ஆக அத்தியாயம் - ௰௫ - இ - செய்யுள் (௩௱௩௬.)

பதினாறுவது.

# தெய்வசம்பத்து விபாகயோக அத்தியாயம்.

(கலிவிருத்தம்.)

மறந்திருந்த மனத்திரு ணீக்கிநீ ........ ........ *
திறந்திறப் படச் செப்புதன் மேயினை ............. *

ணறந்திறந் தெரிந் தாக்குதற் காகவே.........*
பிறந்திறந் துழல்கின்ற பேராளனே..........*

(இ-ள்.) (இதனைப் பின்னிரண்டடியும் முன்னாக வைத்துரை கொள்ளுவது) தருமத்தினுடைய வகையைத்தெரிந்து தருமத்தை யாகப்பண்ணுகிற தற்காகப் பிறந்திறந்து உழலுகிற பேராளனாகிய கிருஷ்ணசுவாமியானவர் ஞானத்தை மறந்து கெட்ட மனதிலுள்ள அஞ்ஞானத்தைப் போக்கப்பட்ட விதத்தைநன்றாகத்தெரியச்சொல்லத்துவக்கினா ரென்றவாறு. ※ (கர்மத்தை யாகவே பாப மழியு மென்ப தருத்தாபத்தி) அஞ்ஞானத்தை நீக்குகிற விதமாவது—ஞானம். (௧)

தெய்வ வசுர ரென்றித் திறத்த தாய்.................. *
வையமர்ந்த வெல் லார்களும் வாழ்வ திங்.................. *
கையகேள்வற் றின்றிற மென்று தன்.................. *
செய்ய வாய்திறந் திவ்வண்ணஞ் செப்பினான்.........*

(இ-ள்.) ஐயா இந்தப்பூமியிலுள்ள மனித ரெல்லாரும் தேவரசுர ரென்று சொல்லப்பட்ட இந்த விரண்டுவிதமுடை யவராயிருப்பது அந்த இரண்டினுடைய விதத்தைக்கேளென்று தம்முடைய சிவந்த திருவாயைத்திறந்து இந்தப்படிசொன்னா ரென்றவாறு. (௨)

(இதுவுங்கலிவிருத்தம்.)

அஞ்சுத லின்மையு மறிவை யாக்கலும்..................*
நெஞ்சினை யடக்கலு நிலைகெடா மையும்.............. *
வெஞ்சின மின்மையு மெய்ம்மை கூறலுந்..................*
தஞ்செனு வேள்வியுந் தவமு மாக்கலும்...............*

(இ-ள்.) பயப்படுதலில்லாததைரியமும் அறிவையுண்டாக்குகிறது மனதையடக்குகிறதும் நிலைமை யழியாததுங் கொடுமையுள்ள கோபமில்லாமையுஞ் சத்தியமான மெய்சொல்லுகிறதும் அடைக்கலமென்று யாகமுந் தவசுஞ் செய்கிறது மென்றவாறு. (௩)

மறைபயி லறந்தனை மறந்திரா மையுங்.................. *
குறைக டவிர்தலுங் கொள்கை யாற்றலும்............... *
பிறர்பிழை பொறுத்தலும் பேரொழுக்கமே........... *
யறன்வழி தானமோ டருளை யாக்கலும்...............*

(இ-ள்.) வேதங்களிலே விடாமலோதப்பட்ட தருமத்தைமறந்திராமலும் கோட்சொல்லுகிறதை விடுதலும் விஷபங்கொள்ளுகிறதையிலக்கலும் அன்னியர் செய்த குற்றத்தைப் பொறுத்தலும்பெரிய ஒழுக்கதருமத்தை இச்சித்ததான்முமம் அவைற்றுடனே தயவுண்டாக்கலுமென்றவாறு. ☼ மறைபயிற்றலுந் தனை மதித்திராமையுமென்று பாடமோதில் வேதமோதலும் தன்னைப்பெரியவனாக மதித்திராமலுமென்றுணா கொள்ளுமிது பொருந்தாது. (௪)

இருவகைத் தூய்மையு மிந்திரியங்களை .........*
யொருவகைப் படுத்தலு முள்ளிட் டன்னவே ... ...*
செருவருஞ் சிலையினாய் தெய்வத் தன்மையோர்... ..*
மருவிய தொழிலென மதிக்க வேண்டுமே... .........*

(இ-ள்.) சுகம்தந்தபோது சந்தோஷிப்படாமல் துக்கம் வந்தபோது கிலேசப்படாமல் இந்தச் சுகதுக்க மிரண்டிலுஞ் சித்தமு மிந்திரியங்களை நாலுவழியிலே போகாமல் ஒருவிதமாக்குகிறது மிவைகளையுள்ளிட்ட அந்தநன்மைகளானவை சண்டைசெய்துவருகிற காண்டிபமாகிய வில்லையுடைய அருச்சுனா! தெய்வத்தன்மையையுடையவர்கள் பொருந்தின தொழிலென்றுமதிக்கவேண்டுமென்றவாறு. ☼ அஞ்சுதலின்மையென்ற பாட்டு மறைபயிலறமென்றபாட்டு மிருவகைத் தூய்மையென்றபாட்டு மிந்தமூன்றுமொரு தொடர்.— (௫)

(அறுசீரடியாசிரியவிருத்தம்.)

தீமைசெய்யசுரரானோர் செய்தியைத் தெரிக்கிலொன்
றை-யாம்வகை யெனமற் றுகா வன்வெண்வதிலார்-
தூய்மையுந் தூயவாய வொழுக்கமுந் துடக்கு விட்டா
ர்-வாய்மையொன் றுலு மில்லார் மயக்கமே மருவிநி
ன்றார்...........................................*

(இ-ள்.) பொல்லாங்கு செய்யப்பட்ட அசுரரானவர்களுடைய செய்தியைத் தெரியப்பண்ணில் புண்ணிய பாவமென்ற விரண்டில்புண்ணியமாகிய வொன்றை ஆகிற விதமென்று சொல்லமற்ற பாவமாகிய ஒன்றையாகாதென்றுசொல்ல அறியத்தக்கதில்லாதவர்கள் சித்தமுஞ் சுத்தமான ஆசாரமுந் துடங்குவதை விட்டவர்கள்

ஒருவிதத்திலுஞ் சத்தியமில்லாதவர்கள் அஞ்ஞானமே சுபாவமாகப் பொருந்திநின் றவர்க ளென்றவாறு. ✲ தொடங்குவதையே விட்ட வர்களெனவே செய்தறியாரதனால் அந்தச்சுகமு மறியாதவர்க ளென்றதுகருத்து. (௭)

(கலிவிருத்தம்.)

எண்ணியவுலகமு முலகுக் கீசனும்........ . ......... ...✲
புண்ணிய பாவமும் பொய்யென் றேகொள்வார்... .. ✲
பெண்ணினோ டாண்புணர் கின்ற பெற்றியா .... .... ✲
நண்ணிய யாவையு மெடுத்து நாட்டுவார் ...... ...... ✲

(இ-ள்.) எல்லாரும் நினைக்கப்பட்ட பிரபஞ்சமும் பிரபஞ் சத்துக்குக்கர்த்தனுன் தெய்வமும்பிரபஞ்ச கருமமான புண்ணிய மும் பாவமும் பொய்யென்றே கொள்வார்களல்லாமல் மெய்யென் றுகொள்ளார்கள் பெண்ணோடே ஆண்கிரீடிக்கிறதே சுபாவமாக வு டையவர்கள் தங்களுக்குக் கிடைத்த சகலத்தையும் எல்லாரு மறிய வெடுத்து நாட்டுவார்க ளென்றவாறு. (௮)

(எழுசீரடியாசிரியவிருத்தம்.)

விரும்பலராகி யொழுக்கங்கடிறந்தார் மெய்மையுஞ் செ
ம்மையும் விட்டா- ரிரும்பயனுய வறிவுமாய்ந் துள்ளா
ரிடம்படா மனத்தினோ டிசைந்தார் - பெருமபழியாய
தொழில்களே பயில்வார் பிழைப்பு வாய்ப் பொன் றறி
யாதா- ரரும்பகையா யிவ்வுலகினை யெல்லா மழிப்பதன்
பொருட்டவ தரித்தார்................................... ...........✲

(இ-ள்.) ஆசாரங்களை யிச்சியாத துராசாராசர்களாகியாசாரங்களை விட்டவர்கள் மெய்மையும் ஒப்புரவையும் விட்டவர்கள்மெய்மையயு ம்விட்டவர்கள் பெரியபிரயோசனமாகிய அறிவுகெட்டுமூடராயுள் ளவர்கள் விசாலமாகப் பரந்தமனசோடே பொருந்தினவர்கள்பெ ரிய பழியாகிய தொழில்களே பழக்கமானவர்கள் தவறுதல் கிடைத் தல் என்ற விரண்டிலொன்று மறியாதவர் இந்தவுலகத்தை யெல்லா ம்அழிக்கிற நிமித்தியமாக விலக்க அரியபகையாய்ப் பிறந்தவர்க ளென்றவாறு.— (௯)

(அறுசீரடியாசிரியவிருத்தம்.)

நிறைவிலாக் காம போகந் தன்னையே நிறைக்க வேண்டி.......... *
மறைவிலா மானத் தோடு மதங்களை மருவி நின்று.......... *
குறைவிலா மயக்கத் தாலே கோபத்தை யடைந்து நின்று.......... *
பொறையிலா விரதம் பூண்டு பொய்த்தவம் புரியா நிற்பார்.......... *

(இ-ள்.) அளவில்லாத காலம் அனுபவித்தாலும் நிறைவில்லாதவிஷய போகத்தையே நிறையப் பொசிக்கவேண்டி மறைவான மானத்தைக் கெடுத்தும் மறைவில்லாத மானத்துடனே கெர்வங்களையடைந்து நின்று குறைவில்லாத மயக்கத்தினாலே கோபத்தை யடைந்துநின்று பொறுமையில்லாத விரதத்தைத்தரித்துப் பொய்யாகத்தவஞ் செய்வார்களென்றவாறு. (கூ)

இறந்துபோமளவுமெய்தாப் பொருளையேயெய்தநிற்பார் *
மறந்துமோர்பொருள் வேறில்லை வரும்பயனன்றியென்பார். *
பிறந்துபேராசையாய பாசத்தாற்பிணிக்கப்பட்டார்.......... *
சிறந்தபோகங்கட்காகத் தீயையாம்பொருளைசெய்வார்.......... *

(இ-ள்.) செத்துப்போகின்ற பரியந்தமும் எட்டாத பொருளையே எட்டவேணுமென்று வருந்திநிற்பார் வருகின்ற விஷயபட்பிரயோசனத்தை யல்லாமல் மறந்துமொருபொருள் வேறேயில்லையென்பார்கள் தங்களிடத்திலுண்டான பேராசையாகிய பாசத்தினால் கட்டப்பட்டார்கள் சிறப்பானவிஷய போகங்களுக்காப்பொல்லாங்கான காரியமேசெய்வார்களென்றவாறு. (ய)

இப்பொருளடைந்தோம்வேறிப் பொருளினையடைவோமெ
ன்று, மிப்பகைசெகுத்தோம்வேறிப் பகையினைச்செயிப்போ
மென்றும், துய்ப்பவ ரெம்மிற்றுய்க்க வல்லவ ரிலையென்று,
மொய்ப்பவரெம்மின்மிக்கா ருளர்கொலோவென்றுநிற்பார்*

(இ-ள்.) இந்தப்பொருளையடைந்தோம் வேறேயிருக்கின்ற இந்தப்பொருளை யடைவோமென்றும், இந்தப்பகையாளியைக்கொன்றோம் வேறேயிருக்கின்ற விந்தப் பகையாளியைச் செயிப்போமென்றும், போகங்களனுபவிக்கின்றவர்களி லெங்களைப்போல அனுபவிக்க வல்லவர்களில்லையென்றும், எங்களுக்குச்சமானம் எவர்

ன் யாருமில்லை எங்களிலும் அதிகமானவர்க ளுண்டோ வில்லையென்றுஇறுமாந்து நிற்பார்களென்றவாறு. (௰௧)

இனம்வலியிம்பம்பெற்றே மெம்மின் மிக்கார்களில்லைத் ....*
தனமிகவுடையோமென்றுந் தம்மையேவியவா நிற்பார் .....*
மனதிலேயாகஞ்செய்வோ மழையெனக்கொடுப்போமென்று*
தினமவைதோறுஞ்சிந்திப் பதுவலாற்செய்வதில்லார்......*

(இ-ள்.) உறவு பலம் சுகமிவைகளையடைந்தோமிதனாலெங்களிலும் அதிகமானவர்களில்லையென்று மிகுந்தத்திரவிய முடையோமென்றுந் தங்களைத்தாங்களே அதிசயப்பட்டு நிற்பார்கள்யாகஞ்செய்வோம் மேகத்தைப்போலத் தானங்கொடுப்போ மென்று தினந்தோறு மனசிலேநினைக்கின்றதல்லாமற் செய்வதில்லாதவர்கள்.எ-று.

(எழுசீரடியாசிரியவிருத்தம்.)

தடக்கறவில்லாநினைவெனப்பட்ட சுழலைப்பற்றியே சுழல்வ ....*
ரடற்கரிதாய மயக்கமென்கின்ற வலையிலேயகப்பட்டு நின்றோ....*
ருடற்குடில்வாழ்வாம்புன்னுனிப்பனிநீருலர்ந்திடவுயிர்நடுக்கெய்
கடப்பரிதாய நரகமென்கின்ற கடல்களில் வீழவேகடவார்... [திக்

(இ-ள்.) தடற்கியறவில்லாத நினைவென்று சொல்லப்பட்டசுழலிடத்தைப்பிடித்துச் சுழலுவார்கள் அறுக்கப்படாத மயக்கமென்றுசொல்லப்பட்ட வலையிலேயகப்பட்டுக் கடக்கமாட்டாமல் நின்றார்கள் உடம்பாகிய சிறுவீட்டுவாழ்வானதுபுல்லினுனியி லிருக்கின்ற பனிநீரளவு அப்படிக்கொத்த தேகம்போனால் உயிரானது நடுங்கிக் கடக்கப்படாத நரகமென்று சொல்லப்பட்ட கடல்களில்விழக்கடவர்களேயல்லாமல் கடக்கக்கடவர்க ளல்லவென்றவாறு. (௰௫)

(கலிநிலைத்துறை.)

வியந்துதங்களையேமேலாய்ப் பார்த்துமென் மாந்தர்த
ம்மை, நயந்துகொண் டாடவில்லார் நல்லவை செய்தா
ரொன்று, பயன்றொடர்ந்துணாத்தற்காகப் பாடியபழைய
நூல்க,ளியம்பியபடிசெய்யா தேயாகங்களியற்றுநிற்பார்.

(இ-ள்.) தங்களைப்பெரியவர்கள் நயஞ்சொல்லிக்கொண்டாடத்தக்க ஒழுக்கமில்லாதவர்கள் தங்களைத்தாங்களே மேலாகப்பார்த்து அதிசயித்து யாசகரானவர்கள் பிரயோசனத்தை யிச்சித்துஇந்த

ச்சொமாகி நல்லவற்றைச்செய்தானென்று சொல்லு கின்றதற்காக எல்லாரும் ஓதியபழைய வேதங்கள்சொன்னபடி செய்யாமல்யாகங்களைத் தாறுமாறாகச் செய்வார்களென்றவாறு. ❁ பயன்றொடர்தலாவது-பிரயோசனத்தை மனசுதொடருதல் அது இச்சித்தல்.(௰௪)

மன்னியகளிட்பொடு வலியுங்காமமுந்......... *
துன்னியானெனும்பெரு மயக்கஞ்சூழ்ந்துளோ *
ரென்னியல்பதனினும் யாவர்மாட்டினு........... *
மன்னியமெனக்கொடு பொறாமையாக்குவார்.... *

(இ-ள்.) நிலைமையானமனச்செருக்குடனே வலுமையும்ஆசையுமிருந்து கூடினுனென்று சொல்லப்பட்டபெரியமயக்கஞ் சுற்றிக்கொண் டிருக்கின்றவர்கள் என்னுடைய சுபாவத்திலும்யாரிடத்திலும் அன்னியமென் றெண்ணிக்கொண்டு பொறாமையை யுண்டாக்குவார்களென்றவாறு. (௰௫)

(அறுசீரடியாசிரியவிருத்தம்.)

மற்றவர்தம்மையித்த மானிடரானோர்யார்க்குங் ..... *
கொற்றவகீழானாைக் கொடுமையாலரவொப்பானை.. *
யற்றமிலிடும்பைசேரு மாசுரயோனியாய ......... *
புற்றவைதோறும்யானே புகப்புகவிழ்த்துகின்றேன்.. *

(இ-ள்.) இந்தமனிதரானவர்கள் எல்லாருக்குமரசனுன அருச்சுனு; இப்படிக் கீழானவர்களைக்கொடுமையாலேபாம்பையொப்பானவர்களைச்சேருதலில்லாத பூரித்ததுக்கஞ் சேரப்பட்ட அசுரயோனிகளாகிய புற்றுகள்தோறும் புகுதப்புகுத அவர்களை நானே விழத்தள்ளுகிறேனென்றவாறு. (௰௬)

(கலிவிருத்தம்.)

இவ்வகையாசுர யோனியடைந்தோர்............ *
மெய்வகையாமறி வின்மையினுலே .............. *
நைவர்கடுநர கக்கதிதோறு ........................ *
முய்வகையின்றி யுழன்றுதிரிந்தே................ *

(இ-ள்.) இப்படி அசுரயோனி யடைந்தவர்கள் மெய் வகையான அறிவில்லாமையினுலே தப்பிப்பிழைக்கின்றவகையில்லாமற்பொல்லாத நரகவழிதோறும் உழன்றுதிரிந்து வருவார்களென்றவாறு

உய்வகையின்றித் தீநரக்கதிதோறு மூழன்று திரிந்து வருவார்க ளென்றவாறு. (௰௭)

ஒருவன்கெடக்க வியற்றுவதேனு...................... *
மருநரகத்தி லடைப்பதுதானும்...................... *
ஒருவனைமூன்றுள் மற்றவைதன்னை...................... *
யொருமுறைகூறி யுணர்த்திடுவன்கேள்...................... *

(இ-ள்.) ஒருவன்கெடச்செய்வதானாலுங் கடக்கரியநரகத்தி லடையப்பண்ணுகின்றது தானும்வருகின்றவித மூன்றுண்டு அந்த மூன்றையு மொருதரஞ்சொல்லித் தெரிவிக்கின்றேன் கேள் அருச்சுனா வென்றவாறு. (௰௮)

காதலினாகிய காமமுலோபங்...................... *
கோதறவேசுடு தீநிகர்கோப...................... *
மாதலினாலவை மூன்றுமகன்றார்...................... *
வேதனைதீர்பெரு வீடுவிளைந்தார்...................... *

(இ-ள்.) ஆசையினா லுண்டாகிய காமலோபங்களாங்கமறச்சுடப்பட்ட நெருப்பையொப்பான கோப மாகையினாலே அந்தகாமக் குரோத-லோபமாக மூன்றையும்நீங்கினவர்கள் பிறவிவேதனையில் லாமற் போகப்பட்ட பெரியமோக்ஷத்தை யுண்டானவர்கள். எ-று.

கூறினநூல்வழி சேர்குறிபேணு...................... *
தேறினவாறுசெய் வாரிகலோகம்...................... *
வேறியல்பரலோகம்விளைக்கும்...................... *
பேறினவானவை பேறுபெறுரால்...................... *

(இ-ள்.) வேதஞ்சொன்ன வழியேசேரப்பட்ட குறியைமறியா மல் விட்டுக் காமகருமங்களில் மனஞ்செறினபடி செய்கின்றவர்கள் இகலோகமும்வேறுசுபாவமுள்ளபரலோகமுமுண்டாக்குகின்றபேறா னவிந்த விதமானபேறு பெறார்களென்றவாறு. (௨௰)

ஆதலிலடாதவறி கைக்குவழியான...................... *
வேதமுதனூலவை விதித்தநெறியாலே...................... *
யேதநினை யாதுன்வினை யேயிசைகவென்றான்...................... *
பூதமுத லானவை பொறுத் தருளுகின்றான்...................... *

(இ-ள்.) ஆகையால் அடாதகாரியத்தை யறிகைக்குவழியான வேதமுதலான சாஸ்திரங்கள் அவைகள் விதித்தமார்க்கத்திலேகுற்றமான காரியத்தையுங் குணமான காரியத்தையும், அறிந்து குற்றமான காரியத்தை நினையாமல் குணமானவுன்னுடைய கருமத்தையே பொருந்துவாயென்று சொன்னார் பூதமுதலான தத்துவங்களை எல்லாஞ் சமைத்தருளிச்செய்கின்ற ஸ்ரீகிருஷ்ணசுவாமியென்றவாறு. (௨௪)

தெய்வசம்பத்து விபாகயோக அத்தியாயம் - முற்றும்.

ஆக அத்தியாயம்-௰௬ இ- கூடியசெய்யுள் (௪௱௯.)

பதினேழாவது.

# சிரத்தாத்திரயவிபாகயோக அத்தியாயம்.

(கலிவிருத்தம்.)

உண்டுமீள வொளித்துல கியாவையுங் ……… *
கண்டு காப்பவன் கட்டுரைத் திட்டதே……… *
கொண்டுபாத்தனக் கொண்டல்வண்ணனைத் *
தொண்டுகூரப் பணிந்திவைசொல்லுவான்……. *

(இ-ள்.) சகல லோகத்தையும் உண்டாக்கித்திரும்ப ஒளித்துங் கண்டுகாக்கின்ற ஸ்ரீகிருஷ்ணசுவாமி யுபதேசித்தத்தையே சங்கையாகக்கொண்டு அருச்சுனனானவன் அந்த மேகநிறமான ஸ்ரீகிருஷ்ணசுவாமியை அடிமை சிறக்கவணங்கியிது சொல்லுவார். எ-று.

வேதமேமுத னூல்விதியன்றியே……………… … *
காதலானுல கோர்செய்யுங்காரிய ……………… *
மேதமாங்குண மென்றினும்யாதென ……… ……*
வோதமாகடல் வண்ணனுமோதுவான்………*

(இ-ள்.) வேதமேமுதலான சாஸ்திரவிதியல்லாமல் ஆசையினா லேஉலகத்தார் செய்யப்பட்ட கருமமானது குற்றமுறு மூன்றுகு ணத்திலும் எந்தக் குணமென்று கேட்க அலைபள்ள கறுத்த கடல் போலும் நிறமுடைய ஸ்ரீகிருஷ்ணசுவாமியுஞ் சொல்லுவார். எ-று.

(அறுசீரடியாசிரியவிருத்தம்.)

யாவர்க ளாசைப் பாடு மியம்பிடி னியம்பப் பட்ட..... ......*
மூவகைக் குணமு மாகி யல்லது முடிந்து நில்லா..... .........*
மேவுறு மவற்றி னாய வேறுபா டுகளை யெல்லாம் .................*
காவல் தெரியக் கூறக் கேளெனக் கழற லுற்றான் ..........*

(இ-ள்.) எல்லாருடைய ஆசைப்பாடுஞ் சொல்லில் எல்லாஞ் சொல்லப்பட்ட மூன்றுவித குணமாவது அந்த முக் குணத்தையு மல்லாமல் வேறேமுடிந்து நில்லாது மனது பொருந்தி வரப்பட்ட அந்தமூன்று குணத்திலுண்டாகிய வேறுபாடுகளை யெல்லாந் தெ ரியச் சொல்லக்கேள் ராசாவே யென்று சொல்லத் தொடங்கினாரெ ன்றவாறு.— (௩)

(கொச்சகக்கலிப்பா.)

சாத்துவிகர் தேவரையே சரண்புகுவர் தாமதர்கள்............*
காத்தல்புரி வன்பேயும் பூதமுமாய்க் கடைப்பிடிப்ப ... ....*
ரேத்தரிய குணமிவற்றி னிராசதமாங் குணமுடையோர் .... *
காத்தனைய வரக்கரையு மியக்கரையு மடைவார்க ளால்...*

(இ-ள்.) சாத்துவிகம் ராசதம் தாமதமென்று சொல்லப் பட்டகுண மூன்று இந்தக்குணமூன்றில் சாத்துவிகமான குணத்தையு டையவர்கள் தேவர்களைச் சரணமடைவார்கள் தாமதமான குணத் தையுடையவர்கள் தங்களைக்காத்து ரக்ஷிப்பது பேயும் பூதமுமெ ன்று நிச்சயமாகியவைகளை மறவாமற் பூசிப்பார்கள்புகழ அரிதாகி யராசதகுணத்தை யுடையவர்களாபத்த தொன்று ராக்ஷதரையும்ய க்ஷரையுஞ் சரண மடைவார்களென்றவாறு. (௪)

(கலிவிருத்தம்.)

அடங்கிய பொறியினு மறிவு மன்றியே..... .........*
இடம்படு நூல்களி னியல்பு மன்றியே.. ..............*
யுடம்பையு முயிரையு மொறுக்கு மாதவந்.... .... ....*
தொடங்குவ ரசுர யோனிகளிற் றோன்றி னோர்.........*

(இ-ள்.) அஞ்சுபொறிகளு மடங்கின விடத்தி லுண்டாகிற அறிவு மல்லாமலே விரிவுண்டான சாஸ்திரங்களி லுடைய விதியு மல்லாம லேவுடம்பையு முயிரையும் வருத்தப்பட்ட பெரியதவசை த்தொடங் கிச்செய்வார்கள் அசுரயோனிகளிலேபிறந்தவர்களென்றவாறு. (௫)

(அறுசீரடியாசிரியவிருத்தம்.)

உண்பன யார்க்கும் யாரு முறுதவந் தானமென்ன ... ..... .... *
வெண்பட வுரைத்த நான்கு மோரொன்று மூன்றாய்நின்ற *
பண்புறு குணங்கள் மேலே கேளெனப் பற்றும் வீடு ... ... ....... *
நண்பொடு பகையு மில்லான் முறைமையி னவிலலுற்றான் *

(இ-ள்.) எல்லாரும் அடையப்பட்ட ஆகார மியாகந் தானமெ ன்றெண்ணப்படச்சொன்ன நாலும் பண்ணப் பட்ட குணங்க ளா லே ஒவ்வொன்று மூன்றாய்நின்றது அவைகளென்றுசஞ்சாரமுமெ ய்தூற முற்றவும் பகையு மில்லாத கிருஷ்ணசுவாமி ஆகார முதலாகச் சொன்ன முறையினாலே சொல்லத்தொடங்கினா ரென்றவாறு. (௬)

சத்துவ குணத்தா ருவப்ப துரைத்திடி லழகு சார்ந்த ............ *
தித்தித்த சுவையவா கித்தேகஞ்சிக் கெனவு சேர்ந்த ...... .... *
வத்தித்த வலிநோ யின்மை யறிவுநல் லாயுவின்பம் .... .... ...*
வத்திக்கச் செய்த வித்த வுணவுகண் மடங்க லன்னாய்..... .... *

(இ-ள்,) சிங்கத்தையொப்பான அருச்சுனா சாத்துவிக குண முடையவர்களுடையஆகாரத்தைச்சொல்லில் அழகுடையதாகித்தித் திருசியுடையதாகி யுடம்புசிக் கெனவு சேர்ந்ததாகிச் செம்மையான தாகி வயிற்றுநோயில்லாத ஆரோக்கியம் அறிவுநல்ல ஆயிசு சுகம் இவைகள் அதிகமாகச்செய்த இந்தஆகாரங்கள் தான்சாத்துவிகபோ சன மென்றவாறு. ஃ தேகஞ்சிக்கெனவாவது - பெலம். (௭)

இப்படியன்றிவேறு மிராசத ருணவு கேட்கிற் ....... ............ *
கைப்பன புளிப்புவாய்ப்புக் கார்ப்பன கடிய வெவ்வு .......*
நெய்ப்படயி னெருப்புப்போலச் சுடுவன விவற்றினாலே ...... .... *
மெய்ப்பயி னோயினெஞ்சத் திடும்பையும் விளைவவேலோய் *

(இ-ள்.) வேலாயுதத்தைத்தரித்த அருச்சுனா! இந்தப்படியல் லாமல் வேறான இராசத குணத்தாருடைய ஆகாரத்தைக் கேட்கிற

கசக்கிறது புளிக்கிறது உப்பு கரிக்கிறது உறைக்கிறது நெய்வார்த்த கடுமையுடையநெருப்புப்போலச் சுடுவது இவை தானராசதகுணத் தாருடைய ஆகாரமிந்த ஆகாரத்தினாலே உடம்பிலே பழக்கப் பட்ட வியாதியு மனதிலே துக்கமு முண்டாவ தென்றவாறு. (௮)

ஆசினை யடைந்த நெஞ்சிற் றாமதருணவு கேட்கில் ........*
ஊசின பழஞ்சோ றெச்சி லும்பர்பூ சனைக்கா காத ......... *
வேசின வெந்தி லாத வினையன வியற்றி னாலே ....... ....... *
காசின முதலா யுள்ள துயரெலாம் விளைவு கண்டாய் .... ....*

(இ-ள்.) குற்றத்தையடைந்த மனதையுடைய தாமதகுணத் தோருடைய ஆகாரத்தைக் கேட்கில் ஊசிய பழஞ்சோறு எச்சில் தேவர்களுடைய பூசைக்காகாதது நிந்தித்தது வெந்த தில்லா தது இவைகள் தாமதருடைய போசன மிதனாலே காயப்பட்ட கோபமு தலாயுள்ள துக்கமெல்லா முண்டாவன கண்டா யருச்சுனா வென்ற வாறு.— (௯)

செயத தகுவன் வென்றல்லாற் சோபயன் சிந்தியாதே......*
நயக்க நூன் முறைசெய்யாகஞ் சாத்துவீ கனசெய்யாகம்..... *
பயத்தையே வேண்டி யாதல் பலர்புகழ் வேண்டி யாத ......*
வியற்றுறு கின்றயாக மிராசத ரியாக மாமே.............. ......... *

(இ-ள்.) செய்யத்தக்க கடனென்று செய்வ தல்லாமல் அதனு லவருகிற பிரயோ சனத்தை இசையாக நினையாமலே மந்திர திர வியகிரியைகள் குறையாமல் விளங்கச் சாஸ்திரத்தில் விதித்தபடி செய்யப்பட்ட யாகமானது சாத்துவிக குண முடையவன் செய்கி றயாகமென்று சொல்லப்படும் பிரயோ சனத்தையே வேண்டி யா குதல் பலரும்புகழ வேண்டியாகுதல் செய்யப்பட்ட யாகம ராசத குணமுடையவன் செய்கிறயாகமா மென்றவாறு. (௰)

நூற்படு நெறியுமன்றி நுனித்தவர் முதலா யுள்ளோர்..... .... *
தாற்பரி யமுய்வே றன்றித் தக்க மந்திரமு மன்றி..... .... .....*
யேற்பவர்க் கீதலன்றி யியற் றுறு கின்ற யாகந்.................. *
தாீப்பொலி கின்ற மார்ப தாமத ரியாகமாமே.....................*

(இ-ள்.) சாஸ்திரத்தி லுண்டாகிய வழியுமல்லாமல்கூர்மையா னதவமுமுடையவர் முதலாகவுள்ள பெரியோர்களுடைய தாற்பரிய முமல்லாமற் செய்கிறதற்குத்தக்க மந்திரமு மல்லாமல்யாசகருக் குக்கொடுக்கிறது மல்லாமற் செய்கிற யாகமானது பூமாலைவிளங்கு கின்றமார்பையுடைய அருச்சுனா தாமதகளியாகமென்றவாறு. (௰௧)

(கலிவிருத்தம்.)

தீக்குலா வேலினாய் தவத்தின் செய்கை தான் ......... ..... *
வாக்கினாற் பேசுதல் மனத்தி னுக்குத ..................... *
லாக்கையா லியற்றுத லா யிருப்பது ......... .............. *
நோக்கினை னிவற்றினை நுணித்துக் கூறவே ......... ....... *

(இ-ள்.) நெருப்புக் குலாவப்பட்ட வேலையுடையஅருச்சுனா! தவசி னுடைய செய்கையானது வாக்கினாலே பேசுதல் மனதினாலேயு ண்டாக்குதல் சரீரத்தினாலே செய்தல் என்று மூன்று விதமாயி ருப்பதுஇந்தத்தபசைதானறிந்துக்கூர்மையாக்கிச்சொல்ல நீகே ளென்றவாறு. (௰௨)

(இதுவுங்கலிவிருத்தம்.)

தீர்த்த யார்க்குஞ் செவிக்கினி தாயின ......... ......... *
வார்த்தைமாமருந் தேயென லாவென ........... ......... *
வோர்த்து மென்மொழி கூறுத லோதுதல் ............... *
வார்த்தை யாற்பண்ணு மாதவ மென்பதே ......... .... *

(இ-ள்.) சந்தேகந் தீர்த்தது எல்லாருக்குங் காதுக்கு இன் பமானது வார்த்தையே பெருமையுள்ள அமிர்த சஞ்சீவி நீயென் றுசொல்ல லாவது வேதசாஸ்திரம் அப்பியாசிக்கிற மேலானசொல் லைச்சொல்லுகிறது வேதசாஸ்திரங்களையோதுகிறது இப்படி யிருக் கிறது வார்த்தையாற் பண்ணப்பட்ட பெரிய தவ மென்றதென்ற வாறு.— (௰௩)

தெளிவுநெஞ்சைச் செறியப் பிணித் தலுங் ..... ..... ..... *
களிசெயைப் புலனைக் களி மாற்றலுங் ................... *
குளிர்வுநெஞ்சி னுணர்வு கோணமையு.............. ..... *
மெளிறினை மானத மாதவ மெனபதே......... ......... *

(இ-ள்.) மனதை விஷயங்களாகிய மபக்க மடை யாமல்

ஞானமாகிய தெளிவு நெருங்கக் கட்டுதலுங் களிப்புச் செய்யப்பட்டபஞ்சேந்திரியங்களைக் களிப்புப்போகலும் பகைஞரென்றும் உறவினரொன்றும் பாராமல் எல்லாரிடத்திலுஞ் சமமாகவைத்த குளிர்ச்சியும் மனதிலும் வார்த்தைகள் சொடாதமவுனமு மிவைகள் எளிதிலுலேவந்த பெரியமானச தபசென்றசொல்தன்றவாறு. ✱ மனசிலேதெளிவைநெருங்கக்கட்டினால் மயக்கத்துக்கு நுழையவுமிடமில்லை யாதலால் நிர்மலமென்பது களிப்பைப்போக்கலே யிந்திரியஞ்செடமானதென்பது எளிதிலென்றது காயக் கிலேசப் படுத்தாமல் எளிதில்வந்ததென்பது. (௰௪)

தலைமையந்தணர் தேவர்குரவர்பால்...... .... ........ ✱
மலைதலின்றி வழிபடுவாழ்க்கையுங் ................... ✱
கொலைதுறத்தலுங் காமங்குறைத்தலுந்................ ✱
தலைவகாயத் தவமென்றிசைப்பதே ........ ......... ........ ✱

(இ-ள்.) இராஜாவே முதன்மையையுடையபிராமணர்கள் தேவர்கள் பெரியவர்கள் இவர்களிடத்தில் மாறுபட்டு எதிர்ப்ப தில்லாமற் பூசிக்கின்றவாழ்வுங் கொல்லுகின்றதைவிடுகின்றதும் ஆசையைக்கொடுக்கின்றதும்இவைகளைச்சரீரதபசென்றும் சொல்லுவதென்றவாறு.— (௰௫)

(கொச்சகக்கலிப்பா.)

தீத்துவளும்வடிவேலாய் செப்பியவிம்மூன்றுளும்.....✱
தீர்த்துலகமகிழ்வெய்தச் செய்கின்றநெடுந்தவத்தி ....✱
லார்த்துவருபயன்வேண்டாதராற்றுகின்றவருந்தவந்தான்
சாத்துவிகத்தவமென்று சாற்றுவதுதக்கோரே... .... ✱

(இ-ள்.) நெருப்பைப்போலத் துவளப்பட்ட நீண்டவேலையுடைய அருச்சுனா! இப்போதுசொன்ன இந்தமனவாக்குகாயமென்றமூன்றுளுங் குற்றந்தீர்த்து உலகத்தார்மகிழ்ச்சியையடையச்செய்யப்பட்ட பெரியதவசிலேகட்டுப்பட்டு வரப்பட்டபிரயோசனத்தைஇச்சியாமற் செய்கின்ற அரியதவத்தைத்தான் சாத்துவிகத் தவமென்றுபெரியோர்கள் சொல்லுவதென்றவாறு. (௰௬)

வசையிரவமுடையரான மானிடர்கொண்டாடுகைக்கு ... ...✱
நசையிலெடுபொருள்பெறவுஞ் செய்கின்றநற்றவத்தை.....✱

விசையவுனக்குரைசெய்தேன் மிகப்பெரியோர்செய்திடினு. *
மிசையவறிமற்றிதனை யிராசதமாந்தவமென்றே .... ......... *

(இ-ள்.) அருச்சுனா குற்றமில்லாத தவசுடையவ னென்று மனி
தர்கொண்டாடுகின்றதற்கும் ஆசையுடனே திரவியம்பெறவுஞ்செய்
கின்ற நல்ல தவத்தை யுனக்கு விரித்துச் சொல்லி என்ன பிரயோச
னம் மெத்தவும் பெரியோரானவர்கள் செய்தாலும் இந்தத்தவத்தை
இராசதகுணதவமென் றுஉன்மனதுபொருந்த அறிவாயென்றவாறு.

பேதமையைமிகவுடைத்தாய்த் தன்னுயிர்க்கும்பிறவுயிர்க்கு.... *
மேதமுறுபெருந்துயருங் கேடுமேயியற்றுவதா... ......... ......... *
யாதபமும்பிணியுமுழன் றுற்றுகின்றவருந்தவந்தான் ......... *
தாதலருநெடுமுடியாய் தாமதமாந்தவங்காணே ......... ......... *

(இ-ள்.) பூந்தாதுகளுதிர மலர்ந்தமாலையைத்தரித்த நீண்டகிரீ
டமுடைய அருச்சுனா மிகுந்த அறியாமையை யுடைய தாய்த் தன்
னுயிர்க்கும் அன்னியசீவனுக்குங் குற்றமுள்ளபெரிய துக்கமுங்கே
டுஞ்செய்வதாய் வெய்யலிலும் வியாதியிலும் உழன்று செய்கின்ற
அரியதவமானது தான்கண்டாய தாமததவமாவதென்றவாறு.(௰௮)

முன்செய்காரியப்பொருட்டு மன்றியேமுடிந்திதனுற்.....*
பின்பொருநற்பயன்விளைக்குமென்பதுவும்பேணுதே ......*
நன்குடைநற்காலத்தே நல்லிடத்தேநல்லவர்க்குந்........ *
தன்பொருளைக்கொடுக்குமது சாத்துவிகத்தானமே ...... ...*

(இ-ள்.) முன்பொருவன் செய்த காரிய நிமித்தமல்லாமலேமு
டிந்தவிதனாலேபின்பு ஒருநல்லபிரயோசனத்தைவிளைக்குமென்கின்
றஆசையுமதியாமலே நன்மையுடைய காலத்திலே நல்லவிடத்திலே
நல்லவர்களுக்குத் தன்னுடைய திரவியத்தைக் கொடுக்கின்றது சாத்
துவிகத் தானமென்றவாறு. ❊ நல்லவிடமாவது- தேசம்நல்லவர்க
ளாவது-பாத்திரம்-தன்பொருளென்கின்றது - குலாசாரத்தால்வந்த
திரவியமென்றும்- அல்லாமலும் தன்னிடத்தி லிருந்த அன்னியனு
டைமையைக் கொடுக்கலாகாதென்றுமாம் ஆகையால் முன் பெற்ற
உபகார நிமித்தமும் பின் பலனையிச்சித்துஞ் செய்யாமல் தேசகால
பாத்திரமறிந்து தன்பொருளைக் கொடுக்கவேண்டுமென்பது.(௰௯)

கொண்டுசெயத்தருங்கரும மெனுங்குறிப்பொன்றின்றியே..*

பண்டுசிலர்செய்தற்காய்ப் பரிவினொடுபண்ணினவும் ... ....*
உண்டிதனுன்மேல்விளைவென் றுணர்வோடிக்கொடுத்தனவு*
மெண்டிசையுநிறைபுகழா யிராசதமாந்தானமே .... ........ *

(இ-ள்;) உபகாரங்கொண்டு செய்யத் தக்கது காரிய மென்று சொல்லப்பட்ட நினைப்பொன்றில்லாமலே முன் னாளிலே சிலபேர் செய்த உபகாரத்துக்காக அன்படனேபண்ணின சேர்வையும் இப் போதுகொடுக்கின்றவிதனுல்இனி மேற்பலனுண்டென் றுநினைவோடிக்கொடுத்ததுவும் எட்டுத்திக்குநிறைந்த கீர்த்தியையுடைய அருச்சுனு, இராசததானமா மென்றவாறு. (௨௰)

வாயாததொருபொருளை வழங்காதகாலத்தே ........ *
யேயாதநிலத்திடையே யிழிந்தகுலத்தவர்களுக்கே ... .*
யாயாதவறிவினொடு மப்பிரியத்தொடுங்கொடுத்தல் ... .*
சாயாதபெருந்திறலாய் தாமதமாந்தானமே........ *

(இ-ள்.)யாராலுஞ் சாயாதபெரிய திரமையையுடையஅருச்சுனு கிடையாததொரு செல்வத்தைக் கொடுக் காத காலத்திலே இசையாத நிலத்திலே யின்குலத்தவர்க்கு விசாரியாத அறிவுடனேபிரியமில்லாத உதாசினத்தோடுங் கொடுக்கின்றதானந் தாமத தானம் என்றவாறு. * கிடையாத திரவியமாவது வார்த்தை வருமென்று பொய்சொல்லி அவைகளை நீ வாங்கிக்கொள்ளென்றல்- ஆயாதவறிவுமூடம். (௨௧)

(எழுசீரடியாசிரியவிருத்தம்.)

ஒப்பரிதாய வுண்டியோடியாக முறுதவத்தானமென் றுரைத்த, வப்படியெல்லா மறிவகையுனக்கு முரைத்தனனடையமற்றையா, வெப்படியாகு மிவற்றினைச்செய்தால்வீடுபெற் றுயாநெறியாவ, தெப்படியென்னி லதனையு முனக்குத் தெரிவகையியம்புவன் கேணீ ... ............ *

(இ-ள்.) ஒப்பில்லாத ஆகாரத்தோடு யாகம்உறுதியானதவந்தானம் என்றுசொன்ன அந்தநாலுவித சுபாவமெல்லாம்அறிகின்றபடிக்கு உனக்குஞ்சொன்னேன் இவைகளெல்லாம் எப்படியாகும் இவைகளைச்செய்தால் மோக்ஷம்பெற் றுயர்ந்த வழியாவதெப்படியென்னில். அதனையு முனக்குத் தெரியும்படி சொல்லுவேன் நீ கேளப்பா வென்றவாறு. (௨௨)

ஓமென்கின்றதனியெழுத்துமுரைத்தற்கரியதற்பதமுந்...... .....*
தமங்கமழ்தார் மார்பமற்சத்தென்கின்றதனிப்பதமு......... ...*
மாமென்கின்றவிவைமூன் றுமறிவின்பெற்றியிவற்றாலே......... *
ய முன்புணருமருமறையோ ரியாகத்தோன்றிற்றெனவறிவாய்....*

(இ-ள்.) ஓமென்று சொல்லுகின்ற தனியெழுத்தும் சொல்லுதற்கரிதான தத்து வென்கின்ற சொல்லும் இதற்கு மேல் சத்தென்றுசெல்லுகின்ற தனிச்சொல்லும் ஆமென்றுசொல்லுகின்றஇவை மூன்றும் அறிவினுடைய சுபாவம் ஒளியும்- மணமுமுடைய பூமாலைதரித்தமார்பையுடைய அருச்சுனா, இந்தமூன்றினாலே நாம் முன்பு அறியப்பட்ட வோதவரியவேத பாராயணனான பிராமண னுடைய யாகத்திலே பொருந்திற்றென் றறிவாயென்றவாறு. ※பதமாவது-சொல். (௨௫)

ஓமென்றுரைத்தே வினைசெய்வார் வீடுற்றவர்வீடுறுமவர்க .... *
டாமுன்புரைத்ததற்பதத்தை யுரைத்தேசெய்வார்சத்தென்றே .... *
யாமென்றிருந்தேவினையாகு மிவைமற்றழகாயினவெல்லாம் ....... *
காமபலத்தின்மேலின்றிச் செய்வாரறிஞர்கதிர்வேலோய் .... ... ...*

(இ-ள்.) பிரகாசமுள்ள வேலைத்தரித்தஅருச்சுனா ! மோக்ஷப்பெற்றபிரமம் ஞானிகள் ஓமென்று பிரணவத்தைச்சொல்லியே கருமத்தைச் செய்வார்கள் மோக்ஷத்தைப் பெறுகிறவர்கள் தாங்கள்முன்பு சொன்ன தத்தென்று சொல்லியே கருமத்தைச் செய்வார்கள். சத்தென்று சொல்லியே நாமென்றிருந்த கருமமாகும் இது அழகானது எல்லாம் விஷய பலத்தின்மேலில்லாமற் கருமத்தை யறிவுடையவர்கள் செய்வார்களென்றவாறு. ※ ஓம்-ஆவது பிரம சொரூபமத்தாவது அதென்றுபேர் அதுவென்றந்தப் பிரமத்தையே சொன்னது -சத்தென்றது-நல்லதென்று பேர்உலகத்தாரும் நல்ல காரியம்பண்ணினவனைச் சற்கருமம் பண்ணினானென்பார்கள். ஆகையாற்சற்குணமே பிரதானமென்பது கருத்து அல்லாது செய்தால் அசத்தாமென் றருத்தாபத்தி. (௨௬)

(அறுசீரடியாசிரியவிருத்தம்.)

காதலாவிந்தப் பதங்கண்மூன் றினையுங் கற்றுணர்ந் தவ
ரெலாங் கருத்தா-லோதலாம்வகையா லுரைத்தலாற்றவ
முந் தானமுமுதலிய வுயர்ந்தா - ராதலா லிந்தப் பதந்

த்னேவிரும்பி வினைசெய்த தருவதென் றளித்தான்- தீதி
லா துலகந் தன்னுளே யுதித்த தேவகி திரு வயிற் றுதித்
தான்.................................................*

(இ-ள்.) ஆசையினாலேயிந்த ஓமதத்து சத்தென்றசொல்லுகள் மூன்றையுங் கற்றறிந்த பெரியவர்களெல்லாங் கருத்தினாலேயோதலாகும் படியானவாக்கினாலே சொல்லுதலினாலே தவசுந் தானமுமுதலானவைகளாலேமேலானோர்கள் ஆதலால் இந்தமூன்றுசொல்லையும் இச்சித்துக் கருமத்தைச் செய்யத்தக்கதென்றருளிச் செய்தார் தீங்கில்லாம லுலகமானது தன்னுக்குள்ளே பிறக்கத் தாம் இந்தவுலகத்திலுள்ளவர்களி லொரு தேவகியினுடையதிருவயிற்றிலேதிருவவதாரஞ் செய்தருளிய கிருஷ்ணசுவாமி யென்றவாறு. (உரு)

சிரத்தாத்திரயவிபாகயோக - அத்தியாயம் - முற்றும்.
ஆ-அத்தியாம்-ம்எ-இ கூடியசெய்யுள்(சாஅச.)

பதினெட்டாவது.

# சகலஉபநிஷித்துப்பிரதிபந்தனமோட்சயோக- அத்தியாயம்.

(கலிவிருத்தம்.)

ஏகமே கருதுவா ரிதயமே விளைவதோர் .... ....... .....*
யோகமே யுலகிலோர் பொருவிலா மொருவனே ......*
நாகமே யமளியாய் நளினமே மாலவதோர்........ ....*
மேகமே பணியெறு விசையன்மேல் வினவுவான்.......*

(இ-ள்.) ஒன்றான பிரமத்தையே தியானிக்கிறவர்களுடைய இருதயத்திலே விளையாடப்பட்ட ஒப்பில்லாத யோகமோ வுலகத்திலுள்ளோர்களில் ஒப்பில்லாதகர்த்தனே சேஷனாகிய பாய்பேசயன மா

கிய தாமரைகளே மலரப்பட்ட தொரு நீலமேகத்தை யொப்பானவ ரோ அனுக்கிரகம் பண்ணுமென்று சொல்லி அருச்சுனன்மேற் கேட் கின்று மென்றவாறு. (க)

(இதுவுங்கலிவிருத்தம்.)

சன்னியாச மாவதுந் தகுந்தியாக மாவது..........*
மென்னியாய மாகவெம்பி ரானியம்பு சென்னவே......*
மன்னிவாயு வானமாகி மண்ணு நீரு மாகியோன் .... *
றன்னியா பொருட் டொகைத் திறஞ்சொலத் தொட
ங்கினான்.........................................*

(இ-ள்.) நீர்சொன்ன சத்தினுடைய நியாயமான சன்னியாசமாவ தும் அதற்குத் தக்க தியாக மாவதும் எந்த நியாயமாக இருக்கும் எங்கள் சுவாமியே சொல்லுமென்ன ஆகாசம் வாயு அக்கினியாகி யப்பு நீரு மண்ணுமாகி நின்ற கிருஷ்ணசுவாமி பழைய நியமமுள் ள பொருளினுடைய தொகையின் வகையைச் சொல்லத் தொடங்கினா ரென்றவாறு. (உ)

காமமென் றிரும்பயன்செய் கன்மமான யாவையுந்...*
தாமடங்க வேயிருத்தல் சன்னியாச மாவதுந்..........*
சேமமின்றி யேவினைப்பயன்களான யாவையுந் ......*
தீமையென் றறத்துடைத் திருத்தறியாக மாவதே.....*

(இ-ள்.) இந்தப்பிரபஞ்சத்தில் இச்சைபொருந்தியபிரயோ சனத்தைச் செய்யப்பட்ட கருமமானது சகலமு மடங்கத் தாம்மேய கமாக இருக்கிறது சன்னியாசமாவது இன்ப மில்லாமலே கருமப லன்களானவை சகலமும் பொல்லாதென்று அறத்துடைத் திருக்கிற து தியாகமாவ தென்றவாறு. (ங)

தீங்கியற்று கின்றதீ வினைத் திறங்கள் போலவே..... ....*
யீங்கியற்று நல்வினைத் திறங்களான யாவையு ......*
மாங்கியற்ற லின்றிவிட் டிருத்தலே யுருத்தமாஞ் ....*
சாங்கியத்தை யோகிடுந் தவத்துளோ ருரைப்பரால்...*

(இ-ள்.) தியாகமாவதும் பொல்லாங்கு செய்கிறபாவவிதங் களை விட்டாற்போலவே இங்கேசெய்யப்பட்ட புண்ணிய விதங்களா ன சகல கருமமுஞ் செய்வதில்லாமல் விட்டிருத்தலே தியாகமென்று

அர்த்தமாகப்பட்ட சாங்கியத்தைச் சொல்லாநின்ற தவகை யுடைய
வர்கள் சொல்லுவார்க ளென்றவாறு. (௪)

ஞானகா ரணங்களாத லியாக மோடு நற்றவ ...........*
தானமோடி கர்த் தலத்த காமைகூறு வாருளர் ..... ....*
ரானகார ணத்தினு லறிந்தடங்கி னர்க்கலா... ........*
லீனமா மிவற்றை விட் டிருத்தலென் றிருத்தலே......*

(இ-ள்.) ஞானத்துக்குக் காரணங்களாகையால் யாகத் துடனே
நல்ல தபசு தான மிவைகளை விடுகிறதைத் தகா தென்று சொல்லு
வார்களுண்டு யாகந் தவந்தானமென்ற விவைகளை விட்டிருக்கிறதெ
ன்றிருத்தல் இவைகளாலே ஞானமுண்டான காரணத்தினுலிதையறி
ந்து அடங்கினவர்களுக் கல்லாமல் அறியாதவர்களுக்கு விடக்கூடா
தென்றவாறு. (௫)

(கலிவிருத்தம்.)

தியாகமூன்று வகைப் படுஞ் செப்பக் கேள்..................*
யாகமுந் தவந் தானமு மென் றிவை .........................*
மய லறுக்கு மனத் தினை யாத லா.......................... ...*
லயர் வுரைத்தல் விடுகை யடாத தால்.......................*

(இ-ள்.) இந்தத்தியாக மூன்றுவிதப்படும் அதுசொலலக்கே
ள் அருச்சுன ! யாகமுந் தவமுந் தானமுமென்ற விந்தக்கருமமான
வை மனதிலுள்ள மயக்கத்தை யறுக்குமாகையால் விடுதலென்று
சொல்லுதல் மறந்துசொல்லுதல் ஆகையால் இந்தக்கருமத்தைவிடு
வது அடாத தென்றவாறு. (௬)

என்ன செய்வ தெனி லிவ் வினைக ளாற்..................*
பின்னை யெய்து பெரும் பய னுவது ........................*
தன்னை விட்டுச செய்த தகு மென்பது .......................*
முன்னை யோர்க்கு மெனக்கு முடிவ தோர்.............*

(இ-ள்.)இந்தக்கருமமானது ஞானகாரணமாகையால் விடப்
ப்படா தாகில் மேலதிக மாவது என்ன செய்வ தென்று கேட்கில்
இந்தக் கருமங்களாலே பிறகுண்டாகப்பட்ட பெரியதான பிரயோசன
மாவதை இச்சியாமல் விட்டுக் கருமத்தைச் செய்யத் தகு மென்று

சொல்லுகின்ற பண்டிதர்களான பெரியவர்களுக்கும் எனக்குஞ் சந்தேகந்தீர்ந்த நிச்சயமென்றவாறு. (௭)

நித்தியகாரிய நெறியின் வினை யினை ......... *
மத்தர்போல வொருவன் மயக்கினாற் ......... *
பித்தனாய் விடு கின்றதைப் பெற்றியைச் ......... *
சித்த தாமத் தியாகமென் கின்றனர் ......... *

(இ-ள்.) சித்தியைக் கொடுக்கின்ற அழியாத நித்திய மாகிய விதியினையுடைய கருமத்தை உன்மத்தனைப்போல ஒருவன் மயக்கத்தினாலே பித்தனாய்விடுகிற அந்தத்தியாகத்தைத் தாமசத்தியாக மென்று சொல்லுவதென்றவாறு. (௮)

மெய் வருத்த முண்டென்று விடு வதுக் ......... *
கைய மில்லை யிராசத் திய க பாங் ......... *
கைவரும் பல மாசைகை மாறவே ......... *
செய்வ செய்வது சத்துவத் தியாகமே ......... *

(இ-ள்.) இப்படி ஞானகாரணமென்று கருமம்பண்ணும் போது சரீரவருத்தமுண்டென்று விடப்பட்ட அந்தத்தியாகத்துக்குச் சந்தேகமில்லை அது ராஜசத்தியாகமாகும் செய்த கருமத்துக்குக் கையில இருக்கின்ற பலனில்லாமைக்கைவிடவே செய்யவேண்டியது செய்வதென்றிருக்கில் அவ்வ ஞானகாரணமான சாத்துவிகத்தியாகமென்வாறு

பரதிண்மாட்டினு மையமொன் றின்றியே ......... *
நீதின் ஞானியுந் தியாகியுமானவன் ......... *
கோதிலின்பமுந் துன்பமுங்கூர்வினை ......... *
மீதில்வேண்டல்வேண் டாமையும்விடுமால் ......... *

(இ-ள்.) எந்தத்தத்துவத்தி னிடத்திலும் சந்தேகமொன்றில்லாமல் தெளிந்த குற்றமில்லாத ஞானியுந் தியாகியுமான ஒருவனுக்குக் குற்றமில்லாத சுகமுங்குற்றமுமுள்ள துக்கமுஞ் சிறக்கக்கொடுக்கப்பட்ட கருமத்தின்மேலே ஆசையும் வெறுப்புங்கெடுமென்றவாறு, சுகங்கொடுக்கின்ற கருமமாவது-புண்ணியமான நல்வினை துக்கங்கொடுக்கின்ற கருமமாவது-பாவமான தீவினை வேண்டலாவது-விருப்பு வேண்டாமையாவது- வெறுப்புவேண்டுதல் வேண்டாமை யில்

லாதவனாகவே நானே அவன் அவனேநான் ஆகையாலே அவனேபிரமமென்பது கருத்து. (௰)

யாக்கையோடு மிசைபுமிருவினை ……………… *
நீக்கலாவன வல்லநிலத்திடை ……………… *
வீக்கமாய வினைப்பயன்வீட்டினார் ……………… *
போக்கலவினை யாவையும் போக்கினார் ……… *

(இ-ள்) உலகத்தினிடத்திலே சரீரத்தோடும் பொருந்தி நல்வினை தீவினையென்றிரண்டாகவிருந்த கருமத்தைச் சரீரமிருக்கையில் விலக்கலாவதல்ல ஆகையாலே வளர்ந்தகாமிய கரும பலனைப்போக்கினவர்களே திரிமூர்த்தி முதலானவர்களாலும் போக்குதற்கு ஆகாத கருமமெல்லாவற்றையும் போக்கினவர்களென்றவாறு. இவையேகருமத்தியாகமென்பது. (௰௧)

(அறுசீரடியாசிரியவிருத்தம்.)

இன்னாதனவு மினியனவு மிரண்டுங்கூடி யிசைந்தவுமாய் ……… *
முன்னுநின்றவினை மூன்று மவற்றால்வந்த முடிபொருளும் ……… *
பொன்னுனதுவுந்தொழிலும் போலிருக்கு மந்தப்பொய்ம்மெய்யை *
யுன்னுதவர்க்கேயுள்ளதிவை யுணர்ந்தார்க்குளவா யுறுவாவல் …,*

(இ-ள்) ஆகாததான அநிஷ்டமும் இனியதான இஷ்டமும் அவையிரண்டுங் கூடி இசைந்ததாகிய மிசிரமுமாகிநிலைக்கப்பட்டகருமமும் அந்த மூன்று கருமத்தாலும்வந்த அவ்வவற்றுக்கு முடிந்தபொருளானது அநிஷ்ட கருமத்துக்கு நரகமும் இஷ்டகருமத்துக்குச் சொர்க்கமும் மிசிரகருமத்துக்குப் பாரியாபுத்திராதி சம்பத்தும் பொன்னுந் தொழிற்பட்ட பூஷணமும்போல விருக்கும் அந்தப் பொய்யாகிய மெய்யைநினைத்து விசாரித்து இது மெய்போலக்கண்ட பொய்யென்றறியாதவர்களுக்கே இந்தக்கருமபலமான நரகசொர்க்கசம்பத்தாதிப அனுபவமுள்ளது இதுகானற்சலம்போலக்கண்டு பொய்யென்று தெளிந்தவர்களுக்கு உண்டாய்த் தோன்றுதென்றவாறு. (௰௨)

ஓங்கியவுலகினி லுயர்ந்த நன்மையைத் ……… *
தீங்கினையாய்வினை யாவுஞ்செய்தற்குச் ……… *

சாங்கியநூலிலே சமைந்தசாதன ............... .... ❋
மீங்குளவைந்தவை யெடுத்துக்கூறுவாம் .........❋

(இ-ள்.) உன்னதமான உலகத்திலே வுயர்ந்ததான நன்மையைத்தன்மையை யுண்டாக்கப் பட்ட கருமமெல்லாஞ் செய்வதற்குச் சாங்கிய சாஸ்திரத்திலே உண்டான சாதனம்அஞ்சுண்டுஅந்தச்சாதனமான காரணத்தை இப்போது எடுத்துச் சொல்லுவோம். எ-று, ❋ ஈங்கவை யெடுத்துக் கூறுவாமெனவும் ஐந்துளவெனவுமாறுக.

இருப்பிடமாமுடம் பியற்றுமாருயிர்க் ............ ❋
கருத்தினைமுதலிய கரணங்காற்றினால் .... ........ ❋
விருப்பொடுவருந்தொழிலிவற்றின்மெய்த்தொழி
கருத்தமாமொழியென வாகவைந்தரோ ......[ற்

(இ-ள்.) ஆதரவாவது-ஆகாரமானவுடம்பு- நடத்தப்பட்டசீவன்-மனதுமுதலான அந்தக்கரணம்- பிராணுபானுதி - வாயுக்களினுலே ஆசையுடனே வரப்பட்டதொழில்-இந்தவுடம்பு-சீவன்-கரணந்தொழிலென்ற- நாலினுடைய உண்மைத் தொழிலுக்கு அருத்தமாகப்பட்ட சோதியான தெய்வமென்பதொன்று முன்சொன்னநாலினுடனே தெய்வமொன்றுகூட ஆக-அஞ்சென்றவாறு. (யஅ)

வாக்கினுலாதன்மெய் மனத்தினுலாகுத.......... ❋
லாக்கையாலாதலிவ் வுலகில்யாவரும் ...... ...... . ❋
வீக்குவார்சிலையினுய்வினையிரண்டிலொன்......❋
ருக்குநாளிங்கிவை யைந்தும்வேண்டுமால்...... ❋

(இ-ள்.) வாரா விறுகக் கட்டின வில்லையுடைய அருச்சுனவாக்குமனங்காயத்தாலாகுதல்இவ்வுலகில் எல்லாரும்நல்வினை தீவினை இரண்டிலொன்று செய்யும்போது இப்போது சொன்ன இந்தவுடம்புசீவன் கரணந் தொழில் தெய்வமென்ற அஞ்சும் வேண்டும்.—எ-று,

இவ்வகையேவரு வினையிரண்டையு ....... ....... ❋
மெய்வகையேயயா னன்றிவ்விலைச்... ............ ❋
செய்வகையானெனச் சிந்தைமேயினு.......... ❋
னுய்வகைவேறிலா னுணர்வுமாய்ந்துளான் .....❋

(இ-ள்.) இந்தப்படியே வரப்பட்டகருமமிரண்டையுமெய்

பானபடி பொருந்தினவனையல்லாமல் வேறில்லை இந்தக்காருமத்தை ச்செய்யப்பட்ட விதத்தையுடையவனும் நானென்றுமனதிலே அக ங்கார மடைந்தவனே அந்தஅகங்காரமே கெதியலலாமல் வேறேத ப்பிப்பிழைக்கின்ற வகையில்லாதவன் அறிவு கெட்டவன்.—எ-று.

(அறுசீரடியாசிரியவிருத்தம்.)

யாவனொருவன்றன் னுடைமை யானென்றருக தமியல்பொழிந்தா *
னியாவனொருவன் கரணங்களிபாவிதான் றும்பவினைந்திரா ...... *
னியாவனவனிவ்வுலகத்தை யடையக்கொன்றானெயிடினும் ...... *
பாவமில்லையவன்கொன்ற பழியுமில்லைப்பார்மன்னா ... ........ .... *

(இ-ள்.) எவனாகிலும் ஒருவன் தன்னுடைய சரீரத்தைநானெ ன்றிருக்கப்பட்ட சுபாவத்தை யொழிந்தானோ அவன் எவனாகிலும் ஒருவன் அந்தக்கரணங்களானவைஏதாகிலும்ஒருவிஷயங்களினிச் சையாக விரானோ அவனெவனோ அவனிந்த உலகத்தாரை எல்லாங் கொன்றானாகிலும் பாவமு மில்லை அவன்கொன்றபழியுமில்லைக்கண் டாய்ராசாவேயென்றவாறு※பாவமும்பழியுமில்லையெனவே அவன் செய்தகருமம் விதிப்படிமுடிந்ததாயிற்று. (௰௭)

அறிவுமறியப்படும்பொருளு மறிவானொருவன்றானுமாய் .... .... *
நெறியில்வினைகள்விதிக்கின்ற விதியினிலைமைநிற்பதுதான் .... .... *
செறியுந்தொழிலுஞ்செய்வானுஞ் செய்தற்குரியவறிவுமாங் ........ *
குறியில்வினைகண் முடிப்பதுவு மின்னஞ்சிலவுங்கூறக்கேள் ........ *

(இ-ள்.) எல்லாவற்றையு மறிகின்ற அறிவும் அந்த அறிவினாலறி யப்படுகின்றபொருளும் இவைகளிரண்டையு மறிகின்றவனும் ஆகி க்கருமத்தினாலேகருமத்தைவிதிக்கின்ற விதியினுடையநிலைமையெ டாமல் நிற்பது அதுதானெருங்கிய கருமமும் கருமத்தைச்செய்கி ன்றவனும் அந்தக்கருமத்தைச் செய்வதற்கு உரித்தான அறிவுமெ ன்று மூன்றாகப்பட்ட குறியிலே கருமங்கள் முடிந்திருப்பது இன் னஞ்சில சொல்லக்கேள் அருச்சுனா! என்றவாறு. (௰௮)

ஆன்றவறிவுங்கருமமுமக் கருமங்களையாக்கிடுவானும் .......... ........ *
மூன்றவுணரும்புத்தியொடு திருத்தியெனவே றுரைத்தனவுந் ...*
தோன்றவினையுமின்பமுமுன் சொன்னகுணத்தின்றொடர்பாலே *
மூன்றுவகையாமோரொன்றே யவற்றின்றிறதான் மொழியக்கேள். *

(இ-ள்.) நிறைந்த அறிவாகிய ஞானமும் அந்த ஞானத்தினுற் செய்கின்ற கருமமும் அந்தக்கருமங்களைச் செய்கின்றவனுமென்ற மூன்றையு மூர்த்தியாக அவை யறியப்பட்ட புத்தியுடனே இருத்தி யென்று மேலே சொன்ன பிரியமுங் கண்காண வுண்டாக்கப்பட்ட சுகமுமாக ஞானங்-கருமங்-கர்த்தன்-பத்தி-தயிரியம்- சுகமென்றஆறுமொவ்வொன்றே முன்சொன்ன முக்குணத்தொடர்ச்சியினாலேமூன்றுவிதமாம் அவைகளினுடைய விதத்தைநான்சொல்லக்கேள் அருஞுவென்றவாறு. (௰௯)

நன்றாய்ஞானத் திரளாகி நானாவிதமாய் விரித்தெங்கும் ...... .... *
பொன்றுநின்ற பூதங்க டோறும் பொன்றாப் பொருளாகி ........ *
யொவ்வொருநிற்ப தொன்றினையப் படியேபுணரு முணர்வதனை.. ...*
யன்று மென்னூர்சாத்துவிக ஞானமெனவே யமைப்பர்களால்...*

(இ-ள்.) நன்றாகி ஞானத்திரளாகிப் பலவிதமா யெங்கும் வியாபித்து அழியப்பட்ட சகலபூதங்களிலும் அழியாத பொருளாகி ஏகமாகி நிற்பதாகிய ஆத்மாவான வொன்றை அப்படியே யறிகிற அறிவைச்சாத்துவிகஞானமென்றே விதிப்பார்கள் அல்லவென்று சொல்லா ரென்றவாறு. (௨௰)

ஊனப்படு மிவ்வுடறோறு முள்ள பொருளை யுணராதே............*
ஈனயபடக்காண் கின்றவிரா சதமா ஞானமே யாகு.. .... ......*
ஞானத்திரளாய் நின்றவதயோ ருடம்பி லிடையு நாட்டிடையோர்*
தானத்திடையு மடங்கக்காண் பதுதா மதமா ஞானமே... ......*

(இ-ள்.) நாசமாகிற குற்றமுண்டாகிய இந்தச்சரீரங்கடோறு முள்ள ஆத்மாவையொன்றை யென்றறியாமலே பிராமணாதி வர்ண பேதங்களிலும் பிரமசாரியாதியா சிரமபேதங்களிலும் பேதப்பட விருக்கிறதாக எண்ணி யினமுண்டாகக் காணுகிற ஞான மிராசதமானஞானமேயாகும் ஞானம் திரண்டதாகியபூரணமாகி நித்தியமாகிநின்ற ஆத்மாவை யோருடம்பி னிடத்திலும் நாட்டிலொருதலத்தினிடத்திலுமடங்க மற்றவிடங்க ளெல்லாம் பாழாகக்காண்பதுதாமதமாகிய ஞான மென்றவாறு. ❊ ஆத்மாவாவது பிரமம்இந்தஆத்மாவை வர்ணசிரம பேதங்களிலும் பேதமாக இருக்கிறதாக நினைத்தஞ்ஞானிக்கங்களாலே பல மீனுதிக்கமாமென்று ஆதிக்கமாக வரு

கிற பலனை இச்சித்து வர்ணாசிரமங்க ளிலாதிக்கமுள்ள வர்ணாசிரமகருமம் அனுஷ்டானம் பண்ணுகிறதிலுமேலே இனமாகக் காணுகிற விராசதஞான மென்றார் இப்பால் தாமத குணத்துக்கு ஒருடம்புஒருகாணமுமென்றது சகல நவலோகங்களாம்லேபண்ணின விக்கிரகங்களே ஒருடம்பு நாட்டிலொருதானமாவது மலை நதி குளம் மரம் இவை முதலான வனேகதானங்கள் இவைகளை விசிகில் வெருவர்ம். (உக)

(அறுசீரடியாசிரியவிருத்தம்.)

வீதலும் பற்று மேலா வினைபயன் வேண்டல் வேண்டாக்.... ✻
காய்தலொன் றின்றிச்செய்யுங் கருபஞ்சாத்துவிக் கன்ம... ✻
மாய்தரும் பலத்தி னோடும் வருங்கர ணத்தி னோடு..... ........✻
மேய்தருங் கருமமெல்லா மிராசத கரும மேயாம்.......... ✻

(இ-ள்.) சாகிறதுஞ் சமுசாரத்திலே கட்டுப் படுகிறதும் வேவத்தக்கதாககருமபலனை ஆசைப்படுதலும்வெறுப்பாய்கோபித்தலுமிவற்றிலொன் றுமல்லாமற்செய்யப்பட்டகன்மஞ்சாத்துவிகக்கன்மம் அந்தக்கருமத்தா லுண்டாய் அழியப்பட்ட பலத்துடனும் அந்தப்பலத்தி லிச்சையாய்ப் பொருந்தி வரப்பட்ட அந்தக் கரணத்துடனுங் கூடி யிசைந்து செய்யப்பட்ட கருமமெல்லாம் இராசத கருமமே யாகு மென்றவாறு. (உஉ)

கொலைபெரும் பற்று மேலோர் கூறிய நீதி யோடுங்.... ...✻
கலைதெரிந் துணர்ந்து மென்மை கடைப்பிடியாமை யார்க்கு✻
மலைதருங் கேடுசூழ்த லனைத்தினு மொன்றிச்செய்யத்........ ✻
தலைவருங் கரும மெல்லாந் தாமத கரும மேயால்............ ✻

(இ-ள்.) கொல்லுகிறது பேராசையாகிய கட்டு பெரியவர்கள் சொன்ன நீதியோடுஞ் சாஸ்திரத்தையோதித் தெளிந்துமேலானகாரியத்தை மறவாதகடைகைப் பிடியாமல் எவர்களுக்கும் அலையச்செய்யப்பட்ட கேடுமூட்டச்செய்கிறது முதலான பொல்லாதகருமமெல்லா வற்றிலும் மனது ஒற்றுமை யாகச்செய்ய அதுவே மூர்த்தினதாக வரப்பட்ட காரியமெல்லாந் தாமத கரும மென்றவாறு. (உங)

பற்றுமாங் காரந்தானும் பழுதறத் துறந்தி யாவு............✻
முற்றெழு முயற்சியோடு நிலையினோ டோயு மொன்றி... .. ✻

பெற்றமோ ரிழிவுபெற்றி துன்பமோ டின்பமென்றுஞ் *
சற்றுமோர் சலிப்பிலாத தலைவன்சாத்துவிக னென்பான்...*

(இ-ள்.) கருமபலத்தி லிச்சையு மாங்காரமுங் கெட எல்லாம்வி ட்டுத்தன்னிடத்தி லிருந்தெழும்புகின்ற வுச்சாகத்தோடும் நிலையோ டும் சனமுமொரு மித்து யாதாகிலு மொரு போக்கு வரத்தன ன்றலாப நஷ்டங்கள் துக்கம் அவற்றுடனே சுகமென்ற விவைமுத லாகியன வந்தாலென் லறக்கும் சற்றாகிலு மொருசலிப்பில்லாத கர்த்தன் சாத்துவிக னென்று சொல்லப்படுவ னென்றவாறு. (உ௪)

(கலிவிருத்தம்.)

வினைப் பயன்றனை வேண்டலும் வேட்கையு... ....... *
மெனைத்துமி யார்க்குமி டாமையுந் தூய்மையு......*
நினைப்பி னீடலு நெஞ்சின் மகிழ்தலு.... ..... ..... ..... *
பினைப்ப வாழ்பவ ரிராசத மாந்தரே..................*

(இ-ள்.) செய்கிற கருமத்தின்பலனை யிச்சித்தலும் சகலசுகமுந் தனக்கே வேணுமென்கின்ற ஆசையு மெவ்வளவாகிலும் யாருக்குங் கொடாத லோபமுஞ் சுற்றமும் பலசித்தியா கிறதற்கு முன்னே நினைக்கிற நினைப்பிலே ஆமோ ஆகாதோ வென்று அனேக நீளமகா நினைக்கிறதும் பலசித்தியான பேர்க்கு மனதிலே சந்தோஷிப்பிக்கிற தும் இந்தவிதமாக வாழ்கிறமனிதர் இராசதமனிதரென்றவாறு. (உ௫)

மனமொருக்கலும் வான்கலை நூல்களைத் ............. .... *
தனமொருக்கொடு கற்றலுந் தக்கவ....................... .... .... *
சினமகிழ்ந்தலு மின்றியுண் டாக்கிய........ ........ ....... ....... *
சினம்விடுக்கிலார் தாமதஞ் சேர்ந்துளார்........ ......*

(இ-ள்.) மன்துபலவழி போடாமற் கொடுக்கிறதும் பெரு மையுள்ள கலைசாஸ்திரங்களை த்திரவிய செலவுபண்ணிக் கொண்டாகி லும் கற்கிறதும் பெரியவர்களின் கூட்டத்தைச் சந்தோஷிப்பிக்கிற துமல்லாமல் உண்டாக்கின கோபத்தை விடமாட்டாதவர்கள் தாம தகுணஞ்சேர்த்தவர்களென்றவாறு. (உ௬)

ஈன மற்ற துற வற மில்லற.................................. ......*
ஞானம் பெற்றொரு நல்வினை தீவினை .................. *

யான தஞ்சுவ தஞ்சத் தகா தென............... *
தானறிந் தது சத்துவ புத்தியே...................*

(இ-ள்.) ஒருகாரியத்தை நினைக்கிறபோது இது குற்றமற்ற து றவறமோ இல்லறமோ ஞானமோ பந்தமோ இதுபுண்ணியமோபா பமோவென் றுவிசாரித்தாலது இது சாஸ்திர விதி யல்லாததினலே பயப்படுவது இது சாஸ்திரவிதியாகையாற் பயப்படத்தக்கதல்லவெ ன்றுதான்நிச்சயமாகவறிந்ததுசாத்து விகபுத்தியென் றவாறு.(உஎ)

தரும்ம பாவந் தனக்குச் செய்த தகும்................... *
கருமஞ் செய்யத் தகாத கரு மங்க......................... *
ஏருமை யாவறி யாத வறி வரோ.............................*
விருமை யாயவி ராசத புத்தியே......................*

(இ-ள்.) தர்மம் பாவந்தனக்குச் செய்யத்தக்ககாரியஞ் செ ய்யத்தகாத காரியங்கள் இவைகளை யருமையினு லறியாதஅறிவுசாத் துவிகதாமதமானவிரண்டுவிதமுங் கலந்ததாகிய இராசதபுத்தியெ ன்றவாறு. ❀ தனக்கென்று அவரவருக்கு விதித்த குலாசாரப்ப டியே தனக்குச் செய்யத்தக்க தென்றார். (உஅ)

பாவ மாகத் தருமத்தைப் பார்க் கினு.................... *
மாவ தாமென் றடாதது நோக் கலுந்...................... *
தீமை செய்கின்ற சிந்தனை தீங் கிலே ........................ *
போவ தாவது தாமத புத்தியே...........................*

(இ-ள்.)தருமத்தைப் பாவமாகப் பார்க்கிறது மடாதபாவத்தைஅ வ்தாணதருமமாகப் பார்க்கிறதும்பொல்லாதைச் செய்கின்ற மன துபொல்லாதிலே போவதாகியது தாமதபுத்தி என்றவாறு. (உகூ)

மனஞ்செயுந் தொழின் மன் னுயி ரின்றொழி........*
வினஞ்செய் திந்தியஞ் செய்தொழி லென்றிவை.......*
கனஞ்செய் தேறினுங் கண்டுபொறுத் தலுஞ்.........*
சினஞ் செயாமையுஞ் சாத்துவ திருத்தியே...... ...*

(இ-ள்.) மனதுசெய்கிறதொழில் நிலையான பிராண வாயுவி னு டையதொழில் அஞ்சென்று கூட்டஞ்செய்த இந்திரியங்கள் செய்கி

ன்றதொழிலென்று சொல்லப்பட்ட கருமங்கள் கனமாகச் செய்து அதிகமானாலும் அவைகளை வெவ்வேறாகக்கண்டுபொறுமையுங்கோ பமுஞ்செய் யாத பொறு மையுஞ் சாத்து விகத் தயிரிய மென் றவாறு.— (௫௰)

பண்ணிக் காமத் தருபய னைக் கொள்வா.................*
னெண்ணித் தாங்குந் திருத்தியி ராசதங்.................*
கண்ணித் சோகங்க ளிப் பறக் கம் பய.................*
நண்ணித் தாங்குந் தமப யொறை நாளுமே.................*

(இ-ள்.) கருமத்தைப் பண்ணி யந்த இச்சையானதுரப்ப ட்டபலனைக் கைக்கொள்ளவேண்டி நினைத்து மனதுபிராண வாய்வு இந்திரியமிவைகளுடைய தொழிலைத்தாங்குகின்ற திருத்தியானதுஇ ச்சை தயிரியம் தய்ரியம் பொறுமைதிருத்தி யிவை மூன்றுமொன்று இப்பால் விசாரிக்கிற சுகம் மதம் நித்திரைபயமிவைகளுண்டாகிறவி ஷயங்களை இச்சித்து மனது பிராணவாய்வு இந்திரியங்களில்தொ ழிலைக் கூடித்தினந்தினமுந் தாங்கப்பட்ட தயிரியந் தாமத தயிரிய மென்றவாறு. (௫௧)

துன்ப மாவது பொன்று முடக் கற.................*
வின்பமாகி வினைவிடை யா வர்க்கு.................*
மன்ப வாரமு தேயென லாவ தா.................*
மென்ப சாத்து விதத் தரு மின்பமே.................*

(இ-ள்.) தோழர்கேள் ஒருசுகத்தைமுதல் பழகுகையில்துன்பமா வதை யொப்பாகி யிருந்து பழக்கந்தீர்ந்தபிறகுசகல கருமத்தூடக் கும் அறத்தக்கதாகச் சுகமாகிவிளைகிற விடத்திலே யெல்லாருக்குங் கிடையாத அமிர்தமென்று சொல்லலாவ தாகு மென்பது சாத்து விகங்கொடுக்கிற சுக மென்றவாறு. (௫௨)

பொருத்த மாம்புல னோடு பொறி யிலே.................*
யருத்த மாயெழுந் தாரமு தென்ன லாய்.................*
விருத்த மாய் விளைந் தாவிட மாகியே.................*
யிருத்த லாகுமி ராசத வின்ப மே.................*

(இ-ள்.) இந்திரியங்களுடனே பொருத்த மாகிய விஷயந்

ளிலே விசுவாசமா யெழுந்தால், அமிர்தமென்று சொல்லாகி வெறுப்பா யெழுந்தால் விஷயமாகியிருக்கிறது இராசத சுகமாகுமென்றவாறு. (௬௩)

தடருறக்க மயக்கொடு சோம்பு மேற் ......... *
படவுதித் தவை பண்ணும் பொழு தினுங் ....... *
கடன் விளைத்து முடிந்த காலத் தினு ....... *
மிடர் விளைப் பது தாமத வின்ப மே ........... *

(இ-ள்.) எந்நாளுந் தொடர்ந்து வருகிற நித்திரை மயக்கம் அதனுடைய சோம்பு இது அதிகப்படவுண்டாகி அவைகள் செய்யும்போது அது முறைமையாக வுண்டாக்கி முடிந்த போதும் ஆத்மஞான சுகம் பிறக்கவொட்டாமல் துக்கத்தை யுண்டாக்குவது தாமதசுக மென்றவாறு. (௬௪)

(அறுசீரடியாசிரியவிருத்தம்.)

இந்த வியற்கை யினு லிக்குணங் களை விட்டவ ரில்
லை-அந்தணர்க்கும் வணிகர்க்கு மரசருக்குஞ் சூத்
திரர்க்குந்-தந்தமியற்கையினுய்குணமூன்றின்றன்
மையினுல் - வந்தவினைத்திற மவற்றையுணர்த்தக்க
கேண்முடிமன்னு.............................. *

(இ-ள்.) இந்தச்சுபாவத்தினலே இந்தக் குணங்களை விட்டவர்களில்லை பிராமணருக்கும் ராசாக்களுக்கும் வைசியருக்குஞ் சூத்திரர்க்குந் தங்கள் தங்கள் சுபாவத்தினலாகிய மூன்றுகுணத்தினுடைய சுபாவத்தினலே வந்த கருமவிதங்கள் அவைகளை யுனக்குத் தெரியச்சொல்லக்கேள் கிரீடந்தரித்த ராஜாவே யென்றவாறு. (௬௫)

(கலிவிருத்தம்.)

களைசெயைம் புலன்களைக் காண நான்குடன் ............ *
றுறைதுறை யடக்கலுந் தவமுந் தாய்மையும் ...... ...... *
பொறையொடு கல்வியும் பொருந்து ஞானமு ......... *
மறையவர் தொழி லென வழுத்த வேண்டுமே.... ..... ..... *

(இ-ள்.) குற்றத்தைச்செய்கிற பஞ்சேந்திரியங்களை அந்தக்

கரணநாலுடனே அவைஅவைகளை அந்தந்தத்துறைகளிலும் அடக்கிறதும் தேகமும் போகங்களை விட்டதயசும் சாஸ்திரவிதியாசாரமான சவுசாதிசுத்தமும் படித்தவர்களிடத்தில் விகாரமில்லாத பொறுமையும் அவற்றுடனே பரத்துவத்தையறிகிறகல்வியும் வேதசாஸ்திரார்த்தமும் பரதத்துவநிச்சயமும்பொருந்தின ஞானமும்பிராமணர்களின்கருமமென்று சொல்லவேணு மென்றவாறு. (௬௪)

தலைமையுங் கொடையொடு தறுகணாண்மையும் ........ *
நிலைமையுங் கீழ்ப்படா நெஞ்சினிட்டமுங் ........... *
கொலையயில் போர்களில் புறங்கொடாமையுஞ் ...... *
சிலைமலி தோளினு யரசர் செய்கையே ............ ......... *

(இ-ள்.) வில்லுச்சண்டைமிகுந்ததோளையுடையஅருச்சுனா கர்த்தத்துவமுந் தானமும் அதினுடனே ஆக்கிரமான ஆண்மையுஞ்சலியாத நிலைமையான தயிரியமுங் கீழ்மைப்படாத மனதுடையமேன்மையுங் கொல்லுகிறதைச் செய்யப்பட்ட சண்டைகளிலே ஓடாமலெதிர்நடக்கிறதும் அரசர்கள்தொழிலென்றவாறு. (௬௭)

உழுதொழில் பசுக்களை யோம்பல் வாணியம் ............ *
வழுவறச் செய்கைதொல் வணிகர்வாழ்க்கையாம் ........ *
பழுதற விவர்களைப் பாது காத்தலே ........ ..... .... *
விழுமிய தொழில்கள் வேளாளர்க் கென்பதே...... ... *

(இ-ள்.) உழவுதொழில் பசுக்களைக் காக்கிறது வாணிபம் குற்றமறச்செய்கிறது இவைகள் பழமையான வைசியருடைய தொழிலாகும் இந்தமூவரையுங் குற்றமற விடைவிடாமல் காக்கிறது மேலாகிய வேர்த்தொழில்கள் செய்கிறது இந்தத்தொழில்கள்சூத்திரரான வேளாளருக்கென்று சொல்வதென்றவாறு. (௬௮)

(கலிவிருத்தம்.)

நீராவகைதஞ் செயலேசெயவே................ *
நாராயணனு முதனாயகனுக் ........ ... ........... *
காராதனையா மதனாலவரே ........... . ........ *
வாராவழியா மவரமேதருமால்................. .. *

(இ-ள்,) இந்தநாலுவருணத்தாருந் தங்கள்தங்களின் தொழிலையேசெய்யவே அவைநாராயணனாகிய தலைமையான கர்த்தனுக்குப்

ஞானசயாம் அதனாலே அந்தநாராயணனோ இவர்கள் திரும்பவாராத வழியாகிய மோக்ஷமாகப்பட்ட வரத்தைத் தருவானென்றவாறு. ❋ அன்னியவருணாசாரத்தைச்செய்தவர்கள் நரகில்விழுவரென்பதற்கு திருஷ்டாந்தம்.— (௩௯)

அல்லாவினைதா னழகாவரினும்.................. *
செல்லார்பெரியோ ரவைசெய்வதனிற் .... *
றொல்லாகுலமே தொடருந்தொழிலே ..... *
பொல்லாவெனினுஞ் செயலேபொருளே. *

(இ-ள்.) சுத்தமல்லாத அன்னிய வருணத்தாருடைய தொழில் நன்றாய்வந்தாலும் பெரியோர்கள் தங்கள்கருமங்களைவிட்டு அன்னிய கருமங்களிலே போகார்கள் அன்னியவருணத்தாருடைய கருமம் நல்லதென்று அந்தக்கருமத்தைச் செய்வதிலும் பழைய தானதங்களுடைய குலத்துக்கு அன்று முதலாகத் தொடர்ந்த தொழில் பொல்லாதானாலுந் தங்களுடைய குலாசாரஞ் செய்கின்றதே நல்லதிரவிய மென்றவாறு. (௪௰)

(அறுசீரடியாசிரியவிருத்தம்)

கனையெரிபுகையோடன்றிக் காணமுன்படாமைபோல.... *
வினைகளுங்குற்றந்தன்னை விட்டிராதாதலாலே.................. *
யனையதென்றிகழ்தலாகா வடுத்தகாரியங்கடம்மை......... *
நினைவருந்தருமமென்றே செய்கையேநீதியெல்லாம்....... *

(இ-ள்.) சுத்தமுடைய நெருப்புப் புகையுடனேகாண்பதல்லாமல் புகையில்லாமல் நெருப்பைமாத்திரங்காண்பதற்கு எதிர்ப்படாதது போலக் கருமங்களுங் குற்றத்தைவிட்டுநிர்மலமாயிராது ஆனையாலே அப்படிக் குற்றமுடையதென்று செய்யாமல் வெறுத்துவிடுவதாகாது தங்கள் தங்கள் குலத்துக்கு அடுத்த கருமங்களை நினைக்கப்படாத பிரமமாகியதருமமென்று எல்லாஞ் செய்வதேவிதி — எ-று. ❋ எல்லாமென்பனேனென்னில். ஒருகுலத்துக்கு விதித்த கருமம் அனேகத்தில் வெகுகருமம் நல்லதா யிருக்குஞ் சிலகருமங் குற்றம் போலத்தோன்றும் அந்தகுற்றமாகக்கண்டத்தை விடாமலெல்லாஞ் செய்வதேநியமமென்றறிதியாவது-சிருஷ்டிக்குமுன் நியமமானது

(அறுசீரடியாசிரியவிருத்தம்.)

வெல்லப்பட்டமனத்தினாலும் வேறொன்றினையும்வேண்டாதே.....*

யல்லற்பற் றுமுடற்பற் றுமறவேயறுத்தான்வினையாவுஞ் ......*
செல்லச்செல்லவெறுத்தவனுயதனும்சித்தமுடிவாகச் ..........*
சொல்லப்பட்டகரணங்க ணான்குந்தூய்தாய்விடுமன்றே......*

(இ-ள்.) கெலிக்கப்பட்ட மனசையுடையவனாய் என்னைத்தவிர வேறொன்றையும் இச்சைப்படாமல் துக்கத்தொடர்ச்சியான ஆசைப்பற்றுந்தேகத்தொடர்ச்சியான ஆசைப்பற்றும்ஒருக்காலு மில்லாமலறவேவெறுத்தவனாய்கருமங்களெல்லாம்நடக்க நடக்கஅந்தக்கருமபலன்களைவெறுத்தவனாய் அதினாலே மனமுதலாகச் சித்த முடிவாகச்சொல்லப்பட்ட நாலுகரணங்களுஞ் சுத்தபவுத்திரமாகிவிடுவன் என்றவாறு.— (௪௨)

சொன்னகரணமவைநான்குந் தூய்தாய்விடுமத்தூய்மையினா.....*
லுன்னலறியாப்பெரும்பொறையை யுடையனாகுமப்பொறையா *
லின்னல்செய்யும் பொறியைந்து மிராகத்துவேடமெனுமிரண்டு..*
மன்னதன்னை நலியாம லாற்றுமதனை மாற்றினான் ..........*

(இ-ள்.) என்னைத்தவிரவேறொன்றையும்இச்சியாமலறவிட்டால்மனம்-புத்தி-யாங்காரஞ்-சித்தமென்றுசொன்னகரணமானநாலும்நிருமலமாகிவிடும் அந்தந்தக் கரணசுத்தியினாலே நினைக்கவறியாத பெரியபொறுமையாகிய தயிரியத்தை யுடையவனாகும் அந்தப்பொறுமையினாலே துக்கத்தைச்செய்யப்பட்ட அஞ்சுவிஷயமும் விருப்புவெறுப்பென்றவிரண்டும் அந்தவேழுந் தன்னை வருத்தாமல் அவைகள்செய்யப்பட்டதொழிலைப்போக்கினவனென்றவாறு.※ராகமாவது-ஆசை-துவேஷமாவது-பிணக்கு-தூய்தாயமென்றுமற்றூயுதாய்விடுமென்றது நிருமலமாய்முன்னிருந்தமலம்விடுமென்பது.

காடுமலையுமலைமுழையுங் கடுநாமுதலைநலிவில்லா.........*
வோடும்புனலாற்றுள்ளிட்ட விடமேயுறையுளாக்கொண்டு ..*
தேடும்பொருளொன்றின்றியே சிறிதேபுண்டுசென்றேங்கு..*
மாடுமனவாய்மொழியாக்கை யடக்கப்பெறுமாலவனேயல் *

(இ-ள்.) காடும் மலையும் முழையுங் கடினமான நாக்கையுடைய முதலையினாலே வருத்தமில்லாத ஓடப்பட்டசலத்தையுடைய ஆறுகளுள்ளிட்டவிடமேயிருக்கின்ற விடமாக விருந்துகொண்டு தேடப்பட்ட பண்டமொன்றுமில்லாமலே கொஞ்சமாக ஆகாரம்பு

ணியெங்குந்திரிந்துகூத்தாடப்பட்டமனசு-வாய்-வசனஞ் சரீரமிந்தமூன்று கரணங்களையுமடக்கப் பெறுவானந்தநிறு மலமென்றவாறு. ஃ கடுமா முதலைநலிவில்லாவென் றுபாடமாயிற்கொடியமிருகமுதலான உபத்திரவமில்லாத காடு என்றுரைப்பது. (௪௪)

சொன்னவிவையோவடங்கிட்டவே தோன்றுகளிப்புங்காமமுமுன் *
பென்னதியானென்கின்றதுவு மெரிபோல்வெகுளியுமவலியு...*
முன்னறவிரந்துசாந்திபெறுஞ் சாந்திபெறவேயோரிடத்தும்... *
பின்னமடையாதொன்றாகி நின்றபொருளின்பேருருவாய்...... *

(இ-ள்.) மனம்-வாக்கு-காயமென்றுசொன்ன இந்தத்திரிவித கரணங்களும் அடங்கிப்போகவே முன்னமேயுண்டாக்கப்பட்டகெருவமும் ஆசையும், என தென் கின்ற சுதந்திரமும், நான் கருத்தனென்கின்ற ஆங்காரமும், நெருப்பையொப்பானகோபமும்,இவைகளுடனேபலமும்இவைகளைநினைப்பது விட்டுச்சாந்திபெறுவன அந்தச்சாந்தியைப்பெறவே ஓரிடத்திலும்பின்னமாகவிடைவிடாமல் பூரணமான வேகமாகிச் சலியாமல் நின்ற பிரமத்தினுடைய பெரிய சொரூபனுவனென்றவாறு. (௪௫)

அந்தவுருவானவன் பின்னை யாதேவரினு மழிவுறா...... ... *
னிந்தவுலகத்துயிர்க்கெல்லாமொத்தேயிருக்குமிங்கவனும் .*
பந்தமற விட்டென்னையு மறிபத்தி பெறுமப் பத்தியினாற்... *
சிந்தையிடையே யென்னைத்தெளியு மதனாலென்னையே சேருமால்*

(இ-ள்.) அந்தப்பிரம சொரூபமானவன் பிறகு என்ன வந்தாலும் அதில் இச்சையாய்க்கெடான் இந்தப் பிரபஞ்சத்திலுள்ள ஜீவனுக்கெல்லாம் இவனுஞ்சமனாயிருப்பன் பாசபந்தமறவிட்டென்னையு மறியப்பட்ட பத்திபெறுவன் அந்த பத்தியினாலே மனதினிடத்திலே என்னைத்தெளிவான் அந்தத்தெளிவினாலே என்னையே சேருவானென்றவாறு. (௪௬)

என்னைப்பற்றிக்கொண்டிறவே யெல்லாவினையுமியற்றினுற்...... *
பின்னைப்பிறவாப்பெரும்பதமென் னருளினாலேபெறுங்கண்டாய்*
நின்னைத்தொடரும்வினையெல்லா மென்னைந்நினைந்தேசெயின்வினைக.
டன்னைக்கடற்றற்கருந் துன்ப மெல்லாங்கடக்கத்தகுதியால்........ *

(இ-ள்.) உறுதியாகவென்னை இச்சித்துக்கொண்டு எல்லாக்கருமத்தையுஞ் செய்தாற் பிறகு பிறவாதபெரிய மோக்ஷத்தை என்னுடைய கிருபையினாலேபெறுவனைகண்டாய் அருச்சுனா ஆகையால் உன்னைத்தொடரப்பட்ட கருமத்தை எல்லாமென்னையே நினைத்துச்செய்தால் அந்தவினைகளை அவைகளால்வரப்பட்ட கடக்கிறசற் கரிதானதுக்கமெல்லாங் கடக்கத்தக்கவனாவாயென்றவாறு. ※ என்னையே நினைப்பதாவது-கருமம்பண்ணுகின்றவனும் பண்ணுவிக்கிறவனும் பதத்தை யடைகிறவனும், நானேயென்றென்னை நினைத்துச்செய்வாயானால் நின்னைத்தொடரும் வினையென்றதனால் நீ வினையைத்தொடா ராதிரும் என்பதுகுறிப்பு. (௬௭)

(அறுசீரடியாசிரியவிருத்தம்.)

ஒன்றியமனத்தினாலே யானுரைக்கின்றவுண்மை...... *
நன்றிதன்றுணராயாகி னாசமேயடையுமற்றி .......... *
தன்றியமரசர்க்கெல்லா மடுத்தகாரியமாயுள்ள ........ *
வென்றியையுடையாயேனும் வேறுநீவினவுங்கேளாய்.. *

(இ-ள்.) ஒருமையானமனதினாலே நான்சொல்லுகின்றஉண்மை இது நல்லதென் றறிந்து கொள்ளாயாகில் நாசத்தையேயடைவாய் இது வல்லாமலும் ராசாக்களுக்கெல்லாம் அடுத்தகாரியமாயிருக்கின்ற வெற்றியை நீயடையா யாகிலும் இனிவேறொன்று வினவுண்டோ அதுசொல்லுகிறேன்கேள் அருச்சுனாவென்றவாறு.

(கலிவிருத்தம்.)

விரைசெய்தார்மன்ன வேண்டலையாயினும் ........... *
கரைசெய்துன்றனைக் காலுறவார்த்திடு................. *
மரசர்தங்குண மாகியவாண்மையே..................... *
புரைசெய்வாளமர்க் கேபுகுவிக்குமால்.................. *

(இ-ள்.) பரிமளிக்கின்ற மாலையைத்தரித்த ராசாவே நீஎன்சனத்தையுந் தள்ளிச்சண்டையை வேண்டாதவனானாலும் வங்கிஷக்கிரமமாகக் கட்டுப்பட்ட ராசர்களுடைய சுபாவகுணமாகிய ஆண்மையானசேவகமே அஞ்ஞானமென்கின்ற கையினாலே உன்னைச்சேர்த்து நான்சொல்லப்பட்ட பெரியசண்டைக்கே புகுதப் பண்ணும் என்றவாறு. (௬௮)

பொறிகளுண்ணின் றவற்றின்புணர்ப்பெலா... *
மறியவாட்டினன் போலவ ராக்கைகள் .... .. . .... *
வறிதுநின் றுதன் மாயையினுல்வினைக் .... ......... *
குறிசெய்விப்ப னீசனென்றேகொள்வாய் ... .*

(இ-ள்.) சகலசீவன்களுடைய விஷயங்களுக்குள்ளே நின்று அந்தவிஷயங்களுடைய பொருத்தமெல்லாமறிய ஆட்டுகின்றவனைப்போலத் தன்னுடைய மாயையினாலே அவர்களுடைய சரீரங்களானவை விருதாவாகநின்று கருமத்தினுடைய குறிகளைச் செய்யப்பண்ணுகின்றவன் ஈஸ்வரனென்றே யறிந்து கொள்வா யென்றவாறு. ❊ இவைசேவகம் வேண்டா மென்றிருந்தால் ஈஸ்வரனுடைய ஆக்கியாசக்கரந் திரும்பாமல் விடாதென்பதுகருத்து. (ருய)

வேறுபட்டொரு வற்குவிளம்புவ் ........................... *
மாறப்பட்டபொருளின் வகையெலாங் ................ ..*
கூறப்பட்ட துனக்கிக் குறிகளை .............................. .... *
யேறப்பார்த்துனக் கேறியவர்செய்வாய்.............. *

(இ-ள்.) வேறுவசப்பட்ட ஒருவருக்குச்சொல்லாமல்விலக்கப்பட்டரகசியமான பொருளினுடையவகையெல்லாம்உனக்குச்சொல்லப்பட்டது இந்தக் குறிகளை யுனக்கேறப்பார்த்துப் பொருந்தினபடிசெய்வாயென்றவாறு. ❊ ஏறப்பார்த்தலாவது-மனங்கொள்ளவிசாரித்தல். (ருக)

( இதுவுங்கலிவிருத்தம். )

நீதகலாதனவுள்வோ வினவேண்டிலெனத்தேறி...... *
யோதலினானினைத்தலினாலெனைப்போக்கியொன்றறியா
யாதலினாலியாவர்களு மறியாததொருபொருளைக்..... *
காதலினாலுனக்கின்ன முரைக்கின்றேன்கடைப்பிடி நீ..*

(இ-ள்.) இவன்வேண்டினாற் போகாதபொல்லாங்குண்டோவென்று மனதுதேறி ஓதுகிறதினாலும் நினைக்கிறதினாலும் என்னைத் தவிரவேறொன்றை யறியாதாகையினாலே எல்லாருமறியாத ஒருபொருளை ஆசையினாலே இன்னமுனக்குச் சொல்லுகிறேன் அருச்சுனா! மறவாதகடனாகக் கொள்ளுவா யென்றவாறு. (ருஉ)

என்னையேநினைந்தெழுவுன் மனத்தினையென்னிடையேவைத்...... *
தென்னையேநினைந்திருமற் றென்றனக்கேபூசனைசெய்............ *
யென்னையேகுருவாக்கொள் ளுநிசெய்யிலெப்பொழுது....... .... *
மென்னையே வந்தடைவ ரிதுமெய்யென் றுணர்நீயே ...... .... .... *

(இ-ள்.) என்னையே நினைந்தெழுந்து உன்மனதை யென்னிடத்திலேவைத்து என்னையே நினைந்திரு எனக்கேபூசனைசெய் என்னையே குருவாகக் கொள்ளு இதைவேறாகிலுஞ் செய்தாலெப்போதும் வந்து என்னை யே சேருவாய் இது மெய்யென்றறி அருச்சுனா நீ யென்றவாறு, (௬௫)

இருவேறுவகையாய வெவ்வேறுவினைகளையு ........ *
மருவேனென்றறவிட்டு மாயையினுன்மறைப்பரிய..., *
வொருவனையேபற்றுதியேல் பற்றினக்கா லுனைப்பிறவிக்,
கருவேலைக்கரைதேறக் கைதருவேன் கதிர்வேலோய், *

(இ-ள்,) இரண்டுவிதமாய்வேறுபட்டதாகியபலவானவந்தக் கருமங்களையுங்கூடேனென்று அறவிட்டுமாயையினாலேமறைக்க அரிதாகியவேகமானஎன்னையேசரணமடைசரணமடைந்தால்உன்னை யலையப் பண்ணுகின்ற பிறவியினுடையகெர்ப்பவேலைப்பிடிங்கிமோட்சக்கரையிலேற நான்கைகொடுப்பேன் பிரகாசமுள்ள வேலைத்தரித்த அருச்சுனாவென்றவாறு. (௬௬)

மற்றுனக்குச்சொல்லியவிம் மறைப்பொருண்மாதவமிலர்க்கும்.... *
குற்றமறுத்தறிவுறுநுங் குருவழிபாடிலாதவர்க்குஞ் ...... .. ....... *
செற்றமனச்சழக்கினர்க்கு மெனைநினையாத்திறத்தவர்க்கு...., ..... *
மற்றமறத்தெரிந்துரைக்கை யடாதென்றேயறிகண்டாய் ..... ....... *

(இ-ள்.) மற்றப்படி யுனக்குச்சொன்ன இந்த ரகசியப்பொருளைப்பெரியதவமில்லாதவருக்குங் குற்றமான அஞ்ஞானத்தைத்தீர்த்துஞானத்தைக் கொடுக்கப்பட்ட குருவைப் பூசைபண்ணவில்லாதவருக்குங் கோபமுடைய மனசுள்ள பாவிகளுக்கும் என்னை நினையாத காமியகருமிகளுக்குஞ் சமையமறத்தெரிந்து சொல்லுகின்றது ஆகாதென்றறிவாய் கண்டாயருச்சுனா வென்றவாறு. ※ சமைய மாவது அவர்களுடைய குற்றந்தீர்ந்தசமையம். (௬௭)

எல்லாப்பொருட்கும்பரமாமிப் பொருளையென்னன்பர்க்கிசையச்*
சொல்லாற்றெரிவிப்பார்தம்மை யறியச்சொல்லவேண்டுமோ......*
நல்லார்களின்மற்றெனக்கினிய நன்மைசெய்கின்றருமவ........*
ரல்லாதவரிப்பொழுதில்லை மேலுமவருமுளராகார்..................*

(இ-ள்.) எல்லாப் பொருளுக்குமேலான இந்த அருத்தத்தை என்னுடைய பத்தருடைய மனதுக்கிசையச் சொல்லினாலே தெரியப்பண்ணுகிறவர்களை அறியச் சொல்லவேண்டுமோ அருச்சுனா உலகத்திலுள்ள நல்லவர்களிலெனக் கின்பமான நன்மை செய்கிறவர்களும் என்னை அடைகிறவர்களும் அவர்கள் அல்லாதவர்கள் இப்பொழுதெனக்குநல்லவர்களுமல்ல ஆகையால் அவர்கள் இருந்தாலும் இல்லாதவர்கள்இனிமேலும் அவர்களுள்ளவர்களாகார் எப்பொழுதுமில்லாதவர்களேயென்றவாறு, (ருளா)

நாமிருவோம்பேசிய விவ்வறநூலினையே யெடுத்துரைப்ப.... .....*
நாயஞான யோகத்தாலென்னையே யாராதிக்கின்றான்..... ... .......*
மெய்பொருளை தனைவிட்டு விருப்பாலொக்கக்கேட்பானுந்... *
தீயவினைகளறவிட்டுத் தேவருலகஞ் சேருமால்...........................*

(இ-ள்.) நாமிருவரு மிசையப்பேசின இந்தத் தருமசாஸ்திரத்தையே யெடுத்துச் சொல்லுகிறவன் நிறைவேறிய ஞான யோகத்தினாலென்னையே பூசிக்கிறவன் மனதிலே சேர்ந்தபொருளைவிட்டு ஆசையினாலே மனதொத்துக்கொள்ளக் கேட்கிறவனுஞ் சொல்லுகிறவனும் பொல்லாதபாவங்களை அறவிட்டுத் தேவர்களுடைய வுலகத்திலே சேருவார்களென்றவாறு. (ருள)

(கலிவிருத்தம்.)

என்னது மொழியினாலா னியம்பிய ஞானத்தாலே..... ........*
மன்னவ வுனக்குறுவன் மயக்கெலாங் கெட்டதேயான்... ...*
சொன்னவிப் பொருள்க ளெல்லாந் துணிந்தனை கொல்லோ
வென்று - தன்னகை கூறநின்று நாயக னருளிச் செய்தான்..*

(இ-ள்.) என்னுடைய வார்த்தையினாலே நான்சொன்ன ஞானத்தாலே ராஜாவே வுனக்குவலிய அஞ்ஞான மெல்லாம்நாச மாயினவோ நான்சொன்ன இந்த அர்த்தங்க ளெல்லாம் ஏகமனதுடனேகே

ட்டு நம்பி நிச்சயமென்று துணிந்தாயோவென்று நல்லசிரிப்புச் சிறிக்கத்தேரிலே நின்று கர்த்தனாகிய கிருஷ்ணசுவாமி அருளிச்செய்தாரென்றவாறு.— (ருஅ)

(இதுவுங்கலிவிருத்தம்.)

மன்னவவென் மாயமது சூதன்மறை நூலின்......... ... *
முன்னவை மொழிந்ததிரு வாய்மொழிக ளாலே... .... *
என்னகுறை யுண்டினி யுனக்கெண வியம்பத் ... ....... *
தன்னகமகிழ்ந்துயர் தனஞ்சய னுரைப்பான்......... *

(இ-ள்.) இராஜாவே யுனக்கினி யென்ன மயக்கம் இனி என்னகுறை யுண்டென்று பரவாசுதேவனாகிய ஸ்ரீக்ருஷ்ணசுவாமி வேதசாஸ்திரங்களை முன்சொன்ன திருவாய் மலர்ந்தருளின வார்த்தைகளினாலேசொல்லத் தன்மனது சந்தோஷமாகக் கீர்த்தியா னுயர்ந்தஅருச்சுனன் சொல்லுவா யென்றவாறு. (ருகூ)

பையரவி லேயினிது பள்ளியமர் வோனே ... .. ....... *
வையமுமிவ் வையமதின் மன்னுயிர்கள் யாவுஞ்... ... *
செய்வினை யற்றது சிதைத்தலது தானு ... .... ..... .. *
மெய்தெரியி னீமுன்விளை யாடும்வகை யன்றோ...... *

(இ-ள்.) படத்தையுடைய பாம்பிலே சுகமாகப் பள்ளிகொள்ளுகிற சுவாமி பிரபஞ்சமும் இந்தப்பிரபஞ்சத்தில் வாசமானசகலசிவன்களும் உண்டாகச்செய்த தொழிலுள்ளது அழித்தல்இஃதிரண்டும் மெய்யாகத்தெரிந்து பார்க்கில் நீமுன் விளையாடப் பட்டவிநோத மல்லவோ வென்றவாறு. (சு௰)

அணித்தகைய சோதியம லாவுன் னருளாலே .......... ... *
கணித்தலரி தாயபிற விக்கடல் கடந்தேன் .... ........ *
பிணித்தபெரு மாயைமலங் கெட்டது பிரானே...... *
பணித்தபணி யல்லதுசெ யப்படுவ துண்டோ....... *

(இ-ள்.) அழகியசுபாவமான பிரகாசமுள்ள நிர்மலமாகிய சுவாமிஉம்முடைய க்ருபையினாலே கணக்கிடப்படாத பிறவிக்கடல்களைக் கடந்தேன் இந்தப் பிறவிக் கடல்களிலேஎன்னைக்கட்டிவிழப்பண்ணினபெரியமாயையினுடைய விசாலமான துராசமாயிற்று

என்னுடைய கர்த்தனே நீர் கட்டளையிட்ட ஏவலை யல்லாமல் வேறு ஏவல் செயப்படுவது உண்டோ யில்லை என்றவாறு. ❁ பிறவிக்கட லைக்கடக்கவே மோக்ஷக்கரை யேறினேனெனவும் மாயை நாசமாக வே ஞானம்பெற்றேனெனவுஞ் சந்தேகந் தீர்ந்து இருதாரத நா னெனவு மருத்தாபத்தி. (சுக)

வையமுழு துண்டதிரு வாய்மொழி திறந்திட்.......... ❋
டுய்யவடி யேனமு னுரை செய்த வுரையாலே ........ ❋
ஐயமு மகன்றதெனன் வாவுமற விட்டேன் .......... ❋
செய்ததினி யுந்தனரு ளிச்செயல்க ளன்றோ....... ❋

(இ-ள்.) பிரபஞ்ச மெல்லாவற்றையும்பொசித் தருளியதிரு வாய்மொழியைத்திறந்து அடியேன் மாயையை விட்டுத் தப்பிப் பி ழைக்க அடியேன் முன்னே யருளிச்செயத திருவார்த்தையி லுமே சந்தேகம்போயிற்று என்னுடைய சுயமாக விசாரிக்கிற தரும பாவ விசாரணையையுஞ் சுகத்தையுஞ் சுத்தமாக அறவிட்டேன் இனி உம் முடைய அருளிச்செய்த செயல்களே யல்லவோ அடியேன் செய்க து என்றவாறு. ❁ அற்பு மற விட்டேனென்று பாடமோதில் என் னவர்க ளென்றவர்கள் மேல்வைத்த அன்புமற விட்டேனென்பது. கருத்து.— (சுஉ)

(வேறு.)

தோன்றுதனவுந் தோன்றவையுஞ் செய்புந்தொழி னியி
த்தமாய்த திகழுஞ்சூழ் கதிரோன் போலச்-சான்றாகிநின்
றனைததுங் கரணங்கள் செய்யுந்தகைமை களுக் கெல்
லாந் தனிநிமித்தமாகி - வான்றுனெனவோர் வடி வின்
றி யொசதுவரம் பிகழ்க்துநின்று லிம்மன் னுயிர்களெ
ல்லா - மீன்றாலுங் காதசழிததல் செய்தாலு முன்றனிய
ல் பொழு மாறாகாத தெவ்வகையோ யெந்தாய்...... ❋

(இ-ள்.) நினையாததை நினைப்பிக்கிறது சத்த பரிச ரூப ரச கெந்தமென்கின்ற ஐந்து காரியத்துடனே செய்தொழிலென்றுந் தொழில் நிமித்தியமா யெங்கும் பிரகாசிக்குஞ் சூரியனைப் போல சாஜியமாயிருந்து மனம் புத்தி சித்தம் ஆங்கார மென்கின்ற கரண ங்கள் செய்யுங்காரியங் களுக்கெல்லாம் தானிமித்தியமாகிக் கூடிவா

றிறைவனென்றும் ஒருவடிவுமில்லாமல் ஞானயோகத்தினாலேயெ துவுஞ்சேராமல் இருக்கிறவனென்று மன்னுயிர்களை யெல்லாங்கா த்தழித்து உண்டாக்குகின்றதுமுன்னுடையவியல்பினாலேஆகின்றது அல்லாமல் பின்னை யொன்றினாலேயு மாகின்ற தில்லையென்றுசொ ன்னார் அருச்சுன ராசனென்றவாறு. (௬௫)

எரியாய தவனுக்கு வெம்மைதானேவடிவாகியிருந்தாப்
பொலியாது மொன்றுந் - திரியாத மெய்யறிவி னுரு
வாயேதுந் திரியாமையெவ்வடிவாங் காண்பயாவும்-பிரி
யாதுநினைப்பற்றி நின்றுதத்தம் பெருந்தொழில்கள்புரி
கின்றபெற்றிகண்டாற் - கரியானே யுன தடிமைத் திற
மைபூண்டு காதலியாற் கியலாத கருமமுண்டோ......*

(இ-ள்.) அக்கினிக்கு வெம்மையானது வடிவா யிருந்தாற் போலே எதிலேயுஞ் சேராமல் மெய்யறிவி னுருவா யெதுவுந் தெரியாமல் இருக்கிறவடிவானவனே யென்றுங் காணமெல்லாம்பிரியா மலுன்னைத்தியானித்திருந்த பேருக்கு ஊரானவனே யென்றும்பெ ருந்தொழில்கள் செய்கின்றபேருக்கு மரியவனேயென்று முனக்க டிமைபூண்டு பத்திசெய்தபேருக்குநினைத்தகாரியமெல்லாமாகுமெ ன்றுசொன்னார் அருச்சுனராசனென்றவாறு. (௬௬)

நாலுவிதமாங் கரணங்களேது நணுகாத வுருவினாலைந்
ற்புலன்களேனுங்-காணுறுதனிலுழலுங் கரணக்கட்செல்
லாங் காரணமாய் நின்றவர்கள் காண்கின்ற வெல்லாந்-
தானாகும்வகைகாட்டிய கரணத்தோறுந் தனித்தனியேநி
ன்றுதலையளியாநின்ற - யானுனு முன்னையவை யெது
மொன்று மறியாத வகைநிற்ப தெவ்வகைநீ யையா...*

(இ-ள்.) நாலுவித மான வெல்லாஞ்சேர்தருப முண்டான வனேயென்றும் நலன்புலன்களென்கின்ற காட்டிலே யுழலுகின்ற கரணங்களுக் கெல்லாம் கரணமாய்நின்றவனே யென்றும் கரணங் கள்காணுகின்ற தெல்லாந்தானாகின்ற வகைக்காட்டினவனே யென் றும்அந்தக்கரணங்கள்தோறும்பிறம்புபிறம்பா யிருந்து அறி வைத் தாராம லிருந்தாயானா லுன்னைக் கரணங்க ளேது மறியா வென் றும்தேவரீ ரிருக்கின்றவகை இந்தவகை ஐய்யா வென்றுஞ் சொன் னார் அருச்சுனராச னென்றவாறு. (௬௭)

ஆடியினில் வேறுபடத் தோன்றுகின்ற வந்நிழலு முண
ர்வினா லுணர்ந்துபார்க்கிற் - கூடியவந்நிழல்போக்கிவே
றிலாமை குறியாலே நிகழ்ந்தாற்போற் குணங்களாலே-
தேடிய விவ் வுடலோறுந் தோன்றித்தோன்றிச் சீவனாய
த்திகழுகின்றதிகழ்ச்சிதானும்- பாடியவிம்மறைநெறியே
யுணர்ந்துபார்க்கில்நீயல்லாவகையுண்டோபரமயோகி *

(இ-ள்.) கண்ணாடியிலே வேறாய்க் காணுகின்ற நிழலை அறிவினாலே அறிந்து அந்தநிழலைப்போக்கி வேறில்லாமல் குறிப்பினாலே நீ சொன்னஞானமார்க்கப் பிரகாரம் பார்த்தால், மூன்றுவிதகுணத்தினாலே வந்தசகலதேகங்கள் தோறும் பிறந்து சீவனாய்த் திகிற இகழ்ச்சி யெல்லாம் உலகத்திலே யுன்னையல்லாமல்வேறேவகையுண்டோ பரமயோகி யென்றாஞ் சொன்னார் அருச்சுன ராசனென்றவாறு.— (௬௬)

செறிவாகுமாடியிலா திடத்திலாங்கே திகழ்கின்றமுகநீழ
ற்செய்கை தானும் - பிறிவாகிவேறுபடத் தோன்றாதே
மூன் பேசுகின்றமுகமேயாய்ப் பேதமகன் றாப் போ-
னெறிவாழுங்கரணங்க ளெல்லாமெய்த்தா நீயேயா யொ
ழிவின்றி நித்தியாகி - லறிவானு மறி பொருளு மன்றி
யொன்றே யாயிருக்கு மதுவேநின் னியற்கையாதி....*

(இ-ள்.) கண்ணாடியிலேகண்டமுகத்துநிழலுடையசெய்கையைப் பிரிவாய் வேறாகவெண்ணாமல் துலக்கமான கண்ணாடியில்லாதஇடத்திலே இருக்கின்ற முகம்போலப் பேத மில்லாமலும் நெறி வாழ்கின்ற கரணங்களல்லாமலும் போக்கி நீயேயாகி ஒழிவில்லாமல்நித்தியமாயறிகிறவனு மறிந்த பொருளான வஸ்துவும் புறம்பும் இல்லையொன்றாக விருக்கின்றது மதனாலே உன்னுடைய இயற்கையென்றமாதியா யிருக்கின்றவனே யென்று சொன்னார் அருச்சுன ராசனென்றவாறு. (௬௭)

ஆதித்தன்றானொருவ னாகிநின்றே யகரோறுமமர்ந்திருந்
துபுனல்கடோறும், பேதித்துப்பலவாக்கித் தோன்றினா
ற்போற் பிறிதின்றி நீயேயாய்ப் பிணைக்கிறந் தாநின்றே,
வாதித்தமதியாதி கரணந்தோறு மற்றவைபோற் றோன்

றுகின்ற மாயவனேமெய்மை, சோதித்து நின்பெருமை
சொல்லுதற்கு மேலைச்சுருதிகடாம் வல்லவோசெல்லிறந்
தசோதி ......................................................... *

(இ-ள்.) சூரியனானவன் ஒருவனாக இருந்தும்வீடுகள்தோறும் வைத்திருக்கிற குடத்துத்தண்ணீர்கள்தோறும் பேதித்து பலவாய்க்கண்டதுபோலப் பிரபஞ்சமெலெங்கும் நீயாய் சாந்தமடைந்து ஆதித்தனைப்போல் ஏகமாய் சரணங்கள்தோறும் காணுகிறமாயனேயென்று உன்னைச்சோதித்து உன்பெருமையைச் சொல்லுதற்குச் சுருதிகளாலுஞ் சொல்லிமுடியாது சொல்லிறந்த சோதியென்றுஞ் சொன்னார். அருச்சுனராஜனென்றவாறு. (௬௮)

நிலையொன்றிச் சலிப்பின்றியொருவனேயாய் நின்றானு
ம்வானிரவி நிழற்றன்றாலே; யலையொன்றுநீரோடேயலைந்
துமற்றங்கசலமாநீரதனோடசலமாயுந், தலைநின்றுவரு
ம்படிபோல்திவுதோன்று மவற்றுக்குத்தகநிற்குந்தகை
யோவுன்னைக், கலைநின்றமறைதெரிய வல்லவாகக் காட்டு
வதுஞ் சிலர்கண்டாலாவதென்னே ..................... *

(இ-ள்.) நிலையில்லாமலு மசைவில்லாமலும் எங்கும் பரிபூரணமாய் ஒருவகையாயிருந்தும்ஆகாயமெல்லாம் நிறைஞ்சும் நீராய் நீரோட்டமலைசேர்ந்து கலந்து பின்னையுமிந்த புவனமெல்லாம்அழிந்துப்போய் நீர் மேலாகவிருந்தபிறகு சேலுருவாய்உண்டாகியதிலேயும் பொருந்தியிருந்தும் உனக்குத் தடையுண்டோ வென்றும் வேதாகமபுராண சாஸ்திரங்களினாலேயும் உன்னை அறியப்போமோவென்றும் அப்படிக்கொத்த மகிமையைக் கருமமிருளுக்குக் காட்டுகிறதென்ன வென்றும் அவர்களைக்கண்டு ஆகுதென்ன வென்று சொன்னார் அருச்சுனராசனென்றவாறு. (௬௯)

ஒரொன்றுவன்றியே யல்கிலுள்ள வுறுபொருள்க ளனைத்
தினையு மொருகாலத்தே, கிரொன்று நின்றகதி ரிரவிகாட்
டுஞ் செயல்போல்யாவர்களுஞ் செய்வினைகளெல்லா, மா
ரொன்றுநின்றகதி ராழியானே யருங்காலமொன்றிலறிவி
த்திடுதியென்று, னைமொன்று யுனையொழிந்து செய்கின்
றாராய் நிற்கின்றவவருடைய நிலைமையென்னே .......... *

(இ-ள்.) பூலோகத்திலுண்டான சீவராசிகளெல்லாவற்றுக்கும் மேகமாயிருக்கிற சூரியன் மத்தியானத்திலே கண்டத்தைமறைத்து இராத்திரிக்கு இருள்காட்டினதுபோல எவர்களுஞ் செய்கிறவினைகளெல்லாம் நீயேயென்று வசமாயிருந்து சங்கற்பசங்காரங்களைத் தரித்தவனேயென்றும் ஓய்கிறகாலத்திலே யறிந்து இருதயபத்மத்திலேயென்றும் ஒரு தேரின்மேலிருந்து மூலகத்திலே சஞ்சரிக்கிற சூரியனைப்போ லிருக்கிற ஞானவான்களிடத்திற மென்னமோ அறிவேனென்றுஞ்சொன்னார் அருச்சுன ராசனென்றவாறு. (௭௰)

அலர்கதிரோன் காட்டிடவெப் பொருளுங்கண்டாங்கவ
னொழியப் பொருளைவிழி யறிகிலாபோ, லிலகுறும் வெ
ங்கதிர்காட்டற் கேதுவாகியியா தொன்றுங் காட்டுமது
தானுமொன்றாய், நிலவுறுமப் பொறியது நின்வடிவமெ
ன்று நிறையிறன் மறையின்முடி விறந்ததேனு, மூலக
றியக்குழலூதி நிரைகண்மேய்க்கு முரவோனை யாருன்
னையுணர்கிற்பாரோ........................................ *

(இ-ள்) பிரகாசம்பொருந்திய சூரியனாலே சகலமானபொருளுங்காணப்படுமென்று அந்தசூரியனையல்லாமல்சகல பொருள்களையும், விழி யறியாதென்றும் அந்தவகைபோல எங்கும்வியாபகமாயிருக்கிறவஸ்துவைக் காட்டுகிறதுக்கு ஏதுவாகி எல்லா வற்றையுங்காட்டுகிற வஸ்துவேயென்றும் மேகமா யிருக்கிறபேரறிவார்கள் அப்படியறிகிறபேர் உன்னுடைய வடிவமென்றும் நிதானமாய் வேதத்தினுடைய முடிவு சொன்னதினாலே உலகத்தார் அறியஆயக் குழலூதிப் பசுக்களைமேய்க்கிறவனை யென்றும் லோகத்திலே உண்பகிமையை ஆரறியப்போருமென்று சொன்னார் அருச்சுன ராசன்.—எ-று.

விண்ணிணுற் கின்றமுகிற்படலமூடத் தன்னுடையவிழிய
தனைமறைப் பிமற்போய்க், கண்ணிணு லுருவக்காண்
கிலாதான் சதிரோனை யொளியிலனாய்க் கருதினுட்போ,
லெண்ணிலா தவர்களெலா முன்னைமெய்யே யிறந்துபிற
ந்துழலுதிநீ யென்றுகொள்ளப், பண்ணினு யுன்னுடை
யபான்மைபார்க்கிற் பற்றுண்டோ வீடுண்டோ பரமமூர்
த்தி........................................ *

(இ-ள்) ஆகாயம்போல மேகப் படலமானது தன்னுடைய கண்ணைமறைத்தபிறகு கண்ணினாலேயூடுருவப்பார்த்தபேர் சூரியனை மறைத்ததாக நினைத்ததுபோல உன்னைத்தியானம்பண்ணுகிறத்துக்கு அன்பில்லாதபேரெல்லாரும் பிறந்திறந்துழல்கின்றாரனேகரென்றும் உன்னுடையமகிமையைப்பார்க்கி லுனக்குப்பற்றுண்டோவீடுண்டோ பரபமூர்த்தியென்றுஞ் சொன்னார் அருச்சுனராசன். எ-று.

உலவாதபெருவான மெங்குந்தானே யூடுருவிநின்றாலா
ங்கதனோடொன்றுங், கலவாத வகைபோலிவ் வுலகமெங்
குங் கலந்துனையாநின்றாலுங் கணித்தற்காகாப், பலவாய
வுலகங்களனைத்தோடொன்றும் பற்றாதவகைநின்றபரிசுக
ண்டாற், குலவாயர்மகனாகி யளைநெய்யுண்டு கோகுல
மேய்த்திடுவதற்குக் குறைபாடுண்டோ…………*

(இ-ள்.) விஸ்தாரமான ஆகாயம் அசைவில்லாமல் எங்கும் வியாபித்துஊடுருவியிருந்தாலும் அதோடே ஒன்றுஞ் சேராது அந்தவகைபோல இந்த உலகமெங்குங்கலந்துநிறைந்திருந்தாலும் பலவிதமான உலகங்கள் நின்னோடே ஒன்றுஞ் சேராது ஒன்றுஞ் சேராதவிருக்கிறவருக்கு ஆயர்குலமகனாகி ஆனெயுண்டு பசுக்களை மேய்த்தாயென்றால் குறையுண்டோவென்றுசொன்னார் அருச்சுனராசனென்றவாறு. (எரு)

விடுத்ததொழி லனைவாகிநின்றவேனும் வேறுசிலகூடுத
லால்விகாரம்போன்றிட், டடுத்துங்காட்டும்பளிங்குநீரி
னோடே யலைகின்றவிர்மதியம் போலவாங்கே, தொடு
த்தமனமுதலாய கரணந்தோறு மாங்கவற்றின்தொழில்
புரிவாயாகித்தோன்றுங், கடுத்ததிறலாழியங்கையுடையா
யுன்னைக் கண்ணினாற்காண்கின்றார் கண்டபரிசுண்டோ.

(இ-ள்.) ஒருகாரியமுஞ் செய்யாமல் விட்டுவிட்டு இருந்தாலு மனமுதலான கரணங்கள் வேறொன்று அத்துடனேயும் சேருகிறத்தினாலே விகாரம்செனிக்கும் அதெப்படியென்றால் பளிங்கிலடுத்ததுகாணுகிறாப்போலவும் நீரிலேயுற்ற சந்திரனைப்போலவுங் கரணங்களைக்கொண்டு அதினுடையதொழில் செய்விப்பாயென்றுஞ்சங்குசக்கரத்தைத்தரித்த கையுடையனேயென்றுங் கண்ணினாலே காண்கிற

பேருக்குச் சமானமுண்டோவென்றுஞ் சொன்னார் அருச்சுனராச
னென்றவாறு. (எச)

பொற்புடைய குடத்துவிளக் கொன் றாய் நின்ற புழை
தோறு மவ்விளக்கே புலனாம் வண்ணம், பற்பலவா மெ
னத்தோன்றும் பரிசுபோலப் பரிசோதித்தெழுந்துள்ள
பற்றினாலே, நிற்பனவா நடப்பனவா முடம்புதோறுநி
ன்றாப்போ லிருக்கின்ற நிலைமைகண்டா, லற்புதம்வேறி
னுண்டோ மாயாவுன்னை யாராயா வறிவுடையோர்க்க
றியலாமோ.................................*

(இ-ள்.) சல்லடைக் கண்போலிருக்கிற குடத்திலே ஒரு தீபம் வைத்துப் பார்க்கப்பார்க்க நிதானப்படாமல் பலபல வாய்க் காணும் அவைபோல அன்பில்லாமல் மனவழுக்கினாலே பிறந்த தாபரசங்கமாய்ப் பிறந்திருக்கிற ரூபங்கள் தோறும் வியாபித் திருக்கிற நிலைமையைக்கண்டால் அற்புதமான அதிசயம்வேறே யுண்டோவென்றுமாயவனே உன்னையறிவினாலே ஆராயாதபேருக்கு அறியப் போமோவென்றுஞ் சொன்னார் அருச்சுனராச னென்றவாறு. (எரு)

கதிரொளியைக் கண்காணாக் கண்ணினுள்ள காசதிமிரங்க
ளையக்கதிரோன்காணா, மதிசயமேயெனவுன்னை யுலகுகா
ணாவவ்வுலகை நீகாண்டி யாதலாலே, விதமொழியுந்தெ
ரியமாட்டா மெய்ப்பொருளே யுனைக்காணவேண்டுமே
லாந், துதியென நின் றவைசொல்லி மலர்கடூவிச் சுரர்க
ணமுமுனிக்கணமுந் துதிப்பதென்னே...............*

(இ-ள்.) சூரியப்பிரகாசத்தைக் கண்ணறியாது கண்ணிலுண்டான காசபடலத்தை அந்தச்சூரியனறியான் அவைபோல அதிசயமான உன்னை உலகமறியாது அந்த உலகை நீயறிவாய் அவையல்லாமல் வேதசாஸ்திரமும் உன்னைக் காணமாட்டாது உன்னைக் காண மெய்யான வஸ்துவேயென்றுந் தேவகணங்களு முனிகணங் களும் மேலானஸ்துதிபண்ணி புட்பங்களினாலே அருச்சனை பண்ணுவார்களென்றுஞ் சொன்னார் அருச்சுனராசனென்றவாறு. (எசு)

(எழுசீரடியாசிரியவிருத்தம்.)

பிணித்தபிறவிப் பெருந்தளையைப் பெயர்த்தென்பேரு
ம்பேதமைநோயைத், தணித்தவரசே யெனக் கதுதான்

நகாதேயாகத்தகுமாகத், துணித்தவிறல் வான்போரினை
யே துடங் கென்று நீயிங்குப், பணித்த படியே செய்வ
னெனப் பார்த்தனவனு முடன்பட்டான் ..... .. .... ..... *

( இ-ள். ) கடினபிரவியாகிய பெரியவிலங்கை யறுத்துநீக்கி
னேன் பெரிய அஞ்ஞானமாகிய வியாதியைத் தீர்த்தகர்த்தனே என
க்கு அந்தச்சண்டை யாகாததே ஆனதாகட்டும் எப்படி யானாலுந்
துணித்ததாகிய வெற்றியுள்ள பெரிய சண்டையே துடங் கென்று
நீரிங்கே ஏவினபடியே செய்வேனென்று அருச்சுனனுஞ் சம்மதித்
தானென்றவாறு. (எஎ)

(கலிவிருத்தம்.)

மாதவனுந் தனஞ்சயனுந் தங்களிலே மகிழ்ந்துரைத்த ........ .... *
வோதரியபொருளினைநீ யுணர்ந்தவாறெங்ஙனெனில் .... ..... ........ *
வேதவியாசனனுடைய மெய்யருளை மிக வுடையே.................*
னாதலினா லறிந்தனன்வே றறியலாம் வகையுண்டோ...............*

(இ-ள்) கிருஷ்ணசுவாமியும் அருச்சுனனும் தங்களிலே இப்ப
டிசந்தோஷிப்பட்டுச் சொன்னத்தை யாவராலுஞ் சொல்ல வரிதான
அர்த்தத்தை நீயறிந்தவழி யெந்தவழியென்று கேட்பீராகில் சொல்
லுகிறேன் கேளும்திருதராஷ்டமகாராஜாவே என்றுசஞ்சயன் சொ
ல்லுகிறான் வேதவியாச மகாமுனியினுடைய சத்தியமானகிருபை
யைமிகவுமுடையவனானபடியினாலே அறிந்தேன் அவர் கிருபையல்
லாமல் வேறுவிதங்களினாலே அறியலாகும் வகை யுண்டோ யில்லை
என்றவாறு. (எஅ)

அப்பொருளை நினைந்தோறு மற்புதமா மகமகிழ்வு ......... ........*
மெய்ப்பொழுதும் வருமவன்று னிருக்கின்ற வகைவிரித்த ... ......*
வொப்பரிய திருக்கோல முணர்தோறு முணர்தோறுஞ் .. ........ *
செப்பரிய பெருங்களிப்பின் சிந்தையிலே சிறக்குமால்...........*

(இ-ள்.) அவர்களிருவரும் பேசிக்கொண்ட அந்த அருத்தத்தை
நினைக்கிறபோதெல்லாம் அதிசயமான ஆனந்தமும் திஷ்டையும்
எப்போதும் வருகின்றது அந்தக்கிருஷ்ணசுவாமி தாமிருக்கின்றவி
ராட்டுரூப வகையை விரிவாகக்காட்டின ஒப்பில்லாத விசுவரூபமா
கிய திருக்கோலத்தை அறியுமபோதெல்லாம் என்னுடைய மனதி

லேசொல்ல அரிதானபெரிய மனக்களிப்பு மென் மேலு மதிகமா குது என்றவாறு. (௭௯)

எஞ்சலி லிப்பொருள்தன்னை யிப்படியே புகுந்ததெனச் ......... *
சஞ்சயனின் றெடுத்துரைப்ப நூற்றுவர்க்குத் தாதையாய் *
வஞ்சனை கண்ணாக வாழ்கின்றான் மற்றிவர்க்குப் ... ......... ... *
பஞ்சவரோ வலியவரென் றிவ்வண்ணம் பகர்லுற்றான் ........ *

(இ-ள்.) குறைவில்லாத இந்தஅருத்தத்தை இந்தப்படியே நடந்ததென்று உவகையாக வெடுத்துநின்றுசஞ்சயன்சொல்லக்கௌரவர் நூறும்பேருக்குத் தகப்பனாகி முகத்திலே கண்ணில்லாமல் வஞ்சனையேகண்ணாக வாழ்கின்ற திருதராஷ்டிரன் இவர்களாகியகௌரவர்க்குப்பாண்டவர்களான பஞ்சவரோ வலியவர்களென்றறிந்தபடிசொல்லுகிறானென்றவாறு. (௮௦)

(கலிவிருத்தம்.)

திருவற நீதி செயம்புக ழெல்லா .... ......... .... ......... *
மருவுரு மாயைசெய் மாதவன் வாய்மை ........ ......... *
தருமம் விடாத தனஞ்சய னென்று ..... ... ... ...... ... *
மிருவரு நின்ற விடத்தன வென்றான் ............. ....... *

(இ-ள்.) அழகுள்ள -தருமம் -நீதி-செயம்-கீர்த்தி இதுவெல்லாமெங்கேயிருக்குமென்றால்யாருங்கண்டுகூடப்படாதமாயைசெய்யப்பட்ட கிருஷ்ணசுவாமி சத்தியத்தையுந் தருமத்தையும் விடாத அருச்சுனனென்று சொல்லப்பட்ட விருவரும் நின்ற விடத்திலிது வெல்லாம் இருக்குமென்றானென்றவாறு. (௮௧)

என்ற பொருட்டிற மிப்படி யென்றுக.................... *
குன்ற மெடுத்தருள் கொண்டல் பணிப்பான் .... ......... *
வென்ற குலத்தின் வியாசன் விரிப்பா ... ......... ......... *
நின்ற வருத்தது நேர்பட வன்றே........................ *

(இ-ள்.) என்றுசொல்லப்பட்ட பொருளினுடைய வகையை இப்படியென்று அந்தக்கோவர்த்தனமலையை யெடுத்துக் குடையாகப்பிடித்து மழையைத்தடுத்துப் பசுக்களையு மிடையர்களையுங் காத்த மேகரூபமான கிருஷ்ணசுவாமி சொல்லுவார் அவர் சொன்னதை யெல்லாகுலத்துக்கு மேலான வெற்றிபொருந்திய பிரமரிஷியாகி

யவேதவியாச மகாமுனி விரிவாகப்பாடுவா ரிவர்க ளிருவருமே உப தேசிக்கவும் பாடவும் வல்லவர்கள் அல்லாமலிவர்களைத் தவிர நின்ற மற்றும்பேர்களுக்கு இதுசொல்லவும் பாடவு முடன்பட மாட்டுமோ மாட்டா தென்றவாறு. ※ உடன்படல்யனதுக்கெட்டுதல். (௮௨)

(இதுவுங்கலிவிருத்தம்.)

வேதநூல்களின் முடிவினை வியாச னிற்பினன் ....... ..... ✻
ோதநீள்கட லுலகி லுண்டாக்கிய வரவோன் .... ....... ✻
கோதிலாநெறி யுணர்ந்தகோ விந்தமா முனியின் . . ... ✻
பாததாமரைப் பற்றிவிட் டின்பமே படைத்தான் . . . . ✻

(இ-ள்.) இந்தவேதாந்தத்தை வியாச மகாமுனிக்குப் பிற்கு அலையும் நீளமுமுடைய கடல்சூழ்ந்த வுலகத்திலுண்டாக்கியபெரியவராமொன்னில் குற்றமில்லாத முத்திமார்க்கத்தை யறிந்தகோவிந்தமகாமுனியினுடைய பாதாரவிந்தத்தைத் தெப்பமாகப் பிடித்துப் பிறவிக்கடலைக்கடந்து மோட்சமாகிய கரையிலேறி பிறவிக்கடலிலலைந்த அனேககாலவருத்தமுந் தீர்ந்து ஆனந்த சுகத்தைப் பெற்றவனென்றவாறு. (௮௫)

(கலிவிருத்தம்.)

ஆற்றியல் வழுவிய புலன் களைந்தையும் ............ ✻
பாற்றிய சங்கர பகவற் பாதனென் ..... ..... ......... ✻
றேற்றிய பெயரினு னருளி னுலியான் ........ .... ✻
சாற்றிய னிப்பெருந் தரும நூலையே.......... ...✻

(இ-ள்.) மோக்ஷமார்க் கத்தினுடைய சுபாவத்தைத் தவறின அஞ்சு புலன்களையு மொன்றுபடச்செய்தவராகிய சங்கரபகவற்பாதனேற்றிவைத்த பெயரையுடை யவருடைய கிருபையினாலே.இந்தப் பெரிய தருமசாஸ்திரத்தை நான்சொன்ன தென்றவாறு. (௮௬)

(அறுசீரடியாசிரியவிருத்தம்.)

சேயமா மதுரை நின்றுஞ் செம்மை யாய்ப்பாடி தேடி ... ✻
யாயனுய் மாயனுர்தா மவதரித் தருளி னுலே ............ ......✻
போயமுன் மொழிந்த கீதை புலன்கட லடைத்தார்க்கன்றித்✻
தூயமா தவர்க்கு மிந்தச் சுருதி நூல் கருதொணுதே,.... ...✻

(இ-ள்.) செவ்வியபெருமையுள்ள மதுராபுரியில் நின்றுந்திருவவதாரஞ்செய்தருளிச் செம்மையுள்ள திருவாய்ப்பாடி தேடிஇடையனாய்ப்போய் கிருபையினாலே அந்த அவதார காலத்திலே அருளிச்செய்த கீதையானது பஞ்சேந்திரியச்கடலை யடைத்தவர்களாலே நினைக்கலாம் அவர்களல்லாமல் மற்றசுத்தமான பெரியதவஞ்செய்கிறவர்களுக்கு மிந்த வேதார்த்த நூலை நினைக்கப்படாதென்றவாறு.— (௮௫)

தேற்பட்ட கன்றுக் கன்று சேயைச் சிதைத்த சென்னிக்கு... .... *
நாற்பத் திரண்டாஞ் சன்ம நல்லமாரது தன்னில் ................ .... *
மேற்பட்ட வேளாண் குடிமுதல் வேதாப்பட்டா கானையெனும் · *
பாற்பட்ட பத்தியா லானந்த பரமார்த்த தெரிசனமே........ *

(இ-ள்.) தேரிலேயகப்பட்ட பசுங்கன்றுக்குப் பதில் மூன்றுலே பிள்ளையைத்தேரிலேகொடுத்த நீதிராசனாகிய சோழனுக்கு அந்தநாள் முதல் நாற்பத்திரண்டு சென்மத்துக்கு நல்லமானபடியினாலே மேற்பட்ட வேளாண்குடிமுதல் வேதப்பட்டா கானையே யவருடைய யுறுதியான பத்தியினாலே யுண்டான பரமார்த்ததெரிசனமென்றுஞ் சொன்னாரென்றவாறு. (௮௬)

கட்டார் மயலிருட் காதபச் சோதி கலை நிரம்பி ................ *
எட்டா ததுய ராத்தின்ப மாக்கலின் மாமதியெல்வினையும்... *
விட்டார்கள் விட்டபின் வேதச் சுடரொளி மெய்யுணர்ந்த ...... *
பட்டா கானரு ளாம்பர மார்த்த தெரிசனமே............ .. *

(இ-ள்.) உலகத்திலே யிருட்போன்ற மயலைக்கட்டார்களென்றமிருளணுகாத புத்தியை சோதிப்பிரகாசமாய் யெங்குமெட்டாமலுயர்ந்த இன்பமாகின் பேர் எந்தவினையும் விட்டுவிட்டவர்கள் விட்டபிறகு வேதச்சுடரொளியை மெய்யாயறிந்த பட்டாகானுடைய கிருபையினாலே அவர்களுக்கு பரமார்த்த தெரிசனமென்றுஞ் சொன்னாரென்றவாறு. (௮௭)

பதினெட்டாவது சகலஉபநிஷித்துப் பிரதிபந்தனமோக்ஷயோக அத்தியாயம் முற்றிற்று முற்றும்.

௭௱-அத்தியாயம்-௰௮-இ கூடியசெய்யுள் (௲௱௬௰௬.)

பகவத்கீதைமுற்றிற்றுமுற்றும்.

# அத்தியாயங்களின் - அட்டவணை.

அத்தியாயம். | பக்.


| அத்தியாயம் | | பக் |
|---|---|---|
| | பாயிரம் | க |
| க | சோக-அத்தியாயம் | ௩ |
| உ | சாங்கியயோக-அத்தியாயம் | ௰௩ |
| ௩ | தேவ பூசா-அத்தியாயம் | ௩அ |
| ௪ | சம்பிரதாய-அத்தியாயம் | ௫க |
| ௫ | சந்நியாசயோக-அத்தியாயம் | ௬உ |
| ௬ | அப்பியாசயோக-அத்தியாயம் | ௭க |
| ௭ | மாய ரூப-அத்தியாயம் | அ௬ |
| ௮ | அட்சரயோக அத்தியாயம் | ௯௯ |
| ௯ | மாயாவிகாரயோக-அத்தியாயம் | ௱அ |
| ௰ | விபூதிவித்தாரயோக-அத்தியாயம் | ௱௰ |
| ௰க | விசுவரூப-அத்தியாயம் | ௱உ |
| ௰உ | பத்தியோக-அத்தியாயம் | ௱௪ |
| ௰௩ | பிரகிருதிபுருடயோக-அத்தியாயம் | ௱௫ |
| ௰௪ | குணத்திரயயோக-அத்தியாயம் | ௱௬ |
| ௰௫ | புருஷோத்தமயோக-அத்தியாயம் | ௱௭ |
| ௰௬ | தெய்வசம்பத்துவிபாகயோக-அத்தியாயம் | ௱அ |
| ௰௭ | சிரத்தாத்திரயவிபாகயோக-அத்தியாயம் | ௱௯ |
| ௰அ | சகலஉபநிஷத்துப்பிரதிபந்தனமோட்சயோக-அத்தியாயம் | ௱க |


அத்தியாயங்களின் அட்டவணை

முற்றிற்றுமுற்றும்.